பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இரத்தினவிலாசம்
நசிஹத்துலாசம்.

இஃது
செய்யிது முஹம்மது ஸாஹிபவர்கள் குமாரர்
ஷெய்கு முஹம்மது லெப்பை ஆலிம்ஸாஹிபு
அவர்களாலியற்றியதை,

மேலப்பாளையம்
காஜா அசனலிப்புலவர் அவர்களால்
பார்வையிடப்பட்டு,

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதருஸ்
அவர்களால் தங்களது
ஷாஹுல் ஹமீதிய்யா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

சுத்தப் பதிப்பு

இதன் விலை] 1950 [ரூ 1-4-0

பிஸ்மில்லாஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இரத்தினவிலாசம் நசீஹத்துலாசத்தின்

அட்டவணை.

பெயர்.	பக்கம்
முகவுரை	1
ஹக்குத் தஆலாவின் துதி	8
நபிநாயகத்தின் துதி	9
கலப்பறுதலான நிய்யத்துச் செய்வதின் பயான்	10
தாய் தகப்பன் பிள்ளைகளுக்குக் குறு ஆன் படித்துக்கொடுக்கிறதினால் கிடைக்கிற வரிசையின் பயான்	16
குறுஆனோதுகிறவர்களுக்குக் கிடைக்கிற வரிசையின் பயான்	24
பிஸ்மிலுடைய வரிசையின் பயான்	26
பிஸ்மிலுடைய மஃனா	27
அல்ஹம்து சூரத்துடைய வரிசையின் பயான்	39
குல்ஹுவல்லா சூறத்துடைய வரிசையின் பயான்	43
யாசீன் சூரத்துடைய வரிசையின் பயான்	51
ஆயத்துக் குறுஷிய்யுடைய வரிசையின் பயான்	53
இல்முபடிக்கிற வரிசையின் பயான்	58
தொழுகையுடைய வரிசையின் பயான்	60
தொழுகையை விட்டவர்கட்குக் கிடைக்கிற வேதனையின் பயான்	72
ஜும்ஆத் தொழுகை யுடைய வரிசையின் பயான்	82
ஸக்காத்துக் கொடுக்கிற வரிசையின் பயான்	87
றம்லான்மாதம் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்	89
தருவீஹுத் தொழுகையுடைய வரிசையின் பயான்	100
லவுலத்துல் கதிறுடைய வரிசையின் பயான்	104
ஷவ்வால் மாதம் ஆறு நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்	107
துல்ஹஜ்ஜுமாதம் அறபா என்னு மொன்பதாம்நாள் நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்	111

பெயர்.	பக்கம்.
ஜயாமில் பீலென்னும் பெயர்பெற்ற மூன்று நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்	112
முஹர்றமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்	113
றஜபுமாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்	119
ஷஃபான் மாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்	121
ஹஜ்ஜினுடைய வரிசையின் பயான்	122
நோன்புப் பெருநாளையிற் கொடுக்கிற பித்துறு ஸதக்காவுடைய வரிசையின் பயான்	124
ஹஜ்ஜுப் பெருநாளையிற் குறுபான் கொடுக்கிற வரிசையின் பயான்	127
லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்கிற திக்றுடைய வரிசையின் பயான்	131
சலவாத்துடைய வரிசையின் பயான்	133
கபுறை ஸியாறத்துச்செய்கிற வரிசையின் பயான்	142
பள்ளிவாசற் கட்டுகிறதிலும், பழுது பார்க்கிறதிலுங் கிடைக்கிற வரிசையின் பயான்	143
இத்தாவுடைய பிரிவின் வரிசையின் பயான்	147
மவுலிது ஷரீபினுடைய வரிசையின் பயான்	150

இரத்தினவிலாசம் நசீஹத்துலாசத்தின்

அட்டவணை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இஃது

முகவுரை.

அல்லாவுக்கும், அல்லாவுடைய றசூலுக்கும், வேதங்களுக்கும், ஒடுக்கத்துநாளைக்கும் ஈமான்கொண்ட மூமீன் முஸ்லிமாகிய எமது பிறவிகளே, நேசர்களே, அஷ்றூபானவர்களே, இஸ்லாமான நமது மார்க்கத்தினன்மையைவேண்டி கனானத்துல் லசறூர் ஷிறுஹத்துல் விசுலாம், அத்றத்துன்நாசிஹீன், நுசுஹத்துல்மஜாலிசு, றத்துல் முக்த்தார். பத்தாவிஆலங்கிரி முதலாகிய அநேகங் கித்தாபுகளில் இரத்தினச் சுடர்போல பிரகாசமாய் விளங்குகின்ற நுட்பங்களான ஹதீதுகள்; ஹிக்காயத்துகள், கிஸ்ஸாக்கள், மசலாக்கள் ஆகியவைகளைத் தெரிந்து பொறுக்கியெடுத்துப் பாவக்கடலில் மூழ்கிய பாவியடியான் கும்பகோணத்தைச்சார்ந்த திருநறையூரில் வசிக்கும் செய்யிது முஹம்மது சாகிபு குமாரன் ஷெய்கு முஹம்மதென்பவன் தமிழ்ப் பாஷையால் தர்ஜுமாச்செய்து, இரத்தினவிலாசம் நசிஹத்துலாசமென்னும் பெயருங்கொடுத்து ஹிஜுறத்து 1301-ஹு ஸபர்மாதம் அல்லாறசூலுதவியைக்கொண்டும் அச்சிட்டு நிறைவேற்றச் செய்தான்.

ஆனால் இந்த கித்தாபை அநேகநாளாய் அநேகங் கித்தாபுகளைச் சேகரித்து அவைகளைப் பார்வையிட்டுத் தர்ஜுமாச்செய்து பெரிய உலமாக்களிடத்திலுங் காண்பிவித்து அச்சிட்டது யாது காரணத்திற்கெனில், இந்த ஸமானுவில் நமது தேசங்களில் முஸ்லிமாகிய அநேக புண்ணியவான்கள் மகாசிறப்பும், வஹுப்பமுமாகிய புறக்கானுல் ஹமீது குறுஆனில் மஜீதையும் அதிற் சொல்லியிருக்கிற ஏவல், விலக்கல், இல்முகளையும் முதலிலே தங்களுடைய பிள்ளைகள், பிறவிகள் இனத்தார் முதலிய மற்றவர்களுக்குப் படிப்பித்துக் கொடுக்காமலும், தாங்களும் படித்துக்கொள்ளாமலும் அழிந்துபோகிற மாயத்துனியாவுடைய சவுக்கியத்தைவேண்டிச் சண்டாள சதிகார பாதகதுரோகியான இபுலீசுடைய மாயாவினோத வலையிற் சிக்கிக் கொண்டு பல பல பாஷைகளைக் கற்றிருந்தால் அதனாலே பணச்சம்பாத்தியஞ் செய்து நாமும் நமது குடும்

பஸ்தரும் இருஹத்தாயிருந்து தின்னலாமென்று (அல்லாறசூல்) சொன்ன பிரகாரம் முதலிலே குர்ஆன் இல்முகளைப் படிக்காமல் அதைப் பரதேசியாக விட்டுவிட்டு மற்றப்பாஷைகளையும் அவைகளிலுள்ள கல்விகளையும் படிக்கிறதுந்தவிரப் படிக்க முயற்சியுஞ் செய்கிறார்கள்.

அல்லாஹுத் தஆலா நான்கு மாதமும், பத்துநாளும் இத்தாயிருக்க வேண்டுமென்று திடனாகச் சொல்லியிருக்க, அதைவிட்டுவிட்டு ஒன்றைப்பொழுது, மூன்றுநாள், நாற்பதுநாள் இத்தாப் போதுமென்று ஷறஹுக்கு விரோதமாக நடத்திவருகிறார்கள். அல்லா சுப்ஹானஹுத் தஆலா யாவருடைய பாவத்தையும் பொறுத்து றஹ்மத்துச் செய்வானென்று இறாதாவைத்து, அது அதற்கு ஆனுமான இல்முகளை விரிக்காமற் சுருக்கமாகத்தெரிந்தெடுத்துநம்முடைய பிறவிகள் யாவர்க்கு மெளிதில் விளங்கும்படியாய் ஹம்து சலவாத்தைக் கொண்டு தொடங்கினேன்.

ஆய்! முஸ்லிமாகிய இக்வான்களே, இவ்விதம் அல்லாஹுத் தஆலாவுடைய சொல்லைப்பேணி குர்ஆன் இல்முகளை முதலிற்படிக்காமல் விட்டுவிட்டு மற்றப் பாஷையிலுள்ள கல்விகளைப்படித்து இபாதத்துச் செய்யாமற்போனால் நாளை கியாமத்திலே அல்லாஹுத் தஆலாவை யெவ்விதஞ் சிந்திக்கிறது, இன்னும் இருந்தாப் போலிருந்து மலக்கல் மவுத்தென்கிற புலிவந்துவிழுந்து பிடித்து தகர்த்துமுறித்து றூஹென்னும் உயிரை வாங்கிக்கொண்டு போவாரே, அப்போது என்னசெய்வீர்கள்?

எத்தனை யெத்தனை அன்பியாக்கள், எத்தனை யெத்தனை அவுலியாக்கள், எத்தனை யெத்தனை ஆபிதீன்கள், எத்தனை யெத்தனை உலமாக்கள், எத்தனை யெத்தனை குதுபுமார்கள், எத்தனை யெத்தனை சுல்தான்கள், அமீறுகள், எத்தனை யெத்தனை ஹாக்கிம்கள், அதிகாரிகள், எத்தனை யெத்தனை சீமான்கள் ஆகிய இவர்களின் பேரிலெல்லாம் மவுத்தென்கிற வேங்கைப்புலிவந்து விழுந்துமுறித்துத் தகர்த்து றூஹைப்பறித்துக்கொண்டதே, அதை நீங்கள் கேட்கவில்லையா, அறியவுமில்லையா பார்க்கவுமில்லையா.

இன்னும், உங்களிலுள்ள எத்தனை யெத்தனை தாய் தகப்பன்மார்கள், எத்தனை யெத்தனை பெண்சாதி பிள்ளைகள், எத்தனை யெத்தனை வாலியர், வயதுசென்ற முதியவர்கள் ஆகிய இவர்கள்

பேரிலெல்லாம் மவுத்தென்கிற இராஜாளிப்பறவை வந்து கொத்தி யுயிரைப் போக்கிவிடவில்லையா, அந்த மையித்தை நீங்கள் குளிப்பாட்டிக் கபனிட்டுச் சந்தூக்கில் வைத்துத் தோளின்பேரில் தூக்கிச்சுமந்து கொண்டுபோய்த் தொழுதுக் கபுறுகுழியில் வைத்து மண்ணைத்தள்ளிப் போடவில்லையா?

அவைகளையெல்லாம் மறந்துவிட்டுத்துனியாவே நமக்கு வீடென்றும், காசு பணங்கள் நமக்குச் சதமென்றும், மவுத்து நமக்கு வரமாட்டாதென்றும் எண்ணியிருக்கிறீர்களோ, அப்படி நீங்கள் எண்ணுகிறதற்கு என்ன முகாந்திரமிருக்கிறது. அல்லாஹுத் தஆலாவைத் தவிரச் சகல வஸ்துகளும் ஹலாக்காய்ப் போய்விடுமென்று, குறுஆனில் வந்திருக்கிறதே, இன்னும் நீங்கள் கண்காணக் கட்டின பெண்ஜாதி, பிள்ளை, உடற்பிறந்தான் மார்கள் முதலிய பேர்கள்பேரிலே மவுத்தென்கிற அம்புவந்து விழுந்து கோர்த்துக்கொண்டு ஹலாக்காக்கிப் போடவில்லையா, அவர்களைக் கண்டு நீங்கள் சஞ்சலம், துக்கம், விசனம் முதலானவைகளை யடையவில்லையா?

இன்னும், மணிப்புறாவினுடைய கழுத்தில் ஒரு ஆரம் பற்றிப் பிடித்துக்கொண்டிருப்பதுபோல உங்களுடைய கழுத்திலே மவுத்தென்கிற சவடிபற்றிப் பிடித்துக்கொண்டிருக்கிறதென்று குத்பாக் கோர்வையிட்டவர்கள் சொல்லியிருக்கிறதை நீங்கள் பார்க்கவுங் கேட்கவுமில்லையா? ஆதலால், எமது இக்வான்களே! மவுத்தினுடைய சங்கதிகளை நன்றாய்க் கவனித்துப் பார்த்து மவுத்தென்கிற வேங்கை உங்கள் பேரிலே வந்துவிழுந்து ரூஹைப் பறித்துக் கொள்வதற்கு முன்பாக அல்லாஹுத் தஆலாவுக்கு பயந்து, ஆகிறத்துக்காக வேண்டி ஸாலிஹான அமலென்கிற ஸவாதாக்களை இப்போதேதேடித் தயார்செய்து கொள்ளுங்கள். இதைக்கொண்டுதான் நாம்சொர்க்கம் புகுதவேண்டும்.

அப்படி ஸாலிஹான அமலென்கிற ஸவாதாக்களை இப்போதே தயார்செய்யாமல் இபுலீசுடைய வலையில் அகப்பட்டு சிக்கிக்கொண்டு துனியா வுக்கே தொண்டு ஊழியஞ்செய்துகொண்டு, அல்லாறசூல் சொன்ன சொற்களை மறந்துவிட்டால், ஸக்கருத்து ஹாலில் முன்னூறு வாட்கொண்டு வெட்டுகிறதைக்காண அதிக வருத்தமாகவிருக்குமென்று ஹதீதில் வருகின்றதே, இன்னம் மவுத்தாகிற மையித்துடைய முடிகளில்நின்று மொருமுடியை வான

லோகர், பூலோகர் பேரில் வைக்கப்படுமாகில் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவு கொண்டவர்க ளெல்லோரும் மடிந்து போவார்களென்றும் ஹதீது வந்திருக்கிறதே.

இன்னும், ஒரு றிவாயத்தில் மவுத்துடைய வருத்தத்தில் நின்று மொருதுளியை துனியாவுடைய மலைகளின் பேரிலே வைக்கப்படுமேயானால் அம்மலைகளெல்லா முருகிப்போய் விடுமென்றும் வந்திருக்கின்றதே. இன்னும், ஒரு ஹிக்காயத்தில் ஒரு இராஜா வானவர் தன்னிருப்பிடம் விட்டெழுந்து அழகான உடையுடுத்தி யுயர்ந்த குதிரையின்பேரிலே யேறிக்கொண்டு ஆளடிமைகளுடனே மெத்தவும் பெருமையாக ஓர் ஊரைநாடி நடந்துபோகிற வழியிலே எளிமையாகிய ஒரு மிஸ்கீன்வந்து இராஜாவுக்குச் சலாஞ் சொன்னார், அந்தச் சலாத்திற்கு இராஜா ஜவாபுசொல்லாமற் போகவே, அந்த மிஸ்கின் இராஜா யேறிப்போகிற குதிரையின் கடிவாளத்தைப் பிடித்தார். அப்போது இராஜா மிஸ்கினைப்பார்த்து, நீ என்னவேலை செய்துபோட்டாய் இருக்கட்டும் கடிவாளத்தை விடென்று சொன்னார்.

அதுகேட்டு, மிஸ்கீனானவர் இராஜனைப்பார்த்து உம்மிடத்தில் எனக்கு ஒரு ஹாஜத்திருக்கிறதென்றார், அப்போது இராஜா தம்முடைய மகிழ்ச்சியினால் கீழிறங்கிச் செய்தியைக் கேளாமற் குதிரையின் மேலிருந்தே செய்தியைச் சொல்லுவென்றார். உடனே அந்த மிஸ்கீன் நான் மலக்கல் மவுத்தா யிருக்குமென்று சொன்னார். அதுகேட்டு இராஜாவுடையநிறம் பேதலித்து, நாவுகுழறி ஓய் மலக்கல் மவுத்தே என்னைவிட்டுவிடும், நான் வீட்டுமட்டிற்போய் என்வேலைகளை முடித்து விட்டு அவ்விடத்திலுள்ளவர்களுக்கும் பயணஞ்சொல்லிக்கொண்டு வருகிறேனென்று சொன்னார். அதுகேட்டு மலக்கல்மவுத்து இராஜாவைப் பார்த்து அதுகூடாது. அல்லாவின் பேரிலாணையாக ஒருவரையும் நீ காணமாட்டாயென்று சொல்லிய பின்னர், இராஜாவுடைய றூஹைக் கைபற்றிக் கொண்டார். உடனே இராஜாகுதிரையின் பேரிலிருந்துதடி போலே யடித்து மோதிக் கீழே விழுந்து விட்டாரென்று வருகின்றதே.

இன்னும், ஒரு மனுடன் அநேகம் பணங்காசுகளைச் சம்பாதித்து அழகான ஒரு மாளிகையைக்கட்டி இன்றையதினம் நமது சந்தோஷத்தையெல்லாம் வெளிப்படுத்த வேண்டுமென்று நாடி தம்மைச்சார்ந்த பந்துஜனங்களுக்கு நல்ல நிஃமத்தான வழீபனஞ்

செய்து கொடுத்து உண்ணும்படி செய்துவிட்டு தாம் ஒரு கட்டிலின் பேரிலே கால்மேலே கால்போட்டுக்கொண்டு தன்னபுசைப் பார்த்து ஓ நபுசே, உனக்குப் போதுமானமட்டுந் திரவிய முண்டாகிக் கொண்டேன், அதனாலே நீ சுகம்பெற்றுக்கொள்ளென்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அப்படியிருக்கும்போது, மலக்கல் மவுத்து ஒரு மிஸ்கீனுடைய கோலமாகவந்து கதவைத்தட்டினார். உடனே அந்தச் சீமானுடைய ஆளடிமைகள்வந்து பக்கிரிடம், உனக்கு இவ்விடத்தில் என்ன வேலையென்று கேட்டதற்கு, மலக்கல் மவுத்தவர்கள் உங்கள் எஜமானை நான் கூப்பிட்டதாகச் சொல்லுங்களென்றார்கள். அதுகேட்டு, அந்த ஆளடிமைகள் உன்போற்கொத்த மனுடனிடத்திலேயா எங்கள் எஜமான் வருவாரென்று சொன்னார்கள். அது கேட்டு மலக்கல் மவுத்தவர்கள் ஆம் வரத்தான் வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு, அவ்வாளடிமைகள் தங்களுடைய எஜமானிடத்திற்போய்ச் சொன்னார்கள். அப்போது எஜமான் ஆளடிமைகளைப்பார்த்து அவனை யடித்துக்கால்கையை யொடிக்காமல் விட்டுவிட்டீர்களாவென்று சொன்னார்

இவ்விதஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது வெளியிலே நிற்கிற மலக்கல் மவுத்தவர்கள் பூட்டியிருக்கிற கதவிலே கையையோங்கி யோரடியடித்து, நான் மலக்கல் மவுத்தாயிருக்குமென்று போய் சொல்லுங்களென்று சொன்னார்கள். இச்சொல்லை யவர்கள் கேட்டவுடனே அவர்களுக்கும், அவர்கள் எஜமானனுக்கும் போதமாறிப்போய்விட்டது. பின்னர் எஜமானனவர் மலக்கல் மவுத்தவர்களுக்கு மெதுவாக தனக்கு பதிலாகவேறொருவரை யெடுத்துக்கொள்ளும்படி சொன்னார்.

இதனிடையில் மலக்கல் மவுத்தவர்கள் வீட்டிற்குட்புகுந்து அந்த பணக்காரனைப் பார்த்து உன்னுடைய திரவியத்தைச் செய்ய வேண்டியபடி செய்துக்கொள். நான் உன்னுடைய றூஹைவாங்கியே யல்லாமல் வெளியே போகிறதில்லையென்று சொன்னார்கள். அதுகேட்டு அந்தப் பணக்காரன் தன்னுடைய திரவியங்களையெல்லா மெடுத்துவந்து குவிக்கச்செய்து அதைப் பார்த்து மிகவும் வியாகூலமும் கவலையுமுள்ளவராகித் திரவியத்தைப் பார்த்து, அல்லாஹுத் தஆலா உனக்கு லஃனத்துச் செய்வானாகவும் என்னை நீ யல்லவா நாயனுக்கு இபாதத்துச் செய்யவிடாமற் பராக்காக்கிவைத்தாயென்று சொன்னார். அப்போது அல்லாஹுத் தஆலா அந்தத் திரவியத்தை அவரோடு பேசும்படிசெய்ததால்

அந்தத் திரவியம் அவரைப்பார்த்து என்னை நீயேன் தூஷணிக்கிறாய்.
நீ என்னைக்கொண்டு இராஜாராஜாக்களிடமெல்லாஞ் சென்றிருந்தாய்
தக்வாவுடைய பேர்களுக்கு ஒன்றுங் கொடுத்தாயில்லை.

இன்னும், என்னைக்கொண்டு அழகிய பெண்களோடு சுகமான
அநுபோகஞ்செய்தாயல்லவா, இன்னும் கெட்டபாதையிலும்
செலவுசெய்தாயல்லவா. அப்போது நானுன்னை என்ன ஏதொன்
றுங்கேட்கவில்லையே. நீ அப்போது என்னை நல்ல வழியிலே செலவு
செய்திருப்பாயாகில் நானுனக்கு உதவுவேனென்றுசொல்லி
முடிவானபோது மலக்கல் மவுத்தவர்கள் அந்தப் பணக்காரனுடைய
றூஹைக் கைப்பற்றினார்கள் அவர் அப்படியே அடித்துமோதிக்
கீழே விழுந்துவிட்டார்.

ஆ ஆ (இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹிறாஜிவூன்) நான்
என்ன தான் சொல்வேன், மூமின் முஸ்லிமாகிய இஃவான்களே,
நீங்கள் பாருங்கள் காற்றென்றும், மழையென்றும் பாராம லோடித்
திரிந்து அருமையாகச் சம்பாதித்துத் தம்முடைய தலையிலுந்
தோளிலும் தூக்கிச் சுமந்து கொண்டு வந்து பெட்டகங்களில்
வைத்துப் பூட்டி காப்பாற்றிய நன்றி விசுவாசம் ஓர் அணுப்பிரமும்
மில்லாமல் அந்தப் பணக்காரனுக்கு மோசஞ்செய்த பொருளா
யிற்றே அதை நீங்கள் பார்க்கவுங் கேட்கவுமில்லையா.

ஆனதால் காசுபணத்தைச் சதமென்று நம்பாமல் என்னுடைய
பிறவிகளாகிய மூமின் முஸ்லிமான நேசர்களே, அறிவையுடைய
பேர்களே, அஸ்ஹாபானவர்களே இந்தக் கிதாபி லச்சிடப்பட்ட
முப்பத்தி ரண்டு பாபுகளடங்கிய இரத்தின வொளிபோன்ற
அறிவுகளை உங்கள் தெளிவான மனக்கண்ணினாலே நன்றாகப்
பார்வையிட்டு அந்தந்த பாபுகளிலும் சொல்லியிருக்கிற அறிவென்
னும் ஆபத்தை, மனமெனுங் காந்தத்தினாலே பிடித்து பார்த்
துணர்ந்து, தாங்களும் அமல் செய்வதுடனே தங்கள் தங்கள்
பெண்டு பிள்ளைகளுக்கும் படித்துக்காட்டி அவர்களையும் நல்ல
அமலில் நடக்கும்படிச் செய்யவேண்டியது

இன்னும் ஹதீது, வஃலு சொல்லுகிறதற்குச் சபைக்கூட்டு
வது போலே சபைக்கூட்டி இந்தக் கிதாபை யாவருக்குங் காதில்
நுழையச் செய்து கருத்தை வியப்பாக்கி நல்ல அமலைச் செய்யும்
படி செய்வது பார்த்தவர்கள் கேட்டவர்கள் நிஜக்குதவியான
வர்களா இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

இன்னும் இந்தக் கித்தாபைக் காணிக்கைவைத்துக் கையாட்சி செய்கின்ற புண்ணியவான்கள் எளிதாய்ப்பார்த்தும் பாராமலும் புத்தகத்தை வாங்கிப் போட்டோமேயென் றெண்ணங் கொண்டு பெட்டி பார்க்கவைக்காமற் கூர்க்கப் பார்த்துணர்ந்து, நல்ல அமல்களைச் செய்வீர்களென்றும் இதிற் சொற் குற்றம், பொருட் குற்றங்க ளிருக்கில் மனம்பொருந்து ஷெ கிதாபுகளைப் பார்வையிட்டதின் பின்னர் திருத்திக் கொள்வீர்களென்றும் உங்களரிதாகிய கனதியை யாம் மிகுந்த அன்பா தரவுடனே இன்பமாகக் கோருகின்றனம்.

ஆண்டவனே, இந்த இலேசாகிய அடிமையான என்னுடைய பாவத்தையும், என்னுடைய தாய்தகப்பன்மார்களுடைய பாவத்தையும், என் உஸ்தாதுமார்களுடைய பாவத்தையும், என் பாட்டன் பூட்டன் முதலாகிய சகல பந்து ஜனங்களான ஆண் பெண்களனைவோர்களுடைய பாவங்களையும் இந்த இரத்தின விலாசம் நசீஹத்துலாசமென்னும் கித்தாபில் அச்சிடப்பட்ட அறிவுகளைப் படிப்பவர்கள் படிக்கக் கேட்பவர்கள் முதலாகிய சகல மூமின் மூஸ்லிமாகிய ஆண்பெண் அனைவோர்களுடைய பாவங்களையும் பொறுத்து, ஈமானுடனே நற்கரை சேர்த்து அவுலியாக்கள், ஸாலிஹீன்கள் கூட்டத்திற் சேர்த்தெழுப்பி லிவாவுல் ஹம்தென்கிற கொடி நிழலுந் தந்து, நம்மை பட்டோலையை வலதுகையிற்றந்து, நம்மைத் திராசு தட்டைக் கனக்கவைத்து. நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ஷபாஅத்திற்குமானாக்கி ஸிறாத்தல் முஸ்தகீமென்னும் பாலத்திலே மின் வெட்டி மறைவது போலக் கடத்திவைத்து ஹவுலுல்க் கவுதறுத்துத் தண்ணீருங் குடிக்கத்தந்து நபிநாயகமவர்களிருக்கிற தலத்திற்கு அயல் பாகமாகக் குடியிருக்கவைத்து உன்னுடைய லிக்காவென்கிற திருக்காட்சியையுந் தந்தருள்செய்வாயாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்

முகவுரை முற்றிற்று.

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

இரத்தின விலாசம்.

நசீஹத்துலாசம்.

ஹக்குத் தஆலாவின் துதி.

அறபு வாக்கியம்.

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்
வல் ஆக்கிபது லில்முத்தகீன், வஸ்ஸலாத்து
வஸ்ஸலாமு அலா றசூலிஹி, செய்யிதினா
முஹம்மதின், வஆலிஹி, வசஹ்பிஹி அஜ்மயீன்.

தமிழ் வாக்கியம்.

எல்லாப்புகழும், புகழ்ச்சியும் சர்வ வல்லமையுள்ள அல்லாஹுத் தஆலாவுக்காயிருக்கும், அவன் எப்பேர்க்கொற்ற நாயனானால் சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் இவைகளினால் வானலோகத்தையும், மரமட்டை, செடிகொடி, புற்பூண்டு முதலியவைகளினாற் பூமியையும் வெண்ணுரையெழும்பும் அலைகளினாற் கடல்களையும் நபிமார்களின் அனந்திரத்திற்குடைய தெளிவான ஆலிம்களினால் உலகத்தையும் தன்னுடைய உத்திரவான வஹியறிவிக்கும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களினால் மற்ற மலாயிக்கத்துகளையும் அழகிய ஹூறுல்ஹீனகளென்னும் தெய்வ ரம்பையர்களையும், நவரத்தினமாளிகை யிவைகளினால் சுவர்க்கலோகத்தையும் வள்ளலான தெளிவான காரணக்கடவுள் முஹம்மது நபிசல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களினால் மற்ற நபிமார்களையும் மிஸ்கீன்கட்கு ஹஜ்ஜாகிய ஜும்ஆநாளினால் மற்ற நாட்களையும் ஆயிரமாதம் வணக்கஞ் செய்வதைக்காண அதிக ஏற்றமுஞ் சிறப்பும் நன்மையும் பொருந்திய (லைலத்துல் கதரென்னும்) இரவினால் மற்ற இரவுகளையும் நரகங்களை யடைத்து ஜின் ஷைத்தான்களை அழைத்து

சிறையாக்கிச் சொர்க்க வாயில்களைத் திறந்துச் சிங்காரித்து மிகவும் அலங்காரஞ் செய்யப்பட்ட மகா சிறப்பான றமலான் மாதத்தினுல் மற்ற மாதங்களேயும் நாளொன்றிற்கு நூற்றிருபது றஹ்மத்து இறங்கும் தலமாகியும், பூமிக்கு நடுத்தலமாகியும் விளங்குகின்ற திருமக்கமா நகரத்தில், நான்கு திசைக்கும் விபுலாவாகிய கஃபத்துல்லா வென்னும் பெயருடைய பள்ளி வாயிலினுல் மற்றப் பள்ளி வாயில்களையும் ஹறும், ஹலால், ஏவல், விலக்கல், இரகசியம், பராசிய மிவைகள் இன்னதென்று காட்டி நல்ல துலாம்பரமான நேர் வழியை யறிவிக்கும் புறுக்கானுல் ஹமீது, குதுஆனுல் மஜீதென்னும் வேதத்தினுல் மற்ற வேதங்களையும் லவ்ஹுல் மஹபூலுப் பலகையி லெழுதப்பட்ட எழுத்துகளுக் கெல்லாம் முதலெழுதப்பட்ட 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்னுந் திருநாமத்தினுல் புறுக்கான் வேதத்தையும் இவை போலே மற்றவைகளையும் மகா சிறப்பும் அலங்காரமு மாக்கி வைத்தானே அப்பேர்க் கொற்ற நாயகனுக விருக்கும்.

ஹக்கூத் தஆலாவின் துதி முற்றிற்று.

நபிநாயகத்தின் துதி.

ஆதியும், அந்தமும், அடியும், முடிவு மில்லாது பரிபூரணப் பொருளாய் விளங்கும் அல்லாஹுத் தஆலா இவ்வுலகத்திலே குபிரென்னு மிருள் நிறைந்து மூடிவருங் காலத்திலே, தீனுல் இஸ்லா மென்னும் பிரகாசத்தினுல் அவ்விருளை நீக்கி யுண்மை யாகிய நேர்வழியைக் காட்டுந் தனது புறுக்கா னென்னும் வேதத்தை யெவ்விடங்களிலும் பிரபல மாக்கும் பொருட்டுத் தனது திருத்தூதராக அனுப்பிய நாயகமாயும், தெள்ளித் தெளிந்து வடித்து திரட்டித் திருத்துந் திருமணியாயுஞ் சகல படைப்புகளிலும் மேன்மையும், உயர்வுஞ் சிறப்பும் பொருந்தி யிருலோகத்திற்கு மொளியான, காரணக் குருவான பேரின்பக் கடலான செய்யிது முறுஸலீன் ஷபீஹுல் முதுநபீன், இமாமூல் முத்தஹீன் ஹபீபு றப்பில் ஆலமீன், அஹ்மது, ஹாமிது, மஹ்மூது, முஸ்தபா முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும் நக்ஷத்திர பிரகாசம் போன்ற அவர்கள் ஆல் அஸ்ஹாபிகள்

பேரிலும் ஸலவாத்தும் சலாமு முண்டாவதாகவும், வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

நபிநாயகத்தின் துதி முற்றிற்று.

கலப்பறுதலான நிய்யத்துச் செய்வதின் பயான்.

அழகான நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய கஸ்தூரி வாடை கமழும் திருவாய் மலர்ந்தருளினதாவது யாதெனில், அமல்க ளெல்லாம் நிய்யத்து களைக் கொண்டா யிருக்கும், எந்த மனுடன் எதை நிய்யத்துச் செய்வானோ அஃதவனுக் குண்டாகும்.

ஆதலால், ஒருவனுடைய நாட்டம் அல்லாஹுத் தஆலா வையும் அவனுடைய தூதாங்கரான றசூலையும் நாடுவானாகில் அந்நாட்டப் பிரகாரம் பெற்றுக் கொள்வான். இன்னும் துனியாவிலே பணங்காசு முதலியதைப் பெற்றுக்கொள்ள அல்லது ஒரு பெண்ணைக் கலியாணம் முடித்துக் கொள்ள நாடுவானாகில் அவைகள் அவனுட்டப்படி கிடைக்கு மென்று திருவுள மானார்கள். இந்த ஹதீதின் கருத்து நபிநாயகம் மதீனத்திற்கு ஹிஜ்ரி போனதின் பின்னர், சிலர் நபிநாயகத்தைக் காணவேண்டிய நிய்யத்துச்செய்து போனார்கள். சிலர் அவ்விடத்தில் வியபாரஞ் செய்து கொள்ளலா மென்று நாடிப் போனார்கள். சிலர் பெண்களைக் கலியாணஞ் செய்துக் கொள்ளலா மென்று நாடிப் போனார்கள். அந்தந்த நாட்டப்படி அவரவரே பெற்றுக் கொண்டார்கள்.

இன்னும் மூமினான பேர்களுடைய நிய்யத்தாகிறது மகா சிறப்பும் மேன்மையும், உயர்த்தியுந் தங்கிய அல்லாஹுத் தஆலா வுடைய அறுவைப் பார்க்கிலும் மிகவும் நலமும் ஏற்றமுமா யிருக்கு மென்று நபிநாயகந் திருவுள மானார்கள்.

ஹிக்காயத்து.

எஹ்யா வுலூமித்தி னென்னுங் கித்தாபில் இமாம் கஸ்ஸாலி றஹிமஹுல்லாஹு அவர்கள் சொல்லி யிருக்கிறதாவது யாதெனில், சில கவுமுகள் கூடி யோர் மரத்தை வணங்குகிறார்க ளென்னும் சமாசாரம் ஓர் ஆபிதான வருக்குத் தெரிந்து அவர் அம்மரத்தை வெட்டிப் போடுகிறதற்காக எண்ணமுற்று, அதற்கான ஆயுதங்களை யெடுத்துக் கொண்டு விரைவாக நடந்து போகும்போது,

இபுலீசானவன் அவ்வழியிலே யெதிர்க்க ஆபிதானவரை யடுத்து, ஓய் ஆபிதே, நீர் அந்த மாத்தை வெட்டிப் போட்டிடாலுல் அதை வணங்குகிற மனுடர்கள், இன்னும் வேறோர் மாத்தை வணங்குவார்கள். ஆதலால் உம்முடைய இபாதத் தளவிளே நீர் மீண்டு போமென்று சொன்னான்.

அது கேட்டு ஆபிதானவர், இபுலீசைப் பார்த்து நான் எவ்விதத்திலும் அம்மாத்தை வெட்டிப் போடுவே னென்று சொல்லி மூடுகும் போது இபுலீசு வெட்டக்கூடா தென்று தர்க்கித்ததில் இருவருக்குங் கைகலந்து சண்டை நேரிட்டது. அப்போது, ஆபிதானவர் இவன் மாத்தை வெட்ட விடாமல் நம்மைத் தடுக்கிற படியினால் முதலில் இவனைத் தான் வெட்டிப் போட்டுப் பின்னர் மாத்தை வெட்ட வேண்டுமென் றெண்ணங் கொண்டு இபுலீசை வாரித்தூக்கிக் கிழே போட்டார். உடனே இபுலீசானவன் ஆபிதானவரைப் பார்த்து, ஓய் ஆபிதே. நீர் பக்கிரான மனுடனாக இருக்கிறீர், ஆதலால் உம்முடைய இபாதத் தளவில் மீண்டுபோம். உமக்கு இரவொன்றிற்கு இரண்டு தங்கக் காசு வீதம் நிச்சயித்து நித்திரை செய்கிற தலையணையின் கிழே வைக்கிறேன். அதைப் பெற்றுக் கொள்ளும். மேலும் நீர் அம்மாத்தை வெட்டாமல் விட்டு விட்டுப் போவதினாலும், அதை வணங்காம லிருப்பதினாலும், உமக்கு யாதாமொரு குற்றமில்லை. அல்லாஹுத் தஆலா நாடுவானாகில் அம்மாத்தை வெட்டிப்போட ஓர் தூதரை யனுப்பி வைப்பானென்று சொன்னான்.

இச்சொற்களை யெல்லாம் ஆபிதானவர் நிசமென்று நம்பிக் கொண்டு தமது வீட்டிற்குப் போய் இரவு காலத்திற் படுத்திருந்து காலையிற் கண்விழித் தெழுந்து பார்க்கும் போது இபுலீசு சொற்படிக்குத் தலையணையின் கிழே யிரண்டு தங்கக்காசு இருக்கக் கண்டெடுத்தார். இரண்டாம் நாளும் அதே பிரகாரம் இரண்டு தங்கக்காசு கண்டெடுத்தார். மூன்றும் நாள் அங்கே யொரு வஸ்துவையும் ஆபிதானவர் காணாமையால் வெகுண்டு அம்மாத்தை வெட்டிப்போட எண்ணி விரைவாக எழுந்து போகும் போது இபுலீசானவன் முன்போல அப்பாதையில் எதிர் வந்து ஆபிதானவரை வெட்ட முடுகினான். அது கண்டு, இவருந் தயாராகி யிரண்டு பேருஞ் சண்டை செய்ததில், இபுலீசானவன் மிகைத்து ஆபிதானவரை வாரித்தூக்கிக் கிழே போட்டான். அப்போது ஆபிதானவர் இபுலீசைப்பார்த்து முன்செய்த சண்டை

யிலே நானுன்னை வாரித்தூக்கிக் கிழேபோட்டு மிகைத்துக் கொண்டதும், இப்போது செய்த சண்டையிலே நீஎன்னை வாரித் தூக்கிக் கிழே போட்டு மிகைத்துக் கொண்டதும் என்ன சபபினுலென்று கேட்டார்.

அதற்கு இபுலீசானவன் ஆபிதானவரைப்பார்த்து, நீர் முற்பட அல்லாவுக்காக கோபங்கொண்டு மரத்தை வெட்டவந்ததால் என்னை மிகைத்துக் கொண்டீர். இப்போது நீர் இரண்டு தங்கக்காசுக்காகக் கோபங்கொண்டு வந்ததால் நானும்மை மிகைத்துக்கொண்டே னென்று சொன்னுன். ஆகையால் மூமினுகிய உடற்பிறப்புகளே, இந்தக் கிஸ்ஸாவை நன்ருகப் பார்வையிட்டுச் சண்டாள இபுலீசுடைய மாயவலைக்குள் அகப்படாமற் கலப்பறுதலான நிய்யத் துடனே இபாதத்துச் செய்து வருவீர்களாக.

ஹிக்காயத்து.

ஹயாத்துல் ஹைவானென்னும் கித்தாபில் தமீரிய்யி என்பவர்கள் சொல்லியிருக்கிறது யாதெனில், ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹுத் தஆலா வானலோகத்திலிருந்து பூலோகத்தி லிறக்கி வைத்தபோது காடுகளிலுள்ள மிருகஜாதிகள் கூட்டமாக வந்து மரியாதை அதபுடனே ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கண்டு சலாம் சொல்லி யடிபணிந்து நின்றபோது, ஆதம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் சந்தோஷமாகி அந்த மிருக ஜாதிக ளடங்கலுக்கும் துஆச்செய்து அனுப்பிவிட்டார்கள்.

பின்னர் அதுபோல மான்களில் ஓர் கூட்டம் ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் முகதாவில் அதபுடனே மரியாதையாக வந்து சலாஞ் சொல்லித் தாட்சிசெய்து நின்றன. அதுகண்டு ஆதம் அலைஹிஸ்ஸலாம் மனமகிழ்ச்சிகொண்டு துஆச்செய்து அம்மான் களுடைய முதுகுகளின் பேரிலே தங்களுடைய முபாறக்கான திருக் கையாற் றடவினுர்கள். உடனே அந்த மான்கள் பேரிலெல்லாம் கஸ்தூரி வாசனை யுண்டாகினது, இவ்விதம் நூதனமாகக் கஸ்தூரி வாசமுண்டாக்கிய மான்கள் தங்களிருப்பிடத்திற்குப் போகக்கண்ட வேறூர் மான்கூட்டங்கள் கஸ்தூரி மணக்குகின்ற மான் கூட்டங்களையடுத்து உங்கள் பேரிலே கஸ்தூரி வாசனை யுண்டான சபபென்னவென்று கேட்டதற்கு, அம்மான்கள் நாங்கள் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களைக்கண்டு ஸியாறத்துச் செய்யப்போன

தினல் அவர்கள் எங்களுக்குத் துஆச்செய்ததுமன்றி எங்கள் முதுகு களின்பேரில் அவர்கள் மூபாறக்கான திருக்கையினுற் தடவியும் விட்டார்கள். அதனுற்றுன் கஸ்தூரிவாசனை யுண்டாயிருக்கிற தென்று சொல்லின.

அதுகேட்டு இரண்டாவது மான்கூட்டங்கள் சந்தோஷமாகி, நாமும் ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்திற்போனுல் கஸ்தூரி வாசம் பெற்றுக்கொண்டு வரலாமென்கிற எண்ணத்துடனே அதிசீக்கிரமாக நடந்து ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்திற்போய் மரியாதை ஒழுங்குடனே சலாஞ்சொல்லித் தாட்சிசெய்து நின்றன. அதுகண்டு ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் சந்தோஷமாகி அம்மான் கூட்டங்கட்குத் துஆவுஞ்செய்து அவைகளின் முதுகுகளின் பேரிலுங் கையினுற் தடவியும் விட்டார்கள். ஆனுல் முன்வந்த மான்கூட்டங்களைப்போலே கஸ்தூரி வாசனை இந்த மான்கூட்டங்களுக் குண்டாகவில்லை. அதனுலந்த மான் கூட்டங்கள் கவலையாகி முன்னர் கஸ்தூரிவாசனை பெற்ற மான் கூட்டங்களைப் பார்த்து உங்களுக்கு ஆதம் அலைஹிஸ்ஸலாம் செய்ததுபோலே எங்களுக்குஞ் செய்தார்கள். அப்பேர்ப்பட்ட கஸ்தூரிவாசனையை நாங்களேற்றுக்கொள்ளவில்லையே, அஃதென்ன காரணமென்று கேட்க, அதற்குக் கஸ்தூரிவாசனையுள்ள மான் கூட்டங்கள் சொன்னதாவது, நாங்கள் அல்லாவுக்காக ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைக்கண்டு ஸியாறத்துச் செய்யப்போனேம். அதனுல் கஸ்தூரிவாசனையைப் பெற்றுக்கொண்டோம். நீங்களோ கஸ்தூரி வாசத்திற்காக ஆதம் அலைஹிஸ்ஸலாத்தைக்கண்டு ஸியாறத்துச் செய்யப்போனீர்கள், அதனுலுங்களுக்குக் கஸ்தூரிவாசனை கிடைக்கவில்லை யென்று சொல்லின.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹு சொல்லியிருக்கிற தாவது யாதெனில், ஓர் இராஜாவானவர் இராஜபரிபாலனஞ் செய்யத் தன் வீட்டில்நின்று மெழுந்து அரண்மனைக்குப் போகும் வழியிலே முப்பது பசுமாடு கறக்கிறபாலளவு கறக்கிற ஓர் பசுமாடு கரவையுடனே ஒரு மனுடனிட மிருக்கக்கண்டு ஆச்சரியமாய் அந்தப் பசுவை பலாத்காரமாகப் பிடிங்கிக் கொள்ள எண்ணங்கொண்டவராய், வீட்டிற்கு வந்து மறுநாள் இராஜாவானவர் பசுவின் பால் கறக்கிறவனுடைய இடமாய்வந்து கறவையைப்பார்த்து நின்று, பின்னர் மாட்டுக்காரனைப்பார்த்து அவனுடனே இந்த மாடுசேற்றுக்

கறந்த பாலில் அரைவாசிதானே கறந்திருக்கிறது. அதைப் பார்த்தால் நேற்றுச் சாயரட்சை மாட்டை மேய்த்தகாட்டில் நீ இன்று சாயரட்சை மாட்டை மேய்க்கவில்லைபோலே காண்கிறது. அது தவிர வேறேயென்னதப்பினால் பால் குறைந்ததென்று கேட்டார்.

ஹிக்காயத்து.

அப்போது மாட்டையுடையவன் இராஜாவைப்பார்த்து, ஒரு வேளை இராஜாவானவர் அநீதத்தை நிய்யத்துச் செய்திருக்கக் கூடும். அதனாலேதான் இம்மாட்டின் பால் குறைந்ததென்று சொன்னான். அதுகேட்டு இராஜாவானவர் அஞ்சி அநீதமான நிய்யத்தை விட்டுமீண்டார். அப்போது மூந்திக்கறந்த பாலளவு அந்த மாட்டிற் பால் கறக்கப்பட்டது.

இமாம் அபூஹனீபா றஹிமஹுல்லா அவர்களிடத்தில் விற்பனைக்காகச் சில சரக்குகள் வந்திருந்தது. அவைகளை வாங்கிச் சில வியாபாரிகள் வந்திருந்து இன்ன இன்ன சரக்கை, இன்ன இன்ன விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறோமென்று கேட்டார்கள். அதற்கு இமாமவர்கள் காலைபி லாகட்டுமென்று சொன்னார்கள். பின்னர், சுபுஹுநேரத்தில் வேறே சில வியாபாரிகள்வந்து இமாமவர்களிடத்தில் முன்கேட்ட விலைக்கு அதிக விலையாக அந்தச் சரக்கை வாங்கிக் கொள்ளுகிறோமென்று கேட்டார்கள். அப்போது இமாமவர்கள், பிந்திவந்த வியாபாரிகளைப்பார்த்து மூந்திவந்த வியாபாரிகள் கேட்ட விலைக்குச் சரக்குகளைக் கொடுக்கிறதற்கு நாங்கள் திடனாக நிய்யத்துச்செய்து விட்டோமென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

அநுசறுவானென்னும் பெயருடைய அமீரானவர், ஓர் நாள் வேட்டையாட எண்ணங்கொண்டு வீட்டைவிட்டெழுந்து காட்டு வழியாகப் போகவே, தனக்குத் தண்ணீர்தாக முண்டானதின் பேரில் அங்கேயோர் தோட்டத்தையடுத்துப் பார்க்கும்போது, அத் தோட்டத்தில் ஓர் பிள்ளையைக்கண்டு எனது தாகத்திற்குத் தண்ணீர் தாவென்றுகேட்டார். அப்போதப்பிள்ளை அமீரைப் பார்த்து எங்களிடத்தில் இப்போது தண்ணீர் சமீபத்தில் இல்லை யென்று சொன்னது. அதுகேட்டு அமீர் தண்ணீரில்லாதிருக்கில் ஓர்

மாதுளம்பழமாவது கொண்டுவந்து தாவென்று கேட்டார். உடனே அப்பிள்ளை மாதுளம் பழங் கொண்டுவந்து கொடுக்க, அதை அமீர் வாங்கிப் பார்க்கும்போது மிகுந்த அழகும், அருந்தும் போது தித்திப்பும், இன்பமுமாக விருக்கக்கண்டு அத்தோட்டத்தைப் பிடுங்கிக்கொள்ள எண்ணம் வைத்துப் பிள்ளையைப் பார்த்து இம்மாதுளம் பழத்தில் இன்னுமோர் பழங் கொண்டு வந்து தாவென்று கேட்டார். அது போலே அப்பிள்ளை மறுபடியு மோர் மாதுளம் பழங் கொண்டுவந்து கொடுக்க, அதையும் அமீர் தின்ன அந்தப்பழம் புளிக்க, அந்தப்பிள்ளையைப் பார்த்து, ஓப் பிள்ளையே, இந்தபழம் முந்தி நீ பறித்துக் கொண்டுவந்த மரத்தின் பழந்தானு அல்லவா வென்று கேட்டதற்கு, அப்பிள்ளை அம் மரத்துப் பழந்தா னென்று சொன்னது. அது கேட்டு அப்படி யிருக்க இந்தப் பழம் புளித்திருக்கிற சபபென்ன வென்று கேட்க, அந்தப் பிள்ளை அமீரைப் பார்த்து அமீருடைய எண்ணமாகிறது பழத்தைப் புளிப்பாக்கி விட்டதென்று சொல்ல, அது கேட்டு அமீர் பயந்து தோட்டத்தை அபகரித்து கொள்ள எண்ணிய நிய்யத்தை விட்டுவிட்டு பிள்ளையைப் பார்த்து இன்னுமோர் பழங் கொண்டு வந்து தாவென்று கேட்டு, வாங்கித்தின்று பார்த்தார். அது முந்தின பழத்தைப் பார்க்கிலும் மகா இன்பமும், ருசியுமா யிருக்கக்கண்டு பிள்ளையைப் பார்த்து, அமீர் இந்தப்பழம் இவ்வளவு சேர்த்தியாயிருக்கிற சபபென்ன வென்று கேட்டார். அதற்கப்பிள்ளை அமீருடைய நிய்யத்து நல்ல நிய்யத்தானபடியால் பழம் சேர்த்தியா யிருக்கிறதென்று சொன்னது. இந்தக் கிஸ்ஸா துஸ்ஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன. ஆதலால், மூமினுகிய உடற் பிறப்புகளே, நீங்கள் கலப்பறுதலான நிய்யத் தென்னும் நினைப்பு வைத்து இபாதத்துச் செய்து கொள்விர்க ளானல், அல்லாஹுத் தஆலா நமக்கு இருபதியிலும் கிருபை றஹ்மத்துச் செய்வானுகவும் ஆமீன்.

கலப்பறுதலான நிய்யத்துச்செய்வதின் பயான் முற்றிற்று.

தாய்தகப்பன் பிள்ளைகளுக்குக் குறுஆன் படித்துக் கொடுக்கிறதினுற் கிடைக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய திருச்சமுகத்தில் நடந்ததென்று அப்துல்லா இபுனு சுகறத்து றலியல்லாஹு அன்ஹுவர்கள் சொல்லி யிருக்கிறதாவது யாதெனில், ஒரு மனுடன் மிகுந்த அதபுடனே நபிநாயகத்தின் சமுகததில் வந்து அவர்களுக்குச் சலாஞ் சொல்லி அல்லாவுடைய றசூலே, தன் பிள்ளைகளுக்குக் குறுஆனைப் படித்து வைக்கிறவனுக்கு எவ்வளவு கூலி கிடைக்குமென்று கேட்டார். அதற்கு நபிநாயகம் அம்மனுடனைப் பார்த்து, அல்லாஹுத் தஆலாவுடைய கலாம் ஷரீபுக்கு இவ்வளவு நன்மை கிடைக்குமென்கிறதாய்ச் சொல்லத் தீர்மானமில்லை யென்று சொன்னுர்கள்.

பிறகு நபிநாயகம் அல்லாஹுத் தஆலாவுடைய வஹீகொண்டு வருகிற ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் ஒருவன் தன் பிள்ளைக்குக் குறுஆனைப்படித்து வைத்தானே யானுல் அவனுக்கு எவ்வளவு கூலி கிடைக்கு மென்று கேட்டார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபிநாயகத்தைப் பார்த்து, முஹம்மதே குறுஆனுகிறது, அல்லாஹுத் தஆலா வுடைய திருக்கலாமாயிருக்கிறது. ஆகையால் அதற்கிவ்வளவு கூலி யென்று தீர்மானமில்லையென்று, சொல்லிவிட்டு வானலோகம்போய் அங்கிருக்கும் இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து குறுஆனைப் பிள்ளைகட்குப் படித்துவைக்கிற தகப்பனுக்கு எவ்வளவு கூலி கிடைக்குமென்று கேட்டதற்கு, இஸ்றாபீல் அலைஹிஸ்ஸலாமும் முன்னர் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமும் நபி நாயகத்திடஞ் சொன்னது போலவே சொன்னுர்கள். பின்னர் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹுத் தஆலாவிடத்தில் கேட்டு, நபி நாயகத்திடம் வந்து அல்லாவுடைய நபியே யுங்களுடைய றப்பு, உங்களுக்குச் சலாஞ் சொல்லிச் சொல்லச் சொன்னதாவது யாதெனில்,

யாதாமொருவன் தன்னுடைய பிள்ளைகட்குக் குறுஆனைப் படித்துக் கொடுப்பானே அப்பேர்க்கொத்தவன 10,000-ஹஜ்ஜும்,

10,000-உம்ருவும் செய்தவனாகவும், இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய மக்களில் நின்று 10,000-ம் அடிமைகளை யுரிமை விட்டவனாகவும், 10,000-ம் பேர்களுடனே பீஸபீல் செய்த வனாகவும், பசித்திருக்கிற 10,000-ம் முஸ்லிமானவர்களுக்கு வழிபனங்கொடுத்துப் பசிதீர்த்தவனாகவும், உடுமானம் இல்லாத 10,000-ம் முஸ்லிமானவர்களுக்கு உடுமானங் கொடுத்தவனாகவு மிருப்பான். இன்னும் அவனைக் கியாமத்து நாளையில் கபுறை விட்டு மெழுப்புகிற வரையிலும் குறுஆனானது அவனுடனே யிருக்கும். இன்னும் நன்மை தீமை நிறுக்கிற திராசுத் தட்டிலே அவனுடைய நன்மைத்தட்டு கனமாயிருக்கும். இன்னும் ஸிறுத்தல் முஸ்தகீமென்கிற பாலத்தின்பேரிலே அவன் மின்வெட்டி மறைந் ததுபோலே நடக்க இடமாயிருக்கும். இன்னும் அவன் சொர்க்க லோகம் போகிறவரையிலும் குறுஆன் கூடவே யிருக்குமென்று அல்லாஹுத் தஆலா சொன்னானென்று ஜிபுரீல அலைஹிஸ்ஸலா மவர்கள் சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகம் தங்கள் முபாறக்கான திருவாயினாலே யாதாமொருவன் தன் பிள்ளைக்குக் குறுஆனில் நின்றும் ஓர் ஆயத்தைப்படித்துக் கொடுத்தானேயானால் அவன் ஆயிர வருஷம் பகற்காலத்திற் நோன்பாயிருந்து, இராவுகாலத்திற் இபாதத்துச் செய்தவனைக்காண மிகவும் வரிசையுடையவனாக இருக்குமென்றும் இன்னும் ஏழை மிஸ்கீன்களுக்கு ஆயிரம் தீனாரென்னும் தங்கக்காசு தைக்காக் கொடுப்பதைக்காண மிகவு மேற்றமானதா யிருக்கு மென்றார் திருவுளமானார்கள். இன்னும் நபிநாயக மவர்கள் யாதா மொருவன் தன் பிள்ளைக்குக் குறுஆனைப்படித்துக் கொடுப்பானே யானால் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஆகிறத்தில் ஒளிவினு லாகிய சவடியொன்றைப் போடுவான். அதைக் கண்டவுடனே முந்தினபேர்களும் பிந்தினபேர்களும் ஆச்சரிய மாவார்களென்றார் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகமவர்கள் யாதாமொருவன் குறுஆனைப் படித்து அதின் பிரகாரம் அமல்செய்து வருவானாகில், கியாமத்து நாளையில் அவனுடைய தாய் தகப்பன்மார்கட்குச் சூரிய பிரகா சத்தைக்காண மெத்தவும் பிரகாசமுள்ள கிரீடத்தைப் போடுவா னென்றார் திருவுளமானார்கள். இன்னும் பிள்ளைகளுக்கு அழகான பெயரிடுகிறதும், குறுஆன், அதபு, இல்மு ஆகிய இம்மூன்றும் படித்துக் கொடுக்கிறதும், சுத்தனுச்செய்து வைக்கிறதும் தாய்

தகப்பன்பேரிற் கடமையா யிருக்குமென்றும் அப்படி குறுஆனைப் படித்துக் கொடாமற்போனால் கியாமத்து நாளையில் அவர்கள் வேதனைப் படுவார்களென்றும் ஹுஜூக்கு மாக்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப்படிக்கு கஸீனத்துல் அஸ்றாறென்னுங் கித்தாபில் 29, 30-வது சயிட்டில் எழுதப்பட்டிருக்கின்றது.

இன்னும் ஈசா அலைஹிஸ்ஸலாம் ஒரு கபுறுக் கருகாண்மையாய் நடந்து போகும்போது அந்தக் கபுறில் அடங்கியிருக்கிற மனுடனை மலாயிக்கத்துகள் அதாபென்னும் வேதனை செய்யக் கண்டவர்களாகத் தாங்கள் நாடிப்போன ஹாஜத்திற்குப் போய்த் திரும்பி அந்த வழியாக வரும்போது முன்னர் மனுடனை அதாபு செய்யக்கண்ட கபுறில் ஒளியினுள்ள தாம்பாளங்கள் அந்த மலாயிக்கத்துகளுடனே யிருக்கக் கண்டு ஆச்சரியமாய் நடந்து வரும்போது அல்லாஹுத் தஆலா அலைஹிஸ்ஸலாமவர்கள் அடங்கிய மனுடன் மூர்த்தி பாவியாயிருந்தான். அதனாலே அதாபு செய்யப்பட்டது. அவனுக்கு ஓர் சிறபிள்ளை யுண்டாயிருந்தது. அந்தப் பிள்ளையைப்பெற்ற தாயானவள் மகுத்தாபு காணுவென்னும் பள்ளிக்கூடத்தில் ஓதவைத்தாள். ஓதிக்கொடுக்கிற உஸ்தாது அந்த பிள்ளைக்கு முதலில் 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்னுந் திருநாமத்தைச் சொல்லிக்கொடுத்தார். அதை யந்தப் பிள்ளை படித்துக் கொண்டான். இவ்விதம் என்னுடைய திருநாமத்தை அந்த மனுடனுடைய பிள்ளை படித்துக் கொண்டபடியினால் அந்தக் கபுறில் அடங்கிய அடியானை அதாபு செய்யாமலதைவிட்டும் விடுதலையாக்கி யொளியுள்ள தாம்பாளங்களை மலாயிக்கத்துகளுடனே யனுப்பி வித்தேனென்று தெரிவித்தான். இந்தபடிக்குப் பாயிதா குறுஆன் முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆப் மூமின் முஸ்லிமாகிய உடற்பிறப்புகளே! 'பிஸ்மில்' ஓதினதற்கு இவ்வளவு தறஜாவும் நன்மையுங் கிடைத்ததானால் குறுஆன் முழுமையுமோதினால் எவ்வளவு தறஜாவும் நன்மையுங் கிடைக்கும். ஆனதால் உங்களுடைய பிள்ளைகளை அல்லாஹுத் தஆலா இறக்கிய குறுஆனை யோதவையுங்கள், அல்லாஹுத் தஆலா யுங்களுடைய பாவங்களைப் பொறுத்துச் சொர்க்கலோகத்திலே புகுதவைப்பான். ஆமீன்.

கஸீனத்துல் அஸ்றாறென்னுங் கித்தாபிற் சொல்லியிருக்கிறது யாதெனில், குறுஆனையும் அதபு ஒழுங்கையும் பறுலான காரியங்களையும் படிப்பித்துவைக்காத தாய் தகப்பன் மார்களுக்கு வயிலென்கிற

நரகவேதனையும் கடினமான ஆதாபென்னுந் தண்டனையுங் கிடைக்கும், அப்படி யோதவைக்காமற்போனால் அவர்கள் மடமையாகி விடுவார்கள். ஆதலால், அவர்கள் தாய் தகப்பன் மார்களைவிட்டும் நான் நீக்கிக்கொள்வேனென்று நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஆனதால், உடற்பிறப்புகளான முஸ்லீம்களே, அல்லாஹுத் தஆலா நம்மனைவிலிறக்கிய மகா சிறப்பும் வலுப்பமுமான குர்ஆன் வேதத்தை வோதாமலுந் தன் பிள்ளைகட்குப் படிப்பித்து ஸவக்காமலும் துனியாவை நம்பி முதலிலே தமிழ் முதலிய பாஷைகளைப் படிக்கவைக்கிறதும், மற்றும் கைத்தொழில்களைப் படிக்கவைக்கிறதுமாகப் பருவகாலத்தைப் போக்கிவிட்டால் நாளைக் கியாமத்திலே எந்த விதத்தில் அல்லாஹுத் தஆலாவைச் சந்திப்பீர்கள். எந்த விதங் கேள்விக்குச் சவாபு சொல்வீர்கள். ஆனதால் மேற்சொன்ன ஹதீது முதலியவைகளை குர்ஆனை யோதவைத்து அதனாலுள்ள நன்மைகளைக் கொள்ளையாடிக் கொள்ளுங்கள். அதனால் அல்லாஹுத் தஆலா கணக்கிலடங்காத நன்மையுந் தறஜாத்துகளுடனே பதவியாகிய சொர்க்கத்தையுந் தந்தருள்வான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஹதீது.

நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள் அது யாதெனில், அல்லாஹுத் தஆலா இன்சான்களைப்படைக்க எண்ணாயிரம் வருஷத்திற்கு முன்னாலே அவர்களுக்கு றிஸ்க்கையுண்டாக்கி அதன் பேரிலே தின்னுகிறவர்கள் பெயரை எழுதியிருக்கிறானென்று. இன்னும் நபிநாயகம் தங்களுக்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் தெரிவித்ததென்று அஸ்ஹாபிமார்களுக்குத் திருவுளமானது யாதெனில், ஒருபோது சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் கடற்கரையிலே நின்று தொழுதார்கள். அப்போது பசுமையான இலையை வாயினிடமாக வைத்துக்கொண்டு ஊர்ந்துபோகின்ற ஓர் சிற்றெறும்பைக் கண்டார்கள். அச்சிற்றெறும்பு கடற்கரையிலோரிடத்திற்போய் நின்று கொண்டு சத்தமிட்டது. அந்தச் சத்தத்தைக்கேட்டு தவளையொன்று வந்து தன் முதுகின்பேரிலே அந்தச் சிற்றெறும்பை வைத்துச் சுமந்து கொண்டு கடலிற்குள் மூழ்கினது. அப்படி மூழ்கிக் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சிற்றெறும்பு கடலைவிட்டுக் கரையில் வந்தது. அப்போது சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்கள் எறும்பைப் பார்த்து, நீ

வந்ததும் கடலிற்குள்போய்த் திரும்பி வந்ததுமாகிய கிஸ்ஸாவை எனக்குத் தெரியும்படியாய்ச் சொல்லென்று கேட்க, உடனே சுலைமான் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்துச் சிற்றெறும்பு கடலிற்குக் கீழேமழுமட்டையான படலைக்கல்லொன்று கிடக்கிறது. அந்தக் கல்லுக்கு நடுவில் ஓர் புழுவிருக்கிறது, அப்புழுவினுடைய ரிஸ்கை நாளொன்றுக்கு இரண்டுவிடுத்தம் நான் சுமந்துகொண்டுபோய்க் கொடுக்கும்படிக்கு அல்லாஹுத் தஆலா என்னை நியமித்து அதற்காகக் கடலிலே என்னை கொண்டுபோகத் தவளை யுருவமாக ஒரு பலக்கையும் படைத்திருக்கிறான். அந்தத் தவளை என்னைச் சுமந்து கொண்டு கடலிலேமுழுகிப் படலைக்கல்லின்பேரில் விடும். அப்போது கல்லிரண்டாகப் பிளந்து புழுவெளியாகும். அப்படிப் புழுவெளியானவுடனே நான் சுமந்துகொண்டுபோன ரிஸ்கை அதற்குக் கொடுப்பேன். அதைப் புழுப்புசித்து மகிழ்ச்சியாகி கடலிற்குள்ளே கிடக்கிற படலைக்கல்லினடுவிலே குடியாக்கிவைத்து மறக்காமலெனக்கு இவ்விதம் ரிஸ்க்குக்கொடுக்கிற ஆண்டவனே, யுன்னைத் துதிசெய்கிறேன், இதுபோலே நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய உம்மத்தோர்களை மறக்காமல் அவர்களுக்கும் ரிஸ்க்குக்கொடுவென்று கேட்பதோடும், அல்லாஹுத் தஆலா பேரில் யாதாமொருவன் தவக்கல் செய்வானாகில் அவனுக்கு அல்லா போதுமானவனாயிருக்கிறானென்று சுக்கூர் செய்யும். பின்னர் தவளையானது என்னைச் சுமந்துகொண்டு வந்து கடற்கரையிலே விடுமென்று சொன்னது. இந்தப்படிக்கு தவக்கல் மஜாலிஸென்னும் கித்தாபில் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹிக்காயத்து.

இமாம் ஷாபி யென்பவர்கள் சொல்லியிருக்கிறதாவது யாதெனில், அல்லாஹுத் தஆலா ரிஸ்க்குக் கொடுக்கிற கருமத்திலே நிர்ணயங்கொள்வதைநாடி நான் வீட்டைவிட்டு வெழுந்து காட்டிற்குப்போய், ஓர் மலைப்பொதும்புக்குட்புகுந்து அல்லாஹுத் தஆலா ரிஸ்க்கு இவ்விடத்தில் எவ்விதமாகக் கொடுக்கிறான், அதைப்பார்ப்போமென்று உறுதியுடனே அங்கு ஓர் மூலையிலிருந்தேன். அப்படியிருக்கும்போது மிகுந்த மழைபெய்தது, அந்த மழையினால் வழிப்போக்கர்களான காபிலாக்கூட்டத்தார் வழிதப்பியிருக்க இடந்தேடி வருகையில், நானிருக்கிற மலையைக்கண்டு

அம்மலைப்பொதும்பில் நுழைந்து அவர்களென்னைக்கண்டு, ஓய் அல்லாவுடைய அடியானேயென்று கூப்பிட்டார்கள். அதற்கு நான் ஜவாபு சொல்லவில்லை. காபிலாக்கள் இவர் குழிராயிருப்பதினாலே பேசக்கூடாமலிருக்கிறாரென்று அவ்விடத்தில் நெருப்பிட்டெரித்துப் பேசுவாரென்று பார்த்தும், நான் பேசாமலிருப்பதைக் கண்டு இந்தப் பக்கீர் பசியினாற் பேசாமலிருக்கிறார், ஆதலாற் பசி பாறினாற் பேசுவாரென்று ஓர் சுபுறாவை எடுத்து விரித்து அதிலே அவர்களிடத்திலிருந்த வஜீபனங்களைப்பரப்பி என் முன்னிலே தின்னுமென்று வைத்தார்கள். அப்போது நான் யாதொரு வஸ்துவையுமெடுத்துத் தின்னாமலிருப்பதைக் காபிலாக்கண்டு இவரிவ்விடத்தில் நெடுநாளாக யாதொன்றுந் தின்னாமலிருப்பதால் இஃதென்னமோவென்ற வஜீபனத்தை யெடுத்துப் புசிக்கவில்லையென்று சொல்லி, என் முன்பாய்ப் பாலை நன்றாக வற்றக்காய்ச்சி அதிலே சக்கரையைப்போட்டுப், பாலூதா செய்து தின்னும்படிக்குக் கிட்டவைத்தார்கள். அதையும் நான் திரும்பிப்பார்க்காமலிருப்பதைக்கண்டு, காபிலாக்கள், ஓகோ இவருடைய பற்கள் உண்மையாகப் பூட்டிருக்கிறதென்றெண்ணி அவர்களில் இரண்டு பேரெழுந்து ஓர் கொம்பைக்கொண்டு வாய்பிதழை நீக்கிப் பல்லிற் கொடுத்துப் பிளந்து ஓர் பிடிப்பாலூதாவை யூட்டினார்கள். அப்போது சிரித்தேன். அதுகண்டு அவ்விரண்டு பேர்களும்பார்த்து நீர் பயித்தியக்காரரென்றார்கள். அப்போது நான் காபிலாக்களைப் பார்த்து, நான் பயித்தியக்காரனல்ல, ஆகிலும் எனக்கு றிஸ்க்கு கொடுக்கிறதில் என்னுடைய றப்பைச் சோதிக்கநாடி நானிவ்விதஞ் செய்தேன். அப்படி நான் செய்தும் அல்லாஹுத் தஆலா எனக்கு றிஸ்க்கு குறைவில்லாமற் கொடுத்தான். ஆனதால் எனக்கும் மற்ற அடியார்களுக்கும் எத்தலத்திலிருந்தாலும் குறைவில்லாமல் றிஸ்க்குக் கொடுக்கிறவன்தானென்று நான் திட்டமாக அறிந்து கொண்டேனென்று சொன்னேன். அதுகேட்டுக் காபிலாக்களும் புதுமையானார்கள். இப்படிக்கு றவுனக்குல் மஜாலிஸென்னும் கித்தாபில் வருகின்றது.

ஹிக்காயத்து.

தானியால் அலைஹிஸ்ஸலாமவர்கள் பனியிசுறாயீல் கூட்டத்தாருடைய பட்டணங்களில் நின்றுமோர்பட்டணத்திற்குட் புகுந்து பார்த்தார்கள். அங்கே யொருவரையுங் காணாததினாலே தாங்கள்

அந்தப் பட்டணத்தைவிட்டுப் புறப்படாடி ஒரு மாளிகை வாசலுக்கு அருகாண்மையாய் நடந்துபோகையில், அந்த மாளிகைக்கு உட்புறத்தில் நின்றும் உருத்தோற்றமில்லாமல் ஓர் சத்தமுண்டாயினது. அதுயாதெனில், ஓய் தானியாலே நீர் இம் மாளிகைக்குட் புகுந்துபாரும். அப்பால் கண்டுகொள்வீரென்று சொல்லக்கேட்டு, உடனே தானியால் அலைஹிஸ்ஸலாம் அந்த மாளிகைக்குட் புகுந்து பார்க்கும்போது அங்கே ஓர் கட்டில் போட்டு அதிலே பட்டினலே விரிப்பு விரித்து அவ்விரிப்பின்பேரில் ஒரு மையத்தைவைத்து, அம்மையத்தின் தலைமாட்டில் ஓர் கித்தாபு இருக்கவும், மேலேயுருவி ஓர் வாளுமிருக்கக்கண்டு, தாங்கள் கித்தாபையெடுத்து ஓதிப்பார்த்தார்கள். அந்தக் கித்தாபில் எழுதியிருக்கிறது யாதெனில், நான் ஆதுடைய மகன் ஷத்தாது, ராமி ராச்சியத்தையுடையவன், துனியாவில் நான் ஆயிரம் வருஷகால முயிரோடிருந்து ஆயிரம் கன்னியழியாத பெண்களைக் கலியாணஞ் செய்து, ஆயிரம் பிள்ளைகளைப் பெற்று, ஆயிரம் பட்டணத்தை யுண்டாக்கி, ஆயிரம் பட்டணத்தின்பேரில் சண்டைசெய்து அவைகளைப் பிடித்து, ஆயிரம் புதையல்களைப் புதைத்து மகா மகிழ்ச்சியுடனே வாழ்ந்திருக்குங் காலத்திலே, பஞ்சகாலம் வந்து எங்களைப் பிடித்தது, அதெவ்விதமெனில் நாங்கள் ஓர் மரக்கால் அளவு மணிக் கோதும்பைக்கும், ஆயிரம் மரக்காலளவு தங்கங் கொடுத்து வாங்கித் தின்னும்படியான பஞ்சகாலமாயிருந்தது. பின்னர், அப்படியும் வாங்கித்தின்னவுங் கோதம்பை முதலிய மற்று யாதாமொரு வஸ்துங் கிடைக்காமற் பசியினால் அலைந்தலைந்து வருத்தப்பட்டு நாங்கள் ஹலாக்காகிப் போயினோம்.

ஆகலால் துனியாவை யுடையவர்களே, நீங்களும் றிஸ்க்குத் தேடுகிறதினாலே யுங்களுடைய நபுசை இலேசாக்கி வைத்துக் கொள்ளுகிறதே தவிர, அதிலே மூழ்கி இபாதத்தை விட்டுவிட்டு வீண்பராக்காக இருக்கவேண்டாம். ஆனால் துனியாவில் நான் சம்பாதித்துவைத்த பணங்காசு, பெண்டு, பிள்ளை, மண்டு மனை முதலியவைகளுக்கதிகம் நீங்கள் தேடிக்கொள்ளமாட்டீர்கள். அப்படி வல்லமையாகத் தேடிவைத்திருந்தாலும் இல்லாமையாகி விடும். ஆதலால் பணங்காசும் மிகுந்ததைத்தேண்டிச் சேகரஞ் செய்துகொள்கிறவனே இறந்துபோனவனுக்குப் பிற்காலம் அவனுடைய பணங்காசுகளெங்கே, இராசரீகமெங்கே, புதைத்து வைத்த புதையலெங்கே போயிற்று, பார்க்குமிடத்திற் பாவமே

சுற்றிக்கொண்டதா யிருக்கிறதென்று அந்தக் கித்தாபி லெழுதி யிருப்பதை யோதித் தெரிந்துகொண்டு தானியால் அலைஹிஸ் ஸலாம் வந்தார்கள்.

ஆதலால், மூமினுகிய உடற்பிறப்புகளே, அறிவென்று சொல்லு கின்ற கண்களால் இந்த ஹிக்காயத்தி லெழுதப் பட்டிருக்கிற சங்கதிகளை நன்முகக் கூர்க்கப்பார்த்துணர்ந்து கல்பிற் றரிபடுத்தி மாய இபுலீசு வலைக்குள்ளே சிக்கிக்கொள்ளாமல் நீங்களும் சிறப் பான குறுஆனை யோதிப் பறலு, ஷுறுத்து முதலிய ஹுக்கும்கள் மசலாக்களைப் படித்து நேர்வழியில் நடப்பதுடனே யுங்கள் பிள்ளை களையும் குறுஆனை யோதவைத்து நல்ல அமலில் நடக்கும்படி செய்துக் கொள்வீர்களாக.

எவர்கள்பேரிலும் இல்மு படிக்கிறது பறுலாயிருக்க குறுஆனை யோதி இல்மைத் தெளியாமல் பூமியில் இந்த பாஷை படித்தால் நன்முகச் சம்பாதித்துத் தொப்பை பெருக்கத் தின்னலாமென்கிற ஹவாஉபுலினாலே அல்லா றசூல் சொன்ன சொல்லை மறந்துவிட்டு இங்கிலீஷ் தமிழ் முதலிய பாஷைகளைத் தாங்களும் படித்துக் கொண்டு மனப்பிரியத்துடனே தாங்கள் பிள்ளைகளையும் படிக்க வைத்து அதன் பேரிலே அதிக ஆசைவைக்கிறதற்காக இந்த மகா வலுப்பமுஞ் சிறப்புமான நம்முடைய புறக்கான் வேதத்துடைய இல்மைப் பரதேசியாக விட்டு விட்டு இபாதத்துச் செய்யாமல் துனியாவுக்கே தொண்டு ஊழியஞ் செய்து அதற்கான படிப்பு முதலிய தொழில்களைச் செய்து காலத்தை வீணுகப்போக்கினுல் இஸ்ருயீல் அலைஹிஸ்ஸலாமென்ற புலி யிருந்தாப்போலிருந்து வந்து விழுந்து பிடித்திழுத்து முறித்துத் தகர்த்து உயிர் வாங்குகிற ஸக்கறுத்து வேளையிலே இந்த இங்கிலீஸ் முதலிய படிப்பு தொழில்கள் முன்னிற்குமா? இவைகளைத் தெரிந்து பாருங்கள். அஷ்றுபானவர்களே, அப்படிப்பார்த்து நல்ல அமல் களைச்செய்து அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்தைப் பெற்றுக் கொள்வீர்களாக. ஆமீன் யாறப்பில் ஆலமீன்.

தன் பிள்ளைகளுக்கு குறுஆன் படிப்பித்துவைக்கிற
தாய் தகப்பன்மார்களுக்குக் கிடைக்கிற வரிசையின் பயான்

முற்றிற்று.

குர்ஆனை ஓதுகிறவர்களுக்கு கிடைக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

நம்முடைய நாயகம் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாயினால் யாதாமொருவன் குர்ஆனையோதி முடிப்பானேயாகில் அவன் பேரிலே 60,000-மலக்குகள் பிழை பொறுக்கத் தேடுவார்களென்று திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

சபியானுத்தவரீ றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறதாவது யாதெனில், ஒரு மனுடன் குர்ஆனை யோதினால் அவனுடைய புருவமத்தியில் ஒரு மலக்கு முத்தமிடுவாரென்று.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாயினால் யாதாமொருவன் குருஆனை யோதினால், குருஆன் மியாமத்து நாளையில் அவனிடத்தில் மெத்தவும் அழகான ரூபத்தென்னும் உருவமாக வந்து நீ றென்னை யறிவீராவென்று கேட்கும். அப்போது அவன் நீர் யாரென்று கேட்பான். அதற்குக் குருஆன் அவனைப்பார்த்து, நீர் துனியாவில் என்னை புவர்து உனுவுடனே சங்கையாக இரவும் பகலும் விழித்திருந்து ஓதினீரே, அந்தக் குருஆனாக விருக்குமென்று சொல்லும். அப்போது அவன் ஆச்சரியமாக நீ குருஆனோ? வென்று கேட்பான். அதற்கு குர்ஆன் ஆம், நான் குர்ஆன் தானென்று சொல்லும்.

பின்பு அவனை அல்லாஹுத் தஆலாவுடைய சமூகத்திற் கொண்டு போகப்பட்டு அவனுடைய வலதுகையில் ஸாலிஹான அடியானென்றும், இடதுகையில் ஊழிகாலம் சுவர்க்கத்திற் றரிபட்டிருக்கும்படியான கடிதத்தையும் கொடுத்துத் தலையிலே கிரீடமும் தரிப்பித்து அவனுடைய தாய் தகப்பன்மார்கட்குத் துனியாவிலே விலைமதிக்கக்கூடாத இரண்டு உடுமானமும் அணையக் கொடுத்து அனுப்பப்படும். அப்போது உடுமானம் பெற்றுக் கொண்டவர்கள் இந்த உடை நமக்கு எவ்விதங் கிடைத்தது, நம்முடைய அமல்கள் இவ்வளவு தறஜா வரையில் எற்றவில்லையே யென்று சொல்லுவார்கள்,

அதுகேட்டு, அங்குள்ள மலக்குகள் அவர்களைப்பார்த்து உங்களுடைய பிள்ளைகள் குர்ஆன் ஓதினவரிசையினாலே தான் இவ்வளவு தறஜாவுமுங்களுக்குக் கொடுக்கப்பட்டதென்று சொல் வார்கள். இன்னும் குர்ஆனை நின்று தொழும்போது ஓதினால் அதின் ஹறுபென்னும் எழுத்து 1-க்கு, நூறு நன்மை கிடைக்கும். இருந்து தொழும் போது ஓதினால் ஹறுபு 1-க்கு ஐம்பது நன்மை கிடைக்கும். அப்படித்தொழும் நேரமல்லாமல் மற்ற நேரத்திலே உளுவுடன் இருந்தோதினால் இருபத்தைந்து நன்மை கிடைக்கும். உளுவில்லாமல் ஓதினாற்பத்து நன்மை கிடைக்கும். இன்னும் இரவு காலம் முழுமையும் விழித்திருந்து வணங்குகிறதைக்காட்டிலும் குர்ஆன் ஓதுகிறது ரொம்பவும் வரிசையாயிருக்குமென்று திருவுளமானார்கள். இந்தப் படிக்கு ஹதீதுகள் அஸ்றுது முதலியகித்தாபுகளில் வருகின்றன.

இன்னும், நபிநாயகம் தங்கள் அஸ்ஹாபிமார்களைப்பார்த்து நீங்கள் குர்ஆனை யோதுங்கள், அது கியாமநாளில் உங்களுக்கு மன்றாட்டஞ் செய்வதுந்தவிர நீங்கள் கேட்டபிரகாரம் கொடுக்கு மென்றுந்திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அபூநசுறு றஹிமஹுல்லா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். யாதெனில், தாங்கள் ஓர் நாள் கபுறுஸ்தானிடத்திற்போய்க் கபுறு வெட்டும்போது அதில் நின்றும் ஓர் கபுறு பிளந்து அதில் ஓர் வாலிபன் மிகுந்த அழகாய் நல்ல உடையுடுத்துக்கொண்டு வாசனை பரிமலிக்கத் தன்மடியிலே குர்ஆனைவைத்து ஓதிக்கொண்டு இருக்கக்கண்டேன், அவர் என்னைப்பார்த்து கியாமம் மூடிந்ததா? வென்றுகேட்டார். அதற்கு நான் இல்லையென்று சொன்னேன். பிறகு அவர்கபுறைமூடிப்போடுமென்று சொன்னார். உடனே நான் கபுறை அவர்சொற்போலே மூடிப்போட்டேனென்றார்.

உமறிபுனுல் மைமூன் றஹிமஹுல்லா அவர்கள் சொல்லியிருக் கிறதாவது யாதெனில், யாதொருவன் பஜிர் தொழுதபின்னர், முஸ்ஹபைத்திறந்து குர்ஆனுடைய ஆயத்துகளில் நூறு ஆயத்து ஓதுவானேயாகில், துனியாவிலுள்ளவர்கள் செய்கிற அமல் போலுள்ள அமல்களை அல்லாஹுத்தஆலா அவனுக் குயர்த்தியாய்க் கொடுப்பானென்று, இன்னும் குர்ஆனுடைய வரிசையைப்பற்றி

ஹதீதுகள் எழுதுகிறதாயிருந்தால் எழுதமுடியாது. ஆனதால் ஈமனுடன்பிறந்தான்மார்களே, நீங்கள் அறிவைக்கொண்டும் நன்றாக மேலெழுதப் பட்டிருக்கிற ஹதீது முதலானவைகளைக் கூர்க்கப் பார்த்து இபுலீசுடைய மாயத்தில் அகப்படாமல் அல்லாஹுத் தஆலாவுக்குப் பயந்து குர்ஆனையோதி அதிற்சொல்லியபடி நல்ல அமலைச்செய்துகொள்வீர்களாக. ஆமீன்.

குர்ஆனோதுகிறவர்களுக்குக் கிடைக்கிற வரிசையின் பயான்
முற்றிற்று.

பிஸ்மிலுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில் 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மானிர்றஹீம்' என்னும் திருநாமத்தை அல்லாஹுத் தஆலா இறங்கியபோது அதனுடனே ஆயிரம் மலாயிக்கத்துகளிறங்கினார்கள். வானலோகத்தில் வசிக்கும் மலாயிக்கத்துகள் யாவரும் சந்தோஷமாயினார்கள். அறுஷும் அசைந்து தளும்பியது, ஜின்களெல்லாம் அடித்து மோதி முகங்குப்புற விழுந்தனகள், வானங்களும் அசைந்தன, இன்னும் திருமக்கமா நகரத்தாரும் அந்நகரத்திலுள்ள வஸ்துக்கள்யாவுங் கேட்கும்படியாய் மலைகளெல்லாந் தஸ்பீஹுசெய்தன. இக்காரணங்களைக்கண்டு மக்கநகரார்களிற் சிலர் முஹம்மது மலைகளைவிஹர் செய்துபோட்டார். அதிலேதான் இவ்விதமானதென்று சொன்னார்கள். அப்போது, அல்லாஹுத் தஆலா மக்கநகரத்தார் சொன்ன குறுவுக்காக அவர்பேரிலே இருளாகிற வரைக்கும் புகையை இறக்கிவைத்தான். அதுகண்டவர்கள், பயந்து வருந்தினதினாலே அவ்விருளையும், புகையையும் அல்லாஹுத் தஆலா நீக்கினான்.

அதலால், 'பிஸ்மில்லை' யாதொருவன் ஓதுவானாகில், அதிலுள்ள எழுத்துகளில் ஒவ்வொருவெழுத்துக்கு நாலாயிரம் நன்மை அல்லாஹுத் தஆலா எழுதுவான். இன்னும், அவனில்நின்றும் நான்காயிரம் பாவத்தையழித்துப் போடுவான். இன்னும் அவனுக்கு நான்காயிரந் தறஜாக்களையுயர்த்தி வைப்பானென்றும் நபிநாயகம் திருவுளமானார்கள்.

பிஸ்மிலுடைய மகிமை.

அல்லாஹுதஆலாவுடைய திருநாமங்கொண்டு இதைத் துடங்குகிறேன். துனியாவில் நல்லார் பொல்லார் எல்லாருக்குங் கிருபைச்செய்கிறவன், ஆகிறத்தில் மூமினானவர்கட்குத் தனதாகக் கிருபைச்செய்கிறவன், இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள். யாதெனில், மரங்களையெல்லாங் கலமென்னும் மெழுதுகோலாகச் செய்து, கடல்கள் முதலிய இடங்களிலுள்ள தண்ணீரையெல்லாம் ஸியாஹி யென்னும் மையாக்கி மனுடர்கள், ஜின்கள் அடங்கலுங் கூடிக்கித்தாபுகள் சேகரஞ்செய்து அவைகளில் 'பிஸ்மிலுடைய மகிமையை' இருபது லக்ஷவருஷக்காலம் எழுதினாலும் அந்த மகிமையிற் பத்திலோர் பாகமுமெழுதி முடிக்கசக்திபெற மாட்டார்கள்.

இன்னும் பிஸ்மிலாகிறது குறுஆனுக்குத் திறவுகோலாகவும் லௌஹுல் மஹ்பூழுப்பலகையில் கலம் எழுதின எழுத்துகளில் முந்தினதாகவும், ஆதம் அலைஹிஸ்ஸலாத்துக்கு இறக்கப்பட்டவைகளுக்கெல்லாம் முந்தினதாகவும் இருக்கப்படுமென்றும், இன்னும் பிஸ்மிலுடனே லாஹவுல வலாக்குவ்வத்த இல்லா பில்லாஹில் அலியுல் அலீமென்று யாதாமொருவன் சொல்லுவானாகில், அவனை விட்டும் பலாய்கள் விசனம், துக்கம் சஞ்சலம் மற்ற வருத்தங்கள் முதலிய எழுபது பலாய்கள் நீங்கிவிடும்.

இன்னும், சுவர்க்கலோகத்தில் ஜெபல் றஹுமாவென்னும் பெயரையுடைய ஓர் மலையிருக்கிறது. அந்த மலையில்கஸறுஸ்ஸலாமென்னும் பெயருடைய ஓர் மாளிகையிருக்கிறது, அந்த மாளிகைக்குள் பைதுல் ஜலாலென்னும் பெயரையுடைய ஓர் அறைவீடிருக்கிறது, அவ்வறை வீட்டைப்பொதிந்த மாளிகைக்குப் பன்னீராயிரம் நிலைவிட்டிருக்கின்றன, அந்நிலையின் மேற்படி தொடுத்துக் கீழ்படி வரையில் ஐந்நூறு வருஷத்துலை தூரமுண்டு, அவ்வாசல்களை பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமென்று சொன்னவனைத்தவிர மற்றவர்களாற்றிறக்கக்கூடாதெனவும் நபிநாயகம் சொன்னார்கள்.

இன்னும் நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள், நான் மிஃறாஜுக்குப்போன இரவிலே எனக்குச் சுவர்க்கலோகம் முழுமையுங் காண்பிக்கப்பட்டன. அப்போது நான் சுவர்க்கத்தில் நான்கு ஆறுகளைக்கண்டேன், அவ்வாறுகள் பாலாறு ஒன்று, தேனாறு

ஒன்று, மதுவாறு ஒன்று, தண்ணீராறு ஒன்றுமாக இருக்கக் கண்டு, நான் ஜிபுரீல் அலை ஹிஸ்ஸலாத்தைப் பார்த்து, யா ஜிபுரீலே இந்த நான்கு ஆறும் எந்த இடத்திலிருந்து எந்த இடத்திற்குப் போகிறதென்று கேட்டேன். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் என்னைப் பார்த்து அல்லாவுடைய றசூலே! இந்த ஆறுகள் இன்ன இடத்தி லிருந்து வருகிற தென்பது எனக்குத் தெரியாது. ஆனாற் போகிறது ஹவுலல்க்கவுதர் தளவிலா யிருக்கும். வருகிற தலத்தைக் குறித்து அல்லாஹுத்தஆலா விடத்திற் கேளுமென்றார். அது போலே நான் அல்லாஹுத் தஆலா விடத்திற் கேட்டேன். அப்போது ஒரு மலக்கானவர் என் முகதாவில் வந்து சலாஞ் சொல்லி, முஹம்மதே யும்முடைய இரண்டு முகக்கண்ணையு மூடி விழியுமென்று சொன்னார்.

அதுபோலே நான் கண்களைமூடி விழித்த போது ஓர் மரத் தடியிலே யிருப்பதாயினேன், அவ்விடத்தில் வெண்மையான ஓர் மூத்தக் குப்பாவைக் கண்டேன். அந்தக் குப்பாவுக்குப் பசுமை நிறம் பொருந்திய மாணிக்கத்தினால் வாசலிருக்கிறது, அந்த வாசலுக்குச் செவந்த தங்கத்திற் பூட்டிட் டிருக்கிறது. இவ்வித மான அந்தக் குப்பாவிலே இந்தத் துனியாவி லுண்டான மனுடர்கள், ஜின்கள் முதலிய எல்லாத்தையுங் கொண்டு போய் வைத்துப் பார்த்தாலும், அவைக ளெல்லாம் மலை மேலிருக்கிற ஓர் பறவையைப் போலவும், கடலிலே யெறிந்த ஓர் பாதம் கொட்டையைப் போலவு மிருக்குமே தவிர வேறில்லை. இவ்வித மான குப்பாவின் கீழிருந்து மேற் சொன்ன நான்கு ஆறு மோடி வரக்கண்டு அவ்விடத்தை விட்டுத் திரும்பிவர நினைத்தேன்.

அப்போது அந்த மலக்கானவர் என்னைப் பார்த்து முஹம்மதே, நீரிந்தக் குப்பாவுக்குட் புகுந்து ஏன் பார்க்கவில்லை யென்று கேட்டார். அதற்கு நான் அவரைப் பார்த்து இந்தக் குப்பாவுக்குப் பூட்டிட் டிருக்கிறதே அதைத் திறக்க திறவு கோலில்லை யென்று சொன்னதற்கு அவரென்னைப் பார்த்து உம்முடைய கையிற் றிரவு கோலிருக்கிற தென்று சொன்னார். அதற்கு நானவரைப் பார்த்து என்கையிற் றிரவுகோல் எங்கே யிருக்கிற தென்று கேட்டேன்.

அதற்கவர் என்னைப் பார்த்து முஹம்மதே, அதின் திறவு கோலாகிறது 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்னுஞ்

திருநாமமா யிருக்கு மென்று சொன்னார். உடனே நான் அந்தப் பூட்டின் அருகிலே அடுத்து நின்று கொண்டு (பிஸ்மிலே) வோதின வுடனே பூட்டுங் கதவுந் திறந்து விட்டது. அப்போது நான் குப்பாவுக்குட் புகுந்து பார்த்தேன், அந்தக் குப்பாவுக்கு நான்கு தூண்களுண்டா யிருக்கிறது, அந்த நான்கு தூண்களில் நின்றும் நான்கு ஆறுகள் ஓடக்கண்டுக் குப்பாவை விட்டும் வெளியில்வர நாடினேன். அப்போது அந்த மலக்கானவர் என்னைப் பார்த்து முஹம்மதே, நீர் குப்பாவை பார்த்தீரா வென்று கேட்டதற்கு நான் பார்த்தே னென்று சொன்னேன்.

அதற்கவர் முஹம்மதே, நீரின்னும் பாருமென்று சொன்னார். அதுகேட்டு நான் மறுபடியும் குப்பாவை பார்க்கும் போது, அந்தக் குப்பாவிற் குள்ளிருக்கிற தூண்கள் நான்கிலும் பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீ மென்னுந் திருநாமத்தை எழுதியிருக்கிறது. அந்த பிஸ்மில் என்கிற மீமில் நின்றும் தண்ணீராறும் அல்லாஹு என்கிற ஹேயில் நின்றும் பாலாறும் றஹ்மா னென்கிற மீமில் நின்றும் தேனாறும் றஹீமென்கிற மீமில் நின்று மதுவாறுமாக ஓடுகின்றன. அது கண்டு நான் இந்த நான்கு ஆறு களுக்கும் அடிமூடாகிறது பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமாக இருக்கிற தென்று அறிந்து கொண்டேன்.

அப்போது அல்லாஹுத் தஆலா என்னை முஹம்மதே யென்று கூப்பிட்டுச் சொன்னதாவது யாதெனில், முஹம்மதே உம்முடைய உம்மத்தில் நின்றும் யாதாமொருவன் இந்த இஸ்முகளைக் கொண்டும் என்னை நினைத்துக் கலப்பறுதலான கல்போடும் 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்று சொல்வானாகில், இந்நான் காற்றிலுள்ள வைகளில் நின்றும் அவனுக்குக் குடிப் பாட்டுவே னென்று சொன்னா னென்று நபிநாயகம் திருவுள மானார்கள். இந்த படிக்குத் தக்காலக்குல் அக்பார் தப்ஸீர் றூஹுல் பயான் அறுபாயீன் நவவி முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து

ஆரிபீன்களிற் சில பேர்கள் முந்தின வேதங்களான தௌறூத்து, ஸபூர், இஞ்ஜீல் ஆகிய இம்மூன்றும் நூறு சஹீபு களும், குறுஆன் ஷரீபிலே யடங்கி இருக்கின்றன. அந்தக் குறுஆன்

முழுமையும் அல்ஹம் தென்னும் சூறத்திற் பொருந்தி யிருக்கின்றன. அவ்வல் ஹம் தென்னும் சூறு பிஸ்மிலின் பேரிற் பொதிந் திருக்கின்றது வென்று சொல்லி யிருக்கிறார்கள்.

ஹதீது.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமா யிருக்கிறார்கள். யாதெனில், அல்லாஹுத் தஆலாவுக்கு மூவாயிரந் திருநாம முண்டா யிருக்கிறது, அதில் ஆயிரந் திருநாமங்களை மலாயிக்கத்து மார்கள் அறிந் திருக்கிறார்கள். இன்னும் ஆயிரந் திருநாமங்களை நபிமார்கள் அறிந்திருக்கிறார்கள். இன்னும், ஸபூர் வேதத்தில் 300, தௌறாத்து வேதத்தில் 300, இஞ்ஜீல் வேதத்தில் 300, குறுஆன் ஷரீபில் 99, வெளியா யிருக்கிறது. ஆக இரண்டாயிரத்தி தொளாயிரத்தித் தொண்ணூற்றொன்பது திருநாமங்க ளிருக்கின்றன. இவைகள் போகக் குறுஆனில் ஓர் திருநாமத்தை அல்லாஹுத் தஆலா மறைத்து வைத்திருக்கின்றான். அந்தத் திருநாமத்தின் பெயர் இஸ்முல் அஃலமென்று சொல்லப்படும். அந்த இஸ்மில் அஃலத்தை நபிமார்கள் அறிந்திருக் கின்றார்களே தவிர மற்றவர்கள் அறியவே யில்லை. இன்னு மொரு ரிவாயத்தில் மலக்குகளில் சிலரறிந் திருக்கிறார்க ளென்னும் வருகின்றன.

மேற் சொல்லிய மூவாயிரந் திருநாமங்களின் பொருளடங்கலும் 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்று மூன்று இஸ்முகளிற் பொதிந்து வருகின்றன. ஆதலால் யாதாமொருவன் பிஸ்மில் முழுமையும் ஓதுவானாகில், அந்த மூவாயிரம் இஸ்முகளைக் கொண்டும் அல்லாஹுத் தஆலாவை திக்றுச் செய்தவனைப் போலாவான், இன்னும் பிஸ்மிலுடைய எழுத்துகள் 19, ஜஹன்ன மென்னும் நரகத்துக்கு நேமிக்கப் பட்ட ஸபானியாக்கள் 19 பேர்கள், ஆதலால் யாதா மொருவன் பிஸ்மிலை அதிகமாக ஓதி வருவானாகில், அந்த பறக்கத்தினால் நரகத்தின் ஸபானியாக்கள் வேதனையை விட்டும் அல்லாஹுத் தஆலா காத்துக் கொள்வானென்று இவ்விதம் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுளமா யிருக்கிறார்கள்.

ஹிக்காயத்து.

இபுறாஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களை, நமுறூது நெருப்புக் கிடங்கிலே தள்ளிவிட்டபோது, அவனுடைய ஓர் சிறிய பெண்பிள்ளை

யானது தன் தகப்பனாகிய நமுறூதைப்பார்த்து, என் தகப்பனே நான் நெருப்புக் கிடங்கிற்போடப்பட்ட இபுறூஹீமைப் பார்க்கிற தற்குப்போக உத்திரவு தாருமென்று கேட்டபோது, அப்படியே பிள்ளையுடைய மனம்போலே, இபுறூஹீமைப்பார்க்க நமுறூது உத்திரவுகொடுத்தான். உடனே அந்தப் பெண்பிள்ளை நெருப்புக்கிடங் கண்டையிற்போய் இபுறூஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்த போது, அவர்கள் பலபுஷ்பசாதி மரங்களடர்ந்து, தென்றற்காற்று வீசும் பூங்காவிலே இருப்பதுபோல சலாமத்தாக இருக்கக்கண்டு, இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாத்தை அந்தச் சிறிய பெண்பிள்ளை பார்த்து, இபுறூஹீமே உம்மை நெருப்புத் தீய்க்காமல், அக்கினிக் குண்டத்தில் நீர் சவுக்கியமாக இருக்கின்ற காரணமென்னவென்று கேட்டதற்கு, அவர்கள் அப்பிள்ளையைப் பார்த்து ஒருவனுடைய நாவில் 'பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்' என்னும் திருநாமமும் மனதில் மஃரிபாவும், உறுதியாக இருக்குமாகில் அவனை நெருப்புத் தீண்டிக் கரித்துப் போடாதென்று சொன்னார்கள்.

அது கேட்டு, அந்தச்சிறிய பெண்பிள்ளை இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து இபுறூஹீமே நான் உம்மிடத்தில்வர நாட்டமாயிருக்கிறேன், எப்படிவருகிறதென்று கேட்டதற்கு, இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாம் அந்தச் சிறுபிள்ளையைப் பார்த்து நீ 'லாயிலாஹ இல்லல்லாஹூ இபுறூஹீம் றசூலுல்லாஹி' யென்று சொல்லிக் கொண்டுவா வென்று சொன்னார்கள். அதுகேட்டு அந்தப் பெண்பிள்ளை இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாத்தை விட்டும் வெளியே வந்து தன் தகப்பனாகிய நமுறூதிடத்திற்போய்த் தான் இபுறூஹீம் அலைஹிஸ்ஸலாத்தைக் கண்டுவந்த சமாசாரத்தைச் சொல்லக் கேட்டு' அந்த நமுறூது தன் பிள்ளையைப்பார்த்து என்னருமையான மகளே, நீ இந்த இபுறூஹீமுடைய மார்க்கத்தை விட்டுவிடென்று சொன்னான்.

அதுகேட்டு, அந்தச் சிறுபிள்ளை தன் தகப்பனாகிய நமுறூதைப் பார்த்து நானந்த மார்க்கத்தைவிட்டு மீளமாட்டேனென்று பிடிப்பாகச் சொன்னதுகேட்டு நமுறூது மிகுந்த கோபமுண்டாகித் தான்பெற்ற பிள்ளையென்றும் பாராமற் கொடூரமான தண்டனையாகத் தெண்டித்து வேதனைப் படுத்தினான்.

அப்போது அல்லாஹுத்தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து ஜிபுரீலே நீர் அந்த நமுறாது வேதனைசெய்கிற சிறு பிள்ளையை யெடுத்துக் கொள்ளுமென்றேவினான். உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பூமியில்வந்து அந்தப் பிள்ளையை யெடுத்துக் கொண்டுபோய் இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாமிடத்திற் வைத்தார்கள். பின்னர் அந்தப் பிள்ளையை இபுறுஹீம் அலைஹிஸ் ஸலாமவர்கள் தங்கள் மகனுக்கு நிக்காஹுசெய்து கொடுத்தார்கள். அந்தப் பெண்பிள்ளை வயிற்றில் இருபது பெண்பிள்ளை பிறந்தார்கள். இந்தப்படிக்கு நஸாஹுத்தில் மஜாலிசென்னும் கித்தாபில் வருகின்றன.

ஆதலால் மூமினுகிய உடன்பிறந்தான் மார்களே! உங்களுடைய மேலான புத்தியைக்கொண்டுங் கவனித்துப்பாருங்கள், இபுறுஹீம் அலைஹிஸ்ஸலாத்திற்குப் பகைஞனான நமுறாதுடைய மகளான சிறிய ஓர்பிள்ளை கேட்டகேள்விக்கு இபுறுஹீம் நபியவர்கள் பிஸ்மிலைக்கொண்டும் அறிவித்ததின்பேரில் அந்தப் பெண்பிள்ளைக் குக் கிடைத்த தறஜாவை யாவராலே சொல்லிமுடியும். அப்பேர்ப் பட்ட பிஸ்மில் அல்ஹம்துக்கு அடிமூடாயிருப்பதால் அல்ஹம் துடனே குறுஆனையோதி இல்முகளைப்படித்து வணக்கத்துடனே பிஸ்மிலைக்கொண்டும் அல்லாஹுத் தஆலாவினிடத்தில் றஹ்மத்துங் கிருபையும் பெற்றுக்கொள்வீர்களாக. ஆமீன்.

ஹிக்காயத்து.

ஹாபீலைக்காபீல் ஹசதுவைத்து அவருடைய நித்திரையிலே, தருதியான கல்லைத்தூக்கிப்போட்டு மண்டையை உடைத்து மவுத் தாக்கினுன். இவ்விதம் நடந்ததை ஆதம்அலைஹிஸ்ஸலாம் அறிந்து தங்கள்மனதில் காபீல்செய்தகொலையை நினைத்துப்பெரிய வருத்த மாக இருக்கும்போது அல்லாஹுத்தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாத் துக்குவஹியறிவித்தான், ஓய் ஆதமே உமக்குத் திடனுகப் பூமியை வழிப்படுத்தி வைத்தானென்றூர்.

அதுகேட்டு ஆதம் அலைஹிஸ்ஸலாம் பூமியைப்பார்த்து, நீ அந்தக் காபீலைப் பிடித்துக்கொள்ளென்று ஏவினூர்கள். அது போல பூமி காபீலைப் பிடித்துக்கொள்ள நாடி யாரம்பித்தபோது பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமுடைய உண்மையின் பேரில் ஆணையாக நீ யென்னை ஹலாக்காக்கிப் போடாதேயென்று சொன் னுன். அப்போது அல்லாஹுத்தஆலா பூமியைப்பார்த்து பூமியே அந்தக் காபீல் என்னுடைய பிஸ்மிலைக்கொண்டு சத்தியமிட்ட

படியால் அவனைப் பிடியாதேயென்று சொன்னான். அதுகேட்டுப் பூமி காபிலைப்பிடியாமல் விட்டுவிட்டது. இந்தப்படிக்கு நுஸ்ஹத்துல் மஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒருநாள் காட்டுவழியாகப் பாம்பை வேட்டையாடுகிற வேட்டைக்காரனுக்கருகாக நடந்து போகும் போது அவன் வேட்டையாடத் துணிந்தடுக்கிற பாம்பானது ஈசா நபியைப்பார்த்து அல்லாவுடைய நபியே, என்னிடத்தில் உயிரைக் கொல்லும்படியான நஞ்சிருக்கிறது. ஆதலால் என்னைப் பிடிக்காமல் விட்டுப்போகும்படிக்கு அந்த வேட்டைகாரனுக்கு நீங்கள் சொல்லுங்களென்று சொன்னது. அதுகேட்டு ஈசா நபியவர்கள் வேட்டைக்காரனைப்பார்த்து ஓ மனுடனே, நீ இந்த பாம்பைப் பிடிக்காமல் விட்டுவிடென்று விலக்கினார்கள்.

அப்போது அந்த வேட்டைக்காரன் கொஞ்சம் விலகி நின்று ஈசா நபியவர்கள் சிலதூரம் போனதின் பின்னர் வந்து அந்தப் பெரிய பாம்பையே வேட்டையாடி மூடிகிப் பிடித்துக்கொண்டான். பின்னர் ஈசா நபியவர்கள் போன இடத்தைவிட்டுத் திரும்பவும் அப்பாதைபாக வரும்போது அந்த வேட்டைக்காரன் பாம்பைப் பிடித்துவைத்துக்கொண்டு இருக்கக்கண்டு, பாம்பின்கிட்ட மூடுகினார்கள். அப்போது பாம்பானது ஈசா நபியவர்களைக் காண்கிறதற்கு வெட்கித்துத் தன் தலையை வாலுக்கும் கீழே சுருட்டி வைத்துக்கொண்டு ஈசா நபியவர்களை அல்லாவுடைய நபியேயென்று கூப்பிட்டு இந்த வேட்டைக்காரன் அவனுடைய பெலத்தைக் கொண்டு மென்னை மிகைத்துப் பிடித்துக் கொண்டவனல்ல பின் மில்லா ஹிர்தஹ்மா னிர்றஹீ மென்னும் சொல்லைக்கொண்டும் என்னை மிகைத்துப் பிடித்துக்கொண்டான், அதனாலே எனனுடைய நஞ்சும் நீங்கிவிட்டது. நானும் அகப்பட்டுக்கொண்டேனென்று சொன்னது.

ஸாலிஹீன்களில் நின்று மொருவர் சொல்லுகிறார் யாதெனில், மஸ்துக்கொண்டிருக்கிற என்னுடன் பிறந்தாரிடமாக நான போனேன். அப்போதவரை நான அடித்தேன், அவரோடிப்போய்த் தண்ணீரில் விழுந்து மவுத்தாகிப்போனார். அந்த மையித்தை நானெடுத்து அடக்கஞ் செய்துவிட்டு வந்த அன்றையிராத்திரியில் அவர் சொர்க்கத்திலிருப்பதாகக் கனவுகண்டு, நான் அவரைப் பார்த்து நீர் மஸ்துப்பிடித்தவராகத் தண்ணீரில் விழுந்து

தர்கொலையாகி மவுத்தானவராயிற்றே, இவ்விதம் சொர்க்க லோகத்திலிருக்கும்படியான சபபென்ன என்று கேட்டதற்கு, அவர் மெய்தான் உம்மை விட்டும் நான் புறமாகப் போகச்சே பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீமென்று எழுதப்பட்ட ஓர் துண்டுக் கடிதாசியைப் பூமியிற் கண்டெடுத்து வாயிற்போட்டு விழுங்கி விட்டுத் தண்ணீரில் விழுந்திறந்து அடக்கப்பட்டபோது கபுறில் மூன்கர் நக்கிரென்னும் மலக்குக ளிரண்டுபேரு மென்னிடம் வந்து கேள்வி கேட்டார்கள். நானவர்களைப் பார்த்து அல்லாஹுத் தஆலா வுடைய பிஸ்மில் என் வயிற்றிற்குள்ளிருக்கச்சே, நீங்களெவ்வித மென்னிடத்திற் கேள்வி கேட்கிறதென்று சொன்னேன். அப்போது அல்லாஹுத் தஆலா இரண்டு மலக்குகட்கும் அறிவித்தான், என்னுடைய அடியான் உண்மை சொன்னான். ஆதலால் அவனுடைய பாவத்தைப் பொறுத்துக்கொண்டேனென்று இந்தச் சபபினாலேதான் சொர்க்கத்திலிருக்கிறேனென்று சொன்னார்.

திருமக்கமாநகரத்தில் ஒரு மனுடன் எக்காலமும் நோன்பாகவே யிருப்பார். அப்படி நோன்பிருக்கும் நாளெல்லாம் அவர் ஒன்றையும் புசிக்க யாரேனுங் கண்டதில்லை. என்கிலும் அவர் நோன்புதிறக்கிற நேரத்திலேதான் அவரணிந்திருக்கும் சட்டை சேப்பிலிருந்து ஒரு துண்டுக் கடிதாசியையெடுத்துப் பார்த்துவிட்டு மறுபடியு மதைச் சட்டைச் சேப்பிக்குட் போட்டுக்கொள்வார். இவ்விதமிருந்து சில காலத்திற்குப் பின்னாலே அவர் மவுத்தாகிப்போனார். அந்த மையித்தை குளிப்பாட்டுகிறமனுடன் மையித்துடைய சட்டைச் சேப்பிலிருந்து கடிதாசித் துண்டைக் கண்டெடுத்து விரித்துப் பார்க்கும்போது அதிலே ‘பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்’ என்று எழுதி யிருப்பதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார். அப்போது உருத்தோற்றமில்லாமல் ஓர் சத்தம் அல்லா பாத்தால் நின்றும் ஓ மையித்தைக் குளிப்பாட்டுகிற மனுடனே, நீர் ஆச்சரியப்படவேண்டாம் ‘பிஸ்மில்லா’ என்கிற இஸ்மைக்கொண்டும் அவன் பாவத்தைப் பொறுத்துக்கொண்டேன். ‘றஹீம்’ என்கிற இஸ்மைக்கொண்டும் அவனுக்கு நல்ல பதவியைக் கொடுத்தேன். ஆதலால் நீர் அதைத்தொட்டும் ஆச்சரியப்படவேண்டாமென்று முண்டாயிற்று. இவ்விதச் சப்தத்தைக் கேட்டவர் அல்லாஹுத் தஆலாவைப் புகழ்ந்து மையித்தைக் குளிப்பாட்டித் தீர்த்தபின்னர்

கூடினபேர்கள் முறைபோலே மையித்தை யடக்கஞ்செய்து போயினார்கள். இந்தப்படிக்கு நஸாஹத்தில் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒருபோது அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹுவர்களைப்பார்த்து, ஓய் அபூஹுறைறுவே நீர் உலூச்செய்வீரேயானால் 'பிஸ்மில்லா ஹிர் றஹ்மா னிர்றஹீம்' என்று சொல்லும். அதனால் உம்மைக்காத் திருக்கிற மலக்குகள் நீர் உலூச்செய்து முடியுமட்டு மும்க்கு நன்மைகளை எழுதிக்கொண்டிருப்பார்கள். இன்னும் நீர் உமது பெண்சாதியுடனே சையோகஞ்செய்ய நாடிப் போகும்போது பிஸ்மிலைச் சொல்லிச் சையோகஞ் செய்துக்கொள்ளும், அஃதே னென்றால் உம்மைக் காத்திருக்கிற மலக்குகள் ஜனாபென்னும் முழுக்கை முழுகித்திருகிறமட்டிலும் உமக்கு நன்மைகளை யெழுதிக் கொண்டிருப்பார்கள்.

மேலும் அவ்விதம் நீர் பிஸ்மிலைச் சொல்லிப் பெண்சாதி யுடனே சேர்ந்து அதிலே உமது பெண்சாதி கர்ப்பமாகிப் பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளையும் அந்தப் பிள்ளைக்குப் பின்னர் பிறக்கிற பிள்ளைகளுடைய மூச்சுகளின் தொகை யெம்மாத்திரமோ அம்மாத் திரமுமக்கு நன்மைகளை யெழுதப்படுமென்று திருவுளமானார்கள். இந்தப்படிக்குத் தபுசீறுக்கபீர் நஸாஹத்தில் மஜாலீசு முதலிய அனேகங்கித்தாபுகளில் பிஸ்மிலை ஓதிப் பெண்சாதியுடனே சேர்க்கைசெய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியால், மூமின் முஸ்லிமாகிய உடத்பிறந்தான்மார்களே உங்களுடைய பெரிய அறிவினாலே மேற்சொல்லிய ஹதீதை நன்றாயுணர்ந்து பார்த்து நீங்களும் பெண்டீர் சேர்க்கையில் பிஸ்மிலை யோதிக் கொள்வீர்களாகில் அல்லாஹுத் தஆலா நன்மை றஹ்மத்துச் செய்வான். ஆமீன்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள், யாதாமொருவன் வீட்டிலிருந்து வெளியே போகும்போது பிஸ்மிலை சொல்லிக் கொண்டு போவானாகில், இபுலீசு பார்த்து இந்த மனுடனுடனே வீட்டிலே போகிறதற்கு நமக்கிடமில்லையென்று சொல்லிக்கொண்டு போவான். இன்னும் யாதாமொருவன் அன்னம் முதலிய யாதொரு வஸ்துவையுண்ணும்போதும், தின்னும்போதும் பிஸ்மிலைச்

சொல்லி யுண்டுதின்றானுகில் இபுலீசு பார்த்து இந்த இடத்தில் நமக்கு உண்பவை தின்பவை இல்லையென்று சொல்லிக்கொண்டு போவான்.

இன்னும் யாதொ மொருவன் தண்ணீர் குடிக்கும் போது பிஸ்மில்லை ஓதித் தண்ணீர் குடித்தானுகில் இபுலீசு பார்த்து என்தாகத்திற்கு இவ்விடத்திற் குடிக்கத் தண்ணீர் கிடைக்கா தென்று சொல்லிக்கொண்டு போவான். இன்னும், யாதா மொருவன் படுக்கும் போது பிஸ்மில்லை ஓதிக்கொண்டு படுப்பானுகில் இபுலீசு பார்த்து இவ்விடத்தில் எனக்குப் படுக்க இடமில்லை யென்று சொல்லிக்கொண்டு போவான். ஆதலால் பிஸ்மில்லை விட்டுவிடுவானுகில் ஷைத்தான் அவனுடனே வீட்டுக்குள் வருவான், உண்பான், தின்பான், தண்ணீர் குடிப்பான், படுப்பான் இன்னும் தன்பெண் சாதியுடனே பிஸ்மில்லை யோதாமல் சேர்க்கை செய்தால் இபுலீசுஞ் சேர்க்கை செய்வான். இவ்விதம், இபுலீசு சேர்க்கை செய்யும் படியான செய்கையில் கர்ப்பமாகிப் பிறக்கிற பிள்ளைகளிற் சிலர் ஊமும் ஜாதாவாகவும், சிலர் கண் குருடாகவும், சிலர் நொண்டியாகவும், சிலர் பாவிக்கு முதலிய அனேகக் கெடுதலு முண்டாகிவிடும். இவ்விதமான பிள்ளைகளுடனே இபுலீசுங் கூட்டாகுவானென்று அல்லாஹுத் தஆலா குருஆன் ஷரீபிலும் திருவுளமாயிருக்கிறான், சவீனத்தில் அசுருறென்னும் கித்தாபில் (138-வது பக்கத்தில்) வருகின்றன.

இன்னும் யாதாமொருவன் இரவு காலம் படுக்கையிடத்திலிருந்து பிஸ்மில்லை இருபத்தொரு தரம் ஓதிக்கொண்டு படுப்பானுகில், அந்த இராத்திரியில் பகைஞன், ஜின், ஷைத்தான், திருடன், நெருப்பு, சடிமான மரணம் இவை போலுள்ள பலா முசிபத்தை விட்டும் அச்சந் தீர்ந்தவனாக இருப்பான். அவனை விட்டு சகல துன்பங்களையும் நீக்கப்படும். இன்னும் யாதாமொருவன் பிஸ்மில்லை கலப்பறுதலான நிய்யத்தோடும் 41-தரம் ஓதிப் பயித்தியக் காரனுடைய காதிலே யூதுவானுகில் உடனே அப்பயித்தியந் தீர்ந்து அவனுக்கு நல்ல புத்தி யுண்டாகும். இன்னும், யாதாமொருவன் பிஸ்மில்லை நூறுதரம் ஓதி வியாதியாயிருப்பவன் பேரிலும், வஞ்சனை செய்யப்பட்டு வருத்தப் படுகிறவன் பேரிலும் தொடர்ச்சியாக ஏழுநாள், அல்லது அதற்கதிகமாக சிலநாள் ஊதினுல், அந்த வியாதி வஞ்சனை முதலிய பிணிகளெல்லாம் சூரியனைக் கண்ட பனியைப் போலும் நீக்கும் படியாக அல்லாஹுத் தஆலா கிருபைச் செய்வான்.

இன்னும் யாதாமொருவன் சனிக்கிழமை சூரியோதய காலத்தில் கிபுலாவை முன்னோக்கி இருந்து கொண்டு முதலான நபிமார்கள் 313-எண்ணம் அது போல முந்நூற்றுப் பதின் மூன்று தரம் பிஸ்மில்லா ஓதிவருவானாகில், அந்த வரிசையினாலும் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரில் 100-சலவாத்தை ஓதுவானாகில் அந்த வரிசையினாலும் அவனுக்கு அல்லாஹுத் தஆலா நினையாப் புறத்திலே றிஸ்க்குக் கொடுப்பான். இன்னும் யாதாமொருவன் ஒரு நாள் முழுமையும் பிஸ்மில்லா ஆயிரந்தரம் ஓதுவதை வழமையாக்கி வருவானாகில், துனியாவிலும் ஆகிறத்திலும் அவனுடைய ஹாஜத்தை அல்லாஹுத் தஆலா நிறைவேற்றி வைப்பான்.

இன்னும் யதாமொருவன் பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் என்று ஓர் காகிதத்தில் 21-வரியாக எழுதி மடித்து மெழுகுசீலை முதலியதினாற் பொதிந்து நித்திரையிற் றிடுக்கிட்டுப்பயந்து விழிக்கிற குழந்தை பிள்ளைகளுக்குக் கட்டினால் அல்லாஹுத் தஆலாவுடைய உத்திரவு கொண்டு அந்தப் பிள்ளைக்கிருக்கிற திடுக்கமும், பயமும் நீங்கிப் போகிறதுடனே ஆபத்துகளை விட்டும் அந்தப் பிள்ளைகளை அல்லாஹுத் தஆலா காத்துக் கொள்வான்.

இன்னும் யாதாமொருவன் பிஸ்மில்லா ஓர் கடுதாசியில் 36-வரியாக யெழுதி அந்தக் கடிதத்தை வீட்டிலே கட்டி வைப்பானாகில் ஜின் ஷைத்தான்கள் அந்த வீட்டிலே புகுதாமல் விலகிப் போகும். இன்னும் அந்த வீட்டிலே தொழிற்றுறைகள் பணங்காசு முதலிய பறக்கத்து நாளுக்குநா ளதிகமாகும். வீட்டை யுடையவர் கட்குள் தங்கடம் யாதொன்றும் வரமாட்டாது. இன்னும் அந்த பிஸ்மில் எழுதிய கடிதத்தை வியாபாரஞ் செய்கிற கடைகளிற் றூக்கி வைத்தாலும் அவனுக்கு லாபம் அதிகம் கிடைக்கும், இன்னும் ஹசதுக்காரர்கள், அனீதக்காரர்கள் கண்பார்வைக்கும் அல்லாஹுத் தஆலா மன்றவாக்கி வைப்பான், அவைகளடங்கலும் பிஸ்மிலுடைய பாயிதாவா யிருக்கும்.

இன்னும் யாதாமொருவன் முஹர்ற மாதம் முதற்றெய்தியில் ஓர் கடுதாசியில் நூற்றுப்பதி மூன்றிடத்தில் பிஸ்மில்லா எழுதி வைத்துக் கொள்வானாகில் அவனுக்குத் தங்கடம், வருத்தங்கள் வரமாட்டாது, மேலும் அல்லாஹுத் தஆலா அவனையும்

அவனுடைய பெண்சாதி பிள்ளைகளையும் வருத்தத்திலாகாமற் காத்துக் கொள்வான். ஆனால் இவைகளுக் கெல்லாம் நல்ல அமலும், கலப்பறுதலான உண்மையும், நிய்யத்தும் பிரதானமாக வைத்துக் கொள்ளவேண்டும், இப்படிக்குக் கலீனத்துல் அசுறூற முதலிய கித்தாபுகளிற் சொல்லப் பட்டிருக்கின்றன.

இன்னும் கியாமத்து நாளென்னும் முடிவு நாள் வருமே, அந்த நாளில் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்தோர்கள் செய்த அமல்களை நிறுக்கப்படும், அப்போது அவர்கள் தொழுத தொழுகையில் நின்றும் ஒரு றக்கு அத்தாகிறது மற்றப்பேர்கள் தொழும் ஆயிரம் றக்கு அத்திற்கும் அதிகமாக்கிவிடும். அதுகண்டு மற்றவர்க ளெல்லாரும் ஆச்சரியமாவார்கள். அப்போது அங்குள்ள மலக்குகள் சொல்வார்கள், முஹம்மது நபியவர்கள் உம்மத்தோர் களுடைய தொழுகையில் பிஸ்மில் உண்டாயிருக்கிற படியால் இவ்விதம் மற்றவர்களுடைய ஆயிரம் றக்குஆத்து தொழுகைக்கும் ஒரு றக்குஆத்துத் தொழுகை அதிகமான தென்று சொல்வார்கள்.

ஆதலால் (பிஸ்மிலுடைய) வரிசைகளை யிவ்வளவென்று எழுதி முடியாது. மூமினுகிய இருவான்களே, முஸ்லிமாகிய உடற் பிறப்புகளே நீங்கள் யாவரும் இந்த பாஷை நன்ருகப் பார்த்து, கல்பிலே சரிபடுத்தி வைத்து, அதே பிரகாரம் அமல் செய்து கொள்வதுடனே உங்கள் பிள்ளைகளையும் இளமைப் பருவத்திலேயே குறுஆனை யோதவைத்து இஸ்லாமுடைய பறுலு, ஷுறுத்து, வாஜிபு, சுன்னத்து முதலிய நன்னடத்தைகளில் வருத்தி வையுங்கள். அப்படி வைத்தால் பிஸ்மிலுடைய பறக்கத்தினுல், அல்லாஹுத் தஆலா நம்மனைவோருடைய பாவங்களையும் மன்னித்துச் சுவர்க்க லோகத்திலுந் தாக்கலாக்கி வைப்பான். ஆமீன்.

பிஸ்மிலுடைய வரிஸையின் பயான்.

முற்றிற்று.

அல்ஹம்து சூறத்துடைய வரிசையின் பயான்.

ஹதீது.

அல்லாஹுத் தஆலாவுடைய ஹபீபாகிய நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதெனில் அல்ஹம்து சூறத்திறங்கும்போது அதினுடனே 70,000-மலக்குகளையும் அல்லாஹுத் தஆலா இறக்கினான். அப்பேர்ப் பட்ட வலுப்பத்தையுடைய அல்ஹம்து சூறத்தை யாதாமொருவன் ஓதுவானாகில் அவன் தௌறாத்து, சபூர், இஞ்ஜீல். புறுக்கான் ஆகிய இந்நான்கு வேதத்தை ஓதுவதினுள்ள ஒவ்வோர் ஆயத்திற்கும் பதிலாகப் பூமி நிரம்புதலாயுள்ள தங்கத்தைவாரி அல்லாவுடைய பாதையில் ஸதக்காக் கொடுத்தவனைப் போலாகிவிடுவான். இன்னும், அல்ஹம்தை ஓதிவர்தவனுடைய சரீரம் நரகத்திற்கு ஹறாமாயிருக்கும்.

இன்னும் அல்லாஹுத் தஆலா அறுஷிற்கும் கீழே ஒரு மலக்கைப்படைத்து விட்டிருக்கிறான். அந்த மலக்குக்கு மனுடர் தலையைப்போலே தலையும் எழுபதினாயிரம் இறகுமுண்டாயிருக்கிறது. அந்த இறகுகள் ஒவ்வொன்றின் பேரிலும் ஒவ்வோர் கூட்டமான மலாயிகத்துகளிருக்கிறார்கள் இன்னும் அவருடைய வலது கன்னத்தின் பேரில் குல்ஹுவல்லா வென்கிற சூறத்து இக்லாசம், இடது கன்னத்தில் ஷஹிதல்லாஹு அன்ஹு லாஇலாஹ இல்லல்லாஹுவ என்கிற ஆயத்து முழுமையும் நெற்றியின் பேரில், அல்ஹம்து சூறத்தும் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னும் அந்த மலக்குக்கு முன்பாக எழுபதினாயிரங் கூட்டமான மாலாயிக்கத்துகளிருந்து அல்ஹம்து சூரத்தை யோதிவருகிறதில் இய்யாக்க நஃபுது வஇயாக்கம் நஸ்தஈன் என்ற சொல்லிலே ஸஜ்தாச் செய்வார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா அம்மாலயிகத்துகளைப் பார்த்து, ஓ மலாயிகத்துகளே! உங்களுடைய தலையை ஸஜ்தாவைவிட்டும் மூயர்த்துங்கள் திடனாக உங்களைத் தொட்டும் நான் பொருந்திக் கொண்டேனென்று சொல்லுவான்.

அதுகேட்டு மலாயிக்கத்துகள் அல்லாஹுத் தஆலா இடத்தில் எங்களுடைய நாயனே! ஆண்டவனே, உன்னுடைய ஹபீபாகிய நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய

உம்மத்துகளில் நின்றும் அல்ஹம்து சூறத்தையோதுவானே அவனைத்தொட்டும் நீ பொருந்திக்கொள்ளென்று சொல்லுவார்கள். அப்போது. அல்லாஹுத்தஆலா அந்த மலயிகத்துகளைப்பார்த்துத் திடனாக நானுங்களை அவர்களைத் தொட்டும் பொருந்திக்கொண்டேன், நீங்கள் சாட்சியாக இருங்களென்று சொல்லுவான். அது கேட்டு மலாயிகத்துகள் மிகுந்த சந்தோஷமாவார்கள். இந்தப் படிக்குத் தூர்றுல் மன்ஷூறு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

கஃபுல் அஹ்பாறென்னும் பெரியோர்கள் எஹூதி, நசாறாக்களைப்பார்த்துச் சொன்னார்கள், யாதெனில், தௌறாத்து இஞ்ஜீல் வேதத்தில் அல்ஹம்து சூறத்துண்டாயிருக்குமாகில் நீங்கள் எஹூதி நஸாறாவாகப் போகமாட்டீர்கள். இன்னும் ஸபூர்வேதத்தில் அல்ஹம்து சூறத்துண்டாயிருக்குமாகில் அல்லாஹுத் தஆலா அவர்களைக் குரங்கு கின்ஸீறுகளாய் மாற்றமாட்டான். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உம்மத்துமார்களில் அல்ஹம்து சூறத்திறங்கினபடியால், அவர்களை அல்லாஹு தஆலா திடனாக வழி கேட்டிலாக்கமாட்டானென்றும், அவனை நான் ஆதரவு வைத்திருக்கிறேனென்றுஞ் சொன்னார்கள். இந்தபடிக்கு றவ்ஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஹதீது குத்துஸியில் அல்லாஹுத் தஆலா நபிநாயகத்தைப் பார்த்து முஹம்மதே முன்வேதங்களில் சுஹ்புக்ளில் இல்லாத அல்ஹம்து சூறத்தைக்கொண்டும், உம்முடைய உம்மத்தோர்களைச் சங்கையாக்கி வைத்திட்டேன். ஆதலால்யாதாமொருவன் அல்ஹம்து சூறத்தை ஓயாதுவானாகில், அவன் சரீரம் நரகத்திற்கு ஹறாமாகி விடுமென்று சொல்லியிருக்கிறான்:

ஆனதால் மூமின் முஸ்லிமான உடற்பிறப்புகளே ! அல்ஹம்து சூறத்தினால் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்தோர்களைச் சங்கையாக்கி வைக்கிறேனென்று அல்லாஹுத் தஆலா சொல்லியிருக்கிற அல்ஹம்துடனே குறுஆனை யோதி அதன்படி நல்லஅமல்களைச் செய்வீர்களாக. ஆமீன்.

இன்னும் தஃ்லஹத்தில் மஜாலி சென்னும் கித்தாபிற் சொல்லப்படுகிறது யாதெனில், பிஸ்மிலுடனே அல்ஹம்து சூறத்தில் பதினைந்து மீம்என்ற அட்சர முண்டாயிருக்கிறது. ஆதலால், யாதோர் அடியான் அல்ஹம்து சூறத்தை ஓதுவானாகில் அதிலுள்ள மீம்கள் பதினைந்தும் பறவைகளைப் போல புறப்பட்டுப் போய் அறுஷிலே கொளுவிக் கொள்ளும். அப்போது அறுஷைச் சுமக்கிற மலக்குகள் பேரில் அறுஷு கனமாகி அந்த மலக்குகள் அல்லாஹுத் தஆலா விடத்தில் எங்களுடைய ஆண்டவனே, இந்தக் கனமாகிறது என்ன கனமென்று கேட்பார்கள் அதற்கு அல்லாஹுத் தஆலா அந்த மலக்குகளைப் பார்த்து ஓ மலக்குகளே, என்னுடைய அடியான் அல்ஹம்து சூறத்தை யோதினனே அதினுடைய தவாபாகிய கனமாயிருக்குமென்று சொல்லுவான்.

அதுகேட்டு, அந்த மீம்கள் அல்லாஹுத் தஆலா இடமாக எங்கள் ஆண்டவனே, அல்ஹம்து சூறத்தை யோதினவனுக்கு எவ்வளவு கூலி கிடைக்கு மென்று கேட்கும். அதற்கு அல்லாஹுத் தஆலா மீம்களைப் பார்த்து நீங்கள் நடந்து போய் அவனுடைய பட்டோலையி லெழுதியிருக்கிற பாவங்களை ஒவ்வோர் மீமும் பத்துப் பத்துப் பாவங்களை யழித்துப் போடுங்க ளென்று சொல்லுவான். அப்போது அந்த மீம்கள் அல்லாஹுத் தஆலா விடத்தில் எங்களாண்டவனே, எங்களுக்கு அதிகமாக்கிவிடு என்று கேட்கும், அதற்கு ஆண்டவன் அம்மீம்களுக்கு இருபது பாவங்களை யழிக்கச் சொல்லுவான். அது கேட்டு மீம்கள் இன்னும் அதிகமாக்கிவிடு என்று பலதரம் கேட்கும். அப்போது அல்லாஹுத் தஆலா மீம் ஒன்றுக்கு நூற்றிருபது பாவங்களை யழிக்கும் படியாகச் சொல்லுவான். 15-மீமுக்கும் 1800-பாவங்களை யழிக்கப்படும்.

இன்னும் ஒரு நாளொன்றிற்குத் தொழுகிற ஐந்து நேரத்துத் தொழுகையில் அல்ஹம்து சூறத்தை யோதினவனுக்கு 30,600-பாவங்களை அந்த மீம்கள் அழித்துப் போடும்.

ஹிக்காயத்து.

முற்காலத்தில் ஓர் மனுடன் ஜிபுறீல் அலைஹிஸ்ஸலாம் ஆச்சரியமாகிற மட்டிலும் அல்லாஹுத் தஆலாவை வணங்கினர். அது தெரிந்து ஜிபுறீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் விருப்பமாகி

அந்த வணக்கத்தை யுடையவரைத் தெரிசித்துக்கொள்ள அல்லா ஹுத் தஆலா விடத்தி லுத்திரவு கேட்டார்கள். அதற்கு அல்லா ஹுத் தஆலா லௌஹுல் மஹ்பூ லென்னும் பலகையை பார்க்கிற ஷறத்துப் போல பார்க்க ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்திற்கு உத்திரவு கொடுத்தான்.

உடனே, ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் லௌஹுல் மஹ்பூலுப் பலகையைப் பார்த்த போது அதிலே அந்த மனுட னுடைய பெயரை மூதேவித்தனம் பெற்றவ னென்று எழுதப் பட்டிருப்பதைக் கண்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஹலா மவர்கள், அந்த வணக்கத்தாளிடத்தி லிறங்கி யவரைப் பார்த்து லௌஹி லெழுதப்பட்டிருக்கிற செய்தியைச் சொன்னார்கள். அது கேட்டு வணக்கத்தாளி அல்ஹம்து லில்லாஹி என்று சொன்னர். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் தாங்கள் சொன்ன வார்த்தையை அந்த வணக்கத்தாளி கேட்டுக் கொள்ள இல்லை யென்று நினைத்து மறுபடியும் அவரைப் பார்த்து முன்சொன்னபடி லௌஹி லெழுதப்பட்டிருக்கிற செய்தியைச் சொன்னார்கள். அப்போதும் அந்த வணக்கத்தாளி அல்ஹம்து லில்லாஹி என்று சொல்லி நான் ஸ்ரீதேவிதனத்திற்குப் பாத்தியமில்லா திருந்தாலும் என்னுடைய றப்பு என்னை மூதேவி என்று எழுத மாட்டான். ஆனால் துன்பம் இன்பமாகிய போதும் எல்லாப் புகழும் புகழ்ச் சியும் அல்லாவுக்காக இருக்கு மென்று சொன்னர்.

அது கேட்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் ஆச்சரிய மானார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களைப் பார்த்து ஓய் ஜிபுரீலே, நீர் லௌஹுல் மஹ்பூலுப் பலகையைப்பாரு மென்றான். அது கேட்டு உடனே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் பார்த்தார்கள். லௌஹிலே மூதேவித் தனத்தை விட்டும், ஸ்ரீதேவிதனத்தில் அவர் பெயர் திரும்பி யிருப்பதைக் கண்டார்கள்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தங்கள் திருவாக்கினாலே அல்ஹம்து சூறத்தாகிறது அல்லாஹுத் தஆலா தன்னுடைய அறுஷின் புதையல்களில் நின்றும் ஓர் புதையலாக இருக்கு மென்று சொன்னனென்றும், எல்லா வஸ்துகளுக்கும் அடித்தள முண்டும் அதுபோல குறு ஆனுக்கு அடித்தளமாகிறது அல்ஹம்தாக இருக்கு மென்று சொன்னார்கள். ஆதலால் அல்ஹம்து சூறத்துடைய வரிசையை

இவ்வளவென்று எழுதி முடியாது என்கிறு மிவ்விடத்திற் சுருக்கமாக எழுதலாயிற்று.

ஆய் மூமின் முஸ்லிமாகிய உடற் பிறப்புகளே, இந்த அல்ஹம் தென்னும் ஒருசூறத்துக்கு இம்மாத்திரம் நன்மை தறஜாக் கிடைக்குமானுல் குறுஆன் முழுமையும் ஓதினுல் எவ்வளவு நன்மை தறஜாக் கிடைக்கு மென்பதை யுங்களுடைய தெளிவான மனக் கண்ணை கொண்டு மேற்சொன்ன ஹதீது ஹிக்காயத்துகளைத் தெளிவாக நோட்டமிட்டு நீங்களும் உங்கள் அருமையான மக்களும் குறுஆனை யோதி அல்லாவுடைய ஏவல் விலகலறிந்து நபிநாயகம் அவர்கள் சொல்லை மறக்காமல், நல்ல அமல்களைச் செய்தால் அல்லாஹுத் தஆலா நம்மனைவோருக்கும் இம்மை மறுமை யென்னும் இரண்டிடத்திலும் றஹ்மத்துங் கிருபையுஞ் செய்து பிருதௌசென்னுஞ் சொர்க்கத்திலுந் தாக்கலாக்குவான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

அல்ஹம்து சூறத்துடைய வரிசையின் பயான் முற்றிற்று.

குல்ஹுவல்லா சூறத்துடைய வரிசையின் பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் நாயகமான காரணக் கடவுள் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந் தருளினூர்கள். யாதாமொருவன் குல்ஹுவல்லா வென்னும் சூறத்தை ஒருதரம் ஓதுவானுகில் குறுஆனில் மூன்றில் ஒருபங்கு ஓதினவனைப்போலாகி விடுவான், இரண்டு தரம் ஓதுவானுகில் குறுஆனில் மூன்றில் இரண்டு பங்கு ஓதினவனைப் போலாகி விடுவான், மூன்று தரம் ஓதுவானுகில் குறுஆன் முழுமையும் ஓதினவனைப்போ லாகிவிடுவான், இன்னும் குல்ஹுவல்லாவைப் பத்து தரம் ஓதுவானுகில் அல்லாஹுத் தஆலா அவனுக்குச் சுவர்க்க லோகத்திலே செவந்த மாணிக்கத்தினுல் ஓர் வீட்டைக் கட்டிவைப்பான்.

இன்னும் யாதாமொருவன் சுபுஹு தொழுததின் பின்னர் குல்ஹுவல்லாவைப் பத்து தரம் ஓதுவானுகில் ஷைத்தான்

அவனைக்கலைத்தபோதிலும் அந்தக் கலிதத்திலே அகப்பட மாட்டான். அல்லாஹுத் தஆலா அவனுக்கு நூறு ஷஹீது களுடைய தறஜாத்தைக் கொடுப்பானென்றுந் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

அறுபயீன் என்னுங் கித்தாபிற் சொல்லப்பட்டிருக்கிறது யாதெனில், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருமக்கமா நகரத்தைவிட்டுந், திருமதீனமா நகரத்திற்குப் போக வேண்டுமென்று நாடி, ஹிஜுறத்துப் போகும்போது, அபூஜஹீ லுடையதெருவில் சபைகூடுகிற வீட்டுவாயலிலே மக்கமா நகரத்துக் காபிரீன்கள் சபைகூடிப்பேசினதாவது யாதெனில், முஹம்மதென் பவரைக்கைபிடியாகப் பிடித்தாவது அல்லது அவர்தலையை யறுத் தாவது, நம்மிடத்திற் கொண்டுவரப் பட்டவர்களுக்குத் திடளுகச் செவந்த ஒட்டகத்தில் நூறும், அம்ராச்சியத்து வெள்ளாட்டிப் பெண்களில் நூறும் இனுமாக கொடுக்கிறதென்று பேசிமுடித் தார்கள்.

அதுகேட்டு மாலிக்குடைய மான் . சுறுக்கத்தென்பவன் சபையை விட்டும் எழுந்து நின்று சபையோர்களைப் பார்த்து, அந்த முஹம்மதை நீங்கள் சொன்னபிரகாரம் நான் கொண்டு வருகிறே னென்று சொன்னான். அதுகேட்டுச் சபையோர்கள் சுறுக்கத்தைப் பார்த்து நீ அப்படி முஹம்மதைக் கொண்டுவந்தால் நாங்கள் நியமித்த வெகுமதிகளை யாதொரு தடையின்றித் தருகிறோமென்று ஜாமீனுக ஏந்துகொண்டார்கள். உடனே அந்தச் சுறுக்கத்தென் பவன் சபையைவிட்டும் புறப்பட்டு வாளாயுதமெடுத்துக்குதிரை யின்மேலேறிக்கொண்டும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் போகிறவழியில் அவர்களுக்குப் பின் தொடர்ந்துப் போயினன். அவ்வித வெகுமதிகட்கு ஆசைபட்டுக் கொலையை விரும்பிப்போன சுறுகத்து என்பவன் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்களைக்கண்டு உடனே அவர்களை வெட்ட நினைத்து தன்னிடமிருக்கிற வாளையுறை யைவிட்டு நீக்கினன்.

அப்போது ஜிபுறீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் வஹிகொண்டு நபிநாயகத்திடம்வந்து அவர்களைப்பார்த்து, அல்லாவுடைய றசூலே உங்களுடைய காரியத்துக்கு அல்லாஹுத் தஆலா பூமியை

வசப்படுத்தித் தந்திருக்கிறுனென்று சொன்னர்கள். அதுகேட்டு நபிநாயகமவர்கள் பூமியைப்பார்த்து ஆய் பூமியே, அவனைப்பிடி யென்று ஏவினர்கள். உடனே பூமியானது சுருக்கத்தென்பவன் ஏறியிருக்கிற குதிரையின் நான்கு கால்களையும் முழங்கால்மட்டிலும் பிடித்து விழுங்கினது. அதுகண்டு சுருக்கத்தென்பவன் நபிநாயகத்தைப்பார்த்து, அல்லாவுடைய றசூலே உங்களை நான் வெட்ட மாட்டேன், என்னை வெளிப் படுத்தி விட்டு விடுங்களென்று சொன்னன். அதுகேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் துஆச் செய்தார்கள். உடனே அல்லாஹுத் தஆலா சுருக்கத்தை வெளியாக்கிவிட்டான். அப்படிச்சுருக்கத் தென்பவன் வெளியாகி ஒரு ஸாஅத்துநேரந் தன்குதிரையை நடத்திக்கொண்டுபோய் மறுபடியும் கெட்டஎண்ணத்தினுல் வாளை வுருவிக்கொண்டு நபிநாயகத்தை வெட்டநாடி முடுகினன்.

அதுகண்டு, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மறுபடியும் பூமியைப்பார்த்து ஆய் பூமியே, அவனைப் பிடியென்று ஏவினர்கள். உடனே பூமி சுருக்கத்து ஏறியிருக்கிற குதிரையையும் விழுங்கி, அவனுடைய தொப்புள் வரைக்கும் விழுங்கிற்று. இது கண்டு சுருக்கத்தென்பவன் பயந்து நடுங்கி நபி நாயகத்தைப்பார்த்து அல்லாவுடைய றசூலே இனிமேல் நானுங்களை யொன்றுஞ் செய்ய வில்லை. என்னை விட்டு விடுங்களென்று கெஞ்சினன். அப்போது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் துஆச் செய்தார்கள். உடனே அல்லாஹுத் தஆலா துஆவை கபூல்செய்து சுருக்கத்தென்வனை யீடேற்ற மாக்கி வைத்தான். அப்போது சுருக்கத் தென்பவன் உடனே குதிரையை விட்டுங் கீழிறங்கி நபிநாயகத்தின் ஒட்டகத்திற்கு முன்னிலேவந்து மண்டிக்கால்போட்டிருந்துகொண்டு, அல்லாவுடைய றசூலே உங்களுடையநாயன் தங்கத்தில் நின்று முண்டானவனு, அல்லது பொன்னில் நின்று முண்டானவனு, அல்லது வெள்ளியில் நின்று முண்டானவனு? இவைகளில் நின்றும் எதினுலுண்டானவன் எனக்குச் சொல்லுங்களென்று கேட்டான்.

அதற்கு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் வாயை மூடினவர்களாய் தலையைக் கவிழ்ந்துகொண் டார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லா

புறத்தாலிருந்து குல்ஹுவல்லா என்னும் சூறத்துடனே யிறங்கி நபிநாயகத்துக்குச் சொன்னார்கள். அதுகேட்டு, நபிநாயகம் சுருக்கத் தென்பவனுக்கு குல்ஹுவல்லா என்ற சூறத்தையோதித் தெரிவித்தார்கள். அதின் பொருள் யாதெனில், முஹம்மதே நீர் சொல்லும் கருமமாகிறது, அல்லாஹுத் தஆலா ஒருவனாக இருக்கும், அவனாகிறவன் எப்போதாகிலும் சகல ஹாஜத்துகளுக்கு யாவருமவனளவில் நாடப்பட்டவன் அவன் ஒருவரைப் பெறவு மில்லை, அவனைப் பெறப்படவுமில்லை. இன்னும் அவனுக்குச் சரியானவன் ஒருவனுமில்லை, ஆதலால் அவன் தங்கம், பொன், வெள்ளியானவனல்ல இவைகளெல்லாத்தையுமவிட்டுத் தூய்தான வனென்று சொன்னார்கள். அதுகேட்டுச் சுருக்கத்தென்பவன் நபி நாயகத்தைப்பார்த்து அல்லாவுடைய றசூலே இஸ்லாமாகிறதை யெடுத்து சொல்லுங்களென்றான், உடனே நபிநாகமவர்கள் இஸ்லாத்தினுடைய விபரங்களை யெடுத்து அவனுக்குச் சொன் னார்கள். அதுகேட்டுச் சுருக்கத்து இஸ்லாத்திலாகினர்.

ஹதீது.

ஹாயத்துல் நுஹூபென்னும் கித்தாபிற் சொல்லியிருக்கிறது யாதெனில், நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள் அஸ்ஹாபிமார்களைப்பார்த்து என்னுடைய அசஹாபி மார்களே, அல்லாஹுத் தஆலா என்னை மிஃறுஜுக்காக வான லோகத்தளவில் அழைத்தபோது, அங்கே மூன்று லக்ஷத் தறுபது னாயிரந்தூணின் பேரில் அறுசைக்கண்டேன். அதில் தூணுக்கொரு தூணிடையில் மூன்று லக்ஷம் வருஷத்தோலைதூரம் அந்தத் தூண்கள் ஒவ்வொன்றிற்குங் கீழே பன்னீராயிரம் மைதான வெளியுண்டாயிருக்கின்றன, அந்தமைதானவெளி ஒவ்வொன்றும் மஷ்ரிக்கு தொடுத்து மகரிபுவரைக்கு மிருக்கின்றன, அந்த மைதானவெளி ஒவ்வொன்றடங்கிலும் என்பதினாயிரம் மலக்கு களிருக்கிறார்கள். அந்த மலக்குகள் அடங்கலும் குல்ஹுவல்லா சூறத்தை ஓதுகின்றார்கள். அப்படி ஓதி முடிந்தபிறகு அவர்கள் சொல்லுகிறார்கள், எங்களாண்டவனே துனியாவில் ஆண் பெண் களில்நின்றும் குல்ஹுவல்லா சூறத்தை யோதுவார்களே, அவர் களுக்கு இப்போது நாங்கள் ஓதினதவாபைத் திடனாக ஹதியாச் செய்து விட்டோமென்று சொல்லக் கண்டேனென்று சொன்னார்கள்.

அது கேட்டு அஸ்ஹாபிமார்கள் யாவரும் மிகுந்த ஆச்சரியப் பட்டார்கள். அது கண்டு நபிநாயகமவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து என்னுடைய அஸ்ஹாபிமார்களே நீங்கள், ஆச்சரிய மாகிறீர்களோ வென்றதற்கு, அவர்கள் ஆம் அல்லாவுடைய றசூலே, நாங்கள் ஆச்சரியந்தா னாகிறோமென்று சொன்னார்கள் இவ்விதஞ் சொன்ன அஸ்ஹாபிமார்களைப் பார்த்து நபிநாயகமவர்கள் என்னுடைய நபுசு அவன் வசத்திலிருக்கிறதே அந்த நாயகன் பேரிலே சத்தியமாக குல்ஹுவல்லாஹு அஹது என்று ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய சிறகின் பேரிலும் அல்லாஹுஸ்ஸமது என்று மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய சிறகின் பேரிலும் லம்யலிது வலம் யூலது என்று இசுறாபீல் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய சிறகின் பேரிலும் வலம்யக்குன்லஹு குபுவன் அஹது என்று இஸ்றாயீல் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய சிறகின் பேரிலும் எழுதப் பட்டிருக்கின்றன.

ஆதலால் என்னும்மத்துகளில் நின்றும் யாதாமொருவன் (குல்ஹுவல்லா சூறத்தை) யோதுவானாகில், அவனுக்கு அல்லாஹுத் தஆலா தௌறாத்துவேதம், சபூர்வேதம், இஞ்ஜீல்வேதம், புறுக்கான் வேதம் ஆகிய இந்நான்கு வேதத்தையும் ஓதுகிற தவாபைக் கொடுத்திடுவா னென்று திருவுளமாகி, மறுபடியும் நபிநாயகம் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து என்னுடைய அஸ்ஹாபிகளே, இன்னும் ஆச்சரியமாகிறீர்களோவென்று கேட்டார்கள். அதற்கும் அஸ்ஹாபிமார்கள் நபிநாயகமவர்களைப் பார்த்து ஆம் அல்லாவுடைய றசூலே ஆச்சரியமாகிறோ மென்றதற்கு, நபிநாயக மவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து என்னுடைய நபுசு அவன் வசத்திலிருக்கிறதே அந்த நாயன் பேரில் சத்தியமாக குல்ஹு வல்லாஹு அஹது என்று அபூபக்கர் சித்தீக்குடைய நெற்றியின் பேரிலும், அல்லாஹுஸ்ஸமது என்று உமறுல் பாறூக்குடைய நெற்றியின் பேரிலும், லம்யலிது வலம்யூலது என்று உதுமான நின்னூறைனுடைய நெற்றியின் பேரிலும், வலம்யக்குன் லஹு குபுவன் அஹது என்று அலியுல் முறுத்தலாவுடைய நெற்றியின் பேரிலும் எழுதப் பட்டிருக்கிறது. ஆதலால் யாதாமொருவன் குல்ஹுவல்லா சூறத்தை ஓதுவானாகில் அவனுக்கு மேற் சொன்ன நான்கு யார்களுடைய தவாபு போலுள்ளதை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவா னென்று திருவுளமானார்கள். றலியல்லாஹுத் தஆலா அன்ஹும்.

இன்னும் நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு நாள் மதீனமாநகரத்தில் கேட்டு வாயிலிடத்திலிருக்கும் போது, அங்கே சில பேர்கள்கூடி ஜனாஸா வைத்தூக்கிச் சுமந்து கொண்டு வரக்கண்டு, நபிநாயகம் அந்த மையித்துடனே வந்தவர்களைப் பார்த்து இந்த மையித்து யாருக் காவது கடன் கொடுக்கவேண்டியதிருக்கிறதோ வென்று கேட் டார்கள். அதற்கு அவர்கள் நபி நாயகத்தைப் பார்த்து இந்த மையித்து நான்கு திருகங் கடன் கொடுக்கவேண்டியதிருக்கிற தென்று சொன்னார்கள்.

அப்படிச் சொன்னவர்களைப் பார்த்து நபிநாயகம் இந்த மையித்துக் கடன் கொடுக்காமல் மவுத்தாய் விட்டதால் நான் அவனுக்குத் தொழுவிக்கமாட்டேன், நீங்கள் தொழுங்களென்று சொன்னார்கள். அப்போது அல்லாவின் உத்திரவுப்படி ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்களிறங்கி நபி நாயகத்திடத்தில் வந்து முஹம்மதே, நான் அல்லாவுடைய உத்திரவினாலே மவுத்தான மனுடனுடைய ரூழத்திலே வந்து அவர் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுத்து விட்டேன். ஆதலால் நீங்கள் எழுந்து தொழுவியுங்கள் அவருடைய பாவங்களை யெல்லாம் பொறுக்கப் பட்டுப் போய் விட்டபடியால், யாதாமொருவர் அவருடைய ஜனாஸாவின்பேரிலே தொழுவாரேயானால் அவருடைய பாவத்தை அல்லாஹுத் தஆலா பொறுத்து விடுவானென்று சொன்னார்கள்.

அது கேட்டு நபிநாயகம் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து இந்த மையித்திற்கு இவ்வளவு சங்கையுந் தறஜாவும் என்ன விதமாய்க் கிடைத்த தென்று கேட்டார்கள். அதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் நபி நாயகத்தைப் பார்த்து இந்த மையித்தான மனுடன் ஹயாத்தோடு இருக்கச்சே அல்லாஹுத் தஆலாவுடைய ஸிபாத்துகள் புகழ்கள் மன்னிப்புகளுண்டா யிருக்கிற குல்ஹுவல்லா என்கிற சூறத்தை நாளொன்றிற்கு நூறுதரம் ஓதிவந்தார். அந்த பரக்கத்தைக்கொண்டு இவ்வளவு சங்கை தறஜாக் கிடைத்ததென்று சொன்னார்கள்.

ஆதலால் முஸ்லிமான உடற் பிறந்தான் மார்களே, குல்ஹு வல்லா சூறத்தை யோதினதால் அந்த மனுடனுடைய கடன் தீர்ந்து போய்விட்டதே, அதுபோல நாமும் கடன்காரருக்கு குல்ஹுவல்லாவை யோதிக் கடனைவிசித் தள்ளிவிடலாமென்று எண்ணி யோதாதீர்கள். தவாபை யெண்ணி யோதினீர்களாகில்

அல்லாஹுத் தஆலா மிகுந்த தறஜாக்கள் கொடுப்பான். ஆமீன்.

ஹிக்காயத்து.

சாலிஹான பேர்களில் நின்று மொருவர், இரவு காலம் நித்திரை செய்யும் போது மக்கமா நகரத்தி லுண்டான புறுக்களில் நின்றும் நூறு புறுக்களுக்குத் தலையில்லாம லிருக்கக் கனவுகண்டு காலையில் கண்விழித் தெழுந்து அவ்விடத்திலே கனவுக்குத் தஃபீர் சொல்லப்பட்ட ஒருவரிடம் போய்த் தான் இரவிற் கண்ட கனவைச் சொல்லி தஃபீர் கேட்டார். அதற்கவர் நன்றாக வுற்றுணர்ந்து யோசித்துப் புத்தியின் கூர்மையினாலே தெளிந்து கனவு கண்டவரைப் பார்த்து, ஓய் சாலிஹானவரே, நீர் 'பிஸ்மிலை' ஓதாமல் விட்டுவிட்டு நூறு விடுத்தம் 'குல்ஹுவல்லா சூறத்தை' யோதி யிருப்பீர்போ லிருக்கிறது. அதனாற்றான் இவ்விதமான கனவு கண்டீரென்று சொன்னார். அதுகேட்டுக் கனவு கண்டவர் கனவின் தஃபீர் சொன்னவரைப் பார்த்து நீர் உண்மை சொனனீர், அது சரிதானென்று ஒப்புக் கொண்டார்.

ஹதீது.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவாக்கினாலே யாதாமொருவன் சோறுண்டதின் பின்னாலே குல்ஹு வல்லாஹு சூறத்தை ஒருதரம் ஓதுவானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா சுவர்க்கத்திலே செவந்த மாணிக்கத்தினாலே ஒரு பட்டணத்தைக் கட்டிடுவான். இன்னும் அல்லாஹுத் தஆலா அவனுண்ட பிடி யடங்கலுக்கும் ஒவ்வொரு பிடிக்கும் பதிலாகப் பத்து நன்மை யெழுதிடுவா னென்றுந் திருவுளமானார்கள். இன்னும் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவாக்கினால் யாதாமொருவன் பிஸ்மிலுடனே குல்ஹுவல்லாஹு சூறத்தை யோதி வருவானே யானால் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஐம்பது வருஷத்துடைய பாவத்தைப் பொறுத்திடுவா னென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும் ஒரு மனுடன் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களிடத்தில் வந்து தன்னுடைய எழுமைத்தனத்தைச் சொல்லிக் கொண்டார். அது கேட்டு நபி நாயகம் அவர்கள் அந்த மனுடனைப் பார்த்து ஓய் மனுடனே, நீர் உம்முடைய வீட்டில் நுழையும் போது 'குல்ஹுவல்லாஹு'

சூறத்தை யோதும், அப்படி யோதவீராகில் அல்லாஹுத் தஆலா உமக்குக் குறைவில்லாத ரிஸ்க்கு கொடுப்பா னென்று சொன்னார்கள். அந்த மனுடன் அதே பிரகாரம் 'குல்ஹுவல்லா' சூறத்தை யோதிவந்தார், அவர் பேரிலே அல்லாஹு தஆலா ரிஸ்க்கை விஸ்தீர்ணமாக்கி வைத்தான்.

ஆதலால் 'குல்ஹுவல்லாஹு' சூறத்தை ஓதுகிறதினால் துனியாவினுடைய வருத்தமும், ஆகிறத்துடைய வருத்தமும், ஸக்கறாத்தினுடைய வருத்தமும், கபுறுடைய இருள்கள் கியாமத் தமளியிவைகளை யெல்லாம் விட்டும் அந்த சூறத்து விடுதலை செய்து நீக்கிவிடும். அதனாலேதான் அந்த சூறத்துக்கு இகுலாசென்று பெயர் வைக்கப்பட்டது. இந்தப்படிக்குத் தர்றதுல் நாசிகீன் நுஸுஹத்தில் மஜாலிசு கஸீனத்துல் அசறாறு மூதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் இந்த இகுலாசென்னும் சூறத்துடைய வரிசையை இவ்வளவென்று எழுத முடியாது. ஆதலால் சுருக்கமாக முடித்தனம். முஸ்லிமாகிய உடற் பிறப்புகளே, இந்த ஒரு சூறத்தை யோதின பேர்கட்கு இவ்வளவு வரிசை தறஜாக் கிடைக்குமானால் குறுஆன் முழுமையுமோதி யதின்பிரகாரம் அமல் செய்தால் எவ்வளவு வரிசை தறஜாக் கிடைக்கு மென்பதை நீங்களே யுற்றுணர்ந்து பார்த்து இபுலீசுடைய கலவிதத்தி லாகாமல் குறுஆனை யோதி அதின் பிரகாரம் அமல் செய்வதுடனே உங்கள் பிள்ளைகளையும் ஓதவைத்து நமது தீனில் இஸ்லாத்திற்குள்ள பறுலு ஷுறத்து முதலிய நன்னடத்தைகளிலே நடக்கும்படி வருத்தி வையுங்கள். இவ்விஷயத்துடனே நீங்கள் குல்ஹுவல்லாஹு சூறத்தை நாள் 1-க்கு நூறுதரம் அல்லது 11-தரம் இயன்ற மட்டிலும் ஓதி வருவீர்களானால் உங்களுடைய நன்னாட்டங்களை அல்லாஹுத் தஆலா நிறைவேற்றி வைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

குல்ஹுவல்லா சூறத்துடைய வரிசையின் பயான்

முற்றிற்று.

யாஸீன் சூறத்துடைய வரிசையின் பயான்.

ஹதீது.

தெள்ளித் தெளித்துத் திருமணி யாக்கப்பட்ட நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுள மானார்கள், யாதெனில், வஸ்தடங்கலுக்கும் கல்புண்டாயிருக் கிறது. அதுபோலே குறுஆனுக்குக் கல்பாகிறது யாஸீன் சூறத்தாக இருக்கும். ஆதலால் யாதாமொருவன் யாஸீன் சூறத்தை ஒருதரம் ஓதுவானாகில் அந்த பறக்கத்தினால் அவனுக்கு அல்லாஹுத் தஆலா குறுஆனைப் பத்துத் தரம் ஓதின நன்மை எழுதிடுவான்.

யாசீன் சூறத்திறங்கின சபபென்ன வென்றால், காபிறூனவர்கள் நபி நாயகத்தைப் பார்த்து, இந்த முஹம்மது நபியுமல்ல, நாயன் அனுப்பப் பட்டவருமல்ல, ஆகிலு மிவர் அபூத்தாலிபுடைய எத்தீம் இவர் மகுத்துபுஹானா வென்ற பள்ளிக்கூடத்திற்குப் போகவு மில்லை, இல்முகளைப் படிக்கவுமில்லை. ஆதலாலிவர் எவ்விதம் நபியாவாரென்று இன்காறு செய்தார்கள். இவ்விதங் காபிரீன்கள் சொல்லுகிற சொல்லை றத்துச் செய்வதற்காக அல்லாஹுத் தஆலா யாஸீன் சூறத்தை யிறக்கினான்.

முஸ்லிமாகிய ஆண் பெண்ணிவர்கள் மவுத்தின் ஸக்கறாத்து வேளையில், அவர்களிடத்தி லிருந்து யாஸீன் சூறத்தை யோதினால்; அதிலுள்ள ஒவ்வோ ரெழுத்திற்குப் பதிலாக பத்து மலக்குகள் இறங்கி ஸக்கறாத்தாய்க் கிடப்பவர்கள் முன்னிலே போய் சப்பு சப்பாய் நின்று கொண்டு அவர்கள் பாவங்களைப் பொறுக்கத் தேடுவார்கள். பின்னர் மையித்தைக் குளிப்பாட்டுகிற இடத்திலும் போய் நின்று குளிப்பாட்டித் தீர்ந்து கபனிட்டுச் சந்தூக்கில் வைத்துத் தூக்கிக் கொண்டு போகும்போதுங் கூடவே பின் றொடர்ந்து போகிறதுடனே பிழை பொறுக்கவுந் தேடுவார்கள். இன்னும் பசியாயிருக்கிறவன் வாக்கும் மனமும் ஒன்று போலே ஓர்மையாய் யாஸீன் சூறத்தை யோதுவானாகில் அல்லாஹுத் தஆலா அவனுடைய பசியைத் தீர்த்து விடுவான்.

இன்னும் நெஞ்சில் பயமும் விசனமு முடையவன் யாஸீன் சூறத்தை யோதுவானாகில் அல்லாஹுத் தஆலா அவனுடைய பயத்தையும் விசனத்தையும் நீக்கி விடுவான். இன்னும் பக்கீறூன

கடன் காரன் யாஸீன் சூறத்தை யோதுவானுகில் அல்லாஹுத் தஆலா அவனைக் கடனைவிட்டும் நீக்கிக் கலாசாக்கிவிடுவான். இன்னும் யாதாமொரு ஹாஜத்தையுடையவன் யாஸீன் சூறத்தை யோதுவானுகில் அல்லாஹுத் தஆலா அவனுடைய ஹாஜத்தை நிறைவேற்றி வைப்பான்.

இன்னும் சுபுஹுநேரத்தில் யாதாமொருவன் தொழுத பின்னர் யாஸீன் சூறத்தை யோதுவானுகில் சாயந்தரமட்டிலும், சாயந்தர மோதுவானுகிற் காலை நேரமட்டிலும் அவனும், அவன் பிள்ளைகள் முதலானவரும் அல்லாவுடைய அமானத்திலா யிருப்பார்.

இன்னும் எந்தப் பட்டணத்திலாகிலும், பலாய் முசிபத்தைக் கொண்டும் சோதிக்கப்படுமாகில், அப்போது கலப்பறுதலாகிய ஓரே நிய்யத்தைக்கொண்டும் யாஸீன் சூறத்தை யோதினுல் அதின் பறக்கத்தினுலே அல்லாஹுத் தஆலா அந்தப் பலாய் முசிபத்து பஞ்சம் உபாகோய் முதலிய சகல துன்பங்களையும் நீக்கிவிடுவான். இந்தப்படிக்கு யாசின் தபுசீர் முதலானதுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

யாபிஈ இமாம் அவர்கள் சொன்னுகிறுர்கள் யாதெனில், தாங்கள் எமன்ராச்சியத்திலுள்ள பட்டணங்களில் நின்று மோர் பட்டணத்திலுள்ள சாலிஹான வொருவரைக் கண்டபோது அவர் சொன்னதாவது, அவ்விடத்திலே மவுத்தாகிப்போன ஒருவரை முறைபோலே கொண்டு போய்க் கபுறில் அடக்கஞ் செய்து விட்டு யாவரும் போனபின்னர், அந்தக் கபுறின்மேல கடுமையான ஒரு இடியும் ஒரு அடியுமுண்டானதை யொரு ஷெய்கானவர்கேட்டு இதென்ன ஆச்சரியம் அறிவோமென்றவ் விடத்தில் நிற்கும்போது அந்தக் கபுறிலிருந்து ஓர் கறுத்தநாய் புறப்பட்டது. அதை யவர்கள் பார்த்து உனக்கென்னகேடு, நீ என்ன வஸ்துவென்று கேட்டதற்கு, நாயானது நான் இந்தக் கபுறிலடங்கிய மையித்துடைய அமலா யிருக்குமென்று சொல்லக்கேட்டு அந்தப்பேரியோர்கள் நாயைப் பார்த்து இடியும் அடியும் உன்பேரில் விழுந்ததா அல்லது மையித் தின்பேரில் விழுந்ததாவென்று கேட்க, அதற்கு நாய் என்பேரிற்முன் விழுந்தது. அவனிடத்தில் யாஸீன் சூறத்தும் இன்னும் அதைச் சேர்ந்த சூறத்தும் இருக்கக்கண்டேன். அது அந்த மனுடனுக்கு மெனக்கு மிடையிலே திரைபோட்டு அடித்துத் துரத்தினதென்று

சொன்னது. இவ்விதம் நாய்ச் சொல்லக்கேட்டு அந்தப் பெரியோர்கள் எனக்குச் சொன்னார்களென்று சொன்னார். இந்தப் படிக்கு இறுஷாது முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் மூமின் முஸ்லிமான இருவான்களே, யாஸீன் சூறத்துக்கு இவ்வளவு வரிசையிருந்தால், குருஆன் முழுமைக்கும் எவ்வளவு வரிசையிருக்கிறதென்று உங்களுடைய தெளிவான புத்தியைக்கொண்டு மூற்றுமுணர்ந்துபார்த்து நீங்களும் குருஆனை யோதி இல்முகளைப் பழக்கமாக்கி அல்லா றசூல்சொன்ன ஏவலாகிய நல்ல நடப்புடனே யாஸீன் சூறத்தைப் பாடமாக்கி வேண்டி மாத்திரம் நாளொன்றிற்கு ஒரு யாசின் இரண்டு யாஸீன் ஓதி மவுத்தான உங்கள் தாய் தகப்பன் பாட்டன் பூட்டன் முதலானவர் பேரில் ஹதியாச்செய்து வருவீர்களாகில் அதனாலே அவர்கள் பாவங்களைப் பொறுக்கப்பட்டு அதாபும் இலேசாகுவார்கள். உங்களுக்கும் அவர்கள் துஆச் செய்வார்கள். அதனால் நீங்கள் நன்மையைப் பெறுவீர்கள். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

யாஸீன் சூறத்துடைய வரிசையின் பயான்

முற்றிற்று.

ஆயத்துக் குறுஸிய்யுடைய வரிசையின் பயான்.

சிறப்பான ஆயத்துக் குறுஷிய்யி நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கட்கு இறங்கினபோது, அதினுடனே நாற்பதினாயிரம் மலக்குகளிறங்கினார்களென்றும், இன்னுமொரு ரிவாயத்தில் அந்த ஆயத்தை வஹுப்பமாக்கி வைக்கிறதற்காக எண்பதினாயிரம் மலக்குகளிறங்கினார்களென்றும், துன்ஹத்தில் மஜாலிசென்னும் கித்தாபிற் சொல்லியிருக்கின்றன.

இன்னும் ஆயத்துக் குறுஸிய்யை இறங்கினபோது துன்யாவி லுண்டான புத்துகான்களெல்லாம் அடித்து மோதி முகங் குப்புற விழப்பட்டன. இன்னும் துனியாவிலுள்ள இராஜாக்களெல்லாம் முகங் குப்புற விழுந்ததுடனே அவர்கள் தலையில் அணிந்திருக்கிற

கிரீடங் களெல்லாம் தலையைவிட்டுக் கழண்டு கீழேவிழப்பட்டன. இன்னும் ஷைத்தான்களெல்லாம் வெருண்டோடினதினாலே சிலது ஒன்றுக் கொன்று அடித்து மோதிக்கொண்டோடிவந்து இபுலீசிடத்திற்கூடி நின்றுக்கொண்டு தாங்கள் பட்ட அவஸ்தைகளைச் சொல்லின. அதுகேட்டு இபுலீசு அந்த ஷைத்தான் களெல்லாத்தையும் பார்த்து என்னுடைய ஷைத்தான் கூட்டங்களே, நீங்கள் விரைவாகப் பூமியிலெங்குஞ் சுற்றித்திரிந்து என்ன காரணங்கள் நடக்கிறதென்று பார்த்து வாருங்களென் றேவினான்.

அப்போது ஷைத்தான்கள் இபுலீசைவிட்டும் புறப்பட்டுப் பல பல திக்குகளெல்லாம் பிரிந்துபோய் மக்ரிபு மஷ்ரிகு வரையிலுஞ் சுற்றிப்பார்த்து, அறபுராச்சியத்திலாகித் திருமதீனமா நகரத்திற் குள்ளே புகுந்து பார்க்கும்போது அங்கே நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அல்லாஹுத் தஆலா ஆயத்துக் குறுஸிய்யி என்கிற ஆயத்திறக்கின செய்தி திட்டவட்டமாகத்தெரிந்துகொண்டு போய்விட்டன.

ஹதீது.

இருலோகத்துக்கும் ஆண்டகையாகிய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள், குறுஆனில் வலுப்பான ஆயத்துக்குறுஸிய்யி யாகவிருக்கும். ஆதலால் யாதாமொருவன் ஆயத்துக் குறுஸிய்யை ஓதுவானாகில் ஓதின நேரம் முதலிருந்து மறுபடியும் அந்நேரம் வருகிறமட்டிலும் அவனுக்கு நன்மைகளை எழுதும்படிக்கும், பாவங்களை யழிக்கும் படிக்கும் அல்லாஹுத் தஆலா ஒரு மலக்கை அனுப்பிவைப்பான். அந்த மலக்குவந்து அதேபிரகாரஞ் செய்வார்.

இன்னும் ஷம்சுல் மஆரிபென்னுங்கித்தாபிலே சொல்லப் பட்டிருக்கிறது, நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாக்கினாலே திருவுளமானார்கள். யாதெனில் அல்லாஹுத் தஆலா வெண்மையான வோர் முத்தைப் படைத்து, அந்த முத்தில் நின்றும் உயர்ந்த அம்பறைப் படைத்து அம்பறைக்கொண்டு ஆயத்துக் குறிஸிய்யை யெழுதி அவன் தன்னுடைய வலுப்பமான சிறப்பைக்கொண்டும் சத்தியஞ் செய்து

யாதாமொருவன் ஆயத்துக் குறுஸியை பறுலாக்கப்பட்ட தொழுகைக்குப் பின்னாலே யோதுவானாகில், எட்டுச் சுவர்க்கத்து வாயல் களையுந் திறக்கப்படும் அப்படி திறக்கப்பட்டவாயிலிலே புகுந்து கொள்வா னென்று சொன்னானென்று இவ்விதம் நபி நாயக திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள், தங்கள் திருவாக்கினால் யாதாமொருவன் உலூச் செய்து முடிந்தவுடனே ஆயத்துக் குறுஸியை ஓதுவானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா நாற்பது தறஜாத்துகளை யுயர்த்தி வைப்பானென்றுந் திருவுளமானார்கள். இன்னும் நபிநாயகந் தங்கள் திருவாக்கினால் யாதாமொருவன் ஆயத்துக் குறுஸியை ஓதுவானாகில் அதிலுள்ள ஹறுபுக ளென்னும் அக்ஷரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மலக்குகளை அல்லாஹுத் தஆலா படைப்பான். அந்த மலக்குகள் ஆயத்துக் குறுஸியை யோதுவானுக்குக் கியாமமுடியும் நாள்மட்டிலும் பிழை பொறுக்கத் தேடுவார்களென்று திருவுளமானார்கள்.

இன்னும் வேறோர் ஹதீதில் யாதாமொருவன் தன்னுடைய நித்திரையிற் கண்விழிக்காமற் கனவிலே ஆயத்துக் குறுஸியை யோதுவானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா சுபுஹு நேர மட்டிலும் றஹ்மத்துடைய வாயில்களைத் திறந்து விடுவான். இன்னும் அவனுடைய சரீரத்திலே வுண்டாயிருக்கிற உரோமங்கள் ஒவ்வொன்றிக்கும் பதிலாக ஒவ்வோர் பட்டணத்தைக் கொடுத்திடுவான். இன்னும் அவன் அன்று யிராத்திரியிலே மவுத்தாகு வானாகில் அந்த மவுத்து ஷஹீதுடைய மறுத்துபாவாக யிருக்கு மென்று வருகின்றன.

இன்னும் வேறோர் கித்தாபில் யாதாமொருவன் ஆயத்துக் குறுஸியை பொழுது குறபாகிற தருணத்தில் நாற்பது தரம் ஓதுவானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா நாற்பது ஹஜ்ஜு டைய தவாபான நன்மையை யெழுதிடுவானென்றும் வருகின்றன.

ஹதீது.

அப்துல்லாவுடைய மகனார் ஜாபிறவர்கள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்களென்றுஞ்

சொல்லுகிறார்கள். யாதெனில், ஒருவன் தன்னுடைய வீட்டை விட்டும் வெளியே புறப்படும்போது ஆயத்துக் குறுஸிய்யை ஓதுவானாகில் அவனுக்கு முன் பின் வலமிடங்களில் நின்றும் காத்துக் கொள்ளும்படியாக எழுபதினாயிரம் மலக்குகளை அல்லாஹுத் தஆலா அனுப்பிவைப்பதுந்தவிர அவனுக்கு எழுபது ஷஹீதுகளுடைய தவாபைக் கொடுத்திடுவா னென்று சொல்லியிருக்கிறது.

இன்னும் நபிநாயகம் தங்கள் திருவாக்கினால் திருவுளமானார்கள். யாதாமொருவன் தன்னுடைய வீட்டை விட்டும் வெளியே புறப்படும்போது ஆயத்துக் குறுஸிய்யை யோதுவானாகில் அவனளவில் அல்லாஹுத் தஆலா பிழை பொறுக்கத் தேடுவதற்காக எழுபதினாயிரம் மலக்குகளை அனுப்புவான். இன்னும் அவன் வெளியிலிருந்து வந்து வீட்டிற் புகுந்து ஆயத்துக் குறுஸிய்யை ஓதுவானாகில் அவனுடைய இரண்டு கண்ணுக்கிடையிலுள்ள மிடிமையையும் அவனைவிட்டும் அல்லாஹுத் தஆலா நீக்கிவிடுவான். இன்னும் அவன் நித்திரைசெய்கிற இடத்திலே ஆயத்துக் குறுஸிய்யை ஓதுவானாகில் ஷைத்தானை விட்டும் அல்லாஹுத் தஆலா அவனைக் காத்துக்கொள்வான். இன்னும் ஆயத்துக் குறுஸிய்யை யோதி அவனுடைய இடது பக்கத்திலே துப்புவானாகில் ஷைத்தானைத் தடுக்கப்படும். அவனை விட்டுங் கோபம் பறந்தோடிப் போய்விடுமென்று இவ்விதம் நபிநாயகம் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்கள் மருமகனான அலியிபுனு அபீத்தாலிபு றழியல்லாஹு அன்ஹுவர்களுக்குச் சொன்னார்கள். யாதெனில், யாதாமொருவன் தன் வீட்டிலே ஆயத்துக் குறுஸிய்யை யோதப்படுகிறதில்லை, அந்த வீட்டை ஷைத்தான் முப்பதுநாள் வெறுத்தேயொழிய. இன்னுமந்த வீட்டிலே இரவுகளிலும் ஷைத்தான்கள் நுழையமாட்டாது. ஆதலால் அலியேநீரும் ஆயத்துக் குறுஸிய்யையோதும். உம்முடைய பிள்ளைகளுக்கும் வீட்டிலுள்ளவர்களுக்கும் அசல் வீட்டுக்காரர்களுக்கும் படித்துக் கொடுமென்று இவ்விதம் திருவுளமானார்கள்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய திருவாக்கினாலே சொல்லக் கேட்டதாக மாலிக்குடைய மகனார் அனஸ் றழியல்லாஹு அன்ஹுவர்கள் சொல்லுகிறார்கள்.

யாதெனில், யாதாமொரு மூஸ்லிமானவன் ஆயத்துக் குறுஸிய்யை ஓதி அதினுடைய தவாபை மவுத்தாகி யடக்கப்பட்டிருக்கிற கபுறாளிகளுக்கு ஹதியாச் செய்வானுகில் மஷ்ரிக்கு தொடுத்து மக்ரிபு வரைக்கும் அடங்கப் பட்டிருக்கிற கபுறுகளுக்கு காற்பது ஒளிவை அல்லாஹுத் தஆலா புகுத வைத்திடுவான். இன்னும் அவர்களுடைய கபுறுகளை அல்லாஹுத் தஆலா விஸ்திரணமாக்கி வைத்திடுவான், இன்னும் ஒவ்வோர் மையித்துக்கும் ஒவ்வோர் தறஜாவை அல்லாஹுத் தஆலா உயர்த்திடுவான்.

இந்த ஹதீதின் கருத்து ஒருநாள் ஆயத்துக் குறுஸிய்யை ஓதப்பட்ட வீட்டில் மூப்பது நாளைக்கு இபுலீசு நெருங்க மாட்டான். இன்னும் ஆயத்துக் குறுஸிய்யை ஓதுகிறவனுக்கு அல்லாஹுத் தஆலா அறுபது நபிமார்களுடைய தவாபு போலுள்ள தவாபைக் கொடுத்திடுவான். இனனும் ஆயத்துக் குறுஸிய்யை ஓதுகிறவனுக்கு அதினுடைய எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் பதிலாக எழுத்துகளின் தொகை யெவ்வளவோ அவ்வளவு மலக்குகளை கியாமநாள் வரையிலும் பிழை பொறுக்கத் தேடும் படிக்கு அல்லாஹுத் தஆலா வுண்டாக்கிடுவா னென்றும் நபி நாயகம் அலி றலியல்லாஹு அன்ஹுவர்களுக்குத் திருவுளமானார்கள்.

இந்தப் படிக்கு கஷீனத்துல் அசுறூர், நுஜ்ஹத்தில் மஜாலி சென்னுவ் கித்தாபுகளிலும் மற்றுங் கித்தாபுகளிலும் வருகின்றன. இந்த ஆயத்துக் குறுஸிய்யி உடைய வரிசைகள் அனேக மிருக்கின்றன. என்கிலு மிவ்விடத்திலே சுருக்கமாக எடுத்துக் காட்டலாயிற்று. ஆதலால் மூமின் மூஸ்லிமாகிய இகுவான்களே, ஆயத்துக் குறுஸிய்யி ஒன்றை யோதுபவர்க்கு இவ்வளவு சிறப்பும், பெருமையும், தவாபு முண்டாயிருக்க குறுஆன் முழுமையும் ஓதினவர்களுக்கு எவ்வளவு தறஜா கிடைக்கு மென்று உங்களுடைய தெளிவான புத்தியிலே ஆராய்ந்து பார்த்து அல்லாஹுத் தஆலா வரிசையாக நமக்குத் தந்திருக்கிற குறுஆனை யோதி அதிலுள்ள பிரகாரம் ஏவல் விலக்கலின்ன தென்று இல்மு முயர்ச்சியுடனே அறிந்து இபாதத்துச் செய்து வருவீர்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஆயத்துக் குறுஸிய்யுடைய வரிசையின் பயான் முற்றிற்று.

இல்மு படிக்கிற வரிசையின் பயான்.

நம்முடைய காரணக் குருவான கற்பகத் தருவான நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தங்களுடைய முபாறக்கான திருவாயினால் திருவுளமானார்கள். யாதெனில், இல்மைத் தேடிப்படிக்கிறது மூமின் முஸ்லிமான ஆண் பெண் யாவர்பேரிலும் பறுலா யிருக்கும். அப்படி இல்மு படித்துக் கொள்கிறதற்குத் தாங்களிருக்கிற இடத்தில் உஸ்தாதில்லா திருந்தால் சீன் ராச்சியத்திலாவது போய் இல்மைத் தேடிப் படிக்கவேண்டு மென்றும், இன்னும் யாதாமொருவன் அமல் செய்கிறதற்காக வேண்டி இல்மில் ஒரு பாவைப் படிக்கிறது ஆயிரம் றக்ஆத்து, நபில்த் தொழுகின்றதைக் காண நலம் யிருக்கு மென்றும், இப்படி நபி நாயகமவர்கள் சொன்னார்கள்.

இன்னும் நபி நாயகந் திருவுளமானதாக, இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். யாதெனில் யாதாமொருவன் ஒரு ஸாஅத்து நேரம் இல்மைத் தேடுகிறதாவது, இரவு காலத்தில் நின்று வணங்குகிறதைக் காண மிகவு மேற்ற மானதாயிருக்கு மென்றும், இன்னும், யாதாமொருவன் ஒருநாள் இல்மைத் தேடிப் படிக்கிறது மூன்று மாதம் நோன்பு பிடிக்கிறதைக் காண மிகவும் கைறானதாக யிருக்கு மென்றும், இன்னும் நபி நாயகம் யாதாமொருவன் இல்மைப் படிக்கநாடி இருப்பிடம் விட்டு எழுந்து பிரயாணம் போகத் தன்னுடைய காலை தூக்கி வைக்கிறதற்கு முன்பாக அவனுடைய பாவங்களைப் பொறுக்கப்படு மென்றும், இன்னும் இல்மில் ஒரு பாவைப் படிக்கிறது அபிகுபைசமலை பொன்னாக இருந்து அதைப் பீஸபீலித் செலவு செய்வதைக் காண கைறு இருக்கு மென்றுந் திருவுளமானார்கள்.

இன்னும் நபி நாயகமவர்கள், யாதாமொருவன் இல்மு படிக்க நாடி ஆலிம்களுடைய வாயிற் போய் இல்மைப் படிப்பானே யானால் அவனுக்கும், இல்மைப் படிக்க கேட்டுக் கொண்டிருக்க நாடிப் போவானே அவனுக்கும், ஒவ்வோர் காலடிக்கு ஒவ்வோர் வருஷத்து இபாதத்தை யெழுதப்படு மென்றும், இன்னும் அப்படி இல்மு படிப்பவனுக்கும், அதைக் கேட்பவனுக்கும், சொர்க்கத்தில் ஒரு பட்டண முண்டாக்கப்படு மென்றும், அவன் பூமியில் நடந்து போகச்சே பூமி யவன் பிழையைப் பொறுக்கத்

தேடுமென்றும், அவன் நரகத்தை விட்டு மூரிஸம பெற்றவனென்று மலக்குகள் சாக்ஷி சொல்வார்களென்றுந் திருவுளமானூர்கள்.

இன்னும் நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்னதாக அபுதர்று றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லியிருக்கிறூர்கள். யாதெனில், ஆலிம்களுடைய மஜிலிசில் யாதாமொருவன் ஷறஇய்யத்தான ஹுக்கும்களைக் கேட்டுப் படிக்க ஹாஸிலுகிறது ஆயிரம் றக்கு ஆத்து நபிற்றெழுகிறதைப் பார்க்கிலும் ஆயிரம் வியாதியஸ்தரைக் கண்டு மீளுகிறதைப் பார்க்கிலும், ஆயிரம் மையித்துக்குப் போய் ஹாஸிருகிறதைப் பார்க்கிலும் ஏற்றமாக இருக்குமென்றும், இன்னும், வஸ்துக்களுக்குத் தூணுண்டும் அதுபோலே தீனுக்குத் தூணுகிறது பிக்ஹு என்கிற இல்மாயிருக்குமென்றும் இப்படிச் சொல்லியிருக்கிறூர்கள்.

இன்னும் நபி நாயகமவர்கள் இல்மு படித்துக் கொடுக்கிறவனுக்கு அல்லாஹுத் தஆலா றஹுமத்துச் செய்வதுடனே மலக்குகளும், வானம் பூமிகளிலுள்ள வஸ்துக்களும், படைகளிற் றரித்திருக்கும் எறும்புகளும், கடலிலுள்ள மீன்கள் முதலிய வஸ்துக்களும் பிழை பொறுக்கத்தேடு மென்றும் திருவுளமானூர்கள்.

இன்னும், இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் சொன்னதாக, அசாக்கிறுடைய மகனும், தபுறுனிய்யி என்பவர்களுஞ் சொல்லியிருக்கிறூர்கள். யாதெனில், சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்களிடத்திலே திரவியம், இராஜரீகம், இல்மு ஆகிய இம்மூன்றில் நின்றும் எது வேண்டுமென்று அல்லாஹுத் தஆலாவாலே கேட்கப்பட்ட போது, சுலைமான் அலைஹிஸ்ஸலா மவர்கள் இல்மைத்தான் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். அதனுல் அவர்களுக்கு இராஜரீகத்தையும் திரவியத்தையுங் கொடுக்கப்பட்டதென்று இந்த படிக்கு முறுஷிது முதலாகிய கித்தாபுகளில் வருகின்றன.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இன்சானைப் பார்த்து, நீ இல்மைப் படித்து ஆலிமா யிருந்துகொள், அல்லது இல்மைப் படிக்கிறவனுக இருந்துகொள், அல்லது நீ இல்மைக் கேட்கிறவனுக இருந்துகொள், அல்லது நீ இல்மின் பேரிலே பிரியம் வைத்தவனுக இருந்துகொள். இதை தவிர ஐந்தாவதாக இருக்கவேண்டாம்.

அப்படியிருதாற் கெட்டலைந்து ஹலாக்காய்ப் போவாயென்று திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் தங்கள் திருவாயினாலே இரவு பகல் அடங்கலிலும் ஆயிரம் றஹ்மத்து இறங்குகிறது. அதில் தொளாயி ரத்துத்தொண்ணூற்றொன்பது றஹ்மத்து ஆலீம்களுக்கும், இல்மைத்தேடிப் படிக்கிறவர்களுக்குமாயிருக்கும். ஒரு றஹ்மத்து மாத்திர மற்றமனுடர்கட்காக இருக்குமென்று திருவுளமானார்கள். இப்படிக்கு நுஸ்ஹது தல் மஜாலிசென்னுங் கித்தாபில் இரண் டாவது ஜில்த்து 88-வது பக்கத்தில் வருகின்றன.

இன்னும் இல்மைப்பற்றிய வரிசைகள் அதிகமாக இருக் கின்றன, என்கிலு மிவ்விடத்திற் சுருக்கமாக முடிவித்தனம். ஆதலால் எமது பிரியமுள்ள மூமின் மூஸ்லிமான சகோதரர்களே, உங்களுடைய தெளிவான புத்தியினால் இந்த பாஷை நன்றாகப் பார்வையிட்டு மாயத்துனியாவை நம்பாமல் அல்லா றசூல்சொன்ன சொற்போலே தீனில் இஸ்லாத்திலுள்ள, பறலு, ஷறுத்து, வாஜிபு சுன்னத்து, மூஸ்தஹப்பு, ஹலால், ஹறாம், ஏவல், விலக்கல், தௌஹீது, அகீதா, மஃரிபா, முதலான இல்முகளைப்படித்து நல்ல அமல்களைச்செய்து சாலிஹீன்களென்று இம்மை மறுமையிலும் ஈடேற்றம் பெறுவீர்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இல்முகளைப்படிக்கிற வரிசையின் பயான்
முற்றிற்று

தொழுகையுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லம் கற்பூரவாடை கமழும் தங்கள் திருவாக்கினாலே திருவுள மானார்கள். யாதெனில் ஐந்து காரியத்தின் பேரில் இஸ்லாத்தை பெடுக்கப்பட்டது. அதில் ஒன்றாவது சிறப்பான லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்னுங் கலிமா. இரண்டாவது ஐந்து நேரத் தொழுகை, மூன்றாவது ஸகாத்துக் கொடுக்கிறது நான்காவது றமலான் மாதத்தில் நோன்பு பிடிக்கிறது

ஐந்தாவது மக்கத்திற்போய் ஹஜ்ஜுசெய்கிறது ஆக இவ்வைந்து காரியமுமாயிருக்கும்.

இன்னும் நபிநாயகஞ் சொன்னார்கள். என்னுடைய உம்மத்துகள் பேரிலே பறுலாக்கப்பட்டதில் மூந்தினது தொழுகையாயிருக்குமென்றும், இன்னும் அவர்களுடைய அமல்களில் நின்றும் உயர்த்தப்படுகிறதில் மூந்தினது தொழுகையாயிருக்குமென்றும், இன்னும் கியாமநாளையில் ஈமானுக்குப் பின்னாலே கேள்வி கேட்கப்போகிறதில் மூந்தினது ஐங்தொருத்துத் தொழுகையாயிருக்குமென்று, இன்னும் வஸ்துக்களுக்குத் தூணுண்டாயிருக்கிறது அது போல் தீனுக்குத்தூணாகிறது தொழுகையாயிருக்குமென்றும், அத்தொழுகையை யாதாமொருவன் தரிபாடாகத் தொழுதுவருவானாகிற் றிடனாகத் தீனைத்தரிபடுத்தி வைத்தவனாவானென்றும், இன்னும் தொழுகையை விடுவானாகிற் றிடனாகத் தீனையிடித்தவனாவானென்றும், இவ்விதந் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு தர்றத்துன்னாஸிஹீன், லுபாபு, இறஷாதுல் இபாது முதலிய கித்காபுகளில் வருகின்றன.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் தங்களுடைய அழகான மூபாரக்கான வாயினாற் றிருவுளமானார்கள். யாதெனிற் றொழுகையாகிறது அல்லாஹுத் தஆலாவைப்பொருத்தமாக்கி வைத்துவிடும், இன்னும் நபிமார்களுடைய பாதையாகவும், மலாயிக்கத்துகளுக்கு உவப்பானதாகவும், மஃரிபாவுக்கு ஒளிவாகவும், ஈமானுக்கு அசலாகவும், அமல்களைச் சபூலாக்கிவைக்கிறதாகவும், வியாபாரங்களுக்குப் பறக்கத்தாகவும், பகைஞர்களுக்கு ஆயுதமாகவும், ஷைத்தான்களுக்குப் பொருத்தக்கேடாகவும், இஸ்றயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குத் தொழுகையுடையவனுக்கும், இடையிலே மன்றுட்டஞ்செய்கிறதாகவும் தொழுகிறவன் கபுரிலே கியாம நாள்வரைக்கும் விளக்காகவும், உடுமானமாகவும், மருவிய துணையாகவும் தலையின் மேலே நிழலிட்டுக் கொள்கிறதாகவும் கிரீடமாகவு மிருக்கு மென்றார்.

இன்னும் நபிநாயகர் திருவுளமானார்கள். தொழுதவனுக்கும் நரகத்திற்கும் இடையிலே தொழுகை திரைபோட்டுக்கொள்ளும், அல்லாஹுத் தஆலாவுக்கு முன்பாக மூமினான பேர்களுக்குத்

தொழுகை அத்தாக்ஷியாகவும், மீஸான் திராசிலுங் கனமாகிவிடும் ஷிறாத்துல் முஸ்தகீம் பாலத்திலும் மின்வெட்டி மறைந்ததுபோலே தொழுகை கடத்திவைத்திடும், இன்னும் தொழுகையாகிறது சொர்க்கலோகத்திற்குத் திறவுகோலாகவும் இருக்குமென்று இந்தப் படிக்குக் கலீனத்துல் அசுறாறு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹி வசல்லந்திருவுளமானார்கள். யாதாமொருவன் ஐந்து நேரத்துத் தொழுகையைப் பேணுதலாகத் தொழுது வருவானாகில், அந்தத் தொழுகை அவனுக்கு ஒளியாகவும் அத்தாட்சியாகவும் கியாம நாளையில் யீடேற்றமாகவும் ஆகிவிடுமென்றும், இன்னும் ஐந்தொகுத்துத் தொழுகையும் பேணித் தொழாமலிருப் பானேயானால் அவனுக்கு ஒளிவும் அத்தாட்சியும் ஈடேற்றமுமுண்டாகமாட்டாது. அவன் கியாமநாளையிலே காறூன், பிறவூன், ஹாமான், உபைபினு, கல்பு இவர்களுடனே இருப்பானென்றும் இப்பேர்ப்பட்ட கூட்டத்திற் சேராமல் அல்லாஹுத் தஆலா நம்மனைவோரையும் காத்து ஸாலிஹீன்களுடைய கூட்டத்தி லாக்கிவைப்பானாகவும். ஆமீன்.

இன்னும் நபிநாயகந் திருவுளமானார்கள். யாதாமொரு அடியான் தொழுகையைநாடி எழுந்திருந்தானாகில் அவனுடைய பாவங்களை அவன் தலையின்பேரிலும் இரண்டு தோளின்பேரிலும் கொண்டு வந்து வைக்கப்படும். அவன் றக்கூவு ஸுஜூது செய்யும்போதெல்லாம் பாவங்கள் அவனைவிட்டு விழுந்துபோய் விடுமென்று இப்படிக்கு இறுஷாதுல் இபாது முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் அபூஹுறைறா றலியல்லாஹு அன்ஹுவர்கள் நபிநாயகந்திருவுளமானதாகச் சொல்லுகிறார். யாதெனில் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து, என்னுடைய அஸ்ஹாபிமார்களே, உங்களில் நின்றும் ஒருவனுடைய வீட்டுவாசலிலே ஒரு ஆறுண்டாயிருந்து அதிலே அவன் நாளொன்றிற்கு ஐந்து தரம் குளித்தானாகில் அவனுடைய அழுக்கில் நின்றுங் கொஞ்சமாவது அவன்பேரிலே தங்கியிருக்குமோ? சொல்லுங்களென்று கேட்டார்கள். அதற்கு அஸ்ஹாபிமார்கள் நபிநாயகத் தைப்பார்த்து, எங்கள் நாயகமே, அழுக்குத் தங்காமற் போய்விடுமென்று சொன்னார்கள். அப்போது நபிநாயகம் அஸ்ஹாபிமார்களைப்பார்த்து ஆற்றிற் குளிப்பானுடைய

அழுக்குக் கழன்றது போலவே ஐந்து நேரத்துத் தொழுகையைத் தொழப் பட்டவனுடைய பாவத்தையும் அத்தொழுகையைக் கொண்டு அல்லாஹுத் தஆலா நீக்கிவிடு வானென்றுந் திருவுள மானார்கள்.

இன்னும் நபிநாயகம் யாதாமொரு அடியான் இரண்டு றக்கூஆத்துத் தொழுவானாகில் அவனைப்பார்த்து இலக்ஷம் மலக்குகள் ஆச்சரியப் படுவார்கள். அல்லாஹுத் தஆலா அவனைக்கொண்டும் இலக்ஷம் மலக்கு களுடனே பெருமைபேசுவானென்றும். இன்னும் நம்மளில் நின்றுமொருவன் எங்கே யிருந்தபோதிலும் ஐந்து நேரத்துத் தொழுகையின்பேரிற் பேணுதலாகத் தொழுவானாகில் அவனைக் கியாமத்து நாளையில் சொர்க்கம் புகுதுகிறதற்கு முந்தின கூட்டத்தோடும் ஸிறாத்தல் முஸ்தகீம் பாலத்திலே மின்வெட்டி மறைந்தது போலேநடந்து கடத்திடுவானென்றும், அந்த கியாம நாளையிலே அவனுடைய முகமானது நிறைந்த பூரணச்சந்திரனைப் போலாகி விடுமென்றும், இன்னும் அவனை மலக்குகள் இரவும் பகலுமாகக் காத்துக் கொண்டிருப்பார் களென்றும், அவனுக்கும் ஷஹீதானவர்களுடைய தறஜா நன்மை கிடைக்கு மென்றுந் திருவுள மானார்கள்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள். யாதாமொரு மூமினான அடியான்தொழ உலூச்செய்வானாகில் அவன் கண்ணாலே பார்த்தபாவம், முகங்கழுவுகிற தண்ணீருடனே வெளியாகிப் போய் விடும், இரண்டு கைகளையும் கழுவுவானாகில் அக்கைகளினாற் றொட்ட பாவங்களெல்லாம் தண்ணீருடனே வெளிப்பட்டிடும். இரண்டு கால்களையும் கழுவுவானாகில் அந்தக் கால்களினால் நடந்துசெய்த பாவங்களெல்லாம் தண்ணீருடனே வெளிப்பட்டிடும். இவ் விதத்தில் அவன் பாவங்களைவிட்டுந் துப்புறவாகுவானென்றும் இந்தப்படிக்கு இறஷாது முதலிய கித்தாபுகளிற் சொல்லி வருகின்றன.

இன்னும் நபிநாயகம் யாதாமொரு அடியான் தொழுகிற தற்காக எழுந்து நின்று அல்லாஹு அக்பர் என்று தக்பீர் கட்டு வானாகில், அவன் தன்னுடைய பாவங்களை விட்டும் நீங்கி அன்று பிறந்த பாலகனைப்போலே புறப்படுவான், பின்பு அவன் அஊது பில்லாஹி மினஷ்ஷைத் தானிர்றஜீம் என்று ஓதுவானாகில், அவனுடைய தேகத்திலிருக்கிற உரோமம் எவ்வளவு தொகையா

யிருக்கிறதோ அவ்வளவு தொகை நன்மைகளை எழுதப்படும். பின்பு அவன் அல்ஹம்து சூறத்தை யோதுவானாகில் அவன் ஹஜ்ஜும் உம்ருவும் செய்தவனைப் போலாகிவிடுவான். பின்பு, அவன் றுக்கூவு செய்வானாகில் தன்னுடைய இடைக்குப் பொன்னைக்கொண்டும் சதக்கா செய்தவனைப்போலாகிவிடுவான். பின்பு அவன் சுபுஹான றப்பியல் அலீம் என்று ஓதினவனைப்போலாகிவிடுவான்.

பின்பு, அவன் சமியல்லா ஹுலிமன் ஹமிதா வென்று சொல்வானாகில் அல்லாஹுத் தஆலா அவனளவிலே கிருபைப் பார்வையைக்கொண்டும் பார்த்திடுவான். பின்பு அவன் சுஜூதிலே போவானாகில் அல்லாஹுத் தஆலா அவனுக்கு மனுடர் ஜின்களுடைய எண்ணமெவ்வளவோ அவ்வளவு நன்மையைக் கொடுத்திடுவான். பின்பு அவன் சுபுஹான றப்பியல் அஃலாவென்று சொல்வானாகில் அனேக அடிமைகளைவாங்கி யுரிமைவிட்டவனைப் போலாகிவிடுவான். பின்பு அவன் அத்தஹிய்யாத்து ஓதுவானாகில் அல்லாஹுத் தஆலா சபூறுச் செய்தவர்களுடைய கூலியை அவனுக்குக் கொடுப்பான். பின்பு அவன் சலாம் வாங்குவானாகில் எட்டுச் சொர்க்கலோகத்து வாயிலையும் அவனுக்குத் திறக்கப்படுமென்றும் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு முனீறுல் மஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் மூமின் முஸ்லிமாகிய இக்வான்களே, தொழுகையைத் தொழுகிற சிதேவிகளுக்கு இவ்விதமான தறஜா நன்மைகள் கிடைக்கிறதாயிருக்க, அப்படிப்பட்ட தொழுகையை விட்டு விட்டு இபுலிசுடைய மாயத்தி லகப்பட்டுத் திரிந்தால் மேற்சொன்ன தறஜா நன்மை எவ்விதங்கிடைக்கும். கைகண்டலாபத்தை விட்டு விட்டுக்காடுகளைச் சுற்றித்திரிகிறது புத்தியீனமல்லவா. இஃது தெளிவையுடைய உங்களுக்குத் தெரியுமல்லவா, அப்படித் தெரிந்த புத்தியினாலே யுற்றுணர்ந்து பார்த்துத் தொழுகையைவிடாமற்றொழுதுவந்தால் அல்லாஹுத் தஆலா நம்மனைவோருக்குங் கிருபை தஹமத்தச் செய்து சொர்க்கலோகத்திலே தாக்கலாக்கி வைப்பான். ஆமீன்.

ஹிக்காயத்து.

ஒருமனுடன், அழகான பெண்பிள்ளையை ஸினச்செய்ய அழைத்தான், அதை கேட்டு அந்தப் பெண்பிள்ளை இந்தச் செய்தியைத் தன் புருஷனிடத்திற் சொன்னாள். அப்போது

புருஷனானவன் பெண்சாதியைப்பார்த்து இனியவன் உன்னிடத்தில் வந்தால் நீயவனைப்பார்த்து ஓய் மனுடனே, நீ நாடுகிறாயே அந்த நாட்டத்தின்பேரில் நானுனக்கு வழிப்படுகிறதற்கு என் புருஷன் பின்னாலே நின்று நாற்பது நாளைக்குத் தொழுதுவாவென்று சொல்லென்று சொன்னார். அது கேட்டு, அப்பெண்ணானவள் அவனுவக் கழைத்தவன் மறுநாள் வந்தபோது புருஷன் சொன்ன பிரகாரம் சொன்னாள். அதுகேட்டவன் அந்தப்படி தொழுது வந்தான். பின்னர் பெண்பிள்ளை அவனை யழைத்தாள். அதற்கவர் நான் அல்லாஹுத் தஆலா அளவிலே (தௌப்பாச்) செய்து விட்டேன், ஆதலால் வரமாட்டேனென்று சொன்னார். இவ்விதந்தொழுகையாளி சொன்னதைப் பெண்பிள்ளை கேட்டுத் தன் புருஷனிடத்தில் சொன்னாள். அப்போது புருஷன் தொழுகையாகிறது கெட்ட செய்கைகளை விலக்கிவிடுமென்று அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபிலேசொல்லி யிருக்கிறது நிசமென்றும் சொன்னார். இப் படிக்கு றஸூஹத்தில் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஹிக்காயத்து.

ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களுடைய காலத்திலே ஒரு ஸாலிஹான பெண்பிள்ளை யிருந்தார்கள். அவர்கள் ஒருபோது மாவைக் குழைத்து ரொட்டிதட்டி நெருப்பெரிகிற அடுப்பில் வைத்திருக்கும் வறவோட்டிலே போட்டபோது, தொழுகைக்கு நேரமானதாலே தாமெழுந்து முசல்லாவிற்போய் நின்று தொழுவதற்க்குத் தக்பீர் கட்டிக்கொண்டார். அப்பேது ஷைத்தானாகிறவன் ஒரு பெண் பிள்ளையுடைய ரூபத்திலாகி அந்த அம்மாளைப்பார்த்து அடுப்பில் வறவோட்டிற் கிடக்கிற ரொட்டி கரிந்து போகிறதேயென்று சொன்னான். அதற்கந்த அம்மாள் திரும்பிபார்க்காமற்றொழுகையின் பேரிலேயிருந்தார்கள்.

அதுகண்டு ஷைத்தான், அந்த அம்மாளுடைய குழந்தைப் பிள்ளையைத் தூக்கிக்கொண்டு எரிகிற அடுப்பிலெறிந்துவிட்டு அம்மாளைப்பார்த்து உன்குழந்தை அடுப்பில் விழுந்து விட்டது பாரென்றான். அதற்கும் அந்த அம்மாள் திரும்பிப்பார்க்காமற் றொழுகையின் பேரிலேயே ஓரே யாதாக இருந்தார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா நெருப்பை யந்தப் பிள்ளைக்குச் செவந்த

அக்கிக்குக் கல்லாக்கி வைத்தான். இவ்விதமிருக்கவே அந்த அம்மாளுடைய புருஷன் வெளியிலிருந்துவந்து வீட்டுக்குட்புகுந்து பார்க்கும்போது அங்கே பெண்சாதி தொழுது கொண்டிருக்கவும், அடுப்பிலே தன்னுடைய குழந்தை சிவந்த அக்கிக்கல்லுடனே விளையாடிக்கொண்டு கிடக்கவுங்கண்டு, உடனே பிள்ளையை யெடுத்து விட்டு ஈசா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து தான் வீட்டிற் கண்ட காரணங்களைச்சொன்னார்.

இதுகேட்டு ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்த மனுடனைப் பார்த்து ஓய் மனுடனே, நீர்வீட்டிற் கண்டுவந்து சொன்ன காரியத்தை உமது பெண்சாதியிடத்திற் கேளுமென்று சொன்னார்கள். உடனே அந்தமனுடன் வீட்டுக்குவந்து தொழுது முடிந்திருக்கிற தன் பெண்சாதியைப்பார்த்து, உம்மாலே நடந்திருக்கிற ரகசியங்களென்ன வென்று கேட்டார். அதற்குப் பெண்சாதி புருஷனைப்பார்த்து நானுமக்கு வாழ்க்கைப்பட்ட நாட்தொடுத்து மூன்று காரியங்களைப் பேணி நடந்துவருகிறேன். அதில் ஒன்றாவது துனியாவுடைய கருமமும், ஆகிறத்துடைய கருமமும் ஓரே நேரத்திற் செய்யும்படியாக வந்து சம்பவித்துக்கொண்டால், அப்போது நான் முதலிலே ஆகிறத்துடைய கருமத்தைத் தொடங்கி முடித்துப்போட்டுப் பின்னர் துனியாவினுடைய கருமத்தைப் பார்ப்பேன். இரண்டாவது எப்போதும் உலூவின்பேரிலேயே யிருப்பேன். மூன்றாவது இணையின்றிக் கலப்பறுதலான அல்லாஹுத் தஆலாவை வணங்குவேனென்று சொன்னார்கள்.

இவ்விதம் பெண்ஜாதி சொல்லக்கேட்டுப் புருஷனானவர் உடனே ஈசா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து பெண்சாதி சொன்னதைச் சொன்னார். அதுகேட்டு ஈசா அலைஹிஸ்ஸலா மவர்கள் அந்த மனுடனைப்பார்த்து, உமது பெண்சாதி அல்லாஹுத் தஆலாவுக்கு உவந்த ஸாலிஹானவராய்த் தொழுகையைப் பேணிப் பூணிப்பாகத் தொழுதுவருகிறபடியினாலே தான் அடுப்பிலே உங்கள் பிள்ளையைக் காக்கப்பட்டதென்று சொன்னார்கள். இந்தப்படிக்கு நஸூஹத்து முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால் மூமினான உடற்பிறப்புகளே, அந்தச் சிதேவித்தனமான அம்மாள் ஓர்மைத்தனமான ஈமானிலேபாட்டினால் ஷைத்தானுடைய கலவிதத்திலாகாமல் அல்லாஹுத் தஆலாவைப் பயந்து

தொழுது வந்தபடியினாலே, அவர்கள் பிள்ளையும் நெருப்பினாலே வேகாமல், ரொட்டியுங்கரிந்து போகாமற் றொழுகைக்காத்துக் கொண்டது. இந்த ஹிக்காயத்தை நீங்களும் உங்கள் தெளிவான யுத்தியினாலே யுணர்ந்து பார்த்துத் தொழுகையைவிடாமற் றொழுது வந்தால் அல்லாஹுத் தஆலா அப்பேர்பட்ட தங்கடங்களைக் காத்து றஹ்மத்துச் செய்வான். ஆமீன்.

ஹிக்காயத்து.

ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரு ஆற்றங்கரை யோரமாக நடந்து போகும்போது ஓளிவினாலாகிய ஒரு பட்சி கழிமண்ணிலே அமிழ்ந்து கிடந்து பின்னர் கழிமண்ணைவிட்டும் எழுந்து அந்த ஆற்றிலே குளித்து முன்னர் தானிருந்த அழகிய கோலமாகி மீளும். இவ்விதம் அந்தப் பட்சி ஐந்துதடவை செய்ததை ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் கண்டு ஆச்சரியமானார்கள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஈசா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்திலேவந்து அவர்களைப் பார்த்து, ஓ ஈசாவே, இந்தப்பட்சியை நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் உம்மத்தில் நின்றும் ஒருவன் தொழுகிற ஐந்தொகுத்துத் தொழுகைக்கு அல்லாஹுத் தஆலா உவமான மாக்கினான். ஆதலால் பட்சி மனுடனைப்போலும், கழிமண் பாவத்தைப்போலும், குளிப்பது தொழுகையைப்போலு மிருக்குமென்று சொன்னார்கள். இந்தப்படிக்கு நுஸ்ஹத்தில் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றன.

தன்பீஹுல் காபிலீன் என்னுங் கித்தாபிலேசொல்லியிருக்கிறது யாதெனில், அல்லாஹுத் தஆலா ஏழு வானத்தையும் படைத்தபோது அவைகளை மலக்குகளால் நிரப்பி அவர்களை ஓயாமற்றொழுகையைக்கொண்டுந் தன்னை வணங்கும்படியேவினான். அப்போது அந்த மலக்குகளிலே சிலர் சுஜூது செய்கிறவர்களாகவும், சிலர் நிற்கிறவர்களாகவும் அல்லாஹுத் தஆலாவுடைய பயத்தினாலே தங்களுக்குள்ள இறகுகளைச் சோரப்பட்டவர்களாகவும் இல்லியூன்களும், அதுலைநயுடையவர்களும், அதுலைநச் சுற்றித் தவாபு செய்கிறவர்களுமாய்த் தரிபட்டுப் பூமியையுடையவர்களுக்குப் பிழை பொறுக்கத் தேடுகிறவர்களாக யிருப்பார்கள்.

இவ்விதம் அந்த மலக்குகள் செய்கிற இபாதத்துடைய வரிசையை மூமினானபேர்கள் சங்கைக்காக ஒரு வகுத்துத் தொழுகையிலே அல்லாஹுத்தஆலா சேகரமாக்கி வைத்திருக்கிறான். இதுபோக மூமினானவர்களுக்குத் தொழுகையில் ரூகூ ஆனேது கிறதை அதிகமாக்கி வைத்திருக்கிறான், இந்த நிஃமத்துகளுக்கு ஷுக்கூறாகத் தொழுகையுடைய பர்லு ஷுறுத்துகளைப்பேணித் தொழும்படிக்குச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஹிக்காயத்து.

முற்காலத்திலே இபுலீசைக் காணக்கூடியதாக யிருக்கும். அப்படியிருக்கும்போது ஒரு மனுடன் இபுலீசைக்கண்டு அபா மூர்றத்தே நானுன்னைப்போலே ஆகவேண்டுமென்று சொன்னார். அதுகேட்டு இபுலீசு அந்த மனுடனைப்பார்த்து உனக்குப்பிடித்த கேடென்ன, இப்படிக்கு என்னில் நின்றும் ஒருவரும் தேடவில்லையே நீ யேன்தேடுகிறா யென்றான். அதற்கவர் இபுலீசைப்பார்த்து எனக்கது பிரியமாயிருக்கிறதென்று சொன்னார். அதற்கு இபுலீசு அந்த மனுடனைப் பார்த்து ஓய் மனுடனே, நீ யென்னைப்போலே இருக்க வேண்டுமென்றால் தொழுகையைக் கொண்டும் பொடும் போக்காயிரு, இன்னும் பொய்ச்சத்திய மெய்ச்சத்தியமென்னும் பாராட்டாமல் வந்தபடிக்கெல்லாம் சத்தியஞ் செய்யென்று சொன்னான்.

அதுகேட்டு அந்த மனுடன் இபுலீசைப்பார்த்து நானின்று முதல் ஒருகாலமும் தொழுகையை விடுகிறது மில்லை பொய்ச் சத்தியஞ் செய்கிறதுமில்லை, இந்தப்படிக்கு நான் அல்லாஹுத் தஆலாவுக்கு அறுதிமானஞ் செய்துக் கொண்டே னென்று சொன்னார். அதுகேட்டு இபுலீசு அந்த மனுடனைப்பார்த்து, அடே குபடக்காரா! வுன்னைத்தவிர ஒருவரும் என்னிடத்தில் மாருட்டமாக அறிவைப் படித்துக்கொள்ள வில்லை. ஆகிலும் இன்றையதினம் நான் உன்கையில் அகப்பட்டுக்கொண்டேன். ஆகையால் இன்று முதல் ஒருவருக்கும் நசீஹத்துச்செய்கிறதில்லை யென்று அறுதி மானஞ் செய்து கொண்டேனென்று சொன்னதாகச் சமர்கந்தி றஹ்மதுல்லா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆதலால் மூமின் முஸ்லிமாகிய விசுவாசமுள்ள உடற்பிறந்தான் மார்களே, உங்களுடைய அறிவுக்கண்களாலே பார்த்துச் சண்டாள

சதிக்கார மோசக்கார பாதகதுரோகி இபுலீசுடைய மாயவலைக் கண்ணியில் அகப்படாமலும், ஐந்துவேளைத் தொழுகையை விடாமலும், பேணுதலாகத் தொழுதுவருவீர்களாக. ஆமீன் சகல படைப்புகளையும் படைத்து அன்னம்முதலானவைகள் அதது தாரதரப்படிக்குக் கொடுத்து இரட்சித்துக் காக்கின்ற வல்லமையுடைய அல்லாஹுத் தஆலா தானிறக்கிய நமது புறுக்கான் வேதத்திலே தொழுகையைப்பற்றி 330-ஆயத்துகள் வெட்டவெளிச்சமாக அனுப்பியிருக்கிறான்.

அவைதாவது தொழுது கொள்ளுங்கள், தொழுதுகொள்ளுங்களென்று மடக்கிமடக்கிச் சொல்லியிருக்கிறான். அப்படியிருக்க நாம் அந்தச் சொல்லின் பிரகாரம் நடக்காமல் விட்டுவிடுகிறோம். ஆனால் பாருங்கள் அல்லாஹுத் தஆலா படைத்த மனுடர்களில் நின்றும் ஒரு அதிகாரி தெருக்களிலே யாதாமொரு குப்பை செத்தைகள் கிடைக்கக்கூடாதென்றும், போடக்கூடாதென்றும், துப்புரவாகவைக்க வேண்டுமென்றுந் தாக்கீது அனுப்பிவைத்தால் அதற்காக எவ்வளவு சீக்கிரத்தில் நாமுஞ்செய்து நம்முடைய அப்துகளையுஞ் செய்யும்படி யேவுகிறோம்.

அப்படியிருக்க அதிகாரிகட்கெல்லாம் அதிகாரியான அல்லாஹுத் தஆலா அனுப்பிய ஆயத்தின்படிக்கு நடக்காமற்போனால் கியாமத்து நாளையிலே எந்த முகங்கொண்டு அல்லாஹுத் தஆலாவைச் சந்திக்கிறது, என்ன ஜவாபுசொல்லுகிறது, இன்னும் அல்லாஹுத் தஆலா படைத்த மனுடரில் நின்று மொருவன் தன்னுடைய காரியத்திற்காக ஒருவனை சேவித்திருந்தால் அவன் எவ்வளவு பயபக்கரத்துடனே ஆஜருய் அந்த எஜமானன் சொன்னவைகளிற் குறைவுகுற்றம் வந்தால் நம்மைத் தள்ளிப்போடுவானேயென்று சுறுசுறுப்பாய் நடப்பான்.

அப்படியிருக்க நம்மைப் படைத்து உறுப்புகளில் யாதாமொரு குறைவுகுற்றமில்லாமற் தாய்வயிற்றில் பத்துமாதமுங் காப்பாற்றிப் பிறப்பித்து அமுதன்னஞ்செய்து வாயிற் பேச்சைக் கொடுத்து, கண்ணிற் பார்வையைக் கொடுத்து, காலில் நடையைக்கொடுத்து உண்ண அன்னங்கொடுத்து, உடுக்க துணியுங்கொடுத்து, நயமிடர் இன்னதென்று பகுத்தறியும் அறிவைக்கொடுத்து, மற்றச் சுகங்களுங்கொடுத்து, ஆதரித்து ஆளுகின்ற எஜமானாகிய அல்லாஹுத்

தஆலா நாளொன்றுக்கு ஐந்துநேரந் தொழும்படியாய் நேமித்த அந்த ஐந்துநேரத்துக்கும் ஆஜறாய்ப்போய்த் தொழவேண்டுமென்று பயங்கரமில்லாமல் இபுலீசுடைய மாயையிலகப்பட்டுத் தொழுகையைப் பொடு போக்காக விட்டு விட்டால் எவ்விதம் பாயிதாக் கிடைக்கும். அப்படித்தொழுகையைப் பொடுபோக்காக விட்டு விடாமல் அல்லாஹுத் தஆலாவைத் தொழுது வந்தால் மிகுந்த பாயிதாக்களைப் பெற்றுக்கொள்ளலாம். ஆமீன்.

மதனவி ஷரீபென்னுங் கித்தாபில் மவுலானாறூமி ஜலாலுத்தீன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் யாதெனில், சந்தனக்கட்டைக்கு வாசனையிருக்கிறதுபோலே மனுடனுக்கு மனுடத்தன்மைவேண்டும். அந்தச் சந்தனக்கட்டைக்கு வாசனை யிருப்பதினாலே மேலாம் பரமான இடங்களிலெல்லா மெவர்களும் உவப்பாகக் கொள்ளுகிறார்கள். அதுபோலே மனுடனில் நல்ல ஸாலிஹான அமலென்கிற வாசமிருந்தால் யாவர்களாலும் மேன்மையும் புகழுங் கீர்த்தியு முண்டாகி அல்லாஹுத் தஆலா இடத்திலும் அவனுடைய றசூலான நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களிடத்திலும் உவப்புண்டாகிச் சொர்க்கத்திலும் போய்ச் சேருவான்.

கட்டையில் வாசனை யில்லாதிருக்கில் சந்தனக்கட்டை யென்றபேருமில்லாமல் அடுப்பிலே போட்டெரிக்கிறவிறகாகும். அதுபோல இன்சானென்கிற கட்டையில் இபாதத்தென்கிற வாசனை யில்லாமற்போனால் எரிநாருக்கு இரையாகிப்போவான். இவ்விதமாகாமல் அல்லாஹுத் தஆலா நம்மனைவோரையும் வாசனையாகிய நல்ல அமலிலே பூணிப்பாகும்படிசெய்து சொர்க்கலோகத்தில் தாக்கலாக்கிவைப்பான். ஆமீன்.

கன்ஸுத் தகாயிக்கு பத்தாவி ஆலம்கீரி முதலான கித்தாபு களிற் சொல்லிவருகிறது, யாதெனில் பகையில் நின்றும் பயங்கரங் கடிசானாகில் இமாமானவர் கௌமுகளை இரண்டு கூட்டமாகப் பிரித்து அதில் ஒரு கூட்டத்தைத பகைஞருக்கு முன்பாக நிறுத்தி வைத்துவிட்டு மற்றொரு கூட்டத்தை தொழுவிப்பார்கள். அதிலே நான்கு றக்குஆத்தான தொழுகையாயிருந்தால், ஒரு கூட்டம் இமாமுடனே இரண்டு றக்குஆத்துத் தொழுதுவிட்டுப் பகைஞர்கட்கு முன்பாகப் போய் நின்று கொள்வார்கள். மற்ற ஒரு கூட்டத்தார் மற்ற இரண்டு றக்குஆத்தையும் இமாமுடனே சேர்ந்து தொழுது முடித்து இமாம் சலாங்கொடுத்தவுடனே

பகைஞர் முன்பாக வருவார்கள். அப்போது முதலாவது இமாமுடனின்று இரண்டு றக்அத்துத் தொழுக கூட்டத்தாருடைய பாக்கி யிரண்டு றக்அத்தையுந் தனித்துத்தொழுது முடிப்பார்கள். அதுபோலவே இரண்டாவது இமாமுடன் இரண்டு றக்குஅத்துத் தொழுத கூட்டத்தாருடைய பாக்கித் தொழுகையைத் தனித்துத் தொழுது முடிப்பார்கள். இதிலே பகைஞர்கள் மிகைத்துக் கொள்வார்களென்று பயங்காம் கடிசாயிருந்தால் அவரவரேறியிருக்கிற வாகனங்களின்பேரிலே எந்தத் திசையில்நின்றாலுந் தனித்தனியே சயிக்கினையினாலே தொழுது கொள்வார்கள்.

ஆதலால் மூமின் முஸ்லிமாகிய இகுவான்களே, இவ்விதம் கடுமையான படைநடக்குகிற இக்கட்டாகிய நேரத்திலும் தொழுகையை நேரந்தப்பித் தொழக்கூடாதென்று ஷறகிலே வந்திருக்க, இக்காலத்திற்சில புண்ணியவான்கள் யாதாமொரு தங்கடம் நெருக்கமில்லாமல் இறுஹத்தாக இருக்கச்சே தொழுகையைத் தொழாமல் விட்டுவிட்டுத் தங்கள் தங்கள் மனம்போன போக்காகத் துனியாவின் ஹாலின்பேரில் விருப்பமாகி இபுலீசுடைய மாயாவினோத மயக்கத்தி லகப்பட்டுக்கொண்டு திரிந்து வீணாட்கழித்தால் எவ்விதமாகும். அஷ்றுபானவர்களே, உங்களுடைய தெளிவான கூர்மையானபுத்தி அக்லிலே யோசித்துப்பார்த்து அல்லா றசூலுடைய சொல்லைப் பேணித் தொழுகையின் பேரிற் பூணிப்பாகத் தொழுது நன்மைகளைக் கொள்ளையடித்துக் கொள்ளுங்கள்.

யாதாமொரு பெண்பிள்ளையானவள் கெர்ப்பஸ்திரீயாயிருந்து, அவள் பேறுகாலஞ் சமீபித்துப் பிரசவிக்குபோது கொஞ்சம் பிள்ளை வெளிதோன்றி யிருக்கச்சே தொழுகையின் வகுத்துவந்து நேரிட்டு அந்நேரந் தப்புகிறதை பயந்தாளாகில் உலூச்செய்யத் திராணியிருந்தால் உலூச்செய்வாள். அதற்குத் திராணியில்லாதிருந்தால் தயம்மும் செய்து பிள்ளையை கோவியாமலிருந்து றுக்கூவு சுஜூதுடனே தொழுவாள். அப்படித்தொழ ஏலாமற் போனால் தலையினாலே சயிக்கினை செய்து தொழுவாள். இவ்விதமிருந்துந் தொழுகையைப் பிற்படுத்த மாட்டாள். அப்படித் தொழாமல் விட்டுவிட்டாள் அல்லாஹுத் தஆலாவுக்குப் பாவியாவாள். இதிலே பிள்ளைக்கு யாதேனுமோர் அபாயம் வருமென்று பயந்தோற்றினால் மாத்திரம் தொழுகையைப் பிற்படுத்தி வைக்கிற

தாகும். இந்தப்படிக்கு பத்தாவி, ஆலங்கிரி, துர்றுல் முகுத்தாற், முனியத்துல், முஸல்லி முதலான கித்தாபுகளில் வருகின்றது.

ஆதலால் மூமின் முஸ்லிமான எமதுடப்பிறந்தான்மார்களே, இவ்விதம் பிள்ளைபேறு நெருக்கடியான காலத்திலும் தொழுகையை சோர்ந்தப்பித் தொழக்கூடாதென்று ஷறகிலே வந்திருக்கிறதே, அப்படியிருக்க யாதாமொரு சோவினையு மில்லாமலிருப்பவர்கள் தொழுகையை விட்டுவிட்டுத் துனியாவுக்குத் தொண்டூழியஞ் செய்து வீண்பொழுது போக்கிவிட்டால், எந்த முகங்கொண்டு அல்லாஹுத்தஆலாவைச் சந்திப்பீர்கள். எவ்விதம் ஜவாபு சொல்வீர்கள். இதை நன்றாக யோசித்துப் பார்த்து நீங்களும் தொழுது கொண்டு உங்களுடைய பெண்சாதி பிள்ளைகள் முதலான பந்துக்களையும் தொழுதுவரும்படி தெண்டித்துவந்தால் மட்டிலடங்காத நன்மையும் தறஜாவும்பெற்றுச் சொர்க்கலோகத்திலும் புகுதும்படி தொழுகை கொண்டுபோய்விடும். அப்படியே அல்லாஹுத் தஆலா உதவிசெய்வான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தொழுகையுடைய வரிசையின் பயான்
முற்றிற்று.

தொழுகையை விட்டவர்கட்குக் கிடைக்கிற வேதனையின் பயான்.

ஹதீது.

அல்லாஹுத் தஆலாவுடைய ஹபீபான நமது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவாக்கினாலே யாதாமொருவன் தொழுகையை விடுவானாகில் அவன் அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்தை விட்டும் புறத்திப் பட்டவனாவானென்றும், இன்னும் அவனைவிட்டும் நான் நீங்கிடுவேனென்றுந் திருவுளமானார்கள்.

அனசிபுனு மாலிக்கு றலியல்லாஹு அன்ஹுவர்கள் சொல்லியிருக்கிறார்கள், யாதெனில் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய அருமையான மேலாம்பரமான துப்புரவான தெளிவான றாஹு நெஞ்சப் பரப்பிலிருக்கும் போது சூழயிருந்த அஸ்ஹாபிமார்களைச் சுட்டி நானுங்களுக்குத்

தொழுகையைக் கொண்டும் வசிய்யத்துச் செய்தேனென்று மூச் சடங்கி யிருக்கிறமட்டிலும் சொல்லிக் கொண்டே யிருந்தார்க ளென்று சொன்னார்கள்.

ஆதலால், மூமினான உத்தமர்களே, எனது சகோதரர்களே, இரு லோகத்திற்கும் நாயகமான முஹம்மது ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லமவர்கள் உபாத்துடைய ஹாலிலே தங்களும்மத் தோர்கள் பரிசுத்தமாக வேண்டுமென்ற ஆசையாய்த் தொழுகை யைத் தொழுங்களென்று சொல்லுஞ் சொல்லோடு மூச்சடங்கி யிருக்குமானால், தொழுகை யெட்பேர்ப்பட்ட சிறப்பான வரிசை யான நஹ்மத்தானதா யிருக்கிறதென்பதை யுங்களுடைய நற் புத்தியினாலேயே தெரிந்துக் கொண்டு நாளொன்றிற்கு ஐந்து வகுத்துத் தொழுகையைத் தப்பாமற்றொழுது அல்லாஹுத் தஆலாவுடைய அருளையும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய விருப்பத்தையும் பெற்றுக் கொள்வீர் களாக. ஆமீன்.

ஸவாஜி ரென்னும் கித்தாபில், இபுனுஹஜர் றஹிமஹுல் லாஹு அலைஹி சொல்லுகிறார்கள், யாதெனில், யாதாமொருவன் தொழுகையின் பேரிலே பொடும் போக்கா யிருப்பானாகில், அவனை அல்லாஹுத் தஆலா பதினைந்து கருமத்தைக் கொண்டும் வேதனை செய்வான். அதில் ஆறுகருமம் துனியாவிலும் மூன்று கருமம் மவுத்துடைய நேரத்திலும், மூன்று கருமம் கபுறிலும், மூன்று கருமம் கபுறை விட்டுப் புறப்படும் போதுமாயிருக்கும். இதிலே துனியாவில் நடக்கிற கருமத்தில் 1-வது அவனுடைய ஆயிசன்ன பறக்கத்தையும் பிடுங்கப்படும். 2-வது அவனுடைய முகத்திலே ஸாலிஹீன் களுக்குள்ள லட்சணத்தை யழிக்கப்படும். 3-வது அவன் செய்யும் அமல்களுக்கு அல்லாஹுத் தஆலா கூலி கொடுக் க மாட்டான். 4-வது அவனுடைய துஆவை வானத்தளவில் உயர்த்தப்பட மாட்டாது. 5-வது அவனுக்கு ஸாலிஹீன்கள் கேட்குந் துஆவிலே பேறில்லை. 6-வது அவனுடைய ரிஸ்க்கில் நின்றும் பறக்கத்தை யுயர்த்தப் பட்டுப்போகும்.

இனி மவுத்தில் நடக்கிற கருமமூன்றில் 1-வது அவன் தாழ்மைப் பட்டவனாக மவுத்தாகுவான். 2-வது அவன் பசித்த வனாக மவுத்தாகுவான். 3-வது தாகமுடையவனாக மவுத்தாகுவான். இன்னும் அவனுக்குத் துனியாவிலுள்ள கடல்களின் தண்ணீரை

யெல்லாங் குடிப்பாட்டினலும், அவனுடைய தாகம் எப்போதுந் தீரமாட்டாது.

இனி கபுறில் நடக்கிற கருமமூன்றில் 1-வது அவனுடைய விலா எலும்பானது பிதுங்குமட்டிலும் கபுறு அவனை நெருக்கும். 2-வது அவனுடைய கபுறை அக்கினியினலே எரிக்கப்படும். அதனல் அவன் இரவும் பகலும் நெருப்புக் கங்குகளின் மேரிலே பிரண்டுருண்டு கொண்டு கிடப்பான். 3-வது அவன் கபுறிலே சுஜாவுல் அக்குறஃ என்னும் பாம்பானதை சாட்டப்படும். அந்தப் பாம்புடைய இரண்டு கண்கள் நெருப்பினலும், நகங்கள் இரும்பினலு முண்டாயிருக்கும். அந்த நகத்தினுடைய நீளம் ஒருநாள் பயணத்தூரம் வரைக்கும் நீண்டதா யிருக்கும். இவ் விதமான அந்தப் பாம்பானது அந்த மையித்தானவனுடனே கோலடையிடி யிடிப்பது போலே சத்தமிட்டுப் பேசுகிறதாவது யாதெனில், ஓய் மையித்தே, நானுகிறது சுஜாவுல் அக்குறஃ என்னும் பெயருடைய பாம்பாயிருக்கும். நீ துன்யாவிலிருக்கும் போது பொழுது கிளம்புகிற மட்டிலுந் தொழுகாம லிருந்து சுபுஹைக் கலாவாக்கினதினலே அல்லாஹுத் தஆலா உன்னைக் கொத்தும்படி என்னை யேவினு னென்று சொல்லும்.

இன்னும் அந்தப் பாம்பானது அவனைப் பார்த்து ஓய் மையித்தே நீ அசறுவகுத்து வருமளவும் லுஹறைக் கலாவாக்கின தினலும், மக்ரிபுவகுத்து வருமளவும் அஸறைக் கலாவாக்கின தினலும், இஷாவகுத்து வருமளவும் மக்ரிபைக் கலாவாக்கின தினலும், சுபுஹுவகுத்து வருமளவும் இஷாவைக் கலாவாக்கின தினலும், உன்னைக் கொத்தும்படிக்கு அல்லாஹுத் தஆலா என்னை யேவினு னென்று அவனைக் கொத்திக் கொண்டே யிருக்கும். இவ்விதம் அவனைப் பாம்பானது ஒவ்வொரு கொத்துக் கொத்தும் போதெல்லாம், அவன் பூமியில் எழுபதுமுழம் அமிழ்ந்துவிடுவான். இந்தப்படிக்கு அவன் கியாமநாள் வருமளவும் கபுறில் அதாபுப் பட்டுக்கொண்டே யிருப்பான்.

இனியவன் கபுறைவிட்டுப் புறப்பட்டு கியாமநாளில் மைதான வெளியி லாகும்போது, அவனுக்குள்ள கரும மூன்றில் 1-வது கேள்வி கணக்குக் கொடூரமாகக் கேட்கப் படுவான். 2-வது அல்லாஹுத் தஆலாவுடைய கோப முண்டாக்குவான். 3-வது

நரகம் புகுவான் ஆக இப்பதினைந்து கருமமும் தாரிக்குஸ்ஸலாத்துகளுக்குக் கிடைக்கிறதாக யிருக்கும்.

இன்னும் ஒரு ரிவாயத்தின்படி அவனுடைய நெற்றியிலே மூன்று வரி எழுதப்பட்டவனாகக் கபுறைவிட்டும் புறப்பட்டுக் கியாமத்து மைதான வெளியில் வருவான். அவனுடைய நெற்றியிலெழுதப்பட்ட வரி மூன்றில் 1-வது அல்லாஹுத் தஆலாவுடைய ஹக்கைப் பழுதாக்கினவனென்றும், 2-வது அல்லாஹுத் தஆலாவுடைய கோபத்தைக் கொண்டும் தனதானவனென்றும், 3-வது நீ துனியாவிலிருக்கும் போது அல்லாஹுத் தஆலாவுடைய ஹக்கைப் பழுதாக்கினதுபோலே இப்போதும் நீ அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்தை விட்டும் நற் செயல் கெட்டவனாக யிருக்குமென்றும் இவ்விதம் மூன்று வரி எழுதப்பட்டிருக்கும்.

ஹிக்காயத்து.

இறுஷாதுல் இபாதென்னும் கித்தாபில் எழுதப்பட்டிருக்கிறது யாதெனில், திடனாக ஜஹன்னமென்னும் நரகத்தில் ஒரு ஓடையுண்டும். அதற்கு லம்லம் என்று பெயர் சொல்லப்படும். அந்த ஓடையிலே அநேகம் பாம்புகளுண்டா யிருக்கிறது. அந்தப் பாம்புகளில் நின்றும் ஒவ்வொன்றையும் ஒவ்வோர் ஒட்டகத்தின் கழுத்திற் போட்டால் அவ்வொட்டகையினுடைய கழுத்தைக் கனமாக்கி வைத்திடும். மேலும் அந்தப் பாம்புகளுடைய நீளமாகிறது ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் மாதத்தொலை தூரமாக இருக்கும். இவ்விதமான பாம்புகளாகிறது தொழுகையை விட்டவர்களைக் கொத்தும். அப்படிக் கொத்தும் போது அவைகளுடைய நஞ்சு அவனுடைய சரீரத்தில் எழுபது வருஷக்காலம் கொதிக்கும். அதிலே அவனுடைய சதை யுதிர்ந்துபோகுமென்று ரிவாயத்துச் செய்யப்படுகின்றது.

ஹிக்காயத்து.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானதாக ஆறுபகீன் என்னுங் கித்தாபிற் சொல்லியிருக்கிறது யாதெனில் ஜஹன்னமென்கிற நரகத்திலே ஒரு வோடையிருக்கிறது. அந்த வோடையைவிட்டும் எங்களைக் காத்துக்கொள் என்று நாளொன்றுக்கு எழுபதினாயிரந் தரம் நரகத்தை யுடையவர்கள் காவற்றேடுகிறார்கள். அந்த வோடையிலே நெருப்பினாலே ஒரு வீடு இருக்கிறது. அந்த வீட்டிலே

நெருப்பினாலே ஓர் கிணறுண்டாயிருக்கிறது. அந்தக் கிணற்றிலே நெருப்பினாலே ஓர் பெட்டகமுண்டா யிருக்கிறது. அந்தப் பெட்டகத்திலே நெருப்பினாலே ஓர் பாம்புண்டா யிருக்கிறது. அந்தப் பாம்புக்கு ஆயிரந் தலையுண்டா யிருக்கிறது: அந்தத் தலைகளி லொவ்வோர் தலைக்கு ஆயிரம் முகமுண்டா யிருக்கிறது. அந்த முகங்களில் ஒவ்வோர் முகத்திற்கு ஆயிரம் வாயுண்டா யிருக்கிறது. அந்த வாய்களில் ஒவ்வோர் வாய்க்குப் பதினாயிரம் பல்லுண்டா யிருக்கிறது. அந்தப் பற்களில் ஒவ்வோர் பல்லின் நீளம் ஆயிரம் முழமுண்டா யிருக்கிறது.

இவ்விதம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொல்லக் கேட்டு அனஸிபுனு மாலிக்கென்பவர்கள் நபிநாயகத்தைப் பார்த்து அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே, அவ்விதமான அதாபுகள் யாருக்காக இருக்குமென்று கேட்டதற்கு நபிநாயகம் அனஸிபுனு மாலிக்கவர்களைப் பார்த்து அந்த அதாபானது தொழுகையை விட்டவனுக்குங் கள்சாராயங் குடிக்கிறவனுக்குமா யிருக்குமென்று திருவுளமானார்கள். ஆய் எமது பிரியமுள்ள மூமினாகிய உடற்பிறப்புகளே இதை நீங்கள் நன்றாகப் பார்த்து இபுலீசுடைய மாயத்தி லகப்படாமற் றொழுது கொள்வீர்களாக ஆமீன்.

ஹிக்காயத்து.

பனியிசுறயீல் கூட்டத்திலுள்ள ஒரு பெண்பிள்ளை மூசா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து அல்லாஹுத் தஆலாவுடைய நபியே, நானொரு பெரும் பாவம் செய்துபோட்டு அதைத் தொட்டும் நாயனளவிற் றிடனாகத் தௌபாச் செய்துவிட்டேன். அதைத் தொட்டும் நீங்களும் அல்லாஹுத் தஆலா இடத்திலே என் பிழையைப் பொறுக்கும்படிக்கு என் தௌபாவைக் கபூல் செய்யும்படிக்கு துஆக் கேளுங்களென்று சொன்னாள். அதுகேட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து ஆய் பெண்பிள்ளையே, நீ என்ன பாவஞ் செய்தா யென்று கேட்டார்கள். அதற்கவள் அல்லாஹுத் தஆலாவுடைய நபியே நான் ஸினாச்செய்து ஒரு பிள்ளையைப் பெற்று அந்தப் பிள்ளையைக் கொன்று போட்டேனென்று சொன்னாள்.

அது கேட்டு உடனே மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து, ஆய் கெட்டவளே, உன்னுடைய பாவத்தினாலே வானத்திலிருந்து நெருப்பிறங்கி எங்களைத் தீய்த்துக் கரித்துப்போடும். ஆதலால் நீ என் கண்ணெதிரே முழியாதே தூரப்போய் விடென்று துரத்திவிட்டார்கள். அது கேட்டுடனே யிந்தப் பெண்பிள்ளை மனவேதனைப் பட்டவளாக மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுடைய சமூகத்தைவிட்டும் புறப்பட்டாள். அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் வானத்தில் நின்றும் இறங்கி மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களிடத்தில் வந்து அவர்களைப் பார்த்து மூஸாவே, அல்லாஹுத் தஆலா உமக்குச் சலாஞ் சொல்லிச் சொல்லச் சொன்னதாவது யாதெனில்,

நீர் தௌபாச் செய்துவிட்டு உம்மிடத்தில் வந்து முறையிட்ட பெண்பிள்ளையை எது காரணத்தினாலே துரத்திவிட்டீர்? அந்தப் பிள்ளையைவிடக் கெட்டவனை நீர் காணவில்லையாவென்று அல்லாஹுத் தஆலா கேட்கச் சொன்னானென்றார்கள். அது கேட்டு மூஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து ஜிபுரீலே இந்தப் பெண்பிள்ளையைவிடக் கெட்டவன் யாராயிருக்குமென்று கேட்டதற்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாத்தைப் பார்த்து, அந்தப் பெண்பிள்ளையைப் பார்க்கிலும் கெட்டவனாகிறது தொழுகையை மனமுரண்டாக விட்டவனாக இருக்குமென்று சொன்னார்கள். இந்தப்படிக்கு இறுஷாதுல் இபாது முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆனதால், எனதன்புள்ள முஸ்லிமாகிய நேசர்களே, பிறவிகளே, நீங்கள் நல்ல தெளிவாக இதனைப்பார்த்து இபுலீசுடைய கோட்டையிலே மாட்டிக்கொண்டு மாட்டாங்கிகளைப் போலாகாமல் அல்லாஹுத் தஆலாவைப் பயந்து தொழுது கொள்வீர்களாக. ஆமீன்.

ஹிக்காயத்து.

பஹ்ஜத்தில் அன்வாறென்னும் கித்தாபில் வருகின்றது யாதெனில் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒரு நாள் பள்ளிவாசலிலே தங்களுடைய அசுஹாபிமார்களுடனே இருக்கும்போது அறபிகளில் நின்றுமுள்ள ஒரு வாலிபன் அழுதுகொண்டு வந்தான். அவனைப்பார்த்து நபிநாயகம் ஓய் வாலிபனே, உன்னை யேதுகாரண மழுகையாக்கி வைத்ததென்று

கேட்டார்கள். அதற்கு அந்த வாலிபன் நபிநாயகத்தைப்பார்த்து, அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே, என்னுடைய தகப்பன் இறந்துபோயினர். அவர் மையித்தைக் குளிப்பாட்டவும், கபனிடவும் ஒருவரும் வரமாட்டேனென்று சொல்லுகிறார்களென்று சொன்னான்.

அது கேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களையும், உமறுபாறூக்கு றலியல்லாஹு அன்ஹு அவர்களையும் பார்த்து நீங்கள் இரண்டு பேர்களும் போய் அந்த மையித்தைப் பார்த்து வாருங்களென்று சொன்னார்கள். உடனே இரண்டு பேர்களும் போய், அந்த மையித்தைப் பார்க்கும்போது அந்த மையித்தாகிறது, கறுத்த கின்ஸீறைப்போலே யிருப்பதைக் கண்டு சரேலென்று திரும்பி நபிநாயகத் திடமாகவந்து அவர்களைப் பார்த்து, அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே, எங்கள் நாயகமே அந்த மையித்தாகிறது கறுத்த கின்ஸீறுடைய வடிவாக யிருக்க கண்டோமென்று சொன்னார்கள்.

இது கேட்டு நபிநாயகமவர்கள் எழுந்தருளியாகி அந்த மையித்துடைய அருகாமையாகப்போய் நின்றுகொண்டு துஆச் செய்தார்கள். உடனே அந்த மையித்து முன்னிருந்த ரூபத்தைப் போலே ஆகிவிட்டது. அப்போது நபிநாயகமவர்கள் அந்த மையித்தின் பேராலே தொழுவித்தார்கள். பின்னர் அந்த மையித்தைக் கபுறிற் கொண்டுபோய் அடக்கஞ்செய்ய வைத்து அதின் முகத்தைத்திறந்து பார்த்தார்கள். அப்பேது பழையபடி கறுத்தகின்ஸீறுடைய ரூபத்தாக இருக்கக் கண்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அந்த வாலிபக்காரனைப்பார்த்து, ஓய்வாலிபனே யுன்னுடைய தகப்பன் துனியாவிலே என்ன அமல் செய்தானென்று கேட்டார்கள். அதற்கு வாலிபன் நபிநாயகத்தைப்பார்த்து இருலோகத்திற்கும் நாயகமாகிய எங்களாண்டகையே, என் தகப்பன் தொழுகையை விட்டு விட்டிருந்தாரென்று சொன்னான்.

அதுகேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், அங்கே தங்களைச் சூழ்ந்து நிற்கிற அஸ்ஹாபிமார்களைப் பார்த்து, என்னுடைய அஸ்ஹாபிமார்களே, தொழுகையை விட்டவனுடைய ஹாலை நீங்கள் பார்த்தீர்களா, அல்லாஹுத்

தஆலா அவனை நாளை மஃஷரிலே கறுத்த கின்ஸீறாகவே எழுப்புவானென்று சொன்னார்கள். அதுகேட்டு அஸ்ஹாபிமார்கள் யாவரும் நபிநாயகத்தைப் பார்த்து நாங்கள் அல்லாஹுத் தஆலாவைக் கொண்டும் காவற்றேடுகிறோமென்று சொன்னார்கள்.

ஆதலால் எமது பிரியமுள்ள முஸ்லிமான உடற்பிறந்தான்மார்களே, தொழுகையை விட்டவனுக்குக் கிடைக்கிற சங்கைக் குறைவு இவ்விதமிருக்கிற படியால், இதைப்பார்த்து உங்கள் கனதியாகிய புத்தியினாலே கவனித்து உயிருடனே இருக்கும்போது அல்லாவைப் பயந்து தொழுது கொண்டால் இப்பேர்ப்பட்ட கெடுதிகளைவிட்டும் அல்லாஹுத் தஆலா நம்மனைவோரையுங் காத்திரட்சிப்பானாகவும். ஆமீன்.

ஹிக்காயத்து.

பெரியோர்களில் நின்றுமொருவர் கப்பலிலேறிப் போகும்போது கடலிலே மீனை மீன்றின்னக்கண்டு அந்தப் பெரியோர்கள் கடலிலுமா பஞ்ச விஷயமுண்டா யிருக்கிறதென்று நினைத்தார்கள். அப்போது அங்கே யுருத்தோற்றமின்றி யோர்சத்த முண்டாயினது. யாதெனில், ஓய் பெரியவரே, தொழுகையைவிட்ட ஒருவன் இந்தக்கடலில் நின்றும் தண்ணீரள்ளி வாயில்வைத்துத் தண்ணீர் கைப்பாய் யிருப்பதைப்பற்றி வாய்த்தண்ணீரைத் திரும்பக் கடலில் உமிழ்ந்தான், அவனுடைய உமிழ்நீர் விழுந்த நிமித்தியம் கடலிலே பஞ்சம் பிடித்ததென்று சத்தமுண்டாயிற்று.

துர்றத்துல் நாசிஹீனென்னுங் கித்தாபிலே சொல்லியிருக்கிறதாவது யாதெனில், அபூபக்கர் சித்தீக்கு றலியல்லாஹு அன்ஹவர்களுடைய காலத்திலே ஒரு மனுடன் மவுத்தாகிப்போனார். அவருடைய மையித்தைத் தொழுவிக்கக் கூடினபேர்கள் எழுந்திருந்து நிற்கும்போது மையித்து மேலிட்டிருக்கிற கபன் அசைந்தது. அது கண்டு எல்லோர்களும் மையித்தை யடுத்துப் பார்க்கும்போது அதின் கழுத்திலே ஒருபாம்பு சுற்றிக் கிடந்துகொண்டு அவனுடைய சதையைத் தின்று இரத்தத்தை யுறுஞ்சிக் குடித்துக்கொண்டிருக்கக்கண்டு, அந்தப் பாம்பைக் கொன்றுபோட யாவரும் நினைத்து நெருங்கும்போது அந்தப் பாம்பானது 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி' என்னுந் திருக்கலிமாவைச் சொல்லி,

என்பேரிலே யாதாமொரு பாவமும் இல்லாதிருக்க நீங்கள் ஏனென்னைக் கொல்லவருகிறீர்கள். கியாமநாள் வருகிறவரைக்கும் இவனை அதாபுசெய்யும் படியாய் அல்லாஹுத் தஆலா என்னை யேவியிருக்கிறுனென்று சொன்னது.

இவ்விதம், பாம்புசொன்ன சொற்கேட்டு யாவரும் அந்தப் பாம்பைப் பார்த்து, ஆய் பாம்பே, இவன் அப்படி என்ன அமல் செய்தானென்று கேட்டதற்குப் பாம்பானது அவர்களைப்பார்த்து, இந்த மனிதன் மூன்று பாவங்களைச் செய்தான். அதில் 1-வது வாங்குச் சத்தம் கேட்டானேயானுல் எழுந்து இமாம் ஜமாஅத் துடனே தொழுகிறதற்கு வருகிறதில்லை. 2-வது இவன் தன் னுடைய திரவியத்தில் நின்று மெடுத்து ஸக்காத்துக் கொடுக்கிற தில்லை, 3-வது இவன் ஆலிம்கள் சொல்லப்பட்ட நசீஹத்தைக் கேட்.கிறதில்லை. ஆதலால் நான் செய்கிறது கூலியாயிருக்குமென்று சொன்னது.

ஹிக்காயத்து.

ஒரு மனுடனுக்குச் சகோதரி யொருத்தியிருந்தாள். அப்படி யிருக்கிற காலத்தில் அவள் மவுத்தாகினுள். அடக்கவேண்டி கபுறுக் குழியிலே அந்த மையிதைஇறக்கி வைக்கும்போது, சகோதர னிடத்திலிருந்த பணப்பையை அவருக்குத் தெரியாமல் அந்தக் குழியிலே விழுந்துவிட்டது, பின்பு அவளையடக்கிவிட்டு அவர் மீளுகிறமட்டிலும் பணப்பை தன்னிடத்திலே யிருக்கிறதாக நினைத் திருந்து பணப்பையைப் பார்க்கும்போது அது தன்னிடத்தி லில்லா மையினுலே யோசித்து, அது விழுமாகில் கபுறிற்றான் விழுமென்ற தோற்றத்தினுலே யாதாமொருவரு மில்லாமற்றனே தனித்தவராய் விரைவாகவந்து அந்தக்கபுறைத் தோண்டினர்.

அவ்விதம் தோண்டும்போது, அந்தக் கபுறு முழுமையும் நெருப்புப் பரவப்பட்டிருப்பதைக் கண்டு சீக்கிரம் மண்ணைப்போட்டு மூடிவிட்டு அழுதுகொண்டு தன்னைப்பெற்ற தாயாரிடத்திலே வந்து என்னைப்பெற்ற தாயாரே, என்னுடத்பிறந்தான் துனியாவில் என்ன அமல்செய்தாள், அதை எனக்குச் சொல்லுங்களென்று கேட்டார். அதற்குத் தாயானவள் தன்மகனைப்பார்த்து, மகனே! நீயேனதைக் கேட்கிறுயென்றுள். அதற்கு மகன் தாயாரைப்பார்த்துச் சகோதரி யுடைய கபுறில் நெருப்புப்பாவியிருக்கிற செய்தியைச் சொன்னர்.

அதுகேட்டுத் தாயானவள் தாலுமழுதுகொண்டு மகனைப்பார்த்து, ஆய் என்மகனே, உன்னுடதிறந்தாள் தொழுகையை பொடு போக்காக விட்டுவிட்டிருந்தாளென்று சொன்னுள். இந்தப்படிக்கு இறுஷாதுல்இபாது முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

யாதாமொருவன் இமாம் ஜமாஅத்துடனே தொழுகிறதை விட்டுவிடுவானுகில், அவன் தெளறூத்து, சபூர், இன்ஜீல், புறுக்கான் ஆகிய இந்நான்கு வேதத்திலும் லகுனத்துச் செய்யப்பட்டவனுவான். இன்னும் தொழுகையை விட்டவன் பூமியிலே நடப்பானுகில் அவனைப் பூமி லகுனத்துச்செய்யும், இன்னும் அவன்பேரில் அல்லாஹுத் தஆலாவும் மலாயிக்கத்துகளும் கோபமாவார்கள்.

இன்னும் வானலோகத்திற்கும், பூலோகத்திற்கும் இடையிலேயுள்ள மலக்குகள் சகலரும் கடலிலுண்டான மீன்களடங்கலும் மற்ற உயிர் பிணங்களுந் தொழுகையை விட்டவனை லகுனத்துச் செய்யுமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள்.

ஆய் மூஸ்லிமாகிய எமது அன்பர்களே, தெளிவானவர்களே, தொழுகையை விட்டவர்களுக்குக் கிடைக்கிற அதாபு வருத்தங்களை இவ்வளவென்று எழுதமுடியாது. ஆயினும் இவ்விடத்திற் சுருக்கமாகச் சொல்லி முற்றுவித்தனம். ஆதலால் இந்த பாவை உங்களுடைய அறிவென்னுங் கண்களினுலே நன்ருகப் பார்த்துணர்ந்து கல்பிற் றரிபடுத்தி வைத்துக்கொண்டு சண்டாள பாதக துரோகி இபுலீசுடைய மாயவலைக்குள்ளே மாட்டிக்கொண்டு மதிமயங்காமல் மவுத்து வருகிறது இன்னவேளையென்று திட்டமில்லாமையால், ஹயாத்தாயிருக்கும்போதே நாட்களை வீணுக்காமல் நமது பேரிற் பூண்ட கடனுகிய தொழுகையைப் பிந்தவிடாமல் முடிக்கவேணும். அல்லாஹுத் தஆலா அந்தத் தொழுகையின் பறக்கத்தினுலே தங்கடம் முசிபத்துகளை நீக்கிக் கிருபைகூர்ந்து நம்மனைவோரையும் பிருதௌசென்கிற சொர்க்கத்திலும் புகுதவைப்பானுகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தொழுகையை விட்டவர்கட்குக் கிடைக்கிற அதாபின் பயான் முற்றிற்று.

ஜும்ஆத் தொழுகையுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள் யாதெனில், காபுமலைக் கப்புறத்தே வெள்ளிபோலே வெண்மையானவோர் பூமியுண்டா யிருக்கிறது. அந்தப் பூமியில புற்பூண்டுகளில் நின்றும் யாதாமொரு வஸ்துகளுமில்லை, மேலுமந்தப் பூமியானது இந்தத் துனியாவைப் போலே எழுபங்கு விஸ்தீரணமாக இருக்கும். அதில் முழுமையும் மலக்குகளாகவே நிரம்பியிருக்கிறார்கள். அவ்விடத்திலே ஒரு ஊசியைப்போட்டால் அது கீழேவிழ இடமில்லாது அந்த மலக்கு களின் பேரிலே விழும்.

இவ்விதம் நெருக்கமாக நிரம்பியிருக்கிற மலக்குகள் ஒவ்வொரு வர்களுடைய கையிலும் ஒவ்வோர் கொடி பிடித்திருக்கிறார்கள். அந்தக்கொடிகள் ஒவ்வொன்றும் நாற்பது காதவழி தூரமாக இருக்கும். இவ்விதம் நீளமான கொடிகளடங்கலிலும் 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி' என்னும் மகா சிறப் பான திருக்கலிமா எழுதப்பட்டிருக்கின்றன.

இவ்விதம் கலிமா எழுதிய கொடிகளைப் பிடித்திருக்கும் அந்த மலக்குகள் எல்லோரும் வெள்ளிக்கிழமை இரவெல்லாம் காபு மலையைச் சூழ்ந்து கூடியிருந்துகொண்டு அல்லாஹுத் தஆலா அனவிலே சானயப் பட்டவர்களாக, ஆண்டவனே, அழியாப் பொருளே, பேரின்பக்கடலே, முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துக்களுக்கு நீ றஹ்மத்துச் செய்யென்று ஸலாமத்தாகும்படி துஆக் கேட்பார்கள்.

பின்பு பொழுது உதயமானபோதும் ஆண்டவனளவிலே யவர்கள் ஆண்டவனே, முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்துகளில்நின்றும் இன்றையதினம் குளித்துத் துப்புரவாகத் குத்துபாவுக்கு ஆஜறாகுவார்களே அவர் களுடைய பிழையை நீ பொறுத்திடென்று துஆக் கேட்டுக் கொண்டேயிருந்து பின்பு அவர்கள் அழுதவர்களாக சத்த மிடுவார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா அந்த மலக்குகளைப்பார்த்து என்னுடைய மலக்குகளே, நீங்கள் எதுகாரியத்தைநாடி யழுது சப்திக்கிறீர்களென்று கேட்பான். அதற்கு மலக்குகள் அல்லாஹுத்

தஆலாவிடத்தில் நாங்கள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் மவர்களுடைய உம்மத்தோர்களின் பாவங்களை பொறுக்கும்படிக்கு நாடி யழுகிறோமென்று சொல்லுவார்கள்.

அது கேட்டு அல்லாஹுத் தஆலா அந்த மலக்குகளுக்குத் திடனுக நானவர்களுடைய பாவங்களைப் பொறுத்துக்கொண்டே னென்று சொல்லுவான். இப்படிக்கு மிஷ்காத்து அன்வாறு முதலிய கித்தாபுகளில், வருகின்றன. ஆதலால் முஸ்லிமாகிய இகுவான்களே, நீங்கள் இதை யுணர்ந்து யோசித்துப் பார்த்து வெள்ளிக்கிழமை குத்துபாத் தொழுகையின்மேற் பூணிப்பா யிருந்து தொழுதுக்கொண்டு வந்தால் அல்லாஹுத் தஆலா றஹ்மத்துச் செய்வான் ஆமீன்.

ஹிக்காயத்து.

பைத்துல் மஃமூறுக்கு அசல் பாகத்திலே வெண்மையான வெள்ளியில் நின்றும் ஒரு மனூறுவை அல்லாஹுத் தஆலா படைத்திருக்கிறன். அந்த மனூறுவுடைய நீளமாகிறது ஐந்நூறு வருஷத்துத் தொலைதூரமுண்டும். அந்த மனூறுவின் பேரிலே ஜும்ஆ நாளாகுல் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் ஏறி நின்று வாங்கு சொல்லுவார்கள். இசுறுபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்த மனூறுவின் பேரிலேநின்று குத்துபா ஓதுவார்கள். மீக்காயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மற்ற மலக்குக ளடங்கலைக்கொண்டும் இபாதத்துச் செய்வார்கள். இவ்விதத்திற்றெழுது முடிந்ததின் பின்னாலே ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் நான் சொன்ன வாங்குக்காகக் கிடைக்கிற தவாபை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளில் நின்றும் மூமி னூகிய மூஅதீன்கள் யாவருக்கும் நன்கொடையாகக் கொடுத்து விட்டே னென்று சொல்லுவார்கள்.

இசுறுபீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் நான் குத்துபா வோதின தற்கு கிடைக்கிற தாவாபை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளில் நின்றும் குத்துபா ஓதுகிற கத்தீபுமார்கள் யாவருக்கும் நன்கொடையாகக் கொடுத்து விட்டே னென்று சொல்லுவார்கள். மீக்காயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் நான் இமாமத்துச் செய்கிறதற்காகக் கிடைக்கிறதவாபை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளில் நின்றும் ஜும்ஆ நாளில் இமாமத்துச் செய்கிற வர்கள் யாவருக்கும் நன்கொடையாகக் கொடுத்து விட்டே னென்று சொல்லுவார்கள்.

மற்ற ஜமாஅத்தாகிய மலக்குகள் முழுமையும் ஜும்ஆத் தொழுததற்காகக் கிடைக்கிற தவாபை முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய உம்மத்துகளில் நின்றும் இமாமுக்குப் பின்னாலே ஜும்ஆத் தொழுவார்களே, அவர்கள் யாவருக்கும் நன்கொடையாகக் கொடுத்து விட்டோ மென்று சொல்லுவார்கள்.

அப்போது அல்லாஹுத் தஆலா அந்த மலக்குகளைப்பார்த்து என்னுடைய மலக்குகளே, நீங்கள் என்னிடத்தில் ஸகாவத்தை திடனாக வெளியாக்கி விட்டீர்கள். ஆதலால், என்னுடைய சிறப்பு வலுப்பத்தின்பேரி லாணையாக என்னுடைய அடியார்களில் நின்றும் ஜும்ஆத் தொழுகையைத் தொழுகிறார்களே, அவர்களுக்கு இனறையிலே நான் அவர்களுடைய பாவங்களைத் திடனாகப் பொறுத்துக் கொண்டே னென்று சொல்லுவான். இந்தப்படிக்கு ஸுப்தத்துல் வாசிலீனென்னுங் கித்தாபில் வருகின்றன.

இன்னும் யாதாமொருவன் ஜும்ஆ நாளையிற் குளிப்பானாகில் அதற்காக அவனுடைய பாவங்களைத்தெண்ட குற்றமாக நீக்கப் படும். இன்னும் யாதாமொருவன் ஜும்ஆத் தொழுகைக்கு எழுந்து நடந்து போவானாகில் அல்லாஹுத் தஆலா அவனடக்கிற வழியிலுள்ள அடியொன் றொன்றுக்குப் பதிலாக இருபது வருஷத்துடனே இபாதத்தை யெழுதிடுவான். பின்னர், அவன் ஜும்ஆத் தொழுவானாகில் எண்ணூறு வருஷத்துடைய அமலைக் கொண்டு அவனுக்குக் கூலி கொடுப்பா னென்றும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

றவுனக்குல் மஜாலிஸென்னுங் கித்தாபிலே எழுதியிருக்கிறதுயாதெனில், ஜும்ஆ நாள் வருமேயானால் அந்த நாளில் அல்லாஹுத் தஆலா பூமியுடைய முகத்தின் பேரிலே மலக்குகளையனுப்புவான். அந்த மலக்குகளுடைய கைகளிலே தங்கத்தினாலாகிய கலமென்னும் எழுதுகோல்களும், வெள்ளியினாலாகிய கடிதாசிகளும் வைத்துக்கொண்டு பள்ளியுடைய வாயிலின்பேரில் நின்று பள்ளிவாயிலுட் புகுந்து ஜும்ஆத் தொழுவார்களே, அவர்களுடைய பெயரை இன்னாரின்னாரென்று விபரமாய் எழுதுவார்கள்.

அப்படி யவர்கள் தொழுது முடிந்தபிறகு அந்த மலாயிக்கத்துகள் வானலோகத்தளவில் மீண்டு போய் அல்லாஹுத்தஆலாவை எங்களுடைய ஆண்டவனே, நாங்கள் பள்ளிவாசலுட்புகுந்து ஜும்ஆத் தொழுதவர்களுடைய பெயரை விபரமாக எழுதி வந்தோமென்று சொல்வார்கள். அப்போது அல்லாஹுத்தஆலா அந்த மலக்குகளைப் பார்த்து, என்னுடைய மலக்குகளே என்னுடைய சிறப்பு வலுப்பத்தின்பேரி லாஇலையாக அவர்களுடைய பாவங்களை நான் திடனாகப் பொறுத்துக் கொண்டேன். ஆதலால், அவர்களின் பேரிலே பாவங்களில் நின்றும் ஒரு வஸ்து வேணும் இல்லையென்று சொல்லுவான்.

இன்னும் ஜும்ஆ அளவிலே தொழுகிறதற்காக நாடி யாதாமொருவன் முந்தின ஸாஅத்திற் போவானாகில், அவன் ஒரு வொட்டகையை அறுத்துக் குறுபான் கொடுத்தவனைப்போலாகிடுவான். இரண்டாம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு மாட்டையறுத்து குறுபான் கொடுத்தவனைப்போ லாகிடுவான். மூன்றாம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு ஆட்டையறுத்துக் குறுபான் கொடுத்தவனைப்போ லாகிடுவான். நான்காம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு கோழியை ஹதியாக்கொடுத்தவனைப்போ லாகிடுவான். ஐந்தாம் ஸாஅத்திற் போவானாகில் அவன் ஒரு கோழிமுட்டையை ஹதியாக் கொடுத்தவனைப்போ லாகிவிடுவா னென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் பொடுப் போக்காக மூன்று ஜும்ஆவைத் தொழாமல் விட்டு விடுவானாகில் அவனுடைய கல்பிலே முத்திரை போடப்படும். மேலும் அல்லாஹுத் தஆலா இடத்திலே நாட்களில் நின்றும் உவப்பான நாளாகிறது ஜும்ஆவுடைய நாளாக இருக்கும். இன்னும் ஜும்ஆ நாளையிலே தான் அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களைப் படைத்தான். அதே நாளையிற்றான் அவர்களைச் சொர்க்கலோகத்தை விட்டும் பூலோகத்திலிறக்கி வைத்தான். அதே நாளையிற்றான் அவர்களை உபாத்தாக்கினான். அதே நாளையிற்றான் துஆக்களைக் கபூல்ச் செய்யப்பட்ட ஸாஅத்திருக்கின்றது. அதே நாளையிற்றான் கியாமநாள் வரும். ஆனதால் மூமின் முஸ்லிமாகிய இருவான்களே, இந்தப்பாயை நன்றாகப் பார்வையிட்டு ஜும்ஆத் தொழுது கொள்ளுங்கள்.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், யாதாமொருவன் ஜும்ஆத் தொழுத பிறகு குல்ஹுவல்லாஹு சூறத்து, குல் அவூது பிறப்பில் பலக்கு சூறத்து, குல் அவூது பிறப்பின்னாச சூறத்து ஆகிய இம்மூன்று சூறத்தையும் ஒவ்வொன்றை ஏழுதரம் ஓதிவருவானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலாவைக்கொண்டும், ஒடுக்கத்துநாளைக் கொண்டும் ஈமான் கொண்டவர்களுடைய தொகைக்கு கூலி கொடுக்கப்படும். இன்னும் ஹஸ்ரத்துல் பாஜூரி என்னுங் கித்தாபில் ஜும்ஆவுடைய பாபிலே சொல்லியிருக்கிறது யாதெனில்

பைத்து.

இலாஹிலஸ்து லில் பிருதௌஸி அஹ்லா
வலா அக்குவா அலாநாரி ஜஹீமி
பஹபுலித் தௌபத்தன் வக்பிர் துனூபி
பஇன்னக்க காபிறுதன் பில் அலீமி.

(இதன் பொருள்) என்னுடைய ஆண்டவனே, நான் பிருதௌஸென்னுஞ் சொர்க்கத்திற்குத் தகுமானவனாக இருக்கவில்லை, இன்னுஞ் நான் ஜஹீமென்னும் நரகத்தின் பேரிலும் சக்தியுடையவனாக இருக்கவில்லை, திடனாக நீயாகிறவன் பெரும் பாவத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறவனாக இருக்கிறாய், ஆதலால் எனக்குத் தௌபாவை நன்கொடையாகக் கபூல்ச்செய்து என்னுடைய பாவங்களைப் பொறுத்தருள் செய்வாயாகவென்று.

இந்த இரண்டு பைத்தையும் யாதாமொருவன் ஜும்ஆ நாளையில் மூன்றுவிடுத்த மோதுவானாகில் அவன் சந்தேகமின்றியே ஈமானுடனே மவுத்தாகுவான், இன்னும் ஜும்ஆவுக்கும் பின்னாலே ஐந்துவிடுத்த மோதுவானாகில் இப்படி யோதுபவர்களுக்கு அல்லாஹுத் தஆலா மிகுந்த நன்மை தறஜாக்களைக் கொடுப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஜும்ஆத் தொழுகையுடைய வரிசையின் பயான்

முற்றிற்று.

ஸக்காத்துக் கொடுக்கிற வரிசையின் பயான்

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானூர்கள். யாதெனில், ஸக்காத்து கொடுக்கிறதாகிறது ஈமானைத் துப்புறவாக்கி வைக்கிறதா இருக்கும். ஆதலால் யாதாமொருவனுடைய திரவியத்திற்குள்ளபடி ஸக்காத்தை யிறுத்து விட்டு மீந்த திரவியத்தை வைத்துவிட்டு மவுத்தாருவானுகில் அந்தத் திரவியத்தை யுடையவனுக்கு மலக்குகள் கியாமத்நாள் வரைக்கும் தவாபை எழுதுவார்கள்.

இன்னு யாதாமொருவன் ஸக்காத்தை மனச்சந்தோஷமாகக் கொடுப்பானேயானுல், அந்தத் திரவியத்தை அல்லாஹுத் தஆலா அவனுக்குச் சொர்க்கலோகத்திலே வெளிவிளுள்ள சவடியாக்கிப் போடுவிப்பான். அதினுடைய பிரகாசம் மஹுஷருடைய பேர்கள் பேரிலெல்லாம் இலங்கும்; அந்தப் பிரகாசத்தில் அவன் ஸிருத்தல் மூஸ்தகீமென்னும் பாலத்தைத் துரிதமாகக் கடந்து சொர்க்கம் புகுதுவானென்று இவ்விதம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லக் திருவுளமானூர்கள்.

ஹதீது.

அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹுவர்களுக்கு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் சொன்னதாகச் சொல்லப்படுகிறது யாதெனில், யாராகிலுமொருவனுக்கு அல்லாஹுத்தஆலா திரவியத்தைக் கொடுத்திருக்கில் அவன் அந்தத் திரவியத்திற்கு ஸக்காத்துக் கொடுக்கவில்லையாகில் அந்தத்திரவியத்தைக்கியாமநாளிலே இரண்டு கண்ணிற்குமேலே கரும்புள்ளி விழுந்த பாம்புபோலாக்கி யதைக்கொண்டு அவனுடைய கழுத்திலே சவடி போலே போடப்பட்டு அவனுடைய இரண்டு கடவாயிலும் அது கடித்துப் பிடுங்கிக் கொண்டேயிருக்கு மென்று. இவ்விதம் நபிநாயகர் திருவுளமானூர்கள். இந்தபடிக்கு துர்றத்துன் நூஸிஹீன் முதலான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் அனசு றலியல்லாஹு அன்ஹுவர்களைத்தொட்டும் புதருனியவர்கள் சொல்லியிருக்கிறூர்கள் யாதெனில் நபிநாயகர்

திருவுளமானார்கள், ஸக்காத்தை விலக்குகிறவன் கியாமகாலையிலே நரகத்திலிருப்பானென்று, அப்படிவராமல் அல்லாஹுத் தஆலா நம்மனைவரையுங் காத்துக் கொள்வான்.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமாவுடைய ஸமானாவில் அதிக திரவியமுடைய ஒரு மனுடனிருந்தான். அந்த மனுடன் மவுத்தாகிப்போனான்; அப்போது அவனையடக்கக் கபுறு வெட்டினார்கள். வெட்டும்போது கபுறிலே பெரியபாம்பைக் கண்டு வந்து இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்க்குத் தெரிவித்தார்கள். அதுகேட்டு, அவர்கள் அந்தக் கபுறைவிட்டு வேறோரிடத்திற் கபுறு வெட்டுங்களென்று சொன்னார்கள். அது கேட்டுக் கபுறு வெட்டப்பட்டவர்கள் வேறோரிடத்திலே கபுறு வெட்டினார்கள்; அதிலும் பாம்பைக்கண்டார்கள், இவ்விதம் ஒவ்வோர் கபுறு வெட்டுந்தோறும் பாம்பைக்கண்டு அதை விட்டு விட்டு மறுகபுறு வெட்டுவதிலே ஏழுகபுறு வெட்டினார்கள். அந்த ஏழிலும் பாம்பு கிடப்பதாகக் கண்டார்கள்.

பின்னர், இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அந்த மையித்துடைய தாயாரிடத்தில் துனியாவில் இந்த மனுடன்செய்த செயலென்னவென்று கேட்டதற்கு அந்தத் தாயானவள் இவன் ஸக்காத்தைக் கொடுக்கமாட்டானென்றும், விலக்கிக் கொண்டு இருந்தானென்றும் சொன்னாள். அதுகேட்டு, இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் அந்தப் பாம்புடனே யவனை யடக்கஞ் செய்யுங்களென்று சொன்னார்கள். அதுபோலவே அந்த மையித்தைப் பாம்புடனேபோட்டு அடக்கஞ் செய்தார்கள். இந்தபடிக்கு றவ்ஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றது.

குறுஆன் ஷரீபிலே முப்பத்திரண்டிடத்திற் றொழுகையுடனே ஸக்காத்தையுஞ் சேர்த்து அல்லாஹு தஆலா சொல்லியிருக்கிறான். ஆதலாற் றொழுகைக்குப்பிறகு வணக்கத்திலே மிகவும் உயர்ந்த வரிசையானதும் ஸக்காத்துக் கொடுக்கிறதா யிருக்குமென்று, துர்றுல் முகுத்தாறென்னுங் கித்தாபிற் சொல்லியிருக்கின்றது.

இன்னும், ஸக்காத்துச் செய்கிறதின் வரிசையைக் குறித்து அனேக மிருக்கின்றன. அவைகளை யெழுதினால் விரிவாகுமென்று இவ்விடத்திற் சுருக்கமாக முற்றுவித்தனம். இன்ஷா அல்லா. இனி ஹயாத்து பாக்கியாயிருக்கில் கூடியமட்டிலும் மிகுவிரைவில் ஸக்காத்துடைய பறுலுஷறுத்து அதைக் கொடுக்கப்பட்ட விபரங்கள் முதலிய சகலதும் விஸ்தீரணமாகத் தனித்து அதுமட்டில் ஓர் கித்தாபு அச்சிடப்படும். ஆதலால் மூமின் முஸ்லிமாகிய இகுவான்களே, சிறப்புடையவர்களே, இந்த பாஸை உங்களுடைய அறிவென்னுங் கண்களால் நன்றாகப் பார்வையிட்டு இபுலீசுடைய மாயத்தி லகப்படாமல் துனியாவானது என்னைக்குஞ் சதமாயிருக்குமென்று நம்பிக்கைவையாமல் துனியாவுடைய வாழ்க்கை கனவைப்போலா யிருக்கு மென்பதை புணர்ந்து ஸக்காத்து விதியானவர்கள் ஸக்காத்தைமுறைபோலே கொடுத்துக் கொள்ளுங்கள். அப்படிச் சக்காத்து கொடுக்கிறதினாலே மட்டிலடக்காத நன்மையும் தவாபையும் அல்லாஹுத் தஆலா தந்துச் சொர்க்கலோகத்தினுள் தாக்கலாக்கி வைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஸக்காத்துக்கொடுக்கிற வரிசையின் பயான்
முற்றிற்று.

றமலான்மாத நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்

அல்லாஹுத் தஆலா குறுஆன் ஷரீபிலே திருவுளமாயிருக்கிறான். யாதெனில், உங்கள் பேரிலே றமலான்மாதம் நோன்பு பிடிக்கிறதைப் பறுலாக்கப்பட்டதென்றும், ஆனதாலே மூமின்களே றமலான் மாதத்தில் நோன்பை விடாமற் பிடித்துக்கொள்ளுங்கள்.

றமலான் மாதத்திலேதான் குறுஆனை யிறக்கப்பட்டது. இன்னும் அதேமாதத்திலே தான் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய சுஹுபு தவ்றாத்துவேதம், சபூர்வேதம். இன்ஜீல்வேதமிவைகளை யிறக்கப்பட்டது. இன்னும் றமலான்மாதமாகிறது சங்கையும், சிறப்பும், மேன்மையும், ஒளியும் பொருந்தியதாயிருக்கும். இன்னும் றமலான் மாதப்பிறை பிறந்ததேயானால், அறுஷு குறுசு மலாயிக்கத்துகள் முதலிய மற்ற வஸ்துகளெல்லாம் சப்தமிட்டு நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்தோர்களுக்குச் சோபனமென்று சொல்லும்,

இன்னும் சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள் பறக்கிற பக்ஷி சாரங்கள் தண்ணீரில் வாழும் மீனினங்கள், ஷைத்தானை தவிரப் பூமியில் உயிருள்ள வஸ்துகளடங்கலும் இரவிலும் பகலிலும் நபி நாயகமவர்களுடைய உம்மத்தோர்கட்குப் பிழைபொறுக்கத் தேடும், அதுபோலே அல்லாஹுத் தஆலா பிழைகளைப் பொறுத்திடுவான்.

இன்னும் அல்லாஹுத் தஆலா மலாயிகத்துகளைப் பார்த்து றமலான் மாதத்தில் உங்களுடைய சலவாத்தையும், தசபீஹையும், எனது ஹபீபாகிய முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமுடைய உம்மத்தோர்களுக்கு ஹதிபாச் செய்யுங்களென்று சொல்லுவான். அதுபோலே அவர்கள் ஹதியாச் செய்வார்கள். இன்னும் என்னுடைய உம்மத்தோர்கள் றமலான் மாதத்திலுள்ள தறஜாக்களையறிந்தார் களேயானால் வருஷமுழுமையும் றமலானுக விருக்கவேண்டு மென்று பிரியம் வைப்பார்களென்று நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் சொல்ல, நான் கேட்டேனென்று இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் சொன்னார்கள்.

இன்னும் றமலான் மாதத்தில் நன்மைகளெல்லாம் சேர்க்கப்படும். இமாதத்தையும் துஆவையும் கபூல்ச்செய்யப்படும். பாவங்களையெல்லாம் மன்னிக்கப்படும். சொர்க்கம் அவர்பேரிலே பிரியப்படும். இன்னும் றமலான்மாதம் முதற்றெப்தி யிரவைபிலே ஷைத்தான்களையும் மூரியாட்டமாடுகிற ஜின்களையும் விலங்குபோட்டும், நரகத்திலுடைய வாபில்களடங்கலையும் பூட்டப்படும். சொர்க்கத்துடைய வாயில்கள் முழுமையும் திறந்து வைக்கப்படும். இன்னும் றமலானுடைய இரவு முழுமையும் ஒரு மலக்கானவர் சப்தித்து நன்மையைத்தேடு, பாவத்தைத் தேடுகிறவனே நீ பாவத்தை விட்டுவிடு என்றுசொல்வார்.

இன்னும் வெறொருரிவாயத்தில் வருகிறது யாதெனில் அல்லாஹுத் தஆலா றமலான் மாதத்தில் ஒவ்வோரிரவிலும் மூன்றுதரம் என்னிடத்திற் கேட்கிறவனுண்டானுல், அவன் கேட்கிறதை நான் கொடுப்பேன், தௌபாச்செய்கிற வனுண்டானுல், அவனுடைய தௌபாவை கபூல் செய்வேன், பிழைபொறுக்கத் தேடுகிறவனுண்டானுல் அதனுடைய பிழையை நான் பொறுப்பேனென்று சொல்லுவான்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், என்னுடைய உம்மத்துகளில் யாதொருவர் தங்களுடைய பெண்சாதி பிள்ளைகளுடனே நோன்பு பிடித்திருந்து அந்நோன்பை திறக்குவார்களேயாகில் அவர்களுக்கு மக்கம் மதீனம் பயித்துல்முகத்தீசு ஆகிய இம்மூன்றிலும் நோன்பு பிடித்தவர்களுக்கு எவ்வளவு நன்மை தவாபு கிடைக்குமோ அதுபோலுள்ள நன்மை தவாபுகளை அல்லாஹு தஆலா கொடுப்பானென்று.

இதில் மக்கத்திலே நோன்பு பிடிப்பவர்களுக்கு எழுபதினாயிரம் ஹஜ்ஜும், எழுபதினாயிரம் உம்றுவும் செய்த தவாபும், எழுபதினாயிரம் றமலான் மாதம் நோன்பு பிடித்த தவாபும் அல்லாஹு தஆலா கொடுப்பான். மதீனத்தில் நோன்பு பிடிக்கிறவர்களுக்கு என்னைக்கொண்டும் ஈமான் கொண்டவர்கள், ஈமான் கொள்ளாதவர்கள் எவ்வளவு தொகையாகிறார்களோ அவ்வளவு தொகை நன்மைகளை அல்லாஹுத் தஆலா கொடுப்பான். இன்னும் இந்தக்கணக்கின் தொகைபோலுள்ள பாவங்களையும் அவர்களைவிட்டும் அல்லாஹுத் தஆலா அழித்திடுவான். இந்தத் தொகைபோலுள்ள தறஜாக்களையும் அல்லாஹுத் தஆலா உயர்த்திடுவான். பைத்துல் முகத்திசிலே நோன்பு பிடிக்கிறவர்களுக்கு அல்லாஹுத் தஆலாவுடைய உதவியைக்கொண்டும் எழுவானம் எழுபூமியிலுண்டான மலக்குகளெல்லோரும் அவர்கள் பிழையைப் பொறுக்கத் தேடுவார்கள், இந்தப்படிக்கு றவுலுர் றயாஹீன் முதலியகித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் அல்லாஹுத் தஆலா ஸிதறத்துல் முர்தஹா வென்னும் பெயருடைய மரத்திற்குக்கீழே யொருமலக்கைப் படைத்திருக்கிறான். அந்த மலக்குடைய உயரம் ஆயிரம் வருஷத்தொலை தூரமுண்டும், அவருக்கு ஆயிரம் சிரசுண்டும், அந்தச்சிரசு ஒவ்வொன்றுக்கு ஆயிரம் முகமுண்டும், அந்த முகமொன்றுக்கு ஆயிரம் வாயுண்டும், அந்த வாயொவ்வொன்றுக்கு ஆயிரம் நாவுண்டும், அவ்விதமான அந்த மலக்கினுடைய சிரசின்பேரிலே ஜோட்டிப் பின்னலுண்டும். அந்த ஜோட்டிப் பின்னல் ஒவ்வொன்றுக்கு ஆயிரமுத்துண்டும், அந்த முத்தில் ஒவ்வொன்றின் ஒளியில் நின்றும் ஆயிரம் கடலுண்டாயிருக்கின்றன. அந்தக் கடலிலிருக்கப்பட்ட மீன்கள் ஒவ்வொன்றினீளம் நூறுவருஷத் தொலைதூரமாயிருக்கும்.

அந்த மீன்களுடைய முதுகுகளின் பேரிலே லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி, என்னுந் திருக்கலிமா யெழுதப்பட்டிருக்கிறது. இவ்விதமான அந்த மலக்குத் தசுபீஹு செய்தாரே யானால் அந்தச் சத்தத்துடைய அழகினாலே அல்லாஹுத் தஆலாவுடைய அறுஷும் அசையும். இன்னும் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களைப் படைக்க இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னமே அல்லாஹுத் தஆலா அந்த மலக்கைப் படைத்திருக்கிறான்.

மிஃறாஜுடைய இரவையில் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அந்த மலக்கைக்கண்டு சலாம் சொன்னார்கள். அப்போது அந்த மலக்குத் தசுபீஹு ஓதுகிறதின் பேரிலே பராக்காயிருப்பதினாலே நபிநாயகம் சொன்ன சலாம் அவருடைய காதுக்குக் கேட்கவில்லை. அதுகண்டு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்தமலக்கினிடமாக இவர்கள் முஹம்மது நபியாயிருக்கும், உமக்குச் சலாம் சொன்னார்களென்றார்கள். அதுகேட்டு, உடனே அந்த மலக்கானவர் தம்முடைய பசுமைபொருந்திய இரண்டு சிறகையும் விரித்து நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய இரண்டு கண்ணுக்குமிடையிலே முத்தங்கொண்டு முஹம்மதே, றமலானுடைய பறக்கத்தைக் கொண்டும், உமக்கும் உம்முடைய உம்மத்தோர்களுக்குந் திடனாக அல்லாஹுத் தஆலா பாவங்களைப் பொருத்திட்டானென்று நல்மாராயஞ் சொன்னார்.

இவ்விதஞ் சொன்ன அந்த மலக்குடைய முன்பக்கத்திலே ஆயிரம் பூட்டுகளிடப்பட்ட பெட்டகம் இரண்டு மிருக்கிறது. அந்தப் பெட்டகத்தை நபிநாயகங்கண்டு இந்த இரண்டு பெட்டகத்திலும் என்ன இருக்கிறதென்று அந்த மலக்கினிடமாகக் கேட்டதற்கு, அவர் நபிநாயகத்தைப் பார்த்து, முஹம்மதே இந்தப் பெட்டகத்திலே உம்முடைய உம்மத்தோர்களில் நின்றும் றமலான் மாதத்திலே நோன்பு பிடிப்பவர்களுடைய பேர்களெழுதப்பட்ட பட்டோலை வைத்திருக்கிறது. அதின் பேரில் நான் சாட்சி சொல்லுகிறேனென்று சொன்னார். இந்தப்படிக்கு நுசுஹத்துல் மஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து

தாவூதுதாயி என்பவர்கள் சொல்லி யிருக்கிறார்கள் யாதெனில், றமலான்மாதம் மூத்தின இரவையிலே நித்திரை என்னை மிகைத்

திட்டது. அப்போது என்கனவிலே முத்து மாணிக்கத்தினுலுமுள்ள ஆற்றங் கரையின் பேரிலே சொர்க்கத்தைக் கண்டேன். அந்தச் சொர்க்கத்துப் பெண்களுடைய முகவொளிவு சூரிய ஒளிவுபோ லிருக்கிறது. அதுகண்டு நான் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்னுந் திருக்கலிமாவைச் சொன்னேன். அப்போது அந்தப் பெண்களும் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி யென்னுந் திருக்கலிமாவைச் சொல்லி றமலான் மாதத்திலே தொழுகிறவர்களுக்கும், நோன்பு பிடிக்கிறவர்களுக்கும், புகழ்கிறவர்களுக்கும் நாங்கள் பாத்திய முள்ளவர்களாக யிருக்கு மென்று சொன்னார்கள்.

ஹிக்காயத்து.

சுகுறத்துல் ரியாலு என்கிற கித்தாபில் சொல்லி யிருக்கிறது, யாதெனில், றமலானுகிறது கியாமத்து நாளையிலே அழகிய சூறத்தாக அல்லாஹுத் தஆலாவுடைய திருமுன்பாக வந்து ஸஜதாச் செய்யும். அப்போது அல்லாஹுத் தஆலா றமலானைப் பார்த்து, ஆய் றமலானே, உன்னுடைய ஹாஜத்தை நீ கேளும், உன்னுடைய ஹக்கை அறிந்தவனுடைய கையை நீ பிடியென்று சொல்வான். அது கேட்டு, றமலான் கியாமத்திலே சுற்றித் திரிந்து பார்த்து அதினுடைய ஹக்கை அறிந்தவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு அல்லாஹுத் தஆலாவுடைய திருமுன்பாக வந்து நிற்கும். அப்போது அல்லாஹுத் தஆலா, றமலானே! நீ என்னத்தை நாடுகிறு யென்று கேட்பான். அதற்கு றமலான், அல்லாஹுத் தஆலாவோடு ஆண்டவனே, கனதியான கிரீடத்தை இவனுக்கு நீ போடநாடுகிறே னென்று சொல்லும்.

அப்போது அல்லாஹுத் தஆலா ஆயிரம் கிரீடங்களை அவனுக்குப் போடுவான். பின்னர், றமலான பாவத்தையுடைய பேர்களிலே எழுபதினுயிரம் பேரை மன்றூட்டஞ் செய்ய அவனுக்குக் கொடுக்கப்படும். பின்னர் ஆயிரம் ஹூறுல்ஈன் பெண்களைக் கொண்டும் அவனுக்குச் சோடாக்கி வைக்கப்படும். அந்த ஹூறுல்ஈன் பெண்கள் ஒவ்வொரு வருடனே எழுபதினுயிரம் கிதமத்துச் செய்கிற பெண்களு முண்டு. இந்தச் சிறப்புடனே புறுக்கின் பேரிலும் அவனை யேற்றியும் வைப்பான். அதன் பின்னர் அல்லாஹுத் தஆலா, றமலானே! நீ யின்னமும் என்னத்தை நாடுகிறு யென்று கேட்பான். அதற்கு றமலான் அல்லாஹுத்

தஆலாவோடும், ஆண்டவனே யுன்னுடைய ஹபீபாகிய நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுடைய அசல்பாகத்தில் அவனை நீ யிறக்கிவை யென்று சொல்லும். அது போலே அல்லாஹுத் தஆலா அவனைப் பிருதௌ சென்னும் சொர்க்கத்திலே இறக்கி வைப்பான்.

அதன் பின்னர், அல்லாஹுத தஆலா நீ றமலானே நீ இன்னமும் என்னத்தை நாடுகிறு யென்று கேட்பான். அப்போது றமலான் அல்லாஹுத் தஆலாவோடு ஆண்டவனே, என்னுடைய ஹாஜத்தை நீ நிறைவேற்றினையே அவனுடைய சங்கையும், தவாபும் எந்தத் தலத்திலிருக்கிற தென்று கேட்கும். அதற்கு அல்லாஹுத் தஆலா றமலானைப் பார்த்துச் செவந்த மாணிக்கம், பச்சை, மரகதம் இவைகளில் நின்றும் நூறு பட்டணம், அந்தப் பட்டணம் ஒவ்வொன்றில் ஆயிரம் மாளிகை யிருக்கிறது. அவைகளை நோன்பு பிடித்து இபாதத்து செய்தவர்களுக்குக் கொடுத்துச் சங்கையாக்கி வைக்கப்படு மென்று சொல்லுவான்.

ஹதீது

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் அசுஹாபிமார்களைப் பார்த்து திருவுளமானார்கள். உங்களில் நின்று மொருவர் றமலான் மாதத்தில் நித்திரையை விட்டும் விழித்துப் பாயிலே புரண்டு படுப்பார்களேயாகில், ஒரு மலக்கு அவரை நீ ரெழுந்திரும், அல்லாஹுத் தஆலா உமக்கு பறகத்தும், றஹ்மத்துஞ் செய்வா னென்று சொல்லுவார். இன்னும், அவர் தொழுகவேண்டு மென்கிற நிய்யத்தைக் கொண்டும் எழுந்திருப்பாரே யானால், அவர் படுத்திருந்த விரிப் பானது அவருக்குத் துஆச் செய்யும், அந்தத்துஆ எவ்வித மெனில், ஆண்டவனே நீ யவருக்கு உயர்த்தியாக்கப்பட்ட விரிப்பைக் கொடுத்தருளென்று இன்னும், அவர் உடையுடுத்திக் கொண்டாரே யானால் அந்த வுடை அவருக்குச் சொர்க்கத்துடைய உடைகளில் நின்று முள்ள உடைகளைக் கொடுத்தருளென்று துஆச் செய்யும். இன்னும் அவர் செருப்பு முதலியதை யெடுத்துக் காலிலே போடுவாராகில் அந்த வஸ்துகள் ஆண்டவனே, இவருடைய இரண்டு காலையும் ஸிறாத்தல் முஸ்தகீ மென்கிற பாலத்தின் பேரிலே தரிபாடாக்கிவை யென்று துஆச் செய்யும்.

இன்னும், அவர் உலூச் செய்கிறதற்குப் பாத்திர மெடுப் பாரேயாகில், அந்த பாத்திரம், ஆண்டவனே இவருக்குச் சொர்க்கத் துடைய சகண்டியைக் கொடுவென்று துஆச் செய்யும். இன்னும் அவர் உலூச் செய்கிற தண்ணீர், ஆண்டவனே, இவருடைய பாவங்களை விட்டும் இவரை துப்புரவாக்கிவை யென்று துஆச் செய்யும். இன்னும் அல்லாஹுத் தஆலா அவாளவிற் கிருபைப் பார்வையைக் கொண்டும் பார்த்து, அடியானே நீ துஆக் கேட்கு மிடத்திலே துஆக் கேட்கிறது உன்னில் நின்று முள்ளது, அதைக் கபூல்ச் செய்கிறது என்னில் நின்று முள்ளது. கேட்கிறது உன்னில் நின்று முள்ளது, கொடுக்கிறது என்னில் நின்று முள்ளது. பிழைபொறுக்கத் தேடுகிறது உன்னில் நின்று முள்ளது, பிழையைப் பொறுக்கிறது என்னில் நின்று முள்ளது, என்று சொல்லுவான். இந்தப் படிக்குச் சிபுதத்துல் வாகிலீன் முதலான கித்தாபுகளில் சொல்லப்படுகின்றன.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள் சொன்னதாக இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். யாதெனில், றமலான் மாதத் துடைய இரவுகளில் நின்று மொவ்வோ ரிரவைக்கும் நோன்பு திறக்கும் போது, அல்லாஹுத் தஆலா நரகத்தை விட்டும் பத்து லட்சம் பேர்களை யுரிமைவிட்டு விடுவா னென்றும், இன்னும் றமலான் மாதத்தில் வெள்ளிக்கிழமை பிரவானால் அந்த இரவில் ஒவ்வோர் ஸாஅத்துக்கும் அல்லாஹுத் தஆலா நரகத்தை விட்டும் பத்துலக்ஷம் பேர்களை யுறிமை விட்டு விடுவானென்றும் இன்னும் றமலான் மாதமுதல் நாட்டொடுத்து முடிவு நாள் வரைக்கும் எத்தனை பேர்கள் நரகத்தை விட்டும் உரிமை யாக்கப்படுகிறார்களோ அத்தனைபேர்க ளெண்ணப்படிக்குள்ள பேர்களை றமலான் கடைசி நாளிரவில் அல்லாஹுத் தஆலா நரகத்தை விட்டும் உரிமை விட்டு விடுவானென்றும், இந்தப் படிக்கு இறுஷாது முதலான கித்தாபு களில் வருகின்றன.

நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், றமலான் மாதத்தில் யாதாமொருவன் நோன்பு பிடிப்பானே யாகில், அவன் 6-லட்சம் அடிமைகளை யுரிமை விட்டவர் போலும், கபூல்ச் செய்யப்பட்ட 6-லட்சம் ஒட்டகங்களை ஹதியாச் செய்திட்டவர் போலும், 6-லட்சம் வருஷம் இபாதத்துச் செய்தவர் போலு மாகிவிடுவான். இன்னும் நபி நாயகம் அவர்கள் திருவுளமானார்கள், யாதெனில்,

றமலான் மாதத்தில் யாதாமொருவன் காளொன்றுக்கு பத்துத் தடவை இஸ்திக்பார் செய்வானேயானல், அவனுக்கு அல்லாஹுத் தஆலா அருளைஷச் சமக்கிற மலக்குகள், ஜிபரீல் அலைஹிஸ்ஸலாம் மீக்காயீல் அலைஹிஸ்ஸலாம் இசுறாயீல் அலைஹிஸ்ஸலாம் இவர்களுடைய தவாபு போலுள்ள தவாபைக் கொடுத்திடுவான். அவனுடைய பாவங்களை அழித்திடுவானென்று.

இன்னும், றமலான் மாதத்தில் யாதாமொருவன் ஸஹர் செய்ததின் பின்னர் ஒரு தடவை லாஇலாஹ இல்லல்லாஹு வல்லைஹுவுல்கையூம் அல்காயமூ அலாக்குல்லி நபுசின் பிமாக்ஸப பத்து என்று ஓதுவானுகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஒரு அக்ஷரத்திற்குப் பதிலாக பத்துலக்ஷம் நன்மைகளைக் கொடுத்திடுவான். இன்னும் அவனுக்கு அதுபோலுள்ள பாவங்களை அழித்திடுவான். இன்னும் அவனுக்கு அதுபோலுள்ள தறஜாக்களை உயர்த்திடுவான். அந்தத் தறஜாவானது அடங்கலும் எழுவானம் ஏழுபூமியில் நின்றும் பெரிதாகவிருக்கும்.

இன்னும் ஒளியினுலுள்ள தூண்கள் உச்சத்தின்பேரிலே ஒளியினுலே ஆயிரமுயர்ந்த மேடைகளுண்டா யிருக்கின்றன, அந்த மேடை ஒவ்வொன்றுக்கும் ஆயிரங்கட்டிற் போட்டிருக்கின்றன, அந்தக் கட்டில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வோர் ஹூறுல்ஈன் பெண்களாக விருக்கிறார்கள். இவ்விதமான தூண்களை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானுர்கள். இந்தப்படிக்கு நவுறுர் றயாஹீன் மூஉவ்விறுமுதலான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் றமலான் மாதத்தில் யாதாமொருவன் மூன்றுபிடி வஜீபனத்தைக்கொண்டும், ஸஹர் செய்வானேயானுல் அவனுக்கு அறுபது நன்மைகள் கிடைக்கும். அதிலே அவன் துவர்க்கத்தில் பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம் என்று சொல்லி வஜீபனம் வஜீபித்ததின் பின்னுலே அல்ஹம்து லில்லாஹி என்று சொல்வானுகில் திடனுக அவனை இருபது வருஷம் இபாதத்துச் செய்திட்டானென்று அல்லாஹுத்த ஆலா எழுதிடுவான். இன்னும் நரகத்தைவிட்டும் அவனைக் காததுக் கொளவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் திருவுளமானுர்கள்.

இன்னும் றமலான் மாதத்திலே பேரீத்தம் பழத்தைக் கொண்டும், நோன்பு திறக்கிறது ரொம்பவும் ஏத்தமா யிருக்கும். நபிநாயகம் அவர்களும் பேரீத்தம் பழத்தை ரொம்பவும் உவப்பாகக் கொண்டு நோன்பு திறந்தார்கள். அப்படிப் பேரீத்தம்பழமில்லாமற் போனுல் தண்ணீர், அதற்குப் பின்னாலே மற்றக் கனிவர்க்கங்களைக் கொண்டு நோன்பு திறக்கலாம். சட்ட வஸ்துகளினாலே நபிநாயகம் நோன்பு திறக்கவில்லையென்று ஷிறஅத்துல் லிஸ்லாம் முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் றமலான் மாதத்திலே யாதாமொரு பெண்பிள்ளை தன்னுடைய புருஷன் சந்தோஷமாகும்படி நன்றாகக் கிதமத்துச் செய்து வருவாளாகில் அவளுக்கு ஆசியா மரியம்பீவி யவர்களுக்குள்ள தவாபு கிடைக்குமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். இன்னும் றமலான் மாதத்திலே யாதாமொரு முஸ்லிமானவன் ஒரு முஸ்லிமானவனுடைய ஹாஜத்தை நிறைவேற்றுவானேயானால், அல்லாஹுத் தஆலா அவனுக்குக் கியாமத்து நாளையிலே ஆயிரம் ஹாஜத்தை நிறைவேற்றி வைப்பா னென்று நபிநாயக மவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் அல்லாஹுத் தஆலா மூஸா அலைஹிஸ்ஸலா மவர்களுக்குச் சொன்னான், அதாவது யாதெனில், ஆய் மூஸாவே முஹம்மது நபியுடைய உம்மத்தோர்களுக்கு இரண்டிருள் தங்கடஞ் செய்யாம லிருக்கிறதற்காக இரண்டு ஒளிவை நான் கொடுத்திருக்கிறே னென்று. அது கேட்டு மூஸா அலைஹிஸ்ஸலாம், ஆண்டவனே, அந்த யிரண் டொளிவுமாகிறது ஏதா யிருக்குமென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹுத் தஆலா ஆய் மூஸாவே, அவ்விரண் டொளிவுமாகிறது றமலானென்கிற ஒளிவும், குறுஆனென்கிற ஒளிவுமா யிருக்குமென்றான். பின்னர் இரண்டிருளு மென்னவென்றதற்கு அல்லாஹுத் தஆலா மூஸாவே, அந்த இரண்டிருளாகிறது கபுறிலுண்டாகிற விருளும் கியாமத்து நாளிலுண்டாகிற விருளுமாகவிருக்கும். இந்த இரண்டிருளையும் அந்த இரண்டொளிவும் விலக்கி வைத்திடுமென்று சொன்னான்.

இன்னும் றமலான் மாதம் முப்பது நோன்பு பிடிக்கும்படி பறுலான சபபென்ன வென்றால், நம்முடைய பாவா ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்கள் சொர்க்க லோகத்திலே கோதுமைக்

கனியைத் தின்றபோது அது அவர்கள் வயிற்றில் முப்பதுநாட் டரிபட்டிருந்தது. அப்போது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அல்லா ஹுத் தஆலா அளவிலே தௌபாச் செய்தார்கள். அதற்கு அல்லாஹுத் தஆலா அவர்களுக்கு இரவுகாலத்துடனே முப்பது நாள் நோன்பு பிடிக்கும்படியா யேவினுன். அஃதேது காரணத்தி ஞலேயானுல், துனியாவுடைய இன்பமாகிறது நான்குகாரியத்தைக் கொண்டதாக விருக்கும். அதில் 1-வது வஜீபனம், 2-வது குடிப்பு, 3-வது ஜிமாகு, 4-வது நித்திரை ஆகிய இந்த நான்கும் அல்லாஹுத் தஆலாவைவிட்டும் அடியானைத் திரைபோட்டுக் கொள்ளுகிறதாயிருக்கும்.

ஆதலால் இந்தச் சபபைக்கொண்டும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரிலும் அவர்க ளுடைய உம்மத்துகள் பேரிலும் இரவுகாலம் வஜீபனந் தின்னவும், பகற்காலம் நோன்பு பிடிக்கவும் பறுலாக்கப்பட்டது. இவ்விதம் பறுலாக்கப்பட்ட நோன்பைப் பேணுதலாகப் பிடித்தவர்தால் அல்லாஹுத் தஆலாவுடைய வரிசையைப் பெற்றுக்கொள்ளலாம். ஆமீன்.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்துச் சொன்னுர்கள், யாதெனில் றமலான் மாதக்கடைசி யிரவானுல் வானம் பூமி இவைகளுடனே மலக்குகள் யாவரும் அழுவார்கள். அஃதேது காரணத்திற்கானுல், முஹம்மது நபியவர்களுடைய உம்மத்தோர் களுக்குப் பிடித்த முசிபத்திற்காகவென்று. இவ்விதம் நபிநாயகஞ் சொல்லக்கேட்டு, அஸ்ஹாபிமார்கள், நாயகமே அதென்ன முசிபத்துப் பிடித்ததென்று கேட்டதற்கு, நபிநாயகம் அஸ் ஹாபிமார்களைப் பார்த்து வரிசையான றமலான் போகிறதே அதுதான் முசிபத்துப் பிடிக்கிறது. ஏனென்றுல், றமலானிலே துஆக்களைக் கபூல்ச் செய்யப்படுகிறது, தைக்காக்களைக் கபூல்ச் செய்யப்படுகிறது, நன்மைகளை இரட்டிப் பாக்கப்படுகிறது, அதாபுகளைத்தட்டப்படுகிறது. ஆனதால் றமலான் போகிறதைக் காண வேறேயென்ன பெரிய முசிபத்திருக்கிறது. இவ்விதம் வானம் பூமி இவைகளுடனே மலக்குகள் யாவரும் நமக்காக அழுகிறதாயிருந்தால், இந்த வரிசைகள் சங்கைகள் நம்மை விட்டுத் தப்பிப் போகிறதற்காக அழுகையைக் கொண்டும், கை சேதத்தைக்கொண்டும் நாம் ரொம்பவுந் தகுமானவர்களென்றும் சொன்னுர்கள். இந்தப்படிக்கு ஹயாத்துல் குலூபு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

நெருப்பை வணங்கப்பட்ட மஜூசியான ஓர் மனுடன் றமலான் மாதத்தில் முஸ்லிமானபேர்கள் ஹாலிருயிருக்கிற கடைவீதியிலே தன்னுடைய மகன் ஒரு வஸ்துவை தின்னக்கண்டு கோபமாய் மகனைப் பார்த்து நீ இம்மாதத்தில் முஸ்லிமானவர்களுடைய சங்கையைக் கொஞ்சமேனும் பேணுதல் செய்யாமற் போனாய் அல்லவா? வென்று அடித்தார்.

பின்னர் ஒரு வாரத்திற்குள்ளே அந்த மனுடன் இறந்து போனார். அப்போது அவ்வூரிலுள்ள ஓர் ஆலிமானவர் கனவிலே அந்த மனுடனைச் சொர்க்கத்திலிருக்கக்கண்டு, நீ மஜூசியாயிருக்க இவ்விதஞ் சொர்க்கத்திலிருக்க உனக்கு எவ்விதங் கிடைத்த தென்று கேட்டதற்கு, அந்த மனுடன் ஆம் மெய்தான் என்றாலும், நான் மரணமடைகிற தருணத்திலே றமலானைச் சங்கை செய்த தினாலே அல்லாஹுத் தஆலா என்னை ஈமான்கொள்ளும்படிக்கும், இஸ்லாமாகும்படிக்குத் தௌபீகுத் தந்தான். நானும் ஈமான் கொண்டேன். அந்தப் பறக்கத்தினாலே எனக்கு இந்தச் சங்கைக் கிடைத்ததென்று சொன்னார். இந்தப்படிக்கு நுஸ்ஹத்து ம்றத்து முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய எமதுடத்பிறந்தான் மார்களே, சங்கையானவர்களே, அவ்விதம் றமலானைச் சங்கை செய்த ஒரு மஜூசியான மனுடனுக்கு அல்லாஹுத் தஆலாவின் கிருபையினாலே ஈமானுண்டாகும்படியான தௌபீக்குண்டாகி இஸ்லாமுடைய பதவியிற் பொருந்தி மவுத்தடைந்து சொர்க்கபதவியும் பெற்றுக் கொண்டதாக வந்திருக்கிறதே, அதுவுந்தவிர மகா சிறப்பான நமது ஷறகிலே பிக்ஹு முதலான கித்தாபுகளில் நோன்பாளிகளுக்கு முன்பாக கொடூரமான நோயாளியாக விருந்தாலும் ஒருவஸ்துவைத் தின்னவுங் குடிக்கவும் கூடாது, மறைவிலிருந்து செய்ய வேண்டு மென்றும். குழந்தைகளுக்குப் பெற்ற தாய் முதலியவர்கள் சோறு முதலான வஸ்துவை யூட்டிகிறதா யிருந்தால், நோன்பாளிகளுக்கு முன்னே யிருந்து செய்யாமல் மறைவாகவைத்துச் செய்யவேண்டு மென்றும் வந்திருக்கிறது. அப்படியிருக்க இந்தக் காலத்திலே சில புண்ணிய வான்கள் றமலானைச் சங்கைசெய்து தாங்களும் நோன்பு பிடிக்காமலிருக்கிறதுடனே நாலுபேர்களுக்கு முன்னாலேயிருந்து தீன்றின்கிறதும், ஊணுண்கிறதுந் தவிரக் கடைவீதி முதலான

இடங்களில் வெற்றிலைபாக்கு உதடுசெவக்கத் தின்னுகிறதும், சுருட்டுக் குடிக்கிறதும், தூட்போடுகிறதும், உக்காக்குடிக்கிறதும், மற்றும் பண்ணிய பதார்த்தங்களை வாங்கித்தின்னுகிறதுமாக அதபு மரியாதையை விட்டு நடக்கிறார்களே, இவ்விதமாக நாம் நடந்தால் நாளை கியாமத்திலே அல்லாஹுத் தஆலாவை எவ்விதம் சந்திக்கிறது, கேள்விக்கு என்ன ஜவாபு கொடுக்கிறது. ஆதலால் இந்த பாவை நன்றாகப் பார்வையிட்டு மேற்சொல்லப்பட்ட ஆபத்திற்கிடமாகாமல் நமது பேரிலே பறுலாக்கப்பட்ட நோன்பைப் பிடித்துவந்து அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்துகளைப் பெற்றுக் கொள்வீர்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

றமலான்மாதம் நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்
முற்றிற்று.

தறுவீஹுத் தொழுகையுடைய வரிசையின் பயான்.

ஹதீது

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்களென்று அலியிபுனு அபீதாலிபு றலியல்லாஹு அன்ஹுவர்கள் சொல்லுகிறார்கள், யாதெனில், றம்லான் மாதம் தறுவீஹுத் தொழுகையையுடைய வரிசையைப் பற்றி நபிநாயகமித்திடத்தில் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் சொன்னார்கள் றம்லான் மாதம் முதலிரவில் தறுவீஹுத் தொழுவதினால் அந்த மூமின் அன்று பிறந்த பாலகனைப்போலே பாவங்களை விட்டும் வெளிப்பட்டிடுவான்.

இன்னும் இரண்டாமிரவில் தறுவீஹுத் தொழுவதினால் அவனுக்கும் அவனைப்பெற்ற தாய்தகப்பன் மூமினாகவிருந்தால் அவர்களுக்கும் அல்லாஹுத் தஆலா பாவங்களைப் பொறுத்திடுவான். இன்னும் மூன்றாமிரவில் தறுவீஹுத் தொழுவதினால் அவனுக்கு அறுஷின் கீழாலேநின்று ஒருமலக்கு உனனுடைய முந்தின பாவங்களை அல்லாஹுத் தஆலா பொறுத்திடுவான். ஆதலால் நீ அமலைத் துயர்ந்து செய்துக் கொள்ளென்று சத்தமிடுவார்.

நான்காமிரவில் தறுவீஹுத் தொழுவதினால், அவனுக்குத் தௌறாத்து சபூர் இஞ்ஜீல் புருக்கான் இந்நான்கு வேதங்களையும்

ஓதின தவாபுபோலுள்ள கூலிகிடைக்கும். இன்னும் ஐந்தாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவனுக்கு அல்லாஹுத் தஆலா மக்கம் மதீனம் பைத்துல் முகத்திஸ் ஆகிய இம்மூன்று பள்ளிவாசலிலும் தொழுதவன் தவாபு போலுள்ள தவாபை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான். இன்னும் ஆறாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவனுக்கு பைத்துல் மஃமூறில் தவாபு செய்தவனுக்குள்ள தவாபை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான். இன்னும் அவனுக்கு கல்லும் மண்கட்டி அடங்கலும் பிழைபொறுக்கத்தேடும். இன்னும் ஏழாமிரவில் தருவீஹாத் தொழுவதினாலவன் மூஸா அலைஹிஸ்ஸலாத்தைத் தெரிசித்து பிறவூன் ஹாமான் இவர்களுக்குப் பகையாகவும், மூசா அலைஹிஸ்ஸலாத்திற்கு உதவியாகவும் மிருந்தவனைப்போலாகிடுவான். இன்னும் எட்டாமிரவில் தருவீஹாத் தொழுவானாகில் அவனுக்கு இப்றுஹீம் அலைஹிஸ்ஸலா மவர்களுக்குக் கொடுத்த தவாபு போலுள்ள தவாபை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான். இன்னும் ஒன்பதாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவனுக்கு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய இபாதத்தாக அல்லாஹுத் தஆலாவை இபாதத்துச் செய்தவனைப்போலாகி விடுவான்.

இன்னும் பத்தாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவனுக்குத் துனியாவில் ஆகிறத்திலுள்ள கைறை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான். இன்னும் பதினோராமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவன் தாய்வயிற்றில் நின்றும் பிறந்த பாலகனைப்போல் துனியாவைவிட்டும் வெளிபபடுவான். இனனும் பன்னிரண்டாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவன் பதினாலாம் நாளுடைய பூரணச் சந்திரனைப்போலே முகமிலங்கும் படியாய்க் கியாமநாளில் வருவான். இனனும் பதிமூனறா மிரவில் தருவீஹாத் தொழுவதினால், அவன் கியாமநாளி[illegible]டங்களை விட்டும் அச்சந் தீர்ந்தவனாக வருவான. [illegible]கா மிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவனுக்கு [illegible]க் கத்துகள் திடனாக அவன தருவீஹாத் தொழுதானென[illegible] சாட்சி சொல்லுவார்கள். அதனால், கியாமநா[illegible] அல்லாஹுத் தஆலா அவனைக் கேள்வி கணக்குக் கேட்கிறதை இலேசாக்குவான். இனனும் பதினைந்தாமிரவில் தருவீஹாத் தொழுவதினால் அவன்பேரில் அறுஷைச்சுமக்கிற மலக்குகளும் மற்ற மலாயிக்கத்

111529

துகளும் பிழைபொறுக்கத் தேடுவார்கள். இன்னும் பதினாறு மிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு நாகத்தை விட்டும் விடுதலையான பட்டோலையொன்றும் சொர்க்கத்திலிவன் புகுதுவானென்ற பட்டோலை யொன்றும் ஆகிய இவ்விரண்டு பட்டோலைகளையும் அல்லாஹுத் தஆலா எழுதிடுவான். இன்னும் பதினேழாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு அன்பியாக்களுடைய தவாபுபோலுள்ள தவாபை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான்.

இன்னும் பதினெட்டாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அதனையொரு மலக்கானவர் அல்லாஹுத் தஆலாவுடைய அடியானே உன்னையு முன்னுடைய தாய் தகப்பன்மார்களையும் அல்லாஹுத் தஆலா பொருந்திக்கொண்டானென்று சத்தமிடுவார். இன்னும் பத்தொன்பதாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு பிருதௌசென்னுஞ் சொர்க்கத்திலே தறஜாக்களையும் உயர்த்திடுவான். இன்னும் இருபதாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு சஹீதாக்கள் ஸாலிஹீன்களுடைய தவாபை அல்லாஹுத் தஆலா கொடுப்பான். இன்னும் இருபத்தொன்றாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்குச் சொர்க்கத்திலே யொளிவினால் ஒருவீட்டை அல்லாஹுத் தஆலா கட்டிவிடுவான். இன்னும் இருபத்திரண்டாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவன் கியாமநாளையிலே துக்கம் விசனம் சஞ்சலம் வியாகூலம் முதலிய சகல கலக்கங்களைவிட்டும் அச்சந்தீர்ந்தவனாக வருவான். இன்னும் இருபத்திமூன்றாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்குச் சொர்க்கலோகத்தி லொரு பட்டணத்தை அல்லாஹுத் தஆலா கட்டிவிடுவான். இன்னும் இருபத்தி நான்காமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு கபுறுடைய அதாபை அல்லாஹுத் தஆலா நீக்கிடுவான்.

இன்னும் இருபத்தாறாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்கு நாற்பது வருஷம் அமல்ச்செய்த தவாபை அல்லாஹுத் தஆலா உயர்த்திடுவான். இன்னும் இருபத்தேழாமிரவில் தறுவீஹூத் தொழுவதினால் அவனுக்குச் சொர்க்கலோகத்திலே ஆயிரந் தறஜாக்களை அல்லாஹுத் தஆலா உயர்த்திடுவான். இன்னும் இருபத்தொன்பதா மிரவில் தறுவீஹூத் தொழுவதினால்

அவனுக்குக் கபூல் செய்யப்பட்ட ஆயிரம் ஹஜ்ஜுடைய தவாபை அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான். இன்னும் மூப்பதா மிரவியில் தருவீஹுத் தொழுவதினால் அவனை அல்லாஹுத் தஆலா என்னுடைய அடியானே நீ சல்சபீலென்னும் ஆற்றுத் தண்ணீரிலே குளி, சொர்க்கத்திலுள்ள பழவர்க்கங்களைத் தின்னு. ஹவுலல் கவுதறென்னும் ஆற்றுத் தண்ணீரை நீ குடி, நானுன்னுடைய நாயன், நீ என்னுடைய அடியானென்று சொல்லுவான். இந்தப்படிக்கு மஜாலிசு முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹிக்காயத்து.

மூறுஷிதென்னும் கித்தாபிலே சொல்லியிருக்கிறது யாதெனில், அறுஷைச் சூழ்ந்த ஹலறத்துல் குதுசியென்னும் ஒளியினால் ஒரு தலமுண்டாயிருக்கிறது. அதிலே அல்லாவைத் தவிர எண்ணத்தை அறியக்கூடாத மலக்குகளிருந்து ஓய்வில்லாமல் அல்லாஹுத் தஆலாவை வணங்குகிறார்கள்.

அவர்கள் றமலான் மாதத்தின் இரவுவந்தால் பூமியிலிறங்கி ஆதமுடைய மக்களுடனே தொழுகிறதற்கு நாடி அல்லாஹுத் தஆலாவிடத்திலுத்திரவு கேட்டுக்கொண்டு இரவடங்கலிலும் பூமியின் பேரிலிறங்குவார்கள். அந்த மலக்குகள் ஒருவனைத் தொட்டுக்கொண்டாலும் அல்லது ஒருவன் அவர்களைத் தொட்டுக் கொண்டாலும் அவன் சிதேவித்தனம் பெற்றுக்கொள்வான். அதன்பின்பு அவனுக்கு மூதேவித்தனமில்லையென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இதற்கு காமெத்தவும் பார்த்திபமென்று உமறிபுனு கத்தாபு றலியல்லாஹு அன்ஹுவர்கள் தங்களுடைய ஸமானுவில் மனுடர்களைச் சேகரஞ்செய்து தருவீஹை விடாமல் தொழுது வந்தார்கள்.

இன்னும் றமலான்மாதம் இரவுகளில் தருவீஹுத் தொழுததின் பின்னுள் இரண்டு றக்காத்து நபில்தொழுகிறதிலே ஒவ்வோர் றக்ஆத்துக்கும் அல்ஹம்து ஓர்விடுத்தமும் குல்ஹுவல்லாஹு மூன்று விடுத்தம் ஓதித்தொழுதால் இரண்டு குறுஆன் ஓதிமுடித்த தவாபு கிடைக்குமென்று தபுசிறு மூறுதில் இன்னு அன்ஸல்னு சூறத்திற்கு மஃனுச்செய்கிறதில் வருகின்றன. இன்னும் றமலான் மாதம் இரவுகளடங்கலும் இரண்டு றக்காத்து தொழுகிறதிலே றக்ஆத்து ஒவ்வொன்றிற்கும் அல்ஹம்து

ஓர்விடுத்தமும், குல்ஹுவல்லாஹு மூன்று விடுத்தமும் ஓதித் தொழுதால் உண்மையான மார்க்கத்தைக் கொண்டு என்னை நபியாகவும் அனுப்பினனே அந்த நாயன்பேரிலே சத்தியமாகத் திடனாக அல்லாஹுத் தஆலா ஒவ்வொரு றக்குஅத்து அடங் கலுக்கும் இலட்சம் மலக்குகளை யனுப்புவான்.

அந்த மலக்குகள் அவனுக்கு நன்மைகளை யெழுதுவார்கள், தீங்குகளை அவனைவிட்டும் அழித்துப்போடுவார்கள், தறஜாவை அவனுக்கு உயர்த்திடுவார்கள், இன்னுமெழுபது அடிமைகளை வாங்கி யுரிமைவிட்ட தவாபை அல்லாஹுத் தஆலா அவனுக்குக் கொடுத்திடுவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானார்களென்று அபூஹுறைறு றலியல்லாஹு அன்ஹுவர்கள், சொல்லி இருக்கிறார்கள். இந்தப் படிக்கு அகுறல் ஆபிதீனென்னுங் கித்தாபில் வருகின்றன.

ஆதலால் எமதன்புள்ள மூமின் மூஸ்லிமாகிய உடற்பிறப்புகளே, மேலெழுதப்பட்டிருக்கிற ஹதீதுகளை உங்களுடைய அறிவென்னும் அழகான கண்ணினாற் பார்வையிட்டுச் சோம்பலில்லாமல் இபுலீசுடைய மாயாவினோத மயக்கத்திலகப்பட்டு நித்திரையை விருப்பங் கொள்ளாமல், றமலான் மாதத்திலே தறுவீஹுத் தொழுகையை ஒருநாளும் விட்டுவிடாமற்றொழுது அதிலுண்டான நன்மைகளைக் கொள்ளையாடிக் கொள்ளுங்கள். அதனால் நம்மனைவோரையும் அல்லாஹு தஆலா கிருபைகூர்ந்து பிருதௌசென்னும் சுவர்க் கத்தில் தாக்கலாக்குவான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

தறுவீஹுத் தொழுகையுடைய வரிசையின் பயான் முற்றிற்று.

லைலத்துல் கதிறுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் வள்ளலான ஒளிவான தெளிவான அஹ்மது ஹாமிது மஹ்மூது முஹம்மது மூஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதெனில், யாராகிலு மொருவன் லைலத்துல் கதிறுடைய

இரவிலே நின்று வணங்குவானாயில அவனுடைய முந்தின பாவம், பிந்தின பாவங்களடங்கலும பொறுக்கப்படுமென்று.

இன்னும் அல்லாஹுத் தஆலா குர்ஆன் ஷரீபிலே திருவுளமானான், திட்டமாக நாம் குர்ஆனை லைலத்துல் கதுறிலே இறக்கினோம், முஹம்மதே! லைலத்துல் கதிறென்னும் இராவானது உமக்கு இந்த விதமென்று அறிவித்துத் தந்தது, அதின் உண்மையை நீரறிவீரா? லைலத்துல் கதுறானது ஆயிரமாஸத்தை வணக்கத்தைக் காண மேலானதாயிருக்கும். அந்த இரவில் மலக்குகளும் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமும், அவர்கள் றப்புடைய உத்தரவு கொண்டு பூமியிலே இறங்குவார்கள். அப்படி இறங்குகிறது சகல கருமங்களைக் கொண்டு இறங்குவார்கள்.

ஹதீது

லைலத்துல் கதுறானது கிழக்கு வெளுக்கிறவரைக்கும் ஈடேற்றமானதாயிருக்கும். லைலத்துல் கதுறென்று பெயர் வைக்கப்பட்டது எதனாலெனில், அந்த இரவில் கருமங்கள், ஹூக்குமுகள், றிஸ்க்குகள் அஜல்கள் இன்னும் மற்றுஞ் செய்கைகளெல்லாம் அந்த இரவு தொடுத்து மறுவருஷம் வரைக்கும் தக்தீர் கட்டளை செய்யப்படும். ஆனதால் முஃமினாகிய உடன்பிறந்தான் மார்களே, நீங்களிதை நன்குணர்ந்து பார்த்து, லைலத்துல் கதுறுடைய இராவிலே முழிப்பாயிருந்து அல்லாஹுத் தஆலாவை வணக்கஞ்செய்தல் அதனுடைய தவாபைப் பெற்றுக்கொள்வீர்கள். லைலத்துல் கதுறென்ற இராவானது றமலான் மாதத்தில இருபத்தொன்று இராவென்றும், இருபத்து மூன்று இராவென்றும் இருபத்தைந்தா இராவென்றும் இருபத்தொன்பதா இராவென்றும் பலபல றிவாயத்துகள் வந்திருக்கின்றன. என்கிலும் ஹக்காயிக்குல் ஹனபிய்யா என்னும் கித்தாபின் சொற்படிக்கு இருபத்தேழா இராவாயிருக்கும்.

அஃதேனென்றால், லைலத்துல் கதுறென்னும் சொல்லிற்கு எழுத்து ஒன்பது, திட்டமாக அல்லாஹுத் தஆலா லைலத்துல் கதுறென்னும் லபுளை இன்னா அன்ஸல்னாஹு சூறத்தில் மூன்றிடத்தில் மடக்கி மடக்கிச் சொல்லியிருக்கிறான். ஆதலால் மூன்று சொன்ன கணக்கின் படிக்கு மூவொன்பது இருபத்தேழா யிருக்கிறபடியால் றமலான் மாதம் இருபத்தேழா இராவுதான், லைலத்துல் கதுறுடைய

இரவாயிருக்குமென்று அஸ்ஹாபுகளில் அநேகம் பேர்களும், உலமாக்களும் சொல்லி நேர்பட்டிருக்கிறார்கள்.

ஹைத்துல் கதறிரவிலே லிவாவுல் ஹம்து, லிவாவுல் நஹ்மத்து, லிவாவுல் மகுபிறத்து, லிவாவுல் கறமத்து என்னும் பெயருடைய நான்கு கொடிகளிருக்கும். அந்தக் கொடிகள் ஒவ்வொன்றின் பேரிலும் 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி' யென்றுந்திருக்கலிமா எழுதப்பட்டிருக்கும். அவைகள், ஒன்றொன்றுடனே எழுபதினாயிரம் மலக்குகள் இறங்குவார்கள். அவ்விரவிலே யாதாமொருவன் மேற்சொன்ன கலிமாவை மூன்றுதரம் சொல்லுவானாகில், அதிலேமுதற் சொன்னவரிசையைக்கொண்டும் அல்லாஹுத் தஆலா அவனுடைய பாவத்தைப் பொறுத்திடுவான் இரண்டாவது சொன்ன வரிசையைக் கொண்டும் அல்லாஹுத் தஆலா அவனை நரகத்தை விட்டு ஈடேற்றமாக்கிடுவான். மூன்றாவது சொன்ன வரிசையைக்கொண்டும் அல்லாஹுத் தஆலா அவனைச் சொர்க்கத்திலே தாக்கலாக்கிவைப்பான்

இன்னும் அந்தக் கொடிகள் நான்கில், லிவாவுல் ஹம்தென்னுங் கொடியை வானத்திற்கும் பூமிக்குமிடையிலும், லிவாவுல் நஹ்மத்தென்னுங் கொடியை நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய கபுறின் பேரிலும், லிவாவுல் மகுபிறத் தென்னுங் கொடியை கஃபாவின் பேரிலும் நாட்டப்படும். அந்த மலக்குகளில் நின்றும் ஒவ்வொருவரும் ஹைத்துல் கதறுடைய இரவில் முஸ்லிமானவர்களுடைய வீட்டுவாயிலிலே எழுபது விடுத்தம் வந்து அவர்கள் பேரிலே சலாஞ் சொல்லிவிட்டுப் போவார்கள். இந்தப்படிக்கு லவுபெத்தென்னும் கிதாபில் வருகின்றன.

இன்னும் யாதாமொருவன் றமலான்மாதம் இருபத்தேழாமிரவிற் றொழுவானாகில் றக்கு அத்து ஒன்றுக்கு அல்ஹம்து ஓர் விடுத்தம், இன்னா அன்ஸல்னா ஓர்விடுத்தம், குல்ஹுவல்லாஹுத்தைப் பதினைந்து விடுத்தம் ஓதித் தொழுகிறதிலே இரண்டு றக்கு அத்திற்கு சிந்தப்பிரகாரம் மோதித்தொழுது சலாங் கொடுத்தபின்னர் நூறுதரம் இஸ்திக்பாறு சொல்லுவானாகில், இடனுக்கு ஹைத்துல் கதறை அவன் பெற்றுக்கொள்வான். இன்னும் அவனுடைய வேலையையும் தொழுகையையும் அல்லாஹுத்தஆலா கபூல்ச் செய்வான். இன்னும் அவனுக்கு அல்லாஹுத்

தஆலா இத்ரீசு, ஷுஐபு, யூனுசு, தாவூது, அலைஹிஸ்ஸலாம் ஆகிய இவர்களுடைய தவாபுபோலுள்ள தவாபைக் கொடுப்பான்.

இன்னும் அவன்தேடிய ஹாஜத்தை அல்லாஹுத் தஆலா நிறைவேற்றிக் கொடுப்பான். இன்னும் அவனுடைய துஆவை அல்லாஹுத் தஆலா கபூல்செய்வான். இன்னும் அவன் ஓதின ஹாஜத்துகள் ஒவ்வொன்றுக்கும் பதிலாக ஜன்னத்தில் நின்றுமொரு பட்டணத்தை அவன் பெற்றுக்கொள்வான். இன்னும் ஒரு றக்ஆத்தின் துக்கவு வைதாவுக்குப் பதிலாக ஷஹீதுடைய தவாபை அவனுக்கு எழுதப்படும். இன்னும் இந்த றமலானிலிருந்து வருகிற றமலான் வரைக்கும் இடையிலே அவன் மவுத்தாகி விடுவானாகில் அவனுடைய மவுத்து ஷஹீதுடைய மவுத்தைப்போலாயிருக்குமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு மகீனென்னும் கித்தாபில் வருகின்றன.

ஆதலால் எமதன்புள்ள முஸ்லிமாகிய உடன்பிறப்புகளே! தெளிவையுடையவர்களே, மாய இபுலீசு வலைக்குள் மாட்டிக் கொள்ளாமல் உங்கள் அறிவென்னும் கண்களால் இந்தப் பாவை நன்றாகப்பார்த்து மகா சிறப்பான லைலத்துல் கதருடைய இரவு முழுமையும் விழித்திருந்து உங்களால் இயன்றமாத்திரம் தஸ்பீஹுத் தொழுதபின்னர் திக்ர் செய்வதும் குர்ஆனோதுவதுமாக இருந்து சுபுஹ் தொழுகையைத் தொழுது கொள்ளுங்கள். 'அல்லாஹும்ம இன்னக்க அபுவ்வுன் துஹிப்புல் அபுவ' என்று ஓதிக்கொள்ளுங்கள். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

லைலத்துல் கதிருடைய வரிசையின் பயான் முற்றிற்று.

ஷவ்வால்மாதம் ஆறுநோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்

ஹதீது

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதாமொருவன் ஷவ்வால்மாதம் ஆறுநோன்பு பிடிப்பானாகில் அவன் காலமெல்லாம் நோன்பு பிடித்தவனைப் போலாகி விடுவான்.

அஃதேனென்றால், ஒரு நன்மைக்குப் பத்து நன்மையென்று அல்லாஹுத் தஆலா குறஆனிலே திருவுளமானபடிக்கு றமலானுடைய நோன்பு ஒன்றுக்குப் பத்துவிகிதம் முந்நூறுநாள் நோன்பாகும், இந்தத் தொகைப் படிக்கு முந்நூற்றறுபதுநாள் ஒரு வருஷம், அதனாலேதான் காலமெல்லாம் நோன்பு பிடித்தவனைப்போலாகிடுவானென்று அபிப்பிராயமருளிச் செய்தார்கள், திடனாக அல்லாஹுத் தஆலா வானலோகத்தையும், பூலோகத்தையும் ஷவ்வால் மாதத்தில் நின்றும் ஆறு நாளையிற் படைத்தான். ஆதலால் யாதாமொருவன் அந்த ஆறுநாளையில் நோன்பு பிடிப்பானாகில், அல்லாஹுத் தஆலா அவனுக்கு கல்க்குறான் அடங்கலுடைய எண்ணத்திற்கும் பதிலாக ஒவ்வொரு நன்மையை எழுதுவான் அவனைவிட்டும் பாவங்களை யழிப்பானென்று அபிப்பிராயம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

றவுலத்துல் முத்தகீனென்னும் கித்தாபிலே கஷ்புல் அஷபாறவர்களைத் தொட்டும் பேசிவருகிறது யாதெனில், அலிறலியல்லாஹுத் தஆலா அன்ஹு அவர்கள் பீவிபாத்திமா நாயகியவர்கள் வீட்டிற்குப்போய் பீவிபாத்திமா நாயகியைப்பார்த்துப் பாத்திமாவே துனியாவினுடைய இன்பங்களில் நின்றும் உம்முடைய கல்பு எந்த வஸ்துவை நாடுகிறதென்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் அலிறலியல்லாஹு அன்ஹுவர்களுடனே, எனக்கு ஒரு, மாதுளம் பழத்தின்மேல ஹாஜத்தாயிருக்கிறதென்று சொன்னார்கள். அப்போது அலிறலியல்லாஹு அன்ஹுவர்களிடம் ஒரு வஸ்துவுமில்லாமையினாலே ஒரு ஷாஅத்து நேரம் யோசனையாயிருந்து பின்னர் எழுந்தருளியாகிக் கடைவீதியிற் போய் ஒருமனுடனிடத்தில் ஒரு திருகம் கடன்வாங்கி அதனாலேயொரு மாதுளம் பழம் வாங்கிக் கொண்டு பீவிபாத்திமா நாயகியவர்கள் வீட்டுக்கு வரும்போது ஒரு பாதையருகிலே கிடக்கப்பட்ட ஓர் வியாதியஸ்தரை அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் கண்டு அவ்வியாதியஸ்தரைப்பார்த்து ஓய் பெரியவரே, உம்முடைய கல்பு என்ன வஸ்துவை நாடுகிறதென்று கேட்டதற்கு, அப்பெரியவர் ஓய் அலியே, இவ்விடத்தில நான் ஐந்து நாளாக இருக்கிறேன், எனக்கருகாமையாக மனுடர்கள் நடந்துபோனார்கள். அப்படிப் போகிறவர்களில் நின்றும் ஒருவரு மென்னளவில் திரும்பிப்பார்க்கவில்லை.

என்னுடைய கல்பு ஒரு மாதுளம் பழத்தை நாடுகிறது என்று சொன்னார்.

அதுகேட்டு, அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் ஒரு வாஅத்து நேரம் யோசனைசெய்து தங்கள் மனதில் பீவி பாத்திமாவுக்காக நாம் ஒரு மாதுளம் பழம் வாங்கினோமே, அந்தப்பழத்தை யிவருக்குக் கொடுத்து விட்டால் பாத்திமாவுக்குப் பழமில்லையே, என்கிலும் கேட்டவருக்குக் கையிலிருக்கிற பழத்தைக் கொடுக்காமற் போவோமேயாகில் அல்லாஹுத் தஆலா கேட்டவரை நீர் விரட்டாதீரென்று குர்ஆனிற் சொன்ன சொல்லிற்கும், குதிரையின் பேரிலிருந்து கேட்டபோதிலும் கேட்டவரை நீங்கள் விரட்டாதீர்களென்று நபிநாயகமவர்கள் சொன்ன சொல்லிற்கும் விரோதமாகுமென்று மனதிலெண்ணி அம்மாதுளம்பழத்தை யுடைத்து அந்தப் பெரியோருக்கு முழுமையுந் தின்னக் கொடுத்து விட்டார்கள். அந்த வாஅத்திலேயே அந்தப் பெரியவருக்கும், பீவிபாத்திமாறலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கும் சுவாத்தியமாக்கப்பட்டது. அப்போது அலிறலியல்லாஹு அன்ஹு பீவிபாத்திமாவுக்குக் கொடுக்கிறதற்குப் பழமில்லையேயென்று வெட்கிதவர்களாய் வீட்டுக் வந்தார்கள்.

அப்போது பீவிபாத்திமாநாயகி அலிறலியல்லாஹு அன்ஹுவர்களைக் கண்டு எழுந்திருந்து சங்கைசெய்து என்னுடைய நாயகமே, நீங்கள் விசனப்பட்டவர்களாக இருக்கிறீர்களே, அல்லாஹுத் தஆலாவுடைய சிறப்பு வகுப்பத்தின பேரிலாணையாகத் திடனாக நீங்கள் அந்தப்பெரியோருக்கு மாதுளம் பழத்தைக் கொடுத்து வஜ்பனமாக்கி வைத்தபோது என்னுடைய கல்பைவிட்டு மாதுளம் பழத்துடைய தேட்டம் நீங்கி விட்டதென்று சொன்னார்கள்.

அப்போதுபீவி பாத்திமாநாயகி யவர்களுடைய சொல்லைக் கேட்டு அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் மனதில் மிகவுஞ் சந்தோஷமானார்கள். அந்த வேளையில ஒருவர் வந்து கதவை தட்டினார். உடனே அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள், வந்த அந்த மனுடனைப் பார்த்து நீர் யாரென்று கேட்டார்கள். அதற்கந்த மனுடன் நான் சல்மான் பாரிசாயிருக்கும். ஆகலால் யா அலியே கதவை திறக்கவென்று சொன்னார்கள். உடனே அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் எழுந்து கதவைத் திறந்தார்கள். அப்போது

சல்மான் பாரிசவர்கள் கையிலேபிடவையைக் கொண்டு மூடப்பட்ட ஓர் தபக்கு இருக்க அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் கண்டார்கள். அந்தத் தபக்கைச் சல்மான் பாரிசவர்கள் அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் முன்னிலே வைத்தார்கள்.

அப்போது அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் சல்மான்பாரிசவர்களைப்பார்த்து, ஓய் சல்மானே, இந்தத் தபக்குயாரில் நின்று வந்ததென்று கேட்டதற்குச் சல்மான் பாரிச அலிறலியல்லாஹு அன்ஹுவர்களைப்பார்த்து இது அல்லாஹுத்தஆலா அளவில் நின்றும் றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களளவில் வந்து அவர்கள் உங்களுக்குத் தந்தார்களென்று சொன்னார்கள்.

அப்போது அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் அந்தத்தாம்பாளத்தைத்திறந்து பார்க்கவே, அதிலே ஒன்பது மாதுளம் பழம் இருக்கக்கண்டு அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் சல்மான் பாரிசைப் பார்த்து, ஓய் சல்மானே, இஃதெனக்குள்ளதாயிருந்தால் ஒன்றுக்குப் பத்தென்று அல்லாஹுத் தஆலா சொன்னபிரகாரம் பத்துபழ மிருக்க வேண்டுமேயென்றதற்குச் சல்மான் பாரிசவர்கள் சிரித்துக் கொண்டு தாங்களணிந்திருக்கிற சட்டைக்குள் நின்றும் ஒரு மாதுளம் பழத்தை வெளிப்படுத்தி அந்தத் தாம்பாளத்தில் வைத்து, யா அலியே! அல்லாஹுத் தஆலாவின்பேரில் ஆணையாக இது பத்து பழமாயிருக்கது. அதில் ஒரு பழத்தை உங்களைச் சோதிக்கக்கருதி நானெடுத்து சட்டைக் கையில் வைத்து மறைத்தேனென்று சொன்னார்கள். அது கேட்டு அலிறலியல்லாஹு அன்ஹுவர்கள் சந்தோஷமானார்கள்.

ஆறு நோன்பு, ஆண் பெண் யாவரும் பிடிக்க வேண்டுமென்று கித்தாபுகளில் வந்திருக்க, இந்த ஜமானில் சில புண்ணியவான்கள் சொல்லுகிறார்கள், ஆறுநோன்பு பெண்டுகள் தான் பிடிக்கிறது, ஆண் பிள்ளைகள் பிடிக்க அக்கரையில்லையென்று விட்டுவிடுகிறார்கள். அப்படி ஆறு நோன்பு பெண்டுகளுக்கு மாத்திரம் உரித்து, ஆண்களுக்கு உரித்தில்லையென்று ஒருவரும் ஒரு வெளிறுஞ் சொல்லவில்லையே.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய உடன் பிறப்புகளே, உங்களுடைய மேலான அறிவைக் கொண்டும் இந்தப்பாவை கண்ணுறப்

பார்வையிட்டு அன்பெண் யாவரும் ஷவ்வால்மாதம் ஆறுநோன்பைப் பிடித்து வந்து அதனுடைய தவாபைக் கொள்ளையாமல் கொள்ளுங்கள். அதனால் நம்மனை வோருக்கும் அல்லாஹுத் தஆலா கிருபை தர்மத்தைச் செய்வான. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஷவ்வால்மாதம் ஆறுநோன்புபிடிக்கிறவரிசையின் பயான் முற்றிற்று.

துல்ஹஜ்ஜுமாதம் அறபா என்னும் மொன்பதாம் நாள் நோன்புபிடிக்கிற வரிசையின பயான்.

ஹதீது

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதெனில், யாதாமொருவன் துல்ஹஜ்ஜு மாதம ஒனபதாம் நாள் நோன்பு பிடிப்பானுகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஐயூபு நபியவர்கள் நோயின் பேரில் ஸபுறுச்செய்த தவாபைக் கொடுப்பான். இன்னும் அறபா என்ற ஒன்பதாம்நாள் நோன்பு பிடிப்பானுமேல் அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களுக்குக் கொடுத்த தவாபைப் போலுள்ள தவாபை கொடுப்பானென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

இன்னும் உம்முசல்மா றலியல்லாஹு அன்ஹுமா அவர்களைத் தொட்டும் பேசிவருகிறதுயாதெனில், நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள், அறபா என்ற ஒன்பதாம் நாள யாதாமொருவன் நோன்பு பிடிப்பானுகில் அவனுக்குக் கூச்செய்யப்பட்ட ஹாஜிகளுடைய எண்ணத்தித்துப் பிழை பொறுக்கப்படுமென்றும், இன்னும் அவனுக்கு என்னுடைய ஷபா அத்துவாஜிபென்றும் இன்னும் அவனை நரகத்தைவிட்டும் எழுபது வருஷத் தொலைதூரப்படுத்தப்படுமென்றும், இன்னும் யாதாமொருவன் துல்ஹஜ்ஜுமாதம அறபா என்னும் ஒன்பதாம் நாள் நோன்பு பிடிப்பானுகில அவனுக்கு முன்பின் பாவத்தை அல்லாஹுத் தஆலா பொறுத்திடுவானென்றும் நபிநாயகம் திருவுளமானார்கள்.

ஆனதால், முஸ்லிமாகிய எனது பிரியமுள்ள பிறவிகளே! இந்தப் பாவைப் பார்வையிட்டு துல்ஹஜ்ஜில அறபா என்னும் ஒன்பதாம் நாள் நோன்புகளைப் பேணுதலாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள். அல்லாஹுத் தஆலாவுடைய றஹ்மத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

துல்ஹஜ்ஜுமாதம் அறபா என்னு மொன்பதாம் நாள் நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

ஐயாமுல் பீலென்னும் பெயர் பெற்ற மூன்றுமூன்று நோன்புபிடிக்கிற வரிசையின் பயான் ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள் யாதெனில், மாத மாதம் யாதாமொருவன் மூன்று மூன்று நோன்பு பிடிப்பானாகில், அவன் காலமெல்லாம் நோன்பு பிடித்தவனைப் போலாகுவானென்றும் இன்னும் நபிநாயகம் ஊரிலும், பேரிலும் ஆனாலுமிருக்கும் போது ஐயாமுல் பீலுநோன்பை விடமாட்டார்கள்.

ஆனால் ஐயாமுல்பீலென்று சொல்லுகிறது மாதமாதம், 13-14 15-இந்நாட்களில் நோன்பு பிடிக்கிறதாயிருக்கும். இன்னும் ஐயாமுல் பீலென்னுஞ் சொல்லுக்குப் பொருளாகிறது, வெளுத்த நாளென்று சொல்லப்படும். அது என்ன சபபைப்பற்றி வெளுத்த நாளென்று பேரிடப்பட்டதென்றால், பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொர்க்கலோகத்திலே நின்று பூலோகத்திலிறங்கினபோது பொழுதினுடைய சூட்டினால் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய திரேகமெல்லாம் கறுத்துப் போய் விட்டது. அப்போது ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களிடம் வந்து அவர்களை ஐயாமுல்பீலு நோன்பு பிடிக்கும்படி ஏவினார்கள். அது கேட்டு பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் ஐயாமுல் பீலு நோன்பு பிடித்து வந்தார்கள். அப்போது முதல் நாளில் அவர்களுடைய திரேகம் மூன்றிலொரு பங்கு வெளுமையாகினதும் இரண்டாம் நாள் நோன்பிலே யவர்களுடைய திரேகம் மூன்றில இரண்டு பங்கு வெளுமையாகினதும், மூன்றாம் நாள் நோன்பிலே யவர்களுடைய திரேக முழுமையும் வெளுமையாகினது. இதற்காகத்தான மாதமாதம மூன்று நோன்பு பிடிக்கிறதற்கு ஐயாமுல் பீலென்று பெயர் கொடுக்கப்பட்டது.

இதுவல்லாமல் வியாழக்கிழமை, திங்கட்கிழமை இவ்விரண்டு நாட்களில் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் நோன்பு பிடித்து வந்திருக்கிறார்கள். அதைக் குறித்து அவர்களிடம் கேட்கப் பட்டபோது இந்த இரண்டு நாட்களில் அல்லாஹுத் தஆலா முஸ்லிமானவர்களுக்குப் பிழை பொறுப்பான், வெறுத்திருக்கும் இரண்டு பேரைத்தவிர. அவர்களை விட்டு விடுங்கள் சல்லஹ் செய்து மட்டுமென்றும் அல்லாஹுத் தஆலா சொல்லிவிடுவானென்று, இவ்விதம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஆகையால் மூமின் முஸ்லிமாகிய இகுவான்களே! எமது பிரியமானவர்களே! இந்த பாகை நன்றாகப் பார்வையிட்டு மேற்சொன்ன விபரப்படிக்கு நோன்பு பிடித்து அதனுடைய தவாபைக் கொள்ளைபடித்துக் கொள்வீர்களாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஐயாமுல் பீலென்றும் பேர்பெற்ற மூன்றுமூன்று நோன்புபிடிக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

முஹர்றமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், முஹர்றமாதம் ஆஷூறா நாளில் யாதாமொருவன் நோன்பு பிடிப்பானாகில் அவன் வருஷமெல்லாம் நோன்பு பிடித்தவனைப் போலாகி விடுவான்.

இன்னும் ஆஷூறா நாள் மகாசிறப்பான வரிசையான சங்கையான நாளாயிருக்கும். அதே நாளையில் அல்லாஹுத் தஆலா வானலோகம் பூலோகம், கலம் இவைகளைப் படைத்தான். இன்னும் அதே நாளையில் ஜிபுரீல், மீக்காயீல், இஸ்றாபீல், அலைஹிஸ்ஸலாம் இவர்களைப் படைக்கப்பட்டது. இன்னும் அதே நாளையில் அல்லாஹுத் தஆலா ஆதம் அலைஹிஸ்ஸலாம், ஹவ்வா அலைஹிஸ்ஸலாமிவர்களைப் படைத்தான்.

இன்னும் அதே நாளையில் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தௌபாவைக் கபூலாக்கப்பட்டது. இன்னும் அதே நாளையில் இதரீசு அலைஹிஸ்ஸலாமவர்களை மேலான இடத்தி லுயர்த்தப்

பட்டது. இன்னும் அதே நாளையில் நூஹு அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கப்பல் நூற்றம்பதுநாள் தூபிடத்திலுந் தரிபடாமல் தண்ணீரி லோடிக் கொண்டு திரிந்த பின்னர் ஜூதியா என்னும் மலையின்பேரிலே தரிபட்டது.

இன்னும் அதே நாளையில் இபுறாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் பிறந்தார்கள். இன்னும் அதேநாளையில் அவர்கள் உபாத்தானார்கள். இப்பேர்பட்ட வரிசையான ஆஷூறாநாளுடைய சங்கையை அறியாத சிலர் இலேசாக யெண்ணிக் கலியாணம் முதலானதுஞ் செய்யக் கூடாதென்று சொல்லுகிறார்கள். வேஷங்கள் போட்டு ஷறஹுக்கு விரோதமான காரியங்களனேகமாய் நடத்துகிறார்கள். அல்லாஹுத் தஆலா அப்பேர்பட்ட சொல்லைவிட்டும். செயலைவிட்டும் நம்மனைவோரையுங் காத்துக் கொள்வானாகவும் ஆமீன்.

ஹிக்காயத்து.

இபுனு அப்பாசு றலியல்லாஹு அன்ஹுவவர்களைத் தொட்டும் பேசிவருகிறது யாதெனில், நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருமதீனமா நகரத்திற்குப் போனபோது அங்கே யஹூதிகள் முஹர்றமாதம் ஆஷூறாவென்னும் பத்தாம் நாள் நோன்பு பிடிக்கக் கண்டு, அவர்களிடத்தில் நபிநாயகம் இதென்ன நாளென்று கேட்டார்கள். அதற்கவ் யெஹூதிகள் நபிநாயகத்தைப் பார்த்து இது வல்லமையான நாள். இந்நாளிலே அல்லாஹுத் தஆலா மூஸா அலைஹிஸ்ஸலாத்தையும் அவர்களும்மத்தையும் ஈடேற்றமாக்கி வைத்துப் பிறவூனையும் அவனுடைய கவுமுகளையும் ஹலாக்காக்கினன்.

ஆதலால், அந்நாளையில் அல்லாஹுத் தஆலாவுக்குச்சுக்குறுச் செய்ததுக்காக மூஸா அலைஹிஸ்ஸலாம் நோன்புபிடித்தார்கள். அதனாலே நாங்களும் நோன்பு பிடிக்கிறோமென்று சொன்னார்கள். அதுகேட்டு நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அந்த யஹூதிகளைப்பார்த்து நாங்கள் மூஸா அலைஹிஸ்ஸலாத்தைக் கொண்டும் உங்களை பார்க்கிலும் மெத்தப் பார்த்தியமானவர்கள். ஆதலால், நாங்கள் மூஸா அலைஹிஸ்ஸலாத்தைக் கொண்டு மெத்தவும் தருமமானோம், மெத்தவும் பார்த்தியமானோம் என்று சொல்லிப் பின்னர் நபிநாயகம் ஆஷூறா நோன்பைத் தாங்களும் பிடித்துத் தங்கள் அஸ்ஹாபிமார்களையும் அந்த நோன்பு பிடிக்கும்படிக்கு ஏவினார்கள்.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமவர்கள் அஸ்ஹாபிமார்களைப் பார்த்து நீங்கள் முஹர்ரம்
மாதம் ஒன்பதாம்நாள் பத்தாம்நாள் நோன்பு பிடியுங்களென்று
திருவுளமானார்கள், ஆதலால் யஹூதிகளைக் கொண்டு ஒப்பு நீங்கு
கிறதற்காகத்தான் ஒன்பதாம்நாள் பத்தாம்நாள் நோன்பு பிடிக்க
வேண்டுமென்று சொன்னார்கள். இது இஹ்யாது குத்துபா
முதலான கித்தாபுகளில வருகின்றன.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ
ஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதாமொருவன் ஆஷுறா
நாளில் நோன்பு பிடிப்பானாகில் அவனுக்கு அல்லாஹுத் தஆலா
ஆயிரம் ஹஜ்ஜும், ஆயிரம் உம்றாவும் செய்தவனுடைய தவாபை
யெழுதிடுவான். இன்னும் அவனுக்கு ஆயிரம் ஷஹீதுகளுடைய
தவாபைக் கொடுக்கப்படும். இன்னும் அவனுக்கு மக்ரிபு மஷ்ரிகு
இவ்விரண்டுக் கிடையிலுள்ளவர்கள் செய்த அமலின் கூலி
போலுள்ள கூலியை யெழுதப்படும்

இன்னும் அவன் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய
பிள்ளைகளில் நின்றும் ஆயிரம் பிள்ளைகளை உரிமை விட்டவனைப்
போலாகிவிடுவான். இன்னும் அவனுக்குச் சொர்க்கலோகத்திலே
எழுபதினாயிரம் மாளிகைகளைக் கட்டப்படும். இன்னும் நரகத்தின்
பேரிலே அவனுடைய தேகத்தை அல்லாஹுத் தஆலா ஹறாமாக்
கிடுவானென்று.

இன்னும் வேறொரு ஹதீதில் வருகின்றது, யாதெனில்,
ஆஷுறாநாளில் யாதாமொருவன் நோன்பு பிடிப்பானாகில் அவனுக்
கு பதினாயிரம் மலக்குகளுடைய தவாபைக் கொடுக்கப்படும்.
இன்னும் யாதாமொருவன் ஆஷுறாநாளில் 'குல்ஹுவல்லா' சூறத்
தை ஆயிரந்தடவை யோதுவானாகில் அவனை யல்லாஹுத்
தஆலா றஹ்மத்தென்கிற கண்கொண்டு பார்ப்பான். இன்னும்
அவனைச் ஸித்தீகீன்களில் நின்றும் எழுதப்படும். இந்தப்படிக்கு
நுஸ்ஹத்தென்னுங் கித்தாபில் வருகின்றது.

ஹிக்காயத்து.

ஆஷுறாநாளையில் உலகத்திலுண்டான மிருகஜாதி யினங்
களும் புழுப்பூச்சிகளான ஜந்துக்களும், பறவையினங்களு
மாகிய இவைகளெல்லாம் நோன்பு பிடிக்குமென்று இஹ்யாது
முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

பதரு என்பவர்களைத் தொட்டும் பேசிவருகிறது யாதெனில் ரொட்டியைப் பிய்த்து நுணுக்கி எறும்புக்குழியிற் போடுகிறவனாக நானிருந்தேன். அதிலே ஆஷூறானாளானபோது எறும்புகள் ரொட்டிப் பொடிகளைத் தின்ன வில்லாததை நான் கண்டேனென்று பதரு என்பவர்கள் சொன்னார்கள்.

இன்னும் ஆஷூறாநாளில் யாதமொருவன் ஸதக்காக் கொடுப்பானாகில், அவன் வருஷமுழுவதும் ஸதக்காக் கொடுத்தவனைப் போலாகிடுவான். இன்னும யாதாமொருவன் ஆஷூறா நாளையிலே தன்னுடைய பெண்சாதி, பிள்ளைகள், பந்து குடும்பத்தார்கள் பேரில் றிஸ்க்கை விஸ்தீரணப் படுத்துவானாகில் அவன்பேரில் அல்லாஹுத் தஆலா அந்த வருஷமெல்லாம றிஸ்க்கை விஸ்தீரணப்படுத்துவான். இந்த ஹதீதைக்கொண்டும் நாங்கள் ஐம்பது வருஷஞ் சோதித்துப் பார்த்தோம். அதுபோல நாங்கள் கண்டோமென்று சுபியான் றஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்னும் ஆஷூறாநாளில் பத்து மூமினுக்குச் சலாஞ் சொன்னால் பூலோகத்திலுண்டான மூமின்கள் அடங்கலுக்கும் சலாஞ் சொன்னவனைப் போலாகிவிடுவான். இன்னும் அந்நாளையில்யாதாமொருவன் உலமாக்கள் பெரியோர்களுடைய கையைப்பிடித்துத் தசபீஹு கொடுப்பானாகில், அவன் கபுறைவிட்டும் எழும்பும்போது மலக்குகள் அவனுக்குத் தசபீஹு கொடுப்பார்கள். இந்தப்படிக்கு அத்தென்னுங் கிதாபில் வருகின்றன.

இன்னும் ஆஷூறாநாளில் சுறுமா விட்டுக்கொண்டால் அந்த வருஷம் வரைக்கும கண்ணுக்கு வியாதி யுண்டாகமாட்டாது. இவ்விதம் கண்ணுக்குச் சுறுமாக் கொடுக்கிறது ஹனபி மதஹபின்படிக்கு ஆகுமானது, ஷாபிஈ மதுஹபின்படிக்குச் சுறுமாக் கண்ணிற் கொடுக்கிறதென்று வரவில்லை.

இன்னும் தௌறாத்து வேதத்தில் ஆஷூறாநாளையில் யாதாமொருவன் நோன்பு பிடிப்பானாகில் அவன் காலமடங்கலிலும் நோன்பு பிடித்தவனைப்போலாகிவிடுவானென்று எழுதப்பட்டிருக்கிறது. இன்னும் ஆஷூறாநாளையில் யாதாமொருவன் யத்தீமாய பிள்ளையின் தலையைத் தடவுவானாகில் உரோமமொன்றுக்குப் பதிலாக ஒவ்வோர் தறஜாவை அவனுக்குச் சொர்க்கத்தில் அல்லாஹுத் தஆலா கொடுத்திடுவான்.

ஹிக்காயத்து.

யாபியீ இமாமவர்கள் சொல்லியிருக்கிறார்கள், யாதெனில், ரீப்பென்று சொல்லப்பட்ட ஊரிலே சிமாஅயிய ஒரு காஸியானவரிருந்தார். அவரிடத்திலே ஆஷூரா நாளில் ஒரு பக்கீரானவர்போய் அவரைப்பார்த்து ஓ காஸியாரே, அல்லாஹுத் தஆலா உம்மைச் சிறப்பாக்கி வைப்பான். நான் குழந்தைகளுடைய பக்கீருனவன். ஆதலால் இந்த ஆஷூருவில நீர்ச்செய்யுஞ் சங்கையைக் கொண்டும் ஏதேனும் வாங்கிக்கொண்டு போகலாமென்று இடருகை வந்தபடியால் அந்த ஆஷூருவினுடைய சங்கைக்காக நீரெனக்குப் பத்துமணங்கு ரொட்டியும் ஐந்துமணங்கு இறைச்சியும், இரண்டு திருகமும தாருமென்று கேட்டார்.

அப்போது, காஸியானவர் பக்கீரைப்பார்த்து, நீர் ளுஹருடைய வக்த்தில் வாருமென்று சொன்னார். அதுபோலே பக்கீர் ளுஹறு நேரத்தில் வந்தபோது, காஸியார் பக்கீரைப்பார்த்து, நீர் அசறுடைய நேரத்திற்கு வாருமென்றார். அதுபோலே பக்கீர் அசறு நேரத்தில் வந்தபோது காஸியார் ஒன்றுங்கொடுத்தாரில்லை.

அப்போது பக்கீர் மனவருத்தமாக அருகாண்மையாயிருக்கிற ஓர் நசுறானியைப்பார்த்து, இந்தச் சங்கையான ஆஷூரா நாளுடைய உண்மையின்பேரில் லாயிக்காக எனக்கு ஒரு வஸ்து நீர் கொடுமென்று கேட்டார். அதற்கு நசுறானி பக்கீரைப்பார்த்து நீர் சங்கையானவலுப்பமான நாளைக் கொண்டும் சத்தியஞ் செய்துவிட்டீர். ஆதலால் உம்முடைய ஹாஜத்தைச் சொல்லுமென்று கேட்டான்.

அதற்குப் பக்கீருனவர் காஸியிடத்திற் கேட்டபடிக்கு நசுறானியிடத்தில் ரொட்டியும், இறைச்சியுந் திருகமுங் கேட்டார். உடனே நசுறானி பத்துப்பரைத் தொலிக்கோதுமையும், நூறுமன் இறைச்சியும், இருபது திருகமும் பக்கீருக்குக் கொடுத்து, நான் ஹயாத்தாயிருக்குங் காலமெல்லாம் இதுபோலே உமக்கும் உம்முடைய பிள்ளைகளுக்கும் வருஷாவருஷம் கொடுத்துக்கொண்டு வருவேனென்று சொன்னான்.

அதுகேட்டு பக்கீருனவர் நசுறானிகொடுத்தவைகளை யெடுத்துக் கொண்டு தமது வீட்டிற்கு வந்துவிட்டார். பின்னர் இரவானபோது காஸியார் நித்திரை செய்தார். அப்போது அவர் கனவிலே உருத்தோற்றமின்றி, ஓய் காஸியாரே, உமது தலையை உயர்த்திப் பாருமெனவோர் சத்தங் கேட்டார். உடனே காஸியார் தன் தலையை உயர்த்திப் பார்த்தபோது, சுவர்க்கத்திலுள் இரு மஹலும்

வெள்ளியினுலொரு கல்லும் அடுக்கடுக்காய் வைத்துக் கட்டப்பட்ட ஓர் மாளிகையும், உட்புறம் வெளிப்புறத்திலிருந்து பார்த்தாற் தெரியுமோ, அப்பேர்க்கொத்த செவந்த மாணிக்கத்தினுலே கட்டப்பட்ட ஓர் மாளிகையும் பார்த்து, என்னாண்டவனே, இந்த இரண்டு மாளிகையும் யாருக்கென்று கேட்டார். அதற்கு நீர் அந்தப் பக்கீறுடைய ஹாஜத்தை நிறைவேற்றியிருந்தால் அதற்காக உமக்கு இந்த இரண்டு மாளிகையுமுண்டாயிருந்தது. நீர் பக்கீறுக்கு ஒன்றுங் கொடுக்காமற் போனபடியால் அந்தப் பக்கீறுக்குக்கொடுத்த நசுறுனிக்கு இவ்விரண்டு மாளிகையு முரித்தாகி விட்டதென்று சொல்லப்பட்டது.

அதுகேட்டுக் காலியார் திடுக்கிட்டுப்பதறிக் கண்ணை விழித்தெழுந்து, கெட்டேனே, கெட்டேனே, கைசேதமேயென்று கதறிச் சத்தமிட்டுக் கொண்டு காலையில் அந்த நசுறுனிடத்திற் போய் இக்காலையில நீ என்ன நன்மை செய்தாயென்று கேட்டார். அதற்கு நசுறுனி காலியாரைப் பார்த்து, நீர் ஏனதைக் கேட்கிறீரென்றுர். அப்போது காலியார் தான் இராவுகண்ட கனவை நசுறுனிக்குச் சொல்லி, நீ அந்தப் பக்கீறுக்குச் செய்த நன்றிக்காக உனக்குக் கொடுத்திருக்கிற அந்த அழகான இரண்டு மாளிகை எனக்கு லக்ஷத்திநூறத்துக்கு விற்றுப்போடென்று சொன்னார். அதுகேட்டு நசுறுனி காலியாரைப்பார்த்து, ஓய் காலியே, கபூல்ச் செய்யப்பட்ட அடங்கலும் விலைபதிகமான விலையாயிருக்கும். ஆனதால் நீர் இந்தப் பூமிநிரம்பத் தங்கத்தைத் தந்தபோதிலும் அதை நான் உமக்கு விற்கமாட்டேனென்று சொன்னான்.

அதுகேட்டுக் காலியார் நசுறுனியைப் பார்த்து, நீ இரண்டு மாளிகையைக் கொண்டு மென்பேரில் பகீல்த்தனம் செய்கிருயா? வென்றுர். அதுகேட்டு நசுறுனி காலியாரைப்பார்த்து, நீர் முஸ்லிமானவரல்லவென்று சொல்லித் தன்னுடைய மேலேகிடந்த பூணூலையறுத்தெறிந்து போட்டு, இது உண்மையாகவுள்ள தீன்மார்க்கமாக இருக்குமென்று 'அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதர் றசூலுல்லாஹி' என்று ஷஹாதத்துக் கலிமாவைச் சொல்லி இசுலாமாயினுர். இந்தப்படிக்கு இர்ஷாது முதலான கித்தாபுகளில் வருகின்றன.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய இகுவான்களே! உங்களுடைய இமியென்று சொல்லும் கண்களால் இந்தப் பாபை நன்குகப் பார்வையிட்டு ஆஷூறு நோன்பு பிடித்து நல்ல அமலைச் செய்து, ஹறுமானதைத்தவிர ஹலாலான வஸ்துக்களைத் தங்கள் தங்கள் நாட்டம்போலே அல்லாஹுத் தஆலாவிடத்திற் கேட்

டால் அவன் கிருபை செய்து கொடுப்பானென்றும் தீங்கை விக்கி ரணமாக்குவானென்றும் குத்துபா முதலான கித்தாபுகளில் வந்திருப்பதால், அதேபிரகாரம் அல்லாஹுத் தஆலாவிடத்தில் கேட்டுக்கொள்ளுங்கள். அவன் நம்பினோருக்கு கிருபை றஹ்மத்துச் செய்வான். ஆமீனயாறப்பல் ஆலமீன்.

முஹர்றமாதம் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

றஜபு மாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், றஜபுமாதம் யாதாமொருவன் நோன்புபிடிப்பானாகில் அவன் ஆயிரம் வருஷம் நோன்பு பிடிப்பவனைப் போலாகிடுவான், இன்னும் அவனுடைய பாவத்தை அல்லாஹு தஆலா பொறுத்திடுவான். இன்னும் அவனுக்கு எழுபது ஹாஜத்தை அல்லாஹுத் தஆலா நிறைவேற்றி வைப்பான். இன்னும் அவன் ஒரு நாள் நோன்பு பிடிக்கிறதற்குப் பதிலாக இஸ்மாயீல அலைஹிஸ்ஸலாமவர்களுடைய பிள்ளைகளில் நின்று மொருபிள்ளையையுரிமை விட்டவனைப் போலகிடுவான்.

இன்னும் யாதாமொருவன் றஜபுமாதத்தில் 'குல்ஹுவல்லாஹு' சூறத்தை யோதுவானாகில், அவனுக்கு எழுபது வருஷத்துடைய பாவத்தைப் பொறுக்கப்படுமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

சொர்க்கலோகத்தில் ஓராறுண்டாயிருக்கிறது. அந்த ஆற்றுக்கு றஜபென்று பேர்சொல்லப்படும் அதில தண்ணீரானது பாலிலும அதிக வெண்மையும், தேனிலும் மிகுந்த தித்திப்புமுடைய தாயிருக்கும். ஆதலால் யாதாமொருவன் றஜபுமாதம் நாட்களில் ஒன்றமொருநாள் நோன்பு பிடிப்பானாகில் அவனுக்கு அல்லாஹுத தஆலா அந்த ஆற்றினுடைய தண்ணீரைக் குடிப்பாட்டுவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமவர்கள திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் றஜபுமாதம் நாட்களில் மூன்றும் நான்குநாள நோன்பு பிடிப்பானாகில, அவன் பலாய், பயித்தியம், வெண்குஷ்டம், கருங்குஷ்டம, தஜ்ஜாலுடைய பித்னா இவைகளை விட்டும் சுவாத்தியமாக்கப்படுவான்.

இன்னும் யாதாமொருவன் றஜபுமாதத்தில் ஐந்து நாள் நோன்பு பிடிப்பானாகில், அவன் கபுறுடைய அதாபைவிட்டும் அச்சந்தீரப்படுவானென்று நபிநாயகர் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் றஜபு மாதத்தில் பதின்மூன்று, பதினாலாம் நாள் நோன்பு பிடிப்பானாகில் அவன் மூவாயிரம் வருஷம் நோன்பு பிடித்தவனைப்போலாகுவானென்று நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

பஸறா ராச்சியத்தில் ஒரு ஆபிதான பெண்பிள்ளை யிருந்தார்கள். அவர்களுக்கு மவுத்து அணுகுமானபோது றஜபுமாதத்தில் தங்கள் மகனையழைத்து நானுடுத்தி இபாதத்துச்செய்த பிடவையை எனக்குக்கபனிட்டு அடக்கஞ்செய்யென்று வசியத்துச்செய்து பின்னர் மவுத்தாகிப் போனபோது அந்த அம்மாள் சொன்ன பிடவையைக்கபனிடாமல் மகன் வேறே பிடவையைக் கொண்டு கபனிட்டு கபுரில் அடக்கிவிட்டு வீட்டுக்கு வந்தபோது அந்த அம்மாளுக்கு இட்டடக்கிய கபனை வீட்டிலிருக்கவும் அந்த அம்மாள் முன்சொன்ன பிடவையை வைத்திருந்த இடத்தில் அது இல்லாமலிருக்கவும் மகனார்கண்டு அவ்விடத்தில் நின்றும் மிகுந்த ஆச்சரியங்கொண்டார்.

அப்போது உருத்தோற்றமில்லாமல் ஒரு சத்தமுண்டானது. யாதெனில், ஓ மனுடனே, உம்முடைய கபனை நீர் தொடுத்துக்கொள்ளும். திடனாக அந்த அம்மாள் பிடவையைக் கொண்டும் அவர்களை கபன்செய்து போட்டோம். திடனாக நாம் றஜபுமாதத்தில் நோன்பு பிடித்தவர்களைக் கபுறிலே சலித்தவர்களாக இறக்கிவைக்க மாட்டோமென்று சத்தமுண்டாயிற்று.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய நேசர்களே! உங்களுடைய அழகான அறிவுக்கண்களால் மேற்சொன்ன ஹதீது ஹிக்காயத்தை நன்றாய்ப் பார்வையிட்டு றஜபுமாதத்தில் நோன்பு பிடித்து அதிலுள்ள தவாபுகளைப் பெற்றுக் கொள்வீர்களாக. ஆனால் அல்லாஹுத்தஆலா நம்மனைவோர்களுக்குந் கிருபை தருமத்தைச் செய்வானாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

றஜபுமாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

ஷஃபான்மாதத்தில் நோன்பு பிடிக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

ஷஃபான்மாத நாட்களில் நின்று மோர்நாள் யாதாமொருவன் நோன்பு பிடிப்பானாகில் அவனுடைய சரீரத்தை அல்லாஹுத் தஆலா நரகத்தில் போடுகிறதில் நின்றும் ஹறாமாக்கிடுவான். இன்னும் அவன் சொர்க்கலோகத்திலே யூசுபு நபியவர்களுக்குச் சினேகிதனாகிடுவான். அவனுக்கு அல்லாஹுத் தஆலா ஐயூபுநபியவர்களுடையத் தவாபுபோலுள்ள தவாபைக் கொடுத்திடுவானென்று நபிநாயகமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

மறியம் பீவியவர்களுடைய மகனார் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் ஒரு மலையின்பேரிலே நடந்துபோகும்போது, அந்த மலையிலே வெண்மையான ஒரு படலைக்கல்லைக்கண்டு அதைச் சுற்றிவந்து ஆச்சரியப்பட்டார்கள். அப்போது அல்லாஹுத் தஆலா ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு நீர் கண்டிருக்கிற ஆச்சரியத்தைப்பார்க்க மேலான ஆச்சரியத்தை நாம் வெட்டவெளிச்சமாகத் தெரிவிக்க நீர் நாடுகிறீரோ வென்று வஹி யறிவித்தான்.

அதுகேட்டு ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள், மெய்தான், நானும் வெளியாகத்தான் நாடுகிறேனென்றும் சொன்னார்கள். அப்போதந்த கற்பிளந்து அந்த பிளப்புக்குள்ளே ஓர் மனுடன் தன்னுடைய கையிலே பசுமையான ஒருகோலும் அவரிடம் ஒரு முந்திரிகை மாமுமிருக்கக் கண்டார்கள். அப்போது அந்த மனுடன் நாட்கள் அடங்கலிலும் இஃதெனக்கு ரிஸ்காக இருக்குமென்று சொன்னார்.

அப்போது ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் அந்த மனுடனைப் பார்த்து, நீர் இந்தக்கல்லில் அல்லாஹுத் தஆலாவை எவ்வளவு காலமாக வணங்குகிறீரென்று கேட்டார்கள். அதற்கந்த மனுடன் ஈசா அலைஹிஸ்ஸலாமவர்களைப் பார்த்து நானிந்தக்கல்லில் நானூறு வருஷக் காலந்தொடுத்து வணங்குகிறேனென்று சொன்னார். அது கேட்டு ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள், ஆண்டவனே, இவனைப் பார்க்கிலும் நீ மெத்தவும் வரிசையான கல்க்கைப் படைத்திருக்கிறுயென்று நான் எண்ண வில்லையென்று சொன்னார்கள்.

அப்போது அவர்களுக்கு அல்லாஹுத் தஆலா நபிநாயகம் முஹம்மதுஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய உம்மத்து களில் நின்றும் ஷஃபான்மாதம் பதினைந்தாந்தேதி இராவில் இரண்டிறக்கு அத்துத் தொழுவானே அவனுகிறவன் இந்த நாலூறு வருடம் இப தத்துச் செய்ததைப்பார்க்கிலும் மெத்தவும் வரிசையானவனாக யிருக்குமென்று சொன்னான்.

அதுகேட்டு ஈசா அலைஹிஸ்ஸலாமவர்கள் நாம் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமகர்களுடைய உம்மத்தி லாயிருக்க வேண்டாமா என்று சொன்னார்கள்.

ஆனதால், எனதன்புள்ள மூமின் மூஸ்லிமாகிய உடற்பிறப்பு களே! ஈசா அலைஹஸ்ஸலாமவர்களே இவ்விதம் நம்முடைய நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய உம்மாத்திலாக வேண்டுமேயென்று கைசேதப்பட்டிருக்கிறதைப் பார்த்தீர்களா.

அப்பேர்ப்பட்ட நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலை ஹிவஸல்லமவர்களுடைய உம்மத்துகளாக நாமிருந்துக் கொண்டு துனியாவினுடைய பராக்கின்பேரிலாகி வணக்கஞ் செய்யாமற் காலத் தை வீணாகப் போக்கிவிட்டால், எவ்விதம் நற்பதவியென்ற தற ஜாக் கிடைக்கும்.

ஆனதால், இந்தப் பாபில் எழுதியஹதீது ஹிக்காயத்துகளை நன்றாகவுமறிந்து உங்கள் கண்ணினுற் பார்வையிட்டு நேர்தவறிப் போகாமல் தொழுதுகொள்ளுங்கள் நோன்பு பிடித்துக் கொள் ளுங்கள். அதனால் அல்லாஹுத் தஆலா நம்மனைவோருக்குங் கிரு றஹ்மத்துச் செய்வானாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

ஷஃபான்மாதத்தில் நோன்புபிடிக்கிற வரிசையின் பயான்முற்றிற்று.

ஹஜ்ஜினுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் திருவுளமானார்கள், யாதெனில், யாதாமொரு வன் ஹஜ்ஜு செய்கிறதற்கு நாட்டங் கொண்டு தன் னுடைய வீட்டை விட்டுப் புறப்படுவானாகில், அவன்

அன்று பிறந்த பாலகனைப்போல் பாவங்களை விட்டும் வெளிப்படுவான், இன்னும் அவன் தன்வீட்டளவிலே மீண்டு வருகிற மட்டிலே அவனடந்த அடி ஒவ்வொன்றுக்குப் பதிலாக எழுபது வருஷத்துடைய இபாதத்தை யவனுக்கு எழுதப்படும்.

இன்னும் அவன் வீட்டுக்கு வந்தபோது துஆச்செய்பச் சொல்லி அதன் தவாபை கொள்ளையாடிக்கொள்ளுங்கள். அஃதேனென்றால், அவனுடைய துஆ கபூல் செய்யப்படும். இன்னும் கஃபத்துல்லாவில் நாள் ஒன்றுக்கு நூற்றிருபது றஹ்மத் இறங்கியது. அதிலே அறுபது றஹ்மத்து தவாபு செய்தவர்களுக்கும், நாற்பது றஹ்மத்து தொழுதுவருகிறவர்களுக்கு, இருபது றஹ்மத்து கஃபத்துல்லாவைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்குமாக இருக்குமென்று—இவ்விதம் நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இபுனு அப்பாஸ் றலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் வந்திருக்கிறது யாதெனில், றசூல் சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதொருவன் வீட்டை விட்டு ஹஜ்ஜிற்காவது அல்லது உம்றாவுக்காவது நாட்டங்கொண்டு புறப்பட்டுப்போவானாகில், அவன் பூமியிற் காலைவைத்துக் காலைத் தூக்குந் தோறெல்லாம் அவனுடைய பாவங்கள் மரத்தினுடைய இலைகள் உதிர்வதுபோலே உதிர்ந்துபோகுமென்று.

இன்னும் அப்துல்லா அவர்களைத்தொட்டும், தபுறானியவர்கள் பேசிவருகிறார்கள். யாதெனில்: நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். ஹஜ்ஜுசெய்து கொள்ளுங்கள். அதேனென்றால், அழுக்கைத் தண்ணீர் கழுவிப் போடுவது போல் பாவங்களை ஹஜ்ஜானது கழுவிப்போடும் என்று.

பூமிமுகத்தில் உயர்த்தியான ஊர் ஒன்றுமில்லை, மக்கமாநகரத்தைத்தவிர. ஆதலால் யாதாமொருவன் மக்கத்தில் தொழுகை தொழுவானேயானால் அவனுக்கு லட்சம் நன்மையாகும். அவ்விடத்திலிருந்து ஒரு நோன்பு பிடிப்பானாகில் அவனுக்கு லட்சம் நோன்பாகும். அவ்விடத்திலிருந்து ஒரு திருஹம் ஸதக்காசெய்தால் அவன் லட்சந்திருஹம் ஸதக்காச்செய்ததாகும். அவ்விடத்திலிருந்து ஒரு குறுஆன் ஓதினால் அவன் லட்சம் குறுஆன் ஓதினதாகும். அவ்விடத்திலிருந்து ஒரு தசபீஹு செய்தால் லட்சம்

தசபீஹு செய்தவனுவானென்றும்— இவ்விதம் ஒன்றுக்கு லட்சமாக எழுதப்படுமென்று நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் தான் கொடுக்கவேண்டிய ஜக்கா அன்னவஸ்திரம், கடன் போக மீதி இருக்கிற சொத்தில், மக்கத்துக்குப்போய் ஹஜ்ஜு செய்து திரும்பி வருகிறமட்டிலும் நடுத்தரமான உண்பனை தின்பனை முதலிய செலவுக்குப் போதுமானதாயிருந்தால், அவன் வயதில் ஒருதடவை மக்கம்போய் ஹஜ்ஜு செய்கிறது பறுலாயிருக்கும் மேற்சொல்லியபடி விதியிருக்க ஹஜ்ஜு செய்யாமல் மவுத்தாவானுல் அவன் காபிறுல், எஹூதியாக, நசாரானியாகச் சாவான்—இந்தப்படிக்கு ஹதீதில் வந்திருக்கிறது.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய எமது சிநேகிதர்களே, பிறவிகளே, உங்களுடைய அறிவென்னும் அழகான கண்ணினாலே இந்தப்பாவை நன்றாகப் பார்வையிட்டுச் சிறப்பான ஹஜ்ஜு செய்து கொள்ளுங்கள். நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்களுடைய கபுறை ஜியாறத்துஞ் செய்துகொள்ளுங்கள், அதினால் அல்லாஹு, மட்டில்லாத தறஜாவும் தவாபுந்தந்து, சொர்க்கலோகத்திலுந் தாக்கலாக்கிவைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்

ஹஜ்ஜினுடைய வரிசையின் பயான் முற்றிற்று.

நோன்புப் பெருநாளையிற் கொடுக்கிற

பித்துறு ஸதக்காவுடைய வரிசையின் பயான்

ஹதீது.

நம்முடைய நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர் திருவுளமானார்கள். யாதெனில்: ஓரடியான் பித்துறுடைய ஸதக்காவை இறுக்காதவரையில் அவனுடைய நோன்பு வானலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இடையில் ஆகாசத்தைக் கொளுவிப் பிடிக்கப்பட்டதாயிருக்கும். இன்னும் பித்துறுடைய ஸதக்காவை அவன் இறுத்துவிட்டால அல்லாஹு தஆலா பசுமை பொருந்திய இரண்டு இறகை அந்த நோன்புக்கு உண்டாக்கிவிடுவான. அவ்விரண்டு இறகைக்கொண்டுமே நோன்பு ஏழாவது வானத்தளவிற் பறந்துபோய் சேரும்.

பின்னர் அந்த நோன்புடையவன் மஹஷதளவில் வருகிற மட்டிலும், அதனுடைய கிந்தில்களில் நின்றும் ஒரு கிந்திலின் அந்த நோன்பை வைக்கும்படிக்கு அல்லாஹுத்தஆலா, மலக்குகளை யேவுவான். அதே பிரகாரம் அவர்கள் கிந்திலில் நோன்பை வைத்திடுவார்கள்.

அப்துல்லா அவர்களுடைய மகனார் ஸாலிஹீனென்பவர்களைத்தொட்டும் பேசிவரப்படுகிறது. யாதெனில்:—பித்துறுடைய நாளையிலே தொழுகிற முசல்லா அளவிலே அவர்கள் போய், தொழுகையைத் தொழுதபின்னர் வீட்டுக்குவந்து, தம்முடைய பெண்சாதி பிள்ளைகளை ஒரே சேகரமாய் தம்மிடமாக வைததுக்கொண்டு, பின்னர் தன் கழுத்திலே இரும்புச் சங்கிலியை எடுத்துப் போட்டு சரீரமடங்கலும் சாம்பலைவாரிப் போட்டுக்கொண்டு கடிசான அழுகையாக அழுதார். அப்போது சில மனுடர்கள் அவரிடமாக வந்து அவரைப்பார்த்து "ஓய் சாலிஹே, இந்த நாள் ஈதுப் பெருநாளாச்சுதே அதனாலே சந்தோஷமாக வல்லவோ இருக்கவேண்டும், அப்படியிருக்க நீரிப்படி அலங்கோலமாக இருக்கும்படியான சபபென்ன, ஏனிவ்விதஞ் செய்கிறீ"ரென்று கேட்டார்கள்

அதற்கு அவர்கள் அந்த மனுடர்களைப்பார்த்து "மெய்தான், நானும் பெருநாளென்று அறிந்திருக்கிறேன். என்றாலும், நான் அல்லாஹுத்தஆலாவுக்கு ஓரடியான். அப்படி அடியானான என்னை அமல் செய்யும்படி றப்பு என்னை யேவினான். அதுபோல நான் அமல் செய்தேன். அந்த அமலை அல்லாஹுத்தஆலா கபூல் செய்தானோ அல்லது கபூல் செய்யவில்லையோ அதை நானறியே னென்று சொன்னார். இந்தப் படிக்குச் சபுதத் தென்கிற கித்தாபில் வருகின்றது.

இன்னும் யாதாமொருவன் பித்துறுடைய ஸதக்காவை கொடுப்பானாகில், அவனுக்குப் பத்து வஸ்துக்கள் உண்டாகிவிடும். அதில் 1-வது பாவங்களைவிட்டும் அவனுடைய திரேகம் தப்பறவாகும். 2-வது நரகத்தை விட்டும் அவன் விடுதலையாவான். 3-வது அவனுடைய நோன்பு கபூல் செய்யப்பட்டதாகிவிடும். 4-வது அவனுக்கு சொர்க்கம் வாஜிபாகும். 5-வது அவன் கபுறைவிட்டும் அச்சந்தீர்ந்தவனாக வெளிப்படுவான். 6-வது அவனுக்கு அந்த வருஷத்தில் கைகூன அமல்கள் கபூல் செய்யப்படும். 7-வது அவனுக்குக் கியாமத்து நாளையிலே என்னுடைய ஷபாஅத்து வாஜிபாக்கப்படும். 8-வது அவன்

பின்வெட்டி மறைந்ததுபோலே சிருத்தல் மூஸ்தகீம் பாலத்தைக் கடந்திடுவான். 9-வது நன்மை திமை சிறுக்கப்படும் மீசான் திராசில் அவனுடைய நன்மைத்தட்டு அதிகமாகிவிடும். 10-வது அல்லாஹுதஆலா அவனுடைய திருநாமத்தை மூதேவியி னுடைய பட்டோலையை விட்டும் அழித்துவிடுவானென்று நபி நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் பித்றுடைய ஸதக்காவைக் கொடுப்பானுகில் வித்து ஒன்றுக்குப் பதிலாக அவனுக்கு எழுபதி னுயிரம் மாளிகையுண்டாகிவிடும். அந்த மாளிகையுடைய நீள மாகிறது மஷ்ரிகு மக்ரிபுடைய விஸ்தீரணத் தொலைதூரமாக யிருக்குமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு இறவாது முதலிய கித்தாபுகளில் வருகின்றது.

அப்படி பித்று ஸதக்கா கொடுக்கிறது யார்பேரில் வாஜிபஎன்றுல் மூஸ்லிமாகிய காட்டான் மகன் தான் குடியிருக்கிற வீடு புழங்கிடும்; பாத்திரம் உடுத்துகிற உடைகள், ஏறிப்போகிற வண்டி வாகனங்கள் இவைகள் தவிர கடனும்போக ரொக்கம் நகைவகை முதலானதில் ஸக்காத்து தொகையிருந்தால மேற் சொன்ன எல்லார் பேரிலும், வருஷம் திறப்பமாகாதிருந்த போதிலும் தன்னைத் தொட்டும் தன் சிறுபிள்ளைகளைத்தொட்டும் பித்று ஸதக்காக் கொடுக்கிறது வாஜிபா யிருக்கும்.

இன்னும் அவன் பெண்சாதி, பெரிய பிள்ளைகளைத் தொட்டும் பித்று ஸதக்காக் கொடுக்கிறது அவன்பேரில் வாஜிபில்லை. பித்று ஸதக்காவகிறது நபர் ஒன்றுக்கு அரை மரக்கால் மணிக் கோதுமை கொடுக்கிறது வாஜிபு, இதிலே மரக்காலென்பது இருக்கு ராச்சியத்தில் வழங்குகிற இருத்தல் எட்டாக விருக்கும். அந்த இருத்தல் ஒன்றுக்கு 130 திருஹம், அந்தத்திஹகம் ஒன்றுக்குப் பதினுன்கு பணவிடை. அந்தப்பணவிடை ஒன்றுக்கு ஐந்து தொலிக் கோதுமையாயிருக்கும்.

ஆதலால், இதேபிரகாரம் கணக்கிட்டுக் கொடுக்கவேண்டும், அப்படிக் கோதுமை கொடுக்கிறதைப் பார்க்கிலும், அதனுடைய கிரையத்தைக் கொடுக்கிறது இந்த ஸமானுவில் ரொம்பவும் ஏற்ற மானதாயிருக்கு மென்று பத்தாவி ஆலம்கீரி முதலிய கித்தாபில் வருகின்றன.

அப்படி பித்றாஸதக்கா வாஜிபான நேரமாகிறது, நோன்புப் பெருநாள் கிழக்கு வெளுக்கிறது கொண்டாயிருக்கும். அப்படி கிழக்கு வெளுக்குமுன் மவுத்தாகிப் போனால் அவன் பேரில் பித்றா ஸதக்கா வாஜிபாகமாட்டாது, பெருநாள் தொழுகைக்குப் போகுமுன் பித்றா ஸதக்கா கொடுக்கிறது முஸ்தஹப்பு. அந்த ஸதக்காவை யாருக்குக் கொடுக்கிறதென்றால், ஒரு மிஸ்கீனுக்காவது, அல்லது பல மிஸ்கீன்களுக்காவது கொடுக்கலாம்.

இனி ஷாபியீ மதுஹபில் நோன்பு பெருநாள் ஒரு இரவு பகலைக்குத் தனக்கும் தன்பேரில் நபக்காகளை கொடுக்கிறது விதியாகிறவர்களுக்கும் வஜ்பனச்செலவும் கொடுக்க வேண்டிய கடனும் போக மீதமிருந்தால் ஒவ்வொருவருக்கு விதியானது அந்த ஊர்களில் அதிகம் புழங்குகிற தானியத்தில் ஒரு மரக்கால் தானியம் பித்றாவுடைய நிய்யத்தைக் கொண்டு கொடுக்கிற பறுலாயிருக்கும் இரண்டு கையைக்கூட்டி எட்டுசிறங்கை நெல்லு அல்லது நான்கு சிறங்கை அரிசி கொடுக்கிறது போதுமானதாயிருக்கும்.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய எமது நேசர்களே, உங்களுடைய அழகான தெளிவான அறிவென்னும் கண்ணினாலே இந்த பாபை நன்றாகப் பார்வையிட்டு நோன்புப் பெருநாளையிற் கொடுக்கிற பித்றா ஸதக்காவைக் கொடுத்து அதனுடைய வரிசை தவாபுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். அல்லாஹு தஆலா நம்மனைவோருக்கும் கிருபை றஹ்மத்து செய்வாராகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

நோன்புப் பெருநாளையிற் கொடுக்கிற பித்றா ஸதக்காவுடைய

வரிசையின் பயான் முற்றிற்று.

ஹஜ்ஜுப் பெருநாளையில் குறுபானிகொடுக்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் நாயகமான வள்ளலான ஒளிவான தெளிவான பேரின்பக் கடலான காரணக் குருவான முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், நீங்கள் உழுஹியாவென்னும் குறுபானி

கொடுங்கள். அந்தக் குறுபானி தன்னுடைய மூதகின்பேரிலே உங்களை யேற்றிக் கொண்டு சிருத்தல் மூஸ்தகீம் பாலத்தின் பேரிலே நடந்து அக்கரை சேர்த்துவிடும்

அப்படிக் குறுபானி கொடுக்கிறது யார்பேரில் வாஜிபானால், மூன்றின பித்றா ஸதக்காவுடைய பாபிலே சொன்னபடிக்கு ஸக்காத்து தொகையுள்ள நாட்டான் மகனாகிய சீமான்தனமாகிய மூமிமாகிய மூஸ்லிமாகிய வாகன் பேரிலே ஹஜ்ஜூப் பெருநாள் பத்தாமிரவுடைய கிழக்கு வெளுக்கிறது கொண்டு. தன்னைத் தொட்டும் ஒரு கிடாய் குறுபானி கொடுக்கிறது வாஜிபு.

இதிற் சொல்லியபடி பத்தாம் நாள், பதினோராம் நாள், பனிரெண்டாம் நாள் வரைக்கும் குறுபானி கொடுக்கலாம் எனினும் பத்தாம் நாளையிலே குறுபானி கொடுக்கிறது மிக மேன்மையயிருக்கும், அப்படிக் கொடுக்கிற கிடாயின் வயது பருவம் எவ்விதமெனில், பன்னையாட்டுக் கிடாயாயிருந்தால் ஆறு மாதத்தின் கிடாயாக இருக்க வேண்டும்.

ஷாபியீ மதுஹபில் குறுபானி கொடுக்கிறது என்னத்து. அதிலே செம்மெறிக் கிடாய் ஒரு வருஷத்துடையதும், பன்னையாட்டுக் கிடாய இரண்டு வருஷத்துடையது மாயிருக்கவேண்டும். இது தவிர விதையேற்றின கிடாயும் மோளச்கிடாயும் காதிற் கொஞ்சம் அறுபட்ட கிடாயும் குறுபானி கொடுக்கலாம், இரண்டு கண்பொட்டைக் கிடாய், நடக்கவேலாத நொண்டிக் கிடாய், மெலிந்தகிடாய், அறுபட்டகிடாய் இப்போற்கொத்த கிடாய்கள் குறுபானி கொடுக்க ஆகாது.

அப்படிக் குறுபானி செய்கிற கறியை மூன்று பங்கு வைத்து அதில் தனக்கொரு பங்கும், தன்னுடைய பந்து ஜனங்களுக்கொரு பங்கும், மிஸ்கின்களுக்கு ஒரு பங்கும் வைத்துக் கொடுப்பது மூஸ்தஹப்பா யிருக்கும், அந்தக் கிடாயுடைய தோலை விற்கக் கூடாது, ஹதியாக் கொடுத்துப் போடவேண்டும், அல்லது தனக்குப் புழங்குகிறதற்கு எத்தனமாக வைத்துக் கொள்ளலாம்.

யாதாமொருவன் குருபான் கொடுக்கிறதற்காக ஆட்டுக்கிடாய் வாங்கத் தன் வீட்டை விட்டும் புறப்பட்டு நடந்து போவானாகில்

அவனடக்கிற அடியானுக்குப் பத்துநன்மை கிடைக்கும், பத்துப் பாவத்தை யவனைவிட்டும் அழிக்கப்படும். பத்துத் தரஜாவை அவனுக்கு உயர்த்தப்படும். அப்படிக் குறுபானுக்கு வாங்குகிற ஆட்டுக்கிடாவை விலைபேசுகிற பேச்சுமுழுமையும் தஸ்பீஹாக இருக்கும்.

இன்னும் அந்தக் கிடாயினுடைய கிரயத்தை யுடையவனுக்குக் கொடுப்பானானால், ஒரு திர்ஹத்திற்குப் பதிலாக அவனுக்கு எழுநூறு நன்மை கிடைக்கும் இன்னும் பூமியின்பேரில் கிடாவைத் தூக்கிப்போட்டு அறுக்க நாடுவானேயானால், இந்த பூமிதொடுத்து ஏழாவதாகிய பூமிவரைக்கும் உண்டான கல்லுளடங்கலும் அவனுக்குப் பிழைபொறுக்கத் தேடுவார்கள், அப்படியறுத்த குறுபானிகிடாயுடைய இரத்தம் ஓடுமேயானால் அந்த இரத்தத்தில் நின்றும் ஒவ்வோர் துளிக்குப் பதிலாக பத்துபத்து மலக்குகளை அல்லாஹுத் தஆலா படைத்திடுவான். அந்த மலக்குகள் இந்த அடியானுக்கு கியாமத்துநாள் வரைக்கும் பிழைபொறுக்கத் தேடுவார்கள்.

அந்த இறைச்சியைப் பங்குவைப்பானேயானால், ஒரு பிடி இறைச்சிக்குப் பதிலாக இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய பிள்ளைகளில் நின்றும் ஒரு பிள்ளையை யுரிமை விட்டவனைப் போல் அவனாகிவிடுவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்களென்று அலீபி புனு அபீத்தாலிபு றலியல்லாஹு அன்ஹுவவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் தம் திருத்தேவியாராகிய ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களுக்குத் திருவுளமானார்கள். "ஆயிஷாவே உங்களுடைய உழிஹியாவை முற்படுத்திக் கொள்ளுங்கள் அஃதெதினாலெனில், அந்த இரத்தத்திலிருந்து பூமியின்பேரில் விழுகிற துளிகளில் நின்றும் மூந்தின துளிக்குப் பதிலாக உங்களுடைய பாவங்களில் நின்றும் மூந்தினபாவத்தை அல்லாஹு தஆலா பொறுத்திடுவா னென்று திருவுளமானார்கள்.

அப்போது ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் நபி நாயகத்தைப்பார்த்து அல்லாஹுத் தஆலாவுடைய றசூலே, அது நமக்குச் சொந்தமா, அல்லது எல்லா மூமினான பேர்களுக்குமா என்று கேட்டார்கள். அதற்கு நபிநாயகம் தங்கள் திருத்தேவியா

ரைப் பார்த்து அது நமக்கும் மட்டுமல்ல மூமினான பேர்களுக்கு மாயிருக்குமென்று திருவுளமானார்கள்.

தாவூது அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹு தஆலாவோடும் இலாஹி யாண்டவனே, முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய உம்மத்துகளில் நின்றும் உலுஹியாக் கொடுப்பானே அவனுக்கு நீ எவ்வளவு தவாபைக் கொடுப்பா யென்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹு தஆலா உலுஹியா வுடைய தவாபாகிறது, குறுபானிகொடுக்கிற அந்தக் கிடாயிலுண் டான ரோமங்களில் ஒவ்வோர் ரோமங்களுக்குப் பதிலாகப் பத்து நன்மையை நான் கொடுத்திடுவேன், பத்துப் பாவத்தை யழித்திடுவேன், பத்துத் தறஜாவை உயர்த்திடுவேன். இன்னும் அதினுடைய ரோமம் ஒவ்வொன்றுக்குப் பதிலாகச் சொர்க்க லோகத்தில் ஒருமானிகையும், ஹூறுல்ஈன் பெண்களில் நின்றும் ஒருபெண்ணும் அவனுக்குக் கிடைத்திடும். இஃதல்லாமலும் சொர்க்க முடையதில் நின்றுமுள்ள ஏறுவாகனமும் அவனுக்குக் கிடைக்கும், அந்த வாகனம் ஒருகாலைத் தூக்கிவைத்தால் ஒவ் வோரடி யாகிறது கண்ணிற்கு எட்டுகிற தூரம்வரையில் வைக்கும்.

அதிற் சொர்க்கத்துடையவர்கள் ஏறுவார்கள். அப்படி யேறி னவர்கள் நாடின இடத்திற்குக் கொண்டு பறக்கும் எய் தாவூதே, உலுஹியாக்கள் சிறுத்தல் மூஸ்தகிம் பாலத்தையு மிதித்துக் கொண்டுபோகும், கியாமத்துநாளையில் பலாய்களை நீக்கிவிடுமென்று நீரறியவில்லையா? வென்று கேட்டான்.

இன்னும் யாதாமொருவன் குறுபானி கொடுப்பானேயாகில் அவன் கபுரில் நின்றும் எழுந்திருக்கும்போது அதனுடைய தலை மாட்டின்பேரில் அந்தக் குறுபானியிற்கும் அதையவன் கண்டு கொள்வான். அப்போது அதினுடைய உரோமமாகிறது தங்கத்திலு லுண்டாயிருக்கும். அதினுடைய இரண்டு கண்ணும் சொர்க்க லோகத்துடைய மாணிக்கத்தினு லுண்டாயிருக்கும், அதை யவன் பார்த்து நீ யார், நீ என்ன வஸ்து, உன்னைக்கான அழகான வஸ்துவை நான் காணவில்லையேயென்று சொல்வான், அப் போது அது அவனைப் பார்த்து நானுகிற துனியாவில் நீ கொடுத்தக் குறுபானாக விருக்குமென்று சொல்லி பின்னர் நீயென் முதுகின்பேரில் ஏறென்று சொல்லும். அவன் அதி

லேறினவுடனே அவனைக்கொண்டு வானலோகம், பூலோக மிதற்க்கிடையிலும் அதனுடைய நிழல்வரையிலுங் கொண்டு போகும். இந்தப்படிக்கு தர்றததுல் காஷிகின் முதலான கித்தாபு களில் வருகின்றது.

ஆதலால், மூமீன் மூஸ்லிமாகிய புறவிகளே, விசுவாசமானவர்களே உங்களுடைய தெளிவான கூர்மையான புத்தியைக்கொண்டும் இந்தப்பாபை நன்றாகப் பார்வையிட்டு ஹஜ்ஜுப் பெருநாளையின் உழுஹியாவென்னும் குறுபானி விதிப்படிக்கு கொடுத்து அதிலுண்டான நன்மைத் தராஜாக்களைக் கொள்ளையாடிக் கொள்ளுங்கள். அதனல் அல்லாஹு தஆலா நம்மனைவோர்களுக்கும் இருமை றஹமத்துச் செய்வானாகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்

ஹஜ்ஜுப் பெருநாளையிற் குறுபானிகொடுக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி என்கிற திக்றுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

இருலோகத்திற்கும் வள்ளலான ஷபீவுல் முதுனிபீன் ஹபீபு றப்பில் ஆலமீன் முஹம்மது முஸ்தபா சல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில், லாஇலாஹ இல்லல்லாஹு என்கிற திக்றை நாளொன்றிற்கு நூறுதரம் யாதாமொருவன் செய்வானாகில், அவன் கியாமத்துநாளையில் பதினான்காம் இரவு உதயமாகிய பூரணச் சந்திரனைப்போல் முகமிலங்கும்படியாய் வருவான். இன்னும் லாஇலாஹ இல்லல்லாஹு என்ற திக்று இறது என்னுடைய கோட்டையாயிருக்கும், ஆதலால் யாதாமொருவன் அந்தத் திக்றைச் செய்வானாகில் அவனென்னுடைய கோட்டைக்குட் புகுந்து கொண்டபோது அவன் என்னுடைய அதாபைவிட்டும் அச்சந் தீர்ந்திட்டானென்று அல்லாஹுத் தஆலா சொன்னானென்று எனக்கு ஜிபுரீல் அலைஹிஸ்ஸலா மறிவித்தார்களென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் "லாஇலாஹ இல்லல்லாஹு" என்னுந் திக்றை நீட்டிச் சொல்வானால், அவனுக்கு நாலாயிரம் பாவங்களைப் பொறுக்கப்படுமென்று நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் திருவுளமானார்கள். அப்போது அவர்களோடு கேட்கப்பட்டது அவனுக்கு நாலாயிரம் பாவமில்லாதிருந்தா லெப்படி யென்று. அதற்கு நபிநாயகம், அவனுடைய கூட்டத்தார், குடும்பத்தார், அயல் வீட்டாராகிய இவர்களுடைய பாவங்களை பொறுக்கப்படுமென்று திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் மூமினான அடியான் "லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்று சொல்லுவானாகில் அவனுடைய வாயில் நின்றும் ஒரு மலக்கானவர் பசுமை பொருந்திய பறவையைப்போல் வெளிப்படுவார். அவருக்கு முத்து மாணிக்கம் கொண்ட மூக்தப்பட்ட வெண்மையான இரண்டு சிறகுண்டு. அவ்விரண்டு சிறகில் ஒரு சிறகு மஷ்ரிகுவரையிலும், மற்றொரு சிறகு மக்ரிபு வரையிலுமாக விருக்கும். அவர் அந்த இரண்டு சிறகையும் விரிப்பராகில் மஷ்ரிகு மக்ரிபைவிட்டுக் கடந்திடும். பின்னரவர் அறுஷளவில் தீர்மானமாகிறைக்கும் வானலோகத்தி னளவில் உயர்வார். அவருக்கு குருவியுடைய இரைச்சல்போல் இரைச்சலுமுண்டு. அவரிரச்சலினால் அவரைப் பார்த்து அறுஷைச் சுமக்குகிற மலக்குகள் அல்லாஹு தஆலாவுடைய சிறப்பு வலுப்பத்தைக்கொண்டும் நீரோங்கு தலாய் இருமென்று சொல்லுவார்கள்.

அப்போது அவர் இந்த திக்றைச் சொன்னவனுக்கு அல்லாஹு தஆலா பாவங்களைப் பொறுக்கிறவரையில் நான் ஒடுங்குதலாக விருக்க மாட்டேனென்று சொல்லுவார். அப்போது அவருக்கு எழுபதினாயிரம் நாவுகளை அல்லாஹு தஆலா கொடுப்பான். அவரந்த நாவுகளைக் கொண்டு மேற்சொன்ன திக்றைச் செய்தவனுக்குப் பிழை பொறுக்கத் தேடுவார்.

பின்னர், கியாமத்துநாளானால் அந்த மலக்குவந்து திக்றுசெய்தவன் கையைப் பிடித்துக்கொண்டு சிறாத்தல் முஸ்தகீம் பாலத்தைக் கடத்தி அப்பால் சொர்க்கலோகத்திலும் அவனைப் புகுத்த வைப்பாரென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்களென்று துர்றத்துன் நாஸிஹீன் முதலான கித்தாபுகளில வருகின்றது.

இன்னுமிந்த திக்ருடைய விரிவு அநேகமிருக்கிறது. விரியாகுமென்று இவ்விடத்தில் சுருக்கமாக முற்றுவித்தனம். ஆதலால் மூமின் முஸ்லிமான எமது நேசர்களே, சகோதரர்களே, உங்களுடைய அறிவென்னும் கண்களால் மகா பிரியத்துடனே இந்த பாவை நன்றாகப் பார்வையிட்டு இபுலீசுடைய மாயாவினுடைய மயக்கத்தி லகப்படாமல், ஐந்து நேரமுந் தொழுதுகொண்டு உங்களாலியன்ற மாத்திரம் நாளொன்றுக்கு நூறுதடவை அல்லது பதினொருதடவை திக்று செய்து கொள்ளுங்கள். அந்தத் திக்ருடைய பறக்கத்தினால் அல்லாஹு தஆலா நம்மனைவோரையும் நற்பதவியில் ஆக்கிவைப்பானாக. ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

"லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றசூலுல்லாஹி" என்கிற திக்ருடைய வரிசையின் பயான் முற்றிற்று.

சலவாத்துடைய வரிசையின் பயான்.

ஹதீது.

அல்லாஹு தஆலா குர்ஆனிலே திருவுளமானான். "திடனாக அல்லாஹு தஆலாவும் அவனுடைய மலக்குகளும் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பேரில் சலவாத்து சொல்லுகிறார்கள். ஈமான் கொண்ட பேர்களே, நீங்களும் நபி நாயகமவர்கள் பேரில் சலவாத்தும் சலாமுஞ் சொல்லுங்கள்" என்று பொருளாயிருக்கும்.

நபிநாயகம் முஹம்மது முஸ்தபா றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். அது யாதெனில், என்னிடத்தில ஜிபுரீல அலைஹிஸ்ஸலாம், மீக்காயீல அலைஹிஸ்ஸலாம், இசுறாயீல அலைஹிஸ்ஸலாம, இசுறாபீல் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இந்நான்கு மலக்குகளும் வந்து, அல்லாஹு தஆலாவுடைய றசூலே, உங்களின் பேரிலே யாதாமொருவன் ஒரு நாளைக்குள் பத்துதடவை சலவாத்து சொல்லுவானாகில், அந்தசலவாத்து சொன்னவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு போய் ஸிறாத்தல முஸ்தகீமென்னும பாலத்தின் பேரிலே மின் வெட்டி மறைவதுபோலே கடத்தி வைப்பேனென்று. இவ்விதம ஜிபுரீல அலைஹிஸ்ஸலாம அவர்கள் சொன்னார்கள். இன்னும், அவனுக்கு உங்களுடைய ஹவுலுல் கவுதர் ஆற்றில் நின்றுமுள்ள தண்ணீரை நான் குடிப்பாட்டுவேனென்றும்

மீக்காயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள். இன்னும் அவனுடைய பாவத்தை அல்லாஹு தஆலா பொறுக்கிற வரையில் நான் அல்லாஹு தஆலாவை ஸஜதாச் செய்வதை விட்டுத் தலையை யுயர்த்த மாட்டேனென்று இசுறாபீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் சொன்னார்கள். இன்னும் அவனுடைய றாஹை நபிமார்களுடைய றாஹை கைப்பற்றுவதுபோல் மெதுவாகக் கைப்பற்றுவேனென்று இசுறயீல் அலைஹிஸ்ஸலா மவர்கள் சொன்னார்களென்று நபிநாயகம் திருவுளமானார்கள்.

ஹசன்பஸரீ றஹிமஹுல்லாஹு அவர்களிடத்தில் ஒரு பெண்பிள்ளையானவள் வந்து, உஸ்தாதே, எனக்கு ஒரு பெண் பிள்ளை யிருந்தது அந்தப் பெண்பிள்ளை மவுத்தாகிப் போய் விட்டது. அந்தப் பெண்பிள்ளையை நான் கனவிற்காண வேண்டுமென்று நாடுகிறேன். அதற்காக நீங்கள் எனக்கு நல்ல ஒரு அமலைப்படித்துத் தாருங்களென்று கேட்டாள். உடனே அந்தப் பெண்பிள்ளைக்கு ஹசன் பஸரீயவர்கள் சலவாத்தைப் படித்துக் கொடுத்தார்கள். அதைப் பெண்பிள்ளை படித்துக் கொண்டு அமல் செய்தாள். அப்போது ஒருநாளையதினம் அவள் தன்னுடைய மகளைக் கனவிலே கண்டாள். அஃதெவ்விதமெனில் அவள்மேலே கீலின்னின்றமுள்ள புடவை கட்டியிருக்கவும், கழுத்திலுங் காலிலும் நெருப்பில் நின்றமுள்ள விலங்குபோடப்பட்டிருக்கவுமாகக் கனவுகண்டு, பதறிவிழித்துக் கண்ணாலே தாரை தாரையாகக் கண்ணீர் வடிய அழுது கொண்டு ஹசன்பஸரீயவர்களிடத்தில் வந்து தானிரவுகண்ட கனவைச் சொன்னாள்.

அது கேட்டு ஹசன்பஸரீயவர்களும் அவர்கள்கூட இருந்த பேர்களும் அழுதார்கள். பின்னர் ஹசன்பஸரீயவர்கள் அந்தப் பெண்பிள்ளைக்கு தைரியஞ்சொல்லி அனுப்பினார்கள். அப்படியிருக்கையில் கொஞ்ச நாளைக்குப் பிறகு ஹசன்பஸரீ யவர்களுடைய கனவிலே அந்தப் பெண்பிள்ளையுடைய மகள் ஒரு கட்டிலின்பேரி லிருக்கவும், அவளுடைய தலையிலே மஷ்ரிகு தொடுத்து, மக்ரிபு வரைக்கும் ஒளிவு பிரகாசிக்கின்ற கிரீடமொன்று போடப்பட்டிருக்கவுங் கண்டு, அவளைப் பார்த்து ஹசன்பஸரீ யவர்கள் 'ஓ! பெண் பிள்ளையே, நீ யாரென்று கேட்டார்கள். அதற்கு அந்தப் பெண்பிள்ளை ஹசன்பஸரீ யவர்களை உஸ்தாதே உங்களுக்கு என்னை இன்னாளென்று தெரியவில்லையோவென்று கேட்டாள். அதற்கு ஹசன்பஸரீயவர்கள் ஆம். எனக்கு உன்னைத் தெரியவில்லையென்று சொன்னார்கள்.

அப்போது அந்தப் பெண்பிள்ளை ஹசன்பஸரீயவர்களை நீங்கள் இன்ன பெண்பிள்ளைக்குச் சலவாத்துப் படித்துக்கொடுத்தீர்களே, அந்தப் பெண்பிள்ளையுடைய மகன் நானென்று சொன்னான்.

அப்போது ஹஸன்பஸரீயவர்கள் அந்தப் பெண்பிள்ளையைப் பார்த்து, உனக்கு இவ்வளவு தறஜா என்ன மூகாந்திரத்தைக் கொண்டு கிடைத்ததென்று கேட்டார்கள். அதற்கந்தப் பெண் பிள்ளை ஹசன்பஸ்ரீயவர்களை நோக்கி, உன்தாலே, எங்களுடைய கபறஸ்தானுக்கு அருகாமையில் ஒரு மனுடன் நடந்தார். அவர் அவ்விடத்தில் நபிநாயகம் மூஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல் லமவர்கள் பேரில் ஒரு சலவாத்ததையோதி அதன் தவாபை எங்களுக்கு ஹதியா செய்தார். அப்போது எங்களுடைய கபறஸ் தானில் ஐந்நூற்றைம்பது பேர்களை அதாபுச் செய்யப்பட்டது. அவர்களை யெல்லாம் நபிநாயகமவர்கள் பேரில் அந்த மனுடன் சொன்ன சலவாத்தின் பறக்கத்தைக்கொண்டு அதாபைவிட்டும் விடுதலைசெய்து நீங்கிவிடுங்களென்று சத்தமுண்டாயிற்று. அதில் நின்றும் நானுமூடனே விடுதலையாகினேனென்று சொனனான். அபபோது ஹசனபஸரீயவர்கள அஜபாய் விழித்தெழுந்து காலையில் அவளுடைய தாயை யழைத்துத் தாங்கள் இராவுகண்ட கனவைச் சொல்ல, அவள்கேட்டு மிகுந்த சந்தோஷமாகி அல்லாஹு தஆலாவைத் தொழுது நபிநாயகத்தின் பேரிலே சலவாத்து ஓது வதை மூக்கியமாக்கி வந்தாள்.

ஹதீது.

நபிநாயகம் மூஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதெனில்:—என்பெரில் யாதாமொருவன் சல வாத்து சொல்வானேயானல், அப்படிச் சொன்னவன் பேரில் அல்லாஹு தஆலா பத்து சலவாத்துச் சொல்லுவான். இன்னும் யாதாமொருவன் என்பேரில் பத்து சலவாத்து சொன்னல், அவன்பேரில் அல்லாஹு தஆலா நூறு சலவாத்து சொல்லுவான் இன்னும் யாதாமொருவன் என்பேரில நூறு சலவாத்துச் சொல்லுவானாகில், அவன் மூனபிக்கு தனத்தை நீங்கினவிட்டும் நீங்கினவனென்றும், நாகத்தை விட்டும் நீங்கினவ னென்றும் அவனுடைய இரண்டு கண்ணுக்கு அவனுக்கு மிடையிலே அல்லாஹு தஆலா எழுதிடுவான்.

இன்னும் அவனை அல்லாஹு தஆலா கியாமத்து நாளையிலே ஷஹீதகளுடைய கூட்டத்துடனே கூடியிருந்தாட்டிவைப்பான். இன்னும் யாதாமொருவன் ஜும்ஆ நாளையில என் பேரில் நூறுசலவாத்து ஓதுவானாகில் அவனுடனே ஒளிவு யிருக்கும் படியாக்க கியாமத்து நாளையில் வருவான், அந்த ஒளியை கல்க்குகள் அடங்கலுக்கு மிடையிலே பங்குவைக்கப்படுமேயானால் அவர்களுக்கு அந்த ஒளிவு விஸ்தீரணமாகிடுமென்று. இவ்விதம் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் யாதாமொருவன் என்பேரில் சலவாத்து சொல்லுவானேயானால், அல்லாஹு தஆலா அந்த சலவாத்தில் நின்றும் ஒரு மலக்கைப் படைப்பான். அந்த மலக்குக்கு இரண்டு சிறகுண்டும். அதில ஒரு சிறகு மஷ்ரிகுவரையிலும், மற்றொரு சிறகு மக்ரிபு வரையிலுமிருக்கும, அவருடைய இரண்டு காலகளும் அறுஷுக்குக் கிழாலே யிருக்கும. அவருக்கு அல்லாஹு தஆலா சொல்லுவான் "ஓ மலக்கே, என்னுடைய நபிநாயகம் முஹம்மது சல்லல்லாஹு அலைஹிவசல்லம் பேரில் அவன் சலவாத்து சொன்னதுபோலே, நீரும் என்னுடைய அடியான் பேரில் சலவாத்து சொல்லுமென்று சொல்லுவான் அதுகேட்டு அந்த மலக்கானவர் கியாமத்து நாள் மட்டிலும் அவனுக்குப் பிழை பொறுக்கத் தேடுவார்" இந்தப்படிக்கு சபுதத்துல் வாசிலீன் முதலிய கித்தாபுகளில் வருகின்றது.

ஹிக்காயத்து.

சபியானி தவுரீ யென்பவர்கள் சொல்லுகிறார்கள். "நான் ஹஜ்ஜுக்குப்போனேன். போய் மக்கத்தில் கஃபத்துல்லாவை சுற்றிவரும்போது, அறபாத்து மலையிலும, மீனாபஜாரிலும் மற்ற இடங்களிலும் நபிசல்லல்லாஹு அலைஹிவசல்ல மவர்கள்பேரில் சலவாத்து சொல்லும் படியான ஒரு மனுடனைக் கண்டேன், அந்த மனுடனைப் பார்த்து, ஓ மனுடனே, அந்தந்த இடங்களிலும் ஒவ்வோர் துஆ ஓதவேண்டியதாயிருக்க அதை நீர் விட்டுபோட்டு சலவாத்தை யோதிக் கொண்டிருக்கிறீரே அஃதென்னவென்று கேட்டேன, அதற்கவர் நானிதை யோதிவருகிறது ஒரு காரணத்தைப்பற்றி யென்று சொன்னார்.

உடனே நானவரை அதென்ன காரணஞ் சொல்லுமென்று கேட்டதற்கு, அவர் சொன்னார் குருசான்: தேசத்தில் நின்றும்

நானும் என் தகப்பனுருமாக ஹஜ்ஜு செய்கிறதற்குப் புறப்பட்டு மக்காவுக்கு வந்தோம். அப்போதென் தகப்பனர் உடம்பு சிக்காகி அங்கே இறந்து போனர் உடனே நான் அவருடைய முகத்தைத் துணியினலே மூடிப்போட்டு, பின்னர் கொஞ்ச நேரஞ்சென்று மையித்துடைய முகத்தைத் திறந்துபார்த்தேன். அப்போது அவருடைய ரூபத்துக் கழுதைச் ரூபத்தைப்போலவும். அவருடைய முகம் பன்றி முகம்போலவு மிருக்கக்கண்டு நான் கடினமாகிய விசனமாகினேன். அப்படி விசனமாகி இவ்வித ரூபத்தில் மனுடர்கள் எவ்விதம் வெளியாறதென்று எண்ணினேன். பின்பு ஒரு ஸாஅத்து நேரத்திற்குள்ளே என்னை நித்திரை மயக்கி விட்டது.

அப்போது நான் ஒரு கனவுகண்டேன். அந்தக் கனவாகிறது யாதெனில், ஒரு பெரியார் வந்து என் முகத்தின் துணியை நீக்கினது போலாயிருந்தது. அப்போது அந்தப்பெரியார் என்னைப் பார்த்து இவ்விதம் பிரமாண்டமுள்ள துக்கம், விசனம், உனக்கேனென்று கேட்டார்கள். அவர்களோடு நானெவ்விதம் விசனப்படாமலிருப்பேனென்று சொன்னேன். அப்போதவர்கள் என் தகப்பனிடம் போய் அவருடைய முகத்தைத் தடவினர்கள். உடனே என் தகப்பனைக் கொண்டு சோதிக்கப்பட்டதே அது அவரைவிட்டும் நீங்கி விட்டது. பிறகு நான் என் தகப்பனருடைய முகம் பதினலாம்நாட் சந்திரப்பிரகாசமாய் இருக்கக்கண்டு, நான் அந்தப் பெரியாரை நீங்கள் யாரென்று கேட்டேன்.

அதற்கவர்கள் நான் முஹம்மது நபியென்று சொன்னர்கள். அப்போது நான் அவர்கள் மேற்கிடந்த பரிவட்டத் தருகைப் பிடித்துக் கொண்டு, அல்லாஹு தஆலாபேரில் ஆணையாக. இங்கே நடந்த சபபை எனக்குச் சொல்ல வேண்டும். அதை நானறிய வேண்டுமென்று கேட்டேன். அதற்கவர்கள் சொன்னர்கள்: உன் தகப்பன் வட்டி வாங்கித் தின்னுகிறவராக இருந்தார். அதனலே இவ்வித ரூபத்து அவருக்குண்டானது. ஆனல் அவர் ஹயாத்தாயிருக்குங் காலத்தில் படுக்கைக்கு ஆகும்போது நாளொன்றுக்கு நூறு ஸலவாத்தை யோதிக் கொண்டு படுப்பார். இந்த ஹாலில் அவர் மவுத்தானபோது என்னுடைய உம்மத்தோர்கள் என்பேரிலே சொல்லுகிற

சலவாத்தை எழுதுகிற மலக்கானவர் என்னிடத்தில் வந்து, அல்லாவுடைய நபியே, உங்கள் பேரில் நாளொன்றுக்கு இரவில் நூறு நூறு சலவாத்தை ஓதிவந்த இன்னார், இவ்விதஹாலாய் மவுத்தாயிருக்கிறாரேயென்று சொல்லக்கேட்டு, உடனே நான் அல்லாஹு தஆலாவிடத்தில் அதைப்பற்றி கேட்டேன். அப்போது எனக்கு மனனூட்டம் கொடுக்கப்பட்டது. ஆதலால், நான் வந்து உன் தகப்பனாருடைய முகத்தைத் தடவி விட்டுப் போகிறேனென்று சொன்னார்கள். நான் அதுகேட்டு சந்தோஷமாகி அன்று முதல் சலவாத்தை எவ்விடத்திலும், எப்போது விடாமல் ஓதிக்கொண்டு வருகிறேனென்று சொன்னார். இந்தப் படிக்குதுர்றத்து ஷிறஹத்தல் இஸ்லாம் முதலான கித்தாபுகளில் வருகின்றது.

ஆதலால், எனது பிரியமுள்ளநேசர்களே, முஸ்லிமாகிய உடன் பிறப்புகளே, நாம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டு சலவாத்தை யோதினும் மேற்சொன்ன மனுடனுடைய குற்றம் நீங்கினது போலே நீங்குமென்ற யெண்ணங்கொள்ளாமலும், வட்டிக்குக் கொடுக்காமலிருந்து சலவாத்தினுடைய வரிசையை யெண்ணி சலவாத்தை யோதிக்கொண்டு வந்தால், அதனுடைய பறக்கத்தினாலே அல்லாஹு தஆலா முசிபத்துகளை நீக்கிவைப்பான். ஆமீன்.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்:—யாதாமொருவன் என்னுடைய ஹக்கை வலுப்பப்படுத்தினதற்காக என்பேரில் சலவாத்து சொல்லுவானாகில் அதனால் அல்லாஹு தஆலா ஒரு மலக்கைப் படைப்பான். அந்த மலக்குக்கு இரண்டு சிறகுண்டு. அந்தச் சிறகுகளில் ஒரு சிறகு மஷ்ரிகிலும், மற்றோர் சிறகு மக்ரிபிலுமாயிருக்கும். அவருடைய காலிரண்டும் தஹ்தஸ்ஸராவான ஏழாவது பூமியின் கீழாலேயிருக்கும். அந்த மலக்குக்கு அல்லாஹு தஆலா உத்திரவுகொடுப்பான். ஏ மலக்கே, நீர் என்னுடைய ஹபீபான முஹம்மது நபிபேரிலே என்னுடைய அடியான் சொன்ன சலவாத்தைப்போலே நீரும் அவன்பேரிலே சலவாத்து சொல்லுமென்று உத்திரவு செய்வான். அவ- அவன்பேரிலே கியாமத்து நாள் வரைக்கும் சலவாத்து சொல்லுவாரென்று நமது நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

இன்னும் நபிநாயகம் திருவுளமானார்கள். யாதாமொரு
அடியான் என்பேரில் சலவாத்து சொல்வானாகில், அந்த
சலவாத்தானதுமகா சீக்கிரமாக வெளிப்பட்டு மஷ்ரிகு மக்ரிபு கரை
கடல் மலை முதலிய சகல திக்குகளிலும் அணுகாமல் நடந்து
நான் இன்னாருடைய மகன் இன்னான், அல்லாஹு தஆலா
வுடைய கல்குகளின் நின்றும் ரொம்பவும் ஏத்தமான தெளிவான
முஹம்மது நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள்பேரில்
சொன்ன சலவாத்தாக யிருக்குமென்று சொல்லும். அப்போது
அச்சொல்லைக்கேட்ட எந்த வஸ்துக்களும் நபியின்பேரில் சலவாத்
தாகச் சொல்லியே யல்லாமல் தப்பமாட்டாமல் அவைகளும்
சலவாத்துச் சொல்லும் அந்தச் சலவாத்தினால் அல்லாஹு
தஆலா ஒரு பறவையைப் படைப்பான், அந்தப் பறவைக்கு
எழுபதினாயிரம் சிறகுண்டு. அந்தச் சிறகுகள் ஒவ்வொன்ற
டக்கிலும் எழுபதினாயிரம் தூவலான பிரிவுச் சிறகுண்டும்.
அந்தத் தூவலில் ஒவ்வொன்றுக்கு எழுபதினாயிரம் தலையுண்டும்.
அந்தத் தலை ஒவ்வொன்றுக்கு பழுபதினாயிரம் முகமுண்டும்.
அந்த முகமொவ்வொன்றுக்கு எழுபதினாயிரம் வாயுண்டு. அந்த
வாயொவ்வொன்றுக்கு எழுபதினாயிரம் நாவுண்டு. அந்த நாவு
ஒவ்வொன்றினால் அல்லாஹு தஆலாவை எழுபதினாயிரம் வித
மான தசபீஹுசெய்யும். அப்போது அல்லாஹு தஆலா அந்தத்
தசபீஹுடைய தவாபு நடக்கையும் சலவாத்து சொன்னானே
அவனுக்கு எழுதுவான். இந்தப்படிக்கு தலாயுல்லு கைறாத்து
முதலான கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ
ஸல்லமவர்கள் திருவுளமானார்கள். யாதாயொருவன் என்பேரிலே
ஜும் ஆவுடைய நாளையில் ஒரு சலவாத்து சொல்லுவானாகில்
அவன்பேரில் அல்லாவும் அல்லாவுடைய மலக்குகளும் பத்து
வருஷம் சலவாத்துச் சொல்லுவார்கள். இன்னும் அவனுக்கு
பத்துலக்ஷம் நன்மைகள் எழுதப்படும். இன்னும் அவனை விட்டும்
பத்துலக்ஷம் பாவத்தை அழிக்கப்படும். இன்னும் அவனுக்குப்
பத்துலக்ஷம் தறஜாக்களை உயர்த்தப்படுமென்று நபிநாயகம் (ஸல்)
திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

ஸாலிஹீன்களில் நின்றுமொருவர் சொல்லுகிறார். வழக்கமாக ஒரு கணக்குவைத்து நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில், நான் நித்திரைசெய்கிற இடத்தில் சலவாத்தையோதி வந்தேன். அப்படி யோதி வருகையில் ஒரு நாளிரவு கண் இரண்டும் நித்திரை மயக்கங்கொண்டு தன்னையறியாமல் நித்திரை கொண்டு விட்டேன். அப்போது கனவிலே நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவசல்லமவர்கள் ஹாஜுருனி ஒப் ஸாலிஹீனே, எனபேரில் சலவாத்து சொன்ன வாயைக் கொண்டுவாரும். நான் முத்தமிட்டுக்கொள்ளவென்று கேட்டார்கள். அப்போது நான் வெட்கப்பட்டவனாக என் முகத்தை அருகில்கொண்டுபோய்க் கன்னத்தை கொடுத்தேன், அதிலே நபிநாயகமவர்கள் முத்தமிட்டார்கள். பின்பு நான் கண் விழித்துப் பார்த்தேன். என் கன்னமும், என்வீடும் கஸ்தூரி வாசம் எட்டு நாள்வரை வீசிக்கொண்டிருந்தது. அந்த எட்டு நாளும் என்னுடைய பெண்சாதி என் கன்னத்தில் வீசுகிற கஸ்தூரி வாசத்தைக் கண்டாள் என்று சொல்லியிருக்கிறார்கள், இந்தப் படிக்கு நுஸ்ஹத்துல் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றது.

இன்னும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள் ஏய் மனிதர்களே, நீங்கள் உங்களுடைய சிறு குழந்தைகள் அழுகிறதென்று அடிக்காதீர்கள். அப்படி யடிக்காமலிருப்பது எவ்வளவு நாளென்றால், ஒரு வருஷத்திற்கு அடிக்காதீர்கள். அஃதெதினாலென்றால் சிறு குழந்தைகள் நாலு மாதம் வரையில் அழுகிறதாகிறது லாஇலாஹ இல்லல்லாஹு என்கிற திக்ருயிருக்கும், இன்னும் நான்குமாதம் அழுகிறதாவது என்பேரில் சலவாத்து சொல்லுகிறதாயிருக்கும். இன்னும் நான்கு மாதம் அழுகிறதாகிறது அந்தப் பிள்ளையுடைய தாய் தகப்பன் மார்களுக்குத் துஆ செய்கிறதாயிருக்கும், ஆகையினாலே நீங்கள் பிள்ளைகளை ஒருவருஷம் வரையில் அடிக்கவேண்டாமென்று நபிநாயகம் திருவுளமானார்கள் இந்தப்படிக்கு நுஸ்ஹத்தில் மஜாலிசென்னுங் கித்தாபில் வருகின்றது.

ஷறபுல் முஸ்தபா என்கிற கித்தாபில் வருகிறது யாதெனில், பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒருநாள் ஸஹருடைய நேரத்தில் வீட்டிற் புடவை தைத்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஊசி கீழேவிழுந்தது. உடனே விளக்கும் அவிந்து போய் விட்டது. அவ்விடத்திலே நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் வந்தார்கள். அவர்களுடைய பிரகாச வெளிச்சத்தினாலே கீழேவிழுந்த ஊசியை ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் கண்டு எடுத்துக்கொண்டு, பின்னர் நபிநாயகத்தைப் பார்த்து அல்லாஹு தஆலாவுடைய றசூலே உங்கள் முகத்தை எந்த வண்ணம் பிரகாசமாக்கி வைத்ததென்று கேட்டார்கள்.

அதற்கு நபிநாயகமவர்கள் ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப்பார்த்து கேடேன்ற கேடெல்லா மென்னைக் காணாத வனுக்காகவிருக்குமென்றார்கள். அப்போது ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் நபிநாயகத்தைப் பார்த்து அப்படி உங்களைக் காணாதவன் யாரென்று கேட்டதற்கு, நபிநாயகம் என்னைக்காணாதவன் பகீலென்று சொன்னார்கள். அதற்கு ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள், நபிநாயத்திடம் அப்படியுள்ள பகீலர் யாரென்றார்கள். அதற்கு நபிநாயகம் ஆயிஷாவே, என்னுடைய திருநாமங் கேட்டவுடனே சலவாத்து சொல்லாதவன் பகீலனென்று சொன்னார்கள்.

ஹதீது.

பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்கள் வழக்கமாக நாளொன்றுக்குப் பதினாயிரம் சலவாத்து ஓதிவந்தார்கள். அப்போது நபிநாயகமவர்கள் பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா அவர்களைப்பார்த்து 'ஆயிஷாவே, இந்த சலவாத்தை யொருதடவை யோதினாலே அது என்பேரில் லக்ஷம் சலவத்து ஓதின தவாபு கிடைக்குமென்று சொன்னார்கள். பீவி ஆயிஷா றலியல்லாஹு அன்ஹா ஓதிவந்த சலவாத்தாகிறது "அல்லாஹும்ம சல்லி வசல்லிம் வபாரிக் அலா செய்யிதினா முஹம்மதின் வஆலிஹி வஸஹ்பிஹி அத்தமா பீயில்மில்லாஹி சலாத்தன் தாயிமத்தின் பிதவாமிமுல்க்கில்லா" என்று சொல்லப் பட்ட சலவத்தாருக்கும்.

ஆதலால் மூமின் முஸ்லிமாகிய இக்வான்களே, அருமையானவர்களே, உங்களுடைய அறிவென்னும் அழகான கண்களைக் கொண்டும் இந்தப் பாயிலே சொல்லப்பட்டிருக்கிற ஹதீது ஹிக்காயத்துக்களை நன்றாகப் பார்வையிட்டு நாளொன்றுக்கு நூறு தடவை அல்லது பதினோர் தடவை யாகிலும் சலவாத்தையோதி

வாருங்கள், அல்லாஹு தஆலாவைத் தொழுது சொல்லுங்கள், சலவாத்துடைய பறக்கத்தினுல் பாவங்களை மன்னித்து உம்மிலை வோரையும் அல்லாஹு தஆலா சுவர்க்கப் பதியிலாகிடுவான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

சலவாத்துடைய வரிசையின் பயான் முற்றிற்று.

கபுறை ஸியாரத்துசெய்கிற வரிசையின் பயான்.

ஹதீது.

கபுறுகளை ஸியாறத்து செய்கிறது முஸ்தஹப்பாயிருக்கும் ஆதலால் யாதாமொருவன் கபுருகளை ஸியாறத்து செய்ய நாடுவானுகில் அவன் தன் வீட்டில் இரண்டு றக்அத்து நபில்தொழு றெதில் ஒரு றக்குஅத்தில் அல்ஹம்து ஒரு தடவை குல்ஹுவல் லாஹு சூறத்து மூன்று தடவை இவ்விதமோதி தொழுகிறது இதுபோல் மற்ற றக்அத்துக்கும் ஓதித்தொழுத பின்னர் அந்தத் தவாபை மையித்திற்கு ஹதியாய் செய்தால் அதைக் கபுறில் மையித்தனவில் ஒரு ஒளிவாய் அல்லாஹு தஆலா பறுப்பி வைப்பான்.

பின்பு தொழுதவனுக்கு மிகுந்த தவாபை யெழுதிடுவான் பின்பு கபறஸ்தானுக்குப்போய்த் தன்காலி லணிந்திருக்கிற ஜோத்தா முதலானவைகளை கழற்றிவிட்டுக் கபுறினிடமாகத் தன்முதுகு கிபுலாப் புறமாக மையித்தின்முன் முகத்தை முன்னோக்கினவனுக நின்றுகொண்டு அஸ்ஸலாமு "அலைக்கும் யா அஹ்லல் குபூர் யஃபிருல்லாஹு லனு வலக்கும் அன்தும லனுஸலபுன வநஹ்னு லக்கும் தபஉன் வஇன்னு இன்ஷா அல்லாஹு பிக்கும் லாஹிக்கூன்" சொல்லிப் பின்பு துஆவோத நாடுவானெயாகில் கிபுலாவை முன்னோக்கி நின்று ஓதி ஸியாறத்துச்செய்ய வேண்டும். ஸியாறத்து செய்கிறதற்கு வரிசையான நாள் திங்கள் வியாழன், வெள்ளி, சனி இந்த நான்கு நாட்களும் நல்லதாயிருக்கும் ஜும்ஆ தொழுதபின் ஸியாறத்துச் செய்கிறது அழகாயிருக்கும். இந்தப்படிக்குப் பத்தாவி ஆலம் கீரியென்னும் கிதாபில் த்தாவதஜிலதில் 527-வது பக்கத்தில் வருகின்றது.

இன்னும் அல்ஹம்து சூறத்து மூன்று தடவைகுல்ஹு வல்லாஹு சூறத்து மூன்று தடவை ஆயத்துல் குர்சிய்யும் ஓதி ஹதியாச் செய்கிறது மிகவும் நன்மையாயிருக்கும், அதனுல்

அகாபிலேசாகும். ஆகலால் மூமினுகிய உடன்பிறந்தார்களே, உங்களுடைய தெளிவான நேரான புத்தியைக்கொண்டு இந்தப் பாவை நன்ருகப் பார்வையிட்டு கபுறுகளை ஸியாறத்து செய்து வரிசைகளைப் பெற்றுக்கொள்வீர்களாக. அந்தப் பறக்கத்தினுல் அல்லாஹு தஆலா நம்பனைவோருக்கும் கிருபை றஹ்மத்துச் செய்வாளுகவும். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

கபுறை ஸியாறத்து செய்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

பள்ளிவாசல் கட்டுகிறதிலும் பழுதுபார்க்கிறதிலுங் கிடைக்கிற வரிசையின் பயான்.

அல்லாஹு தஆலா குர்ஆனிலே திருவுளமானன், அஃதி யாதெனில்: ஆயத்தின்பொருள் "அல்லாவுடைய பள்ளிவாசல்களைப் பழுதுபார்க்கிறதெல்லாம் அல்லாஹுத் தஆலாவைக் கொண்டும், ஒடுக்கத்து நாளைக்கொண்டும் ஈமான் கொண்டவர்கள தான்"

தபுசிர் ஐமாலில் இந்த ஆயத்திற்குப்பொருள் செய்யப்பட்டிருக்கிறது யாதெனில், பள்ளிவாசல்களைக் கட்டுகிறதும், பழுது பார்க்கிறதும், அதிலே இபாதத்துசெய்கிறதும், பாய் விளக்கு முதலானது கொண்டு அலங்கரிக்கிறதும், அதிலிருந்து துனியா வுடைய வார்த்தைகளைப் பேசாம லிருக்கிறதும் நன்மையா யிருக்குமென்று வந்திறது.

ஹதீது.

நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானூர்கள்:—யாதாமொருவன் ஒரு காடைக்கூண் டளவிற் பள்ளிவாசலைக் கட்டுவானுகில், அவனுக்கு அல்லாஹு தஆலா சொர்க்கத்தில் ஒரு மாளிகையைக் கொடுப்பான்.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசல் கட்டுவானுகில் அவனுக்கு அல்லாஹு தஆலா சொர்க்கத்தில் இரண்டுவீடு கட்டிடுவான் என்று நபிநாயகஞ்சொல்ல நான் கேட்டேனென்று உதுமான் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னூர்கள்.

இன்னும் யாதாமொருவன் ஒரு ஹௌளு அல்லது ஒரு கிணறு அல்லது ஒரு பள்ளிவாசல் கட்டிவைப்பானுகில், அதில்

ஒவ்வோர் ஜாணுக்கும் பதிலாகச் சொர்க்கலோகத்தில் அல்லாஹு தஆலா பொன வெள்ளி நவரத்தினம் இவைகளால் நாற்பதினாயிரம் பட்டணம் கட்டுவான். அந்தப் பட்டணங்கள் ஒவ்வொன்றிற்கும் நாற்பதினாயிரம் வீடுகள் அந்த வீடுகள் ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ஹூருல்ஈன் பெண்களும், ஆயிரம் வெள்ளாட்டிகளும் ஆயிரம் மரவையும் அந்த மரவைகள் ஒவ்வொன்றிற்கு நாற்பதினாயிரம் வகையான தீன்களும் குடிப்புவகைகளும் உண்டாயிருக்கும்.

இவைகளை அனுபவிக்கும்படியான குவ்வத்தென்ற சக்தியையும் அவனுக்கு கொடுப்பானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு முனீறென்கிற கித்தாபில் வருகின்றன.

ஹதீது

அல்லாஹு தஆலாவுக்காக ஒருவன், பள்ளிவாசற் கட்டுவானாகில் ஒவ்வோர் ஜாண் அல்லது ஒவ்வோர் முழம் ஒன்றுக்குப் பதிலாக தங்கம், வெள்ளி, மாணிக்கம், பச்சை மரகதம் முத்து இந்த இரத்தினங்களால் சொர்க்கலோகத்திலே நான்கு கோடிப் பட்டணங்களை அல்லாஹு தஆலா அவனுக்குக் கொடுப்பான். அந்தப் பட்டணங்களில ஒவ்வோர் பட்டணத்தில் பத்துலக்ஷம் வீடுண்டாயிருக்கும். அந்த வீடுகளில் ஒவ்வோர் வீட்டில் பத்துலக்ஷம் கட்டிலுண்டாயிருக்கும். அந்தக் கட்டில்களில் ஒவ்வோர் கட்டிலில் ஒவ்வோர் ஹூரின் பெண்களிருப்பார்கள். இன்னும் மேற்சொன்ன வீடுகள் ஒவ்வொன்றில் நாற்பதினாயிரம் மரவைகள் வைத்திருக்கும். அந்த மரவைகளில் ஒவ்வொன்றில் நாற்பதினாயிரம் பிங்கானிருக்கும். அந்தப் பிங்கான்கள் ஒவ்வொன்றிலும் பலவிதமான நான்குகோடி வஜீபனமுண்டாயிருக்கும். இவ்விதமான பெண்களையும் வஜீபனங்களையும் அனுபவிக்கும்படியான சக்தியை அல்லாஹு தஆலா அவனுக்குக் கொடுத்திடுவானென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் திருவுளமானார்கள். இந்தப்படிக்கு தபூசிர் பயானில் வருகின்றன.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலில் விளக்கேற்றுகிறதற்குக் குளோப்புகள் வாங்கிவைப்பானாகில் அந்தக் குளோப்புகள் உடைகிறவரையில் எழுபதினாயிரம் மலக்குகள் அவன்பேரில் பிழைபொறுக்கத் தேடுவார்கள். இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலுக்கு ஒரு விளக்கேற்றிவைப்பானாகில், அதனைச்

சுமக்கிற மலக்குகளும், மற்ற மலக்குகளும் பள்ளிவாசலிற் பிரகாச மிருக்கிறமட்டில் அவனுக்குப் பிழைபொறுக்கத் தேடுவார்க ளென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் திருவுளமானார்கள்.

தமீம் தாரியல்லாஹு அன்ஹுவர்கள் ஒரு நாள் பள்ளி வாசலில் குந்தீலாப்புக் தூக்கினபோது, நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தமீம் தாரியல்லாஹு அன்ஹு வர்களைப் பார்த்து, ஓய் தமீமே, நீர் இஸ்லாத்தை ஒளிவாக்கி வைத்தீர், ஆதலால் அல்லாஹு தஆலா உம்முடைய பேரில் உமக்குத் துனியாவிலும், ஆகிறத்திலும் ஒளிவாக்கி வைப்பாகவும் எனக்கு ஒரு மகளுண்டாயிருந்தால் அந்த மகளை யுமக்குக் கலியாணமுடித்துத் தருவேனென்று சொன்னார்கள். அதுகேட்டு ஒரு மனிதன நபிநாயகத்தைப்பார்த்து அல்லாஹு தஆல வுடைய றசூலே, என் மகளை யந்தத் தமீமவர்களுக்கு கலியாணமுடித்துக் கொடுக்கிறே னென்று சொல்லியவர்களுக்கு நிக்காஹு செய்து கொடுத்தார்கள்.

இன்னும் றமலான் மாதத்தில் யாதாமொருவன் பள்ளி வாசலில் விளக்கேற்றி வைப்பானாகில் அந்த விளக்கு அவனுடைய கபுறில் அவனுக்கு ஒளியாயிருக்கும். மேலும் அந்தப் பள்ளி வாசலிற் றெழுது வருகிற பேர்களுடைய தவாபைப்போல் அவனுக்குத் தவாபையெழுதப்படும். இன்னும் அந்த பள்ளி வாசலி லிருக்கிறவரையில் அறுஷைச் சுமக்கிற மலக்குகளும் மற்ற மலக்குகளும அவன் பாவத்தை மன்னிக்கத் தேடுவார்களென்று நபிநாயகம முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம திருவுள மானார்கள்.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலில் பாய்வாங்கிப் போடுவானாகில், அந்தப் பாய்கிழிந்து துண்டுதுண்டாய் போகு மட்டிலும் அவனுக்கெழுபதினாயிரம் மலக்குகள் பிழைபொறுக்கத் தேடுவார்கள்.

இன்னும் யாதாமொருவன் பள்ளிவாசலில் கிடக்கிற ஒரு அசங்கியமான வஸ்து அல்லது ஒரு தூசி குப்பை கூளம் முதலா னவைகளை வெளிப்படுத்துவானாகில் அவனுக்குச் சொர்க்க லோகத்திலே அல்லாஹு தஆலா ஒரு மாளிகையைக் கொடுப் பான். இன்னும் சுறல்ஹூன் பெண்களுக்குக் கொடுக்கிற மகரா

கிறது பள்ளிவாசலைத் தூர்த்துப் பொறுக்கிறதா யிருக்குமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள்.

ஹிக்காயத்து.

ஹஸன்பஸரீ றஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் சொல்லுகிறார்கள், பள்ளிவாசலிலிருந்து துனியாவுடைய பேச்சுகளைப் பேசுகிறது, ஆடுமாடுகள் வைக்கோற்புல்லைத் தின்பதுபோலே அவனுடைய நன்மைகளைத் தின்றுவிடும். இன்னும் நாற்பது வருஷத்து அமல்களும் அழிந்துபோகுமென்று துர்றத்துல் வாயிலீன் முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

ஹதீது

யாதாமொருவன் பள்ளிவாசல் இல்முடைய மஜ்லிஸ் அமைத்து வைக்கிற இடத்தில் கபறஸ்தான் வாங்குசொல்லுகிறபோது குருஆன் ஓதுகிற இடம் இத்தலங்களில் துனியாவுடைய பேச்சுகளைப் பேசுகிறதாவது முப்பது வருஷஞ் செய்கிற அமலுடைய தவாபையழிக்கப்படுமென்று நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் திருவுளமானார்கள். இந்தப் படிக்குத் தப்ஸீரு றூஹில் பயானில் சொல்லப்படுகின்றது.

ஆதலால், மூமின் முஸ்லிமாகிய எமது நேசர்களே, சகோதரர்களே, உங்களுடைய மேலாம்பரமான தெளிவான அறிவென்று சொல்லும் கண்களினாலே மேலே சொல்லப்பட்டிருக்கின்ற ஹதீது ஹிக்காயத்துகளை நன்றாகப் பார்வையிட்டுத் துனியாவை நம்பாமல் இபுலீசுடைய கலப்பிலகப்படாமல் ஷறகைப்பேணி நடந்து பள்ளிவாசல்களைக் கட்டுங்கள். அவைகளைப் பழுதுபாருங்கள், யாராகிலும் பள்ளிவாசற் கட்டவேண்டும். அவைகளை அதற்காக உபகாரஞ் செய்யுங்களென்று கேட்டபேர்களுக்கு உங்களாலேன்ற மாத்திரம் இஹ்ஸான் உபகாரம் ஒத்தாசை செய்யுங்கள். இன்னும் பள்ளிவாசலுக்குக் குளோப்பு, பாய், விளக்கு முதலானவைகளை ஷறகின்படிக்கு வாங்கிப் போடுங்கள். இன்னும் துனியாவுடைய பேச்சுகளை மேலெழுதப்பட்ட இடங்களிலிருந்து பேசாமல் வாசைப்பேணி நல்ல அமல்களைச் செய்யுங்கள். அல்லாஹுதஆலா நம்மனைவோர்களுடைய பாவங்களைப் பொறுத்துச் சொர்க்கலோகத்திலும் தாக்கலாக்கி வைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன.

பள்ளிவாசல் கட்டுகிறதற்கும் அவைகளை பழுதுபார்க்கிறதற்கும் கிடைக்கிற வரிசையின் பயான் முற்றிற்று.

இத்தாவுடைய பிரிவின் வரிசையின் பயான்.

ஹதீது.

அல்லாஹுத்தஆலா மகா சிறப்பாகிய குர்ஆன் ஷரீபில் புருஷன் மவுத்தாகிப்போன பெண்பிள்ளை நான்கு மாதம் பத்து நாளும் சரியாக இத்தாயிருக்க வேண்டுமென்று வெட்டவெளிச்சமாகத் தெளிவாகத் திடனுக விபரமாகத் திருவுளமாயிருக்கிறுன். இந்தப்படிக்கு நபிநாயகமவர்கள் சொன்ன ஹதீதிலும் மதுஹபிலும் மேல்சொன்ன பிரகாரமே வந்திருக்கின்றன.

ஆதலால் யாதாமொருவன் தன் பெண்சாதியைச் சேர்க்கை செய்தாலும், சேர்க்கை செய்யாதிருந்தாலும் அல்லது பாலிக்காகாத சிறு பெண்ணுகவிருந்தாலும், பாலகுடிக்கிற குழந்தையாகவிருந்தாலுஞ் சரி அவன் மவுத்துக்கு நான்குமாதமும் பத்துநாளுஞ் சரியாய் இத்தாயிருக்கிறது யாவர்பேரிலும் வாஜிபென்று தப்சீர் ஐமல் பத்தாவி ஆலம்கீரி முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இவ்விதத்தில் இத்தாயிருக்கிற பெண்பிள்ளை ஹமலாயிருந்தாளாகில், அவள் பிள்ளை பெறுகிறமட்டிலும் இத்தாயிருக்க வேண்டும். இதிற் சொன்னபடிக்குப் புருஷன் மவுத்தாகிப் போனவுடனே அல்லது மற்றநாள் பிள்ளை பெறுகிறமட்டிலும் அவள் இத்தாவிருக்க வேண்டும் எவ்வளவு நாளாகிலும் அவள் பிள்ளைப் பெற்றேயொழிய இத்தா முடிவாகமாட்டாது. இன்னும் இத்தா முடியுமுன்பாக அவள் நிக்காஹு செய்து கொள்ளுகிறதும் ஹறுமாயிருக்கும். அல்லது நிக்காஹு செய்தாலும் கூடாது. இந்தப்படிக்கு தத்தல் முகுத்தார் முதலிய கித்தாபுகளில் வருகின்றன.

இன்னும் இத்தாவிலிருப்பான பாலிக்கான பெண்பிள்ளை தங்கம், பொன், வெள்ளி, இரத்தினம் முதலான ஆபரணங்களிட்டு அலங்காரஞ் செய்யக்கூடாது. இன்னும் அவள் பட்டுப்புடவை, சிகப்புப் புடவை, குஸும்பாச்சாயக் காச்சியபுடவை, குங்குமப்பூச்சாயக் காச்சிய புடவை இவை களுடுத்தக்கூடாது.

இன்னும் அவள் எவ்விதமான வஸ்துக்களையும் அணியப் பூசக்கூடாது, எண்ணெய் தேய்க்கக்கூடாது. அப்படி எண்ணெய் தேய்க்காததினுலே சரீரத்திற்கு யாதேனுமொரு சங்கடமுண்டாகுமாகில் அதனுலே எண்ணெய் தேய்த்துக்கொள்ள ஆகும். இன்னும் அவள்

கண்ணுக்குச் சுறுமாவிடக்கூடாது. அப்படிச் சுறுமாவிடாத நிலைமையில் கண்ணுக்கு ஒரு சங்கடம் வருமேயாகில் கண்ணுக்குச் சுறுமாவிட்டுக்கொள்ள ஆகும்.

இன்னும் அவள் மருதாணியிட்டுக் கொள்ளக்கூடாது. நெருக்கமான பல்லுள்ள சீப்புகளினால் தலைக்கொண்டையைச் சீவிவார்ந்து முடிக்கக்கூடாது. ஆனால் சீப்புக்கு மறுபக்கத்திலே பெரும்பல்லாக இருக்குமே அதைக்கொண்டு தலைமுடியைச் சீவிக் கட்டிக்கொள்ளலாகும். மேலும் மேற்சொன்ன பாலிக்காகாத சிறு பெண்பிள்ளைக்கு வாஜிபில்லை.

இன்னும் இத்தாவிதியான பெண்பிள்ளை முதலிலேதான் இத்தாயிருந்த வீட்டைவிட்டு வேறே வீட்டிற்காகிலுந் தெருவிற்காகிலும் போகக்கூடாது. ஆனால் இத்தாயிருக்கிற வீட்டு முற்றத்தைச்சார்ந்து வேறே குடித்தனத்தாரில்லாதிருக்கில் முற்றத்திற்கு வரலாம். இன்னும் இத்தாயிருக்கிற வீடு இடிந்து போமென்ற பயந்தோற்றினால் அவள் மானமாக வேறோர் வீட்டிற் போய் இத்தா இருக்கிறதாகும்.

இன்னும் இத்தா விதியானவளுக்கு உண்ண உடுத்த அன்ன வஸ்திரச் செலவுக்கு இல்லாதிருக்கில் பகற்காலத்திலும் இராக்காலத்திற் கொஞ்சநேரத்திலும் அதபு மரியாதையொழுங்குடனே வெளிப்படத்திறம்போய்க் குடிப்பாடுபட்டுக் கொண்டுவந்து செலவு செய்து இத்தா யிருந்த இடத்திலேயே இருக்கவேண்டும்.

இன்னும் புறத்தேசத்திற்குப் போயிருந்த புருஷன் அங்கே இறந்துபோனதாகக் காயித மூலியமாகச் சமாச்சாரந் தெரியவந்தால் மவுத்தான நாளைக் கணக்கிட்டுப்பார்த்து அம்மட்டிற் போன நாட்போக மீதமிருக்கில் பாக்கி நாளைக்குத்தான் இத்தா இருக்கவேண்டும். இதையன்றிக் கடிதம்வந்த நாளையிலிருந்து நாலுமாதமும் பத்துநாளும் இத்தா யிருக்க வேண்டுமென்பது இல்லை.

இவ்விதமாக நமது மார்க்கத்தில் இத்தாவுடைய காரியத்தைக் குறித்துக் குர்ஆன் ஷரீபிலும் ஹதீதுக் கிதாபுகளிலும் இருந்திருக்க, இக்காலத்திலே சிலசில ஊர்களில் ஒன்றரைப்பொழுது கோஷபுடனே கடுமையான இத்தா யிருக்கவேண்டுமென்றும், மூன்றுநாள் வரைக்கும் துணி முதலானதைப் போர்த்தி முகந் தெரியாமல் இத்தா யிருக்க வேண்டுமென்றும், நாற்பதுநாள் இத்தா யிருக்கவேண்டுமென்றும் வருகிறது.

அப்படி இத்தாயிருக்கிறது வீட்டுக்குள்ளேயே ஒரு பள்ளத்தைத் தோண்டி அதைச்சூழப் பாசை மிடியினாலே அடைய வளைத்துக்கட்டி அதிலொரு ஆள் நுழைந்து வரும்படியான வாசலிட்டு அதிற்றன்னேயே மலபாதைக்கு ஜலபாதைக்கிருக்கிறது குளிக்கிற தண்ணீரும் அந்தப் பள்ளத்திலேயே விழவேண்டுமென்று ஒரே பிடவை போட்டேயே இத்தாயிருக்க வேண்டுமென்றும் வருகிறது.

அப்படி இத்தாயிருக்கிறதிலும் யாதாமொரு கெர்ப்பஸ்திரீ புறத்திலிருந்து வந்தால் அவள் கெர்ப்பத்திலிருக்கிற பிள்ளை ஆண்பிள்ளையா யிருந்தால் இத்தா முறிந்துபோகும். அதனால் நீ வரக்கூடாதென்று அவளை விரட்டிவிடுகிறதும் இன்னும் பிறர் சத்தம் காதிற்றுக் கேட்கக்கூடாதென்று காதிலே பஞ்சை வைத்தடைத்துக்கொள்ள வேண்டுமென்றும் ஈமிசான பேர்களுடன் பேசும்பாது குரலிடாமற் பிரமபுகட்டிக்கோளை காட்டிப் பேசவேண்டுமென்றும் வருகிறது.

தலையைக் கைகளினாலே சொறிந்தால் இத்தா முறிந்து போகும். அதற்காகக் குச்சியினாலே தலையைச் சொறியவேண்டுமென்றும் வீட்டுமுற்றத்தில் வந்துநின்று வானத்தைப்பார்த்தால் இத்தா முறிந்துபோகுமென்றும். நாற்பதுநாட்கழிந்து இத்தாவை விட்டு வெளியே புறப்படும்போது குறஆன் ஷரீபைப்பிரித்து அதன் முகத்தில் முழிக்கவேண்டும். அப்படி குறஆன் ஷரீபில்லாதிருக்கில பாதிஹாவோதுகிற லெப்பைமாருடைய கண்ணிலே முழிக்க வேண்டுமென்றும் வருகிறது.

இன்னும் இத்தா புறப்படும்போது அரிசியைப் பூமியிற் பரப்பி அதின்பேரில அவள் நடந்து வரவேண்டுமென்றும், இத்தா புறப்பட்டவுடனே பள்ளிவாசல்களில்வந்து சலாம் சொல்லவேண்டுமென்றும், பச்சைப் புற்பூண்டுகளில் மிதித்து நடந்துபோய் ஆறு, குளம், கடல், மரமட்டைகளைப் பார்த்து வரவேண்டுமென்றும், இன்னும் அநேகம் ஷறதுக்கு மாற்றமான பித்அத்துகளாக நடக்கிறது. இவ்விதம நடக்கிறதை அந்தந்த ஊர்களிலுள்ள சில புண்ணியவான்கள் ஓத்துக்கொண்டு இருக்கிறார்களென்பது பார்வையினாலும், கேள்விகளினாலுந் தெரிய வருகின்றன.

ஆதலாலிந்தச் செய்கைகளெல்லாம் இபுலீசுடைய மாயத்தி லகப்பட்டு மதிமயங்கிச் செய்கிறதே தவிர, அல்லாறசூல் சொன்ன சொல்லுகளல்ல. மூமின் முஸ்லிமாகிய எமதுடற் பிறப்புகளே, கனதியானவர்களே, பரிசுத்தமார்க்கத்தை யுடையவர்களே உங்களுடைய இல்மென்று சொல்லுகின்ற தெளிவான கண்களைக்கொண்டும் இந்தப் பாவை நன்றாகப் பார்வையிட்டுச் சண்டாளபாதக துரோகி மாருட்டக்காரனான இபுலீசுடைய மாயத்தி லகப்படாமல் அல்லாறசூல் இமாம்கள் சொன்ன சொற் பிரகாரம் புருஷன் மவுத்தான பெண்பிள்ளையை நான்குமாதம் பத்துநாளும் இத்தா யிருக்கும்படி செய்து கொள்ளுங்கள். ஹமலாயிருக்கிற பெண்பிள்ளையைப் பேறுகாலம் வரைக்கும் இத்தாவிலிருக்கும்படி செய்யுங்கள். அதனால் அல்லாஹு தஆலா அதிக நன்மை தறஜாக்களைத்தந்து நம்மனைவோரையும் சொர்க்க லோகத்திலுக் தாக்கலாக்கி வைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இத்தாவுடைய பிரிவின் வரிசையின் பயான் முற்றிற்று.

மவுலிது ஷரீபினுடைய வரிசையின் பயான்.

ஹதீது.

மகாசிறப்பும், மேன்மையும் உயர்த்தியுமான நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய மவுலிதை யாதாமொருவன் ஓதுவானாகில், அல்லது ஓதக்கேட்டு நபிநாயகம் பேரில் சலவாத்துச் சொல்வானாகில், அவனுக்கு அல்லாஹு தஆலா இருபதியிலுமுள்ள ஆபத்துகளுடைய தீவினைகளைவிட்டுங் காத்துக்கொள்வான். இன்னும் அவனுடைய பாவங்களைப் பொறுத்திடுவான். இன்னும் அவனுடைய நன்மை பட்டோலையை அவனுடைய வலதுகையிற் கொடுத்திடுவான். இன்னும் அவனுக்கு றஹ்மத்துச் செய்வான்.

இன்னும் அவனுடைய கல்பை யொளிவாக்கிவைப்பான். இன்னும் அவன் ஹஜ்ஜு உம்றாவுடைய தவாபைப் பெற்றுக் கொள்ளுவான். இன்னும் தௌறாத்து, சபூர், இன்சீல், புறுகான் ஆகிய இந்த நான்கு வேதத்தையும் ஓதின தவாபைப் பெற்றுக் கொள்ளுவான். இன்னும் ஷைத்தான்கள் அவர்களுடைய தீங்குகளைவிட்டும் முனாபிக்குத்தனத்தைவிட்டும் ஹசதைவிட்டும் தஜ்ஜாலுடைய பித்னாவைவிட்டும் அல்லாஹு தஆலா அவனைக் காத்துக் கொள்ளுவான்.

இன்னும் யாதாமொருவன் நபிநாயகம் மேல் மவ்லிதை ஓதித் தன்னுடைய ஹாஜத்தை அல்லாஹு தஆலாவிடத்திற் கேட்பானுமில் அவனுக்கு அல்லாஹு தஆலா துனியா ஆகிறத்துடைய ஹாஜத்துகளை நிறைவேற்றி வைப்பான். இன்னும் யாதாமொருவன் ஜூம்ஆ நாள் முழுமையும் வழக்கமாக மவ்லிதை ஓதி வருவானுமில் அவன் ஆயிரமடிமைகளை யுரிமைவிட்டதவரைப் பெற்றுக்கொள்வான். இன்னும் யாதாமொருவன் மவ்லிதை ஓதி வருகிற மஜ்லிசிலிருந்து நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் ஸலவாத்துச் சொல்லுவானுமில், அவன் அல்லாஹு தஆலாவை வணங்குகிறவனைப் போலாகிடுவான். இன்னும் அவனுக்கு ஆகாசத்திற் பறக்கிற பறவைகளும் காட்டிலுள்ள மிருகஜாதி யினங்களும் பிழைபொறுக்கத் தேடும். இந்தப்படிக்கு அனவாதெனலும் கிதாபில் சொல்லியிருக்கின்றன.

ஹிக்காயத்து.

ஸாலிஹீன்களில் நின்றுமொருவரைத்தொட்டும் பேசப்பட்டிருக்கிறது யாதெனில், ஸாலிஹான ஒரு கச்சைவடக்காரனுர் வருஷா வருஷம் அந்த ஊரையாளுகிற சுல்தான் நடத்தும் கந்தூரிக்கு முன்பே நபிநாயகத்துடைய மவ்லிது நடத்தி அன்ன பதார்த்தங்களை அழகாகச்சமைத்து உலமாக்கள் பக்கீர், பக்ருக்கள், ஸாலிஹீன்கள் முதலாகிய யாவருக்கும் வஜீபனங் கொடுத்து மவ்லிதையோதி வருகிறவராக விருந்தார்.

இவ்விதம் கச்சைவடக்காரனுர் ஊரையாளுகிற சுல்தானுக்கு முந்தியே வருஷா வருஷம் நபிநாயகத்துடைய மவ்லிதைச் சங்கையாக ஓதிவருவதினால் அந்தச் சுல்தான், இவரென்ன ஒரு வர்த்தகன் நமக்கு முற்படவே மவ்லிதுடைய கந்தூரிக்கணரியை நிறைவேற்றிப் போடுகிறார், அப்படியிருந்தால் நாம் சுல்தானென்கிற பெருமை யென்ன இருக்கிறதென்று மனதில் ரோஷங்கொண்டு, இந்த வருஷம் கச்சைவடக்காரனுரை நாம் பிந்தவைக்க வேண்டுமென்றெண்ணி மவ்லிது நாளடுத்தபோது அவ்வூரில் தண்ணீர் விறகு விற்கிறவர்களுக்கு நீங்கள் தண்ணீர் விறகு விற்கக்கூடாதென்று தாக்கீதுசெய்து விலக்கியிருந்தார். அப்போது கச்சைவடக்காரர் வழக்கம் போலே மவ்லிது கந்தூரி செய்கிறதற்குத் தண்ணீர் விறகுவாங்கி வாருங்களென்று தம்முடைய காதிம்களுக்கு உத்திரவு செய்தார். அது கேட்டவர்கள் தண்ணீர் விறகு விலைக்கு

வாங்க அலைவாருன்னவர்களை யழைத்துக்கேட்டபோது அவர்கள் ஊராளுகிற சுல்தான் செய்திருக்கிற தாக்கீதைத் தெரிவித்தார். உடனே இந்தச் செய்தியை காதிமகள் தங்கள் எஜமானராகிய கச்சைவடக்காரனாருக்கு வந்து சொன்னார்கள்.

அதுகேட்டுக் கச்சைவடக்காரனார் தமது காதிம்களைப்பார்த்து, நீங்கள் சந்தனக்கட்டை பன்னீர் கஸ்தூரி செலவுக்கு எவ்வளவு செல்லுமோ அவ்வளவும் சீக்கிரம் வாங்கிப்போடுங்களென்று உத்திரவு செய்தார் அதுபோலே காதிம்கள் சந்தனக்கட்டை பன்னீர் செல்லுஞ் செலவுக்கெல்லாம் போதுமானமட்டும் வாங்கிவந்து மகா இனபமாக வஜீபனம் சமைத்தார். அதுகண்டு கச்சைவடக்காரனார் உலமாக்கள் பக்கீர், புக்களுக்கள், ஸாலிஹீன்கள் முதலாகிய யாவரையும் அழைத்து வந்து உபசரித்து உண்ணக்கொடுத்து வழக்கம்போலே சிறப்பாக மவுலிதுவோதினார்.

இவ்விதம் கச்சைவடக்காரனார் கந்தூரி நடத்திய செய்தியை ஊராளுகிற சுல்தான் கேட்டு மிகவும் ஆச்சரியமாகித் தமது ஆட்களைக் கொண்டும் அந்தக் கச்சைவடக்காரனாரை அழைப்பித்து அவரைப்பார்த்து சுல்தான, ஓய் கச்சைவடககாரனாரே, நீர் உன்வீட்டில் நடக்கும் மவுலிது கந்தூரிக்கு முன்னதாக என்ன வந்துவைக்கொண்டும் வஜீபனஞ் சமைத்து இந்தப் பட்டணத்திலுள்ளவர்கட் கெல்லாம் மகா சிறபபாக வஜீபனம் உண்ணக் கொடுத்தீரென்று கேட்டார். அதற்குக் கச்சைவடக்காரனார் சுல்தானைப்பார்த்துச் சந்தனக் கட்டை பன்னீரைக் கொண்டும் அன்னப் பதார்த்தங்கள் சமைப்பித்துக் கொடுத்தேனென்று சொனனார். அதுகேட்டுச் சுல்தான் கச்சைவடக்காரனாரைப் பார்த்து, ஓய் கச்சைவடக்காரனாரே, இந்த வருஷம் நீர் மவுலிது கந்தூரிக்குச் செலவு செய்த கணக்கைக்கொண்டு வாருமென்று சொன்னார் அது போலே அவர் கணக்கைக் கொண்டுவந்தபோது அந்தக்கணக்கைப் பார்வையிட்டு ஆதிலெவ்வளவுதொகை செலவாயிருக்கிறதோ அவ்வளவு தொகையையும் கச்சைவடக்காரனுக்குச் சுல்தான் கொடுதது சந்தோஷப்படுத்தினார்.

ஆதலால் எமதன்புள்ள இகுவான்களே, அந்தக் கச்சைவடக்காரனார் தமது பெண்சாதி பிள்ளைக்குத் தேடிவைத்திருந்த சொத்துக்களை நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பேரில் மிகவும் ஹுப்பாய்ச் செலவு செய்து மவுலிது

ஷரீபையோதி கந்தூரிசெய்தாரே, இந்தக் காரணத்தை யுங்களுடைய தெளிவான புத்தியினாலே ஆலோசித்துப் பார்த்து நமக்கு இருலோகத்திலும் வாரிஸ்தாராகிய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள்பேரில் ஹுப்புவைத்து மவுலிதையோதி அதின் வரிசையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஹிக்காயத்து.

இஸ்மாயீ லவர்களுடைய மகனார் அப்துல்லாஹி என்பவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அஃது யாதெனில் மிசுறு தேசத்தில், ஒரு மனுடர் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மவுலிது கந்தூரிக்காக அன்னபதார்த்தங்கள் சமைப்பித்து மிகவுஞ் சிறப்பாக வருஷா வருஷம் மவுலிதை யோதி வருகிறவராகயிருந்தார். இவ்விதம் மவுலிதையோதி வருகிற வருடைய வீட்டிற்கு அசல்பாகமாக ஒரு எஹூதி குடித்தனத் துடனே யிருந்தார்.

அந்த எஹூதி மனுடனுடைய பெண்சாதி தம் புருஷனை பார்த்து வருஷந்தோறும் இந்த மாதம் வந்தால் நமது வீட்டிற் கடுத்த வீட்டு மூஸ்லிமானவர் அனேக பணங்களைச் செலவிட்டு அன்ன பதார்த்தங்களைச் சமைப்பித்துச் ஜனங்களை யழைத்துச் சிறப்பாக உண்ணக் கொடுத்துச் சங்கைசெய்கிறாரே அஃதென்ன காரணத்தினாலென்று கேட்டாள். அதற்கு எஹூதி தன் பெண் சாதியைப் பார்த்து, இந்தகாலமேதான் மூஸ்லிமானவர்களுடைய நபியாகிய முஹம்மதென்பவர்கள் பிறந்த நாளென்றெண்ணி இவ்விதமான சிறப்புஞ் சங்கையுஞ் செய்து சந்தோஷங் கொண் டாடுகிறார்களென்று சொன்னார். அதுகேட்டு அந்தப் பெண்பிள்ளை யாதொன்றும் பேசாமல் வாயை மூடினவர்களா யிருந்தாள்.

பின்னர் இரவானபோது எஹூதியும் பெண்சாதியும் நித்திரை செய்யும்போது அந்தப் பெண்பிள்ளையுடைய கனவில் சங்கைபயங்கரத்தைக் கொண்டும் வனப்பமாக்கி வைக்கத் தக்கதான அழகையுடைய வொருவரையும் அவர்களுடனே அஸ்ஹாபிமார்களில் நின்றுமோர் கூட்டத்தார்கள் இவர்களை வனப்பமாக்கி வைத்தவர்களாக அடுத்த மூஸ்லிமுடைய வீட்டிற் புகுதக்கண்டாள். அப்படிப் புகுந்தவர்களில் நின்றும் ஒருவரைப் பார்த்து எஹூதியுடைய பெண்சாதி இதோ மகா சிறப்பான முகவழகை யுடையவர்களாய் நிற்பவர்கள் யாரென்று கேட்டதற்கு, அவர் இவர்களா மெது றசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம். இந்த வீட்டிலிருக்

கப்பட்டவர்கள் இவர்களைக் கொண்டும் சந்தோஷமானதற்காக அவர்களை இவர்கள் சலாஞ்சொல்லிச் சியாறத்துச் செய்கிறதற்காக அவ்வீட்டிற் புகுந்தார்களென்று சொன்னார்கள்.

அதுகேட்டு எஜமானியுடைய பெண்சாதி திரும்பவும் அம் மனுடனைப் பார்த்து, இப்போது அவர்களிடத்தில் நான் பேசினால் ஜவாபு கொடுப்பார்களோ? வென்றதற்கு, ஆம் ஜவாபு கொடுப்பார்களென்று சொன்னார். அதுகேட்டு எஜமானியுடைய பெண்சாதி நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களளவில் வந்து மிகுந்த அன்பு மரியாதையுடனே, முஹம்மதே! யென்று சிறப்பாகக் கூப்பிட்டாள். அதற்கு நபிநாயகமவர்கள் அந்தப் பெண்பிள்ளையைப்பார்த்து லெப்பைக்கு வென்று ஜவாபு கொடுத்தார்கள்.

அப்போது அந்தப்பெண்பிள்ளை நபிநாயகத்தோடு, நாயகமேநானுங்களுடைய தீனில் இல்லாமல் உங்கள் பகைஞருடைய தீனிலிருக்கிறவர்களாயிருக்க என்னைப் போற்கொத்தவளுக்குத் தாங்கள் லெப்பைக்கு யென்று ஜவாபு சொல்லலாமாவென்று கேட்டாள். அதற்கு நபிநாயகமவர்கள் அந்தப் பெண்பிள்ளையைப்பார்த்து என்னை யுண்மையாகிய மார்க்கத்தைக் கொண்டும் நபியாகவும் அனுப்பி வைத்தானே, அந்தநாயன்பேரில் ஆணையாக அல்லாஹு தஆலா உன்னைத்திடனாக நேர்வழி காட்டினானென்று நான் அறிந்ததேயல்லாமல் உன்னுடைய கூப்பிடுதலுக்கு ஜவாபு சொல்லவில்லை யென்று சொன்னார்கள்.

அதுகேட்டுப் பெண்பிள்ளை நபிநாயகத்தைப் பார்த்து நீங்கள் சங்கையான நபிநாயகம் வலுப்பமான குணத்தின்பேரில் இருக்கிறீர்கள். ஆதலால் உங்களுடைய காரியத்திற்கு விரோதஞ் செய்தவன் ஹலாக்காகிப் போவான். இன்னு முங்களுடைய கதனை யல்லத்தட்டினவன்* பேறுகெட்டுப் போவான். நாயகமே, உங்களுடைய திருக்கையை நீட்டுங்களென்று சொன்னாள். உடனே நபிநாயகம் கையை நீட்டினார்கள். அந்தப் பெண்பிள்ளை நபிநாயகத்தின் கையினிடமாக ஷஹாதத்துக் கலிமாவைச் சொல்லி இஸ்லாத்திலாகினாள்.

அப்படி இஸ்லாத்திலாகிப் பின்னர் அந்தப் பெண்பிள்ளை தம்முடைய மனதிலே சுபுஹா நேரமானால் தம்முடைய இடத்திலுள்ள திரவியங்களெல்லாம் சதக்கா செய்து தாம் இஸ்லாமான சந்தோஷத்திற்காகவும், இராத்திரிகண்ட கனவிற்காகவும் நபி

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்களுடைய மவுலிது ஷரீபுக்குக் கந்தூரி செய்யவேண்டு மென்று இரகசியத்திலே அல்லாஹு தஆலாவுக்கு அறுதிமானஞ் செய்து கொண்டாள்.

பின்னர் சுபுஹானபோது அந்தப் பெண்பிள்ளை தன் புருஷரை வஹுப்பமாகிய ஸாலிஹாகிய ஹிம்மத்திலிருந்து நபிநாயகமவர்களின் மவுலிதுகந்தூரிக்காகச் சாமக்கிரிகைகள் ஆயத்தமாக்கும்படியாக் கண்டு மிருந்த ஆச்சரியமாகித் தன் புருஷரைப் பார்த்து, உங்களை ஸாலிஹாகிய ஹிம்மத்திலிருக்கக் காண்கிறேன். ஆதலா லிவ்விதமானது எது காரணத்தைக் கொண்டுமென்று கேட்டாள்.

அதற்குப் புருஷனுர் பெண்சாதியைப் பார்த்து, இன்று இராவிலே நீ யொருவருடைய கையின் பேரிலே இஸ்லாமானு யல்லவா, அவர்களுக்காகவென்று சொன்னுர். அதுகேட்டுப் பெண்சாதி புருஷனுரைப்பார்த்து உமக்கு இந்த இரகசியத்தை வெளியாக்கினது யார்? அதின் பேரிலும்மை உதயமாக்கி அறிவித்துத் தந்தது யாரென்று கேட்டாள்.

அதற்குப் புருஷனுனவர் பெண்சாதியைப் பார்த்து நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமுடைய இரண்டு கையின் பேரில் நீ இஸ்லாமானதின பின்னர் நானுமவர்களுடைய இரண்டு கையின் பேரிலே கலிமாச்சொல்லி இஸ்லாமாகினேன். அப்போது நபிநாயகம் வெளியாக்கித் தந்தார்களென்று சொன்னுர்கள்.

ஆதலால் எனதன்புள்ள நேசர்களே, மூமினுனவர்களே, எவ்விதமிருந்த எஹூதியுமவருடைய பெண்சாதியு மெவ்விதமானுர்கள். இதை உங்களுடைய புத்தியிற்றெறிந்து நபிநாயகமவர்களுடைய மவுலிது ஷரீபை யோதினுல் அல்லாஹுதஆலா நல்ல தறஜாக்களைக் கொடுத்து நம்மனைவோரையும் சொர்க்கத்திலுந் தாக்கலாக்கி வைப்பான் ஆமீன்.

ஹிக்காயத்து.

சுல்தான் மூஸப்பரென்பவர்கள் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மவுலிது கந்தூரிக்காக ஒரு வருஷம் வரைக்கும் சாமான்கள் சேகரித்து நிஃமத்தான

அநேகநின் வஸ்துக்கள் செய்து பட்டணத்திலுள்ள யாவர்களுக்குந் தகிவத்துக் கொடுத்துச் சங்கைசெய்துவைத்து வருஷா வருஷம் மவுலிதை யோதிவருவார்.

அப்படி அவர் மவுலிது ஓதுகிற கந்தூரிக்காக அன்னபதார்த்தங்களாக்குமிடத்தில் ஆட்டுத்தலைகளில் ஐயாயிரமும், கோழித்தலைகளிற் பதினாயிரமும், வஜீபனம் பரப்பிவைக்கிற பாசன்களில் முப்பதினாயிரமும், கட்டோருக்களில் லக்ஷமும் குவித்திருந்ததை அந்த மவுலிதுக்களரியில் ஆஜராயிருந்தபேர்களில் ஒருவர் தாம் எண்ணிக்கணக்கிட்டதாக 'தாறபல் ஆலம்' என்னும் பெயரையுடைய மவுலிதிற் சொல்லியிருக்கின்றன.

இன்னும் மக்கம், மதீனம், றாம், ஷாம், பல்கு, புகாரு முதலிய அநேக தேசங்களிலிருப்பவர்களும் நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுடைய மவுலிதை மிகுந்த ஹாப்புவைத்து ஓதிவருகிறார்கள். இன்னும் மக்கத்திலுள்ள நான்கு மதஹபு முபுத்திகளும் மவுலிது ஷரீபையோதுகிறது முஸ்தஹப்பென்று பதுவாக் கொடுத்திருக்கிறார்கள்.

இன்னும் ஜலாலுஸ்ஸியுது ஹதீயத்துல் ஹறமைன் முதலான கித்தாபுகளில் மவுலிது ஷரீபின் வரிசையும் தரஜாவையும் அதிக விரிவாய் எழுதியிருக்கிறார்கள். மேலும் நம்முடைய நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பிறந்த தினத்தில் சக்கூறை வெளியாக்கிவைத்து வஜீபனம், குடிப்பு, தைக்கா முதலிய நற்காரியங்களைச் செய்து மனுஷர்கள் கூடியிருந்து சந்தோஷமாய் மவுலீது மதுஹாகளையோதி உவப்பு வைக்கிறது முஸ்தஹப்பு. ஆதலால் அப்படி மவுலிதை ஓதிவைப்பவர்களுக்கு அதற்குப் பதிலாக அல்லாஹுதஆலா சொர்க்கலோகத்திலே தாக்கலாக்கி வைக்கிறது எவ்விதமுண்டாகாமற்போகும்.

பாருங்கள், நபிநாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பிறந்தார்களென்று சந்தோஷமான செய்தியை அபூலஹபு இடத்தில் அவனுடைய வெள்ளாட்டியாகிய 'துவைபா' வென்பவள் வந்து சொன்னதற்காக அபூலஹபு சந்தோஷமாகி உடனே அந்த வெள்ளாட்டியை யுரிமைவிட்டதற்காக திங்கட்கிழமைதோறும் அபூலஹபோடு அதாபை இலேசாக்கப்படுகிறதென்று ஹதீஸாக வந்திருக்கிறது.

ஆனால், அபூலஹபோ குருஆனிலே பழிக்கப்பட்ட காபிரான போதும் அவனுடைய தன்மை இப்படியிருந்தால், அல்லா றஸுலுக்கு ஈமான்கொண்ட முஸ்லிம்கள் மவுலிது ஷரீபை யோதினால் நம்முடைய தன்மை எப்படியிருக்கும். ஆகையால் எனது உடற்பிறப்பான மூமினானவர்களே, உங்களுடைய கூர்மையான புத்தியைக்கொண்டும் நன்றாக யோசித்துப்பார்த்து ஐந்து வகுத்தும் தொழுது கொள்ளுங்கள். நபிநாயகத்துடைய மவுலிது ஷரீபை ஷறகாலுள்ளபடி யோதிக்கொள்ளுங்கள். ஆனால் முக்கியமாக மவுலிதில் ஹறாமான கருமங்களையும், பித் அத்துகளையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும். மவுலிது ஓதும் பறக்கத்தினால் நம்மனைவோரையும் அல்லாஹு தஆலா சொர்க்க லோகத்திலே தாக்கலாக்கிவைப்பான். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

மவுலிது ஷரீபையுடைய வரிசையின் பயான் முற்றிற்று.

இந்த இரத்தின விலாசம், நசீஹத்துலாசமென்னும் பெயருடைய புத்தகத்தை அறபுப்பாஷையிலிருந்த மொழிகளைத் தமிழ்ப்பாஷையில் தறுஜுமாச்செய்ய உதவிசெய்த நாயனே, இதை நீ கபூல்ச்செய்து இதைப் படிப்பவர்கள், கேட்பவர்கள், உதவி செய்தவர்கள், தலீல் செய்தவர்கள் முதலிய யாவருக்கும் கபூல்ச்செய்து படித்து நல்ல அமல்ச்செய்யும்படித் தௌபீக் கொடுத்துச் சகலபாவங்களையும் மன்னிப்புச் செய்துச் சொர்க்க லோகத்தில் தாக்கலாக்கி வைத்தருள். ஆமீன் யாறப்பல் ஆலமீன்.

இலாஹீ தகப்பல் மின்னீ ஹாதிஹித் தறுஜுமத்தல் அறிவிய்யி பிஜாஹி நபிய்யினா முஹம்மதின் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வஸஹ்பிஹி அஜ்மஈன், வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

இரத்தின விலாசம் நசீஹத்துலாசம் முற்றிற்று.

111529

கிடைக்கும் இடம் :—

ஹெட் ஆபிஸ் :

ஹாஜீ M. A. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி,

மதறாஸ். 5.

பிராஞ்ச் ஆபிஸ் :—

நெ. 194, சைலர் தெரு, பேட்டை, கொழும்பு.